2723

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: L NO: 3

April 19th 1983

(C)

D
V211,31'N83
N83.50-3
136041

136041

D

V211, 31 N83

N83.50.3

உள்ளடக்கம்.

19—4—1983

| | பக்கங்கம். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 247—281 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் வழங்குவது பற்றிய உடன்பாடு .. .. .. | 281 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கை .. .. .. .. | 281 |
| 3. அறிவிப்புகள் — | |
| (அ) உரிமைக் குழு உறுப்பினர்கள் தேர்தல். | 282 |
| (ஆ) 1974–75 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (ஆ.இ.) .. .. .. .. | 285 |
| (இ) நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு 1983 (ஆ.இ.) .. .. .. | 287 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| சேலம் உருக்காலைத் திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்த நியமிக்கப்பெற்ற அலுவலர்கள் .. .. .. | 283—285 |
| 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1983 .. .. .. | 285 |
| (ஆ) நிதி ஒதுக்க (எண், 2) சட்ட முன்வடிவு 1983 .. .. .. .. .. | 287 |
| 6. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1974–75 .. .. .. .. | 286—287 |
| 7. நாள் குறிப்பிடப்பெறாத தீர்மானம் நீதிபதி இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன் அறிக்கை மீது அரசு எடுத்த நடவடிக்கை | 288—316 |
| 8. அறிக்கை அளித்தல்— | |
| சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் வழங்குவது பற்றிய உடன்பாடு .. .. .. | 317 |

பக்கங்கள்

9. வரவு—செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)— 317—401

(அ) கோரிக்கை எண். 7—மாநிலச் சட்டமன்ற மன்றம் .. .. .. .. 317—318, 399

(ஆ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள் .. 318—400

(இ) கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் .. 319—320, 400

(ஈ) கோரிக்கை எண் 43—பல்வகை .. 320—321, 400

(உ) கோரிக்கை எண். 57—பல்வகை மூல தனச் செலவு .. .. .. 320—321, 401

(ஊ) கோரிக்கை எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் 321—401

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 317—322, 380—399

திரு. என் கிட்டப்பா 322—327

டாக்டர் கே. சமரசம் 328—333

திரு. என். எஸ். வி. சித்தன் 333—341

திரு. கோவைத்தம்பி 341—346

திரு. என். வரதராஜன் 346—356

திரு. என். ஏ. பூங்காவனம் 356—358

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் 358—363

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் 363—367

திரு. துரைமுருகன் 368—380

**10. பேரவை முன் வைக்கப் பெற்று ஏடுகள் .. 402**


# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1983 ஏப்ரல் 19

சித்திரை 6, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்'

பிறர் விரும்பும்படியாகத் தாம் சொல்லி, பிறர் சொல்லும் போது அச் சொல்லின் பயனை ஆராய்ந்து கொள்ளுதல் மாசற்ற சிறப்புடையவரின் கொள்கையாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 796 மாண்புமிகு மின்துறை அமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றது.

### குமரி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டிய மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்.

*வினா எண். 797—திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி–அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆதிவாசி பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக 1980–81 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டிய திட்டம் இதுவரையிலும் ஆரம்பிக்கப்படாததன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெறாத காரணத்தால் துவக்கப்படவில்லை.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆதிவாசிப் பழங்குடியினர் ஏறத்தாழ 47 செட்டில்மென்டுகளாக 1,400 குடும்பங்கள் தங்கி வருகின்றனர். அரசாங்கத்திலேயிருந்து வருகின்ற எந்தவிதமான திட்டங்களும் அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்ற காரணத்தினாலே, அவர்களுக்கு நம்முடைய அரசு அறிவித்துள்ள இந்த மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டமானாலும் சரி, மீண்டும் மைய அரசை வற்புறுத்தி, அதன் பயனை அவர்கள் பெறக்கூடிய நிலைமையில் வறுமைக் கோட்டின் கீழே இருக்கிற அவர்களைப் பாதுகாக்கும் முறையிலே மைய அரசை மாநில அரசு மீண்டும் வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே தமிழக அரசு இந்தக் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கிற சுமார் 656 குடும்பங்களுக்காக ஒரு திட்டத்தை உருவாக்கி, நம்முடைய நிதித் துறையினுடைய ஒப்புதலோடு மத்திய அரசுக்கு அனுப்பியது. ஆனால், அவர்கள் 1981–82 ஆம் ஆண்டிலிருந்தே இந்தத் திட்டத்திற்காக நிதி ஒதுக்குவதில்லையென்று முடிவு செய்திருக்கிறார்கள். அதற்குப் பதிலாக Integrated water shed based என்கிற அந்தத் திட்டத்தின் அடிப்படையிலேதான் இப்பொழுது இந்த மலை மேம்பாட்டுத் திட்டத்திற்கெல்லாம் ஒதுக்கப்படுகிறது என்ற குறிப்பு வந்திருக்கிறது. ஆகவே, நம்முடைய மலை வாழ் மக்களுக்கு மத்திய அரசினுடைய உதவியோடு வேறு புதிய திட்டங்கள் அவர்கள் அறிவிக்கிற நேரத்திலேதான் நாம் அத்தகைய திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்ற முடியும். இதற்கிடையிலே மாநில அரசின் சார்பிலே எந்த எந்த வகையான உதவித் திட்டங்களை அவர்களுக்கு நிறைவேற்ற முடியுமோ, அவைகளை மாநில அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசாங்கத்தினுடைய திட்டம், இதுவரையில் எடுத்துக் கொண்ட முடிவுகள் அந்த மாவட்ட அந்த மலை வாழ் மக்களுக்குக் கிட்டவில்லை. அவர்கள் தங்கியிருக்கிற பகுதியிலே காட்டுப் பன்றிகள் அவர்களுடைய விவசாயப் பயிர்களை அழித்து வருவது சர்வசாதாரணம். குறிப்பாக வனத்துறையினர் கடந்த வருஷத்திலே, இரண்டு பகுதியிலே வெள்ளைப் பன்றியைக் கூட அவர்கள் அந்தப் பகுதியிலே கொண்டுபோய் விட்டு, காரணிக்காரர் என்று சொல்கிற மலைவாழ் மக்கள் உற்பத்தி செய்கின்ற பயிர் அவர்களுக்குக் கிடைக்காத வழியிலே அழித்து வருகிறது. இதிலிருந்தாவது அவர்களைப் பாதுகாக்க அரசு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அரசு அதைப் பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.





## கோயில்களின் நிதியிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் திட்டம்.

*வினா எண். 798.—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அறநிலையத் துறை நிர்வாகத்தின்கீழ் உள்ள கோவில்களில் எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அக் கோவில்கள் நிதியிலிருந்து திருமணம் செய்து வைக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம், எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) இதுவரை 18 திருக்கோவில்களின் நிதியிலிருந்து சுமார் ரூ. 5,84,557.17 செலவில் 746 திருமணங்கள் நடத்தி வைக்கப் பட்டுள்ளன. இதில் 453 திருமணங்கள் ஆதி திராவிடர்களுக்கு நடத்தி வைக்கப்பட்டன.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை திருப்தியாகவும் மற்றும் அதிக வருவாயுமுள்ள எல்லா கோயில்களிலும் இதுபோன்ற ஏழை, எளிய தாழ்த் தப்பட்ட மக்களுக்குத் திருமணம் செய்து வைக்க அரசு உத்தர விடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர வர்களே, அத்தகைய ஒரு உத்தரவை அளித்ததை ஒட்டித்தான் இப்படிப்பட்ட திருமணங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின் றன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, கோவில்களின் நிதியிலிருந்து நடத்தப்படுகின்ற திரு மணங்களில் மணமக்களுக்கு என்னென்ன வகையான உதவிகள் செய்யப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை வரவர்களே, சுமார் 750 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய்க்குள் அந்த மணமக்களுக்குச் செலவு செய்யலாம் என்று ஆணையிடப் பட்டிருக்கிறது. அணிந்து கொள்ள புதிய புடவைகள் வேஷ் டிகள் அணிந்து கொள்ள தாலி மற்றும் அந்த மணமக்களைச் சார்ந்த குடும்பத்தினர் ஒரு குறிப்பிட்ட தொகையினருக்குச் சாப்பாடு, இப்படிப்பட்ட செலவுகளையெல்லாம் சேர்த்து, சுமார் 750 ரூபாயிலிருந்து 1000 ரூபாய்க்குள் செலவழிக்கலாம் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரிஜன் என்று சொன்னாலே கடவுளின் பிரதிநிதிகள் என்று காந்தியடிகள் சொன்னார்கள். இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாடு அரசு செய்வதைப் போல, இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்கள் ஏதாவது இப்படிப்பட்ட திருமணங்களை நடத்தி வைப்பதற்கு முன் வந்துள்ளனவா? மேலும், ஆகஸ்ட் 15 ஆம் தேதி எல்லோருக்கும் சமபந்தி போஜனம் என்று அமைச்சரவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்களே, அதுபோன்றும் மற்ற மாநிலங்களில் ஏதாவது நடைபெறுகிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் மற்ற மாநிலங்களில் நடைபெறுகிறதா என்ற தகவலைத் தேடித் தர முடியும். ஆனால் இப்பொழுது அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கோவில்களில் திருமணம் செய்து வைக்கப்படுகிறது என்றால், அதற்கான பட்டியல் எவ்வாறு தயார் செய்யப்படுகிறது? ஒன்று, கோவில்களிலேயே அப்படித் தயார் செய்கிறார்களா அல்லது மக்கள் விண்ணப்பிக்க வேண்டுமா? அத்துடன் அந்தக் குடும்பங்களில் வருவாயைக் கணக்கில் கொண்டு இந்தத் திருமணங்கள் செய்யப்படுகின்றனவா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, இத்தகைய விண்ணப்பங்களைக் கோரி ஒரு அறிவிப்பு ஆலயத்தின் சார்பில் வெளியிடப்படுகிறது. சில நிபந்தனைகள் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன. மணமகன், மணமகள் ஆகிய இருவருக்கும் சேர்த்து மாத வருமானம் 600 ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாது; வருஷ வருமானம் மொத்தம் 9,000 ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடாது; அந்தப் பெற்றோர்களின் ஒப்புதல் இருக்க வேண்டும் அல்லது வயது நிறைந்து விட்ட காரணத்தால், பெற்றோர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை என்றால், மணமகனும் மணமகளும் முழுச் சம்மதத்தை எழுதித் தர வேண்டும். இத்தகைய நிபந்தனைகள் ஆலயத்தின் சார்பில் அறிவிப்பில் வெளியிடப்படுகிறது. அந்த அறிவிப்புகளை ஒட்டி வரும் விண்ணப்பங்களைப் பரிசீலித்து அது முறையாக இருந்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுத் திருமணங்கள் நடத்தி வைக்கப் படுகின்றன.

திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கலப்புத் திருமணங்களை ஆதரிக்கும் வகையில், மணமக்கள் இருவரில் ஒருவர், ஆணோ அல்லது பெண்ணோ ஆதி திராவிடராகவும், மற்றவர் பிற வகுப்பைச் சேர்ந்தவராகவும் இருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை
வரவர்களே, முன்னுரிமை கொடுப்பது என்ற பிரச்னையே
இல்லை. ஏழை மக்கள் என்கின்ற அந்தப் பட்டியலின் அடிப்
படையில் இதை நடத்தி வைக்கிறோம். ஆதி திராவிடர்களுக்கு
முன்னுரிமை தந்துதான் பரிசீலிக்கப்படுகிறது. காரணம், ஆதி
திராவிடர்களில் அநேகம்பேர் ஏழைகளாக இருக்கிறார்கள்.
கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு முன்னுரிமை
யும் தரப்படுகிறது. இதுவரையில் நடந்திருக்கின்ற திருமணங்
களில் 164 திருமணங்கள் கலப்புத் திருமணங்கள் ஆகும்.
ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருதுகின்ற அந்தக்
கருத்தின்படி ஏற்கனவே நடைமுறையில் அமல்படுத்தப்பட்டு
வருகிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர
வர்களே, 18 திருக்கோவில்களில் இந்தத் திட்டம் அமல்படுத்
தப்பட்டதாகச் சொன்னார்கள். அந்தத் திருக்கோவில்கள்
எவை எவை என்பதை அறிவிக்க இயலுமா? அதில் வடார்க்
காடு மாவட்டத்தில் எந்தத் திருக்கோவில்களில் இந்தத் திட்
டம் அமலாக்கப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை
வரவர்களே, வடார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில்
இரத்தினகிரி பாலமுருகன் ஆலயத்தில் இது நிறைவேற்றப்
பட்டிருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, இந்தக் கலப்புத் திருமணம் செய்து கொள்
பவர்களில் ஆண்மகன் அரிஜன சமுதாயத்தைச் சேர்ந்தவராக
இருந்து, பெண் இதர உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவராக இருக்
கிறார்கள் என்றால், அப்படிப்பட்டவர்களுக்கு உத்தியோகத்
துறையில் முன்னுரிமை கொடுப்பதற்கு வழிவகை செய்யப்
படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, இது வேறு துறை அமைச்சரிடத்தில் கேட்கப்
பட வேண்டிய கேள்வி. இருந்தாலும் ஒரு தகவலை அதுபற்
றித் தருகிறேன். தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு
விழாவை ஒட்டி, அரசு அறிவித்திருக்கின்ற திட்டங்களிலே
கலப்புத் திருமணம் செய்து கொள்ளுகின்ற அந்தத் தம்பதி
களுக்கு உத்தியோகம், கல்வி போன்ற இந்தத் துறைகளிலே
முன்னுரிமை வழங்கப்படலாம் என்கிற ஒரு கொள்கை முடிவு

[1983 ஏப்ரல் 19

(முற்பகல் 9-10)

எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கலப்புத் திருமணம் செய்து கொண்டால், அதை ஊக்குவிக்க வேண்டும் என்கிற அரசினுடைய இலட்சியத்தின்படி, அந்தக் கோரிக்கைகள் வந்தால், அரசு சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள் அதை பரிசீலிப்பார்கள்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எத்தனை திருக்கோவில்களில், இந்த இலவசத் திருமணங்கள் செய்திருக்கிறார்கள் என்பதற்கு அமைச்சரவர்கள் 18 கோவில்களில் செய்திருக்கிறார்கள் என்பது சரியாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் 18 திருக்கோவில்களில் செய்யப்படுவதாக சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவரவர்களே, எந்தெந்த திருக்கோவில்களில் நடத்தியிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 18-ஐப் பட்டியலிலிருந்து படித்தால் நேரமாகுமே என்பதால், நான் அவர்களுடைய கேள்விக்குச் சுருக்கமாக 18 கோவில்களில் இந்தத் திருமணம் நடத்தப்படுகிறது என்று சொன்னேன்.

அந்த 18 கோவில்களின் பெயர்களாவன :

1. அருள்மிகு கள்ளழகர் திருக்கோவில், அழகர்கோவில்.
2. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோவில், பழனி.
3. அருள்மிகு மாரியம்மன் கோவில், சமயபுரம்.
4. அருள்மிகு திருமலைக்குமாரசாமி கோவில், பண்பொழி.
5. அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோவில், உப்பிலியப்பன் கோவில்.
6. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோவில், திருத்தணி.
7. அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோவில், மதுரை.
8. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோவில், திருப்பரங்குன்றம்.
9. அருள்மிகு தேவிகருமாரியம்மன் கோவில், திருவேற்காடு.



1983 ஏப்ரல் 19]

10. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில், திருச்செந்தூர்.
11. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோவில், இராமேஸ்வரம்.
12. அருள்மிகு நவநீதேசுவரர் திருக்கோவில், சிக்கல்.
13. அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில், திருவெண்காடு.
14. அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோவில், சங்கரன்கோவில்.
15. அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோவில், திருவாரூர், நாகை, திருவாரூர், கொடவாசல், நன்னிலம் கோட்டங்களில் 57 திருக்கோவில்களின் சார்பில் நடத்தப்பட்டது.
16. அருள்மிகு மாரியம்மன் கோவில், கரூர்.
17. அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோவில், மணவாளநல்லூர்.
18. அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோவில், சுவாமிமலை.

இந்த 18-ல் வடாற்காடு ரத்தினகிரி ஆலயம் வரவில்லை. பாலமுருகன் அவர்கள் சொந்தமாக வசூலித்து, இந்தத் திருமணங்களை நடத்தி வைத்தார்கள்,

சிங்கப்பூர், மலேசியா நாடுகளிலிருந்து தமிழ் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள்.

*வினா எண் 799—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலையைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து தமிழ் நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் நடப்பாண்டில் அதிகம் பேர் வந்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) அதனால் வாரியத்திற்கு வருவாய் அதிகரித்துள்ளதா?

[1983 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ) மற்றும் (ஆ) ஆம். 1980-ம் ஆண்டில் 30,992 பயணிகளும், 1981 ஆம் ஆண்டில் 31,957 பயணிகளும் வந்து சென்றனர். 1982 ஆண்டிற்கான புள்ளி விவரங்கள் இன்னும் முடிவாக்கப்படவில்லை.

(இ) மலேசியா, சிங்கப்பூரில் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விற்பனை முகவர்களை 1981 மார்ச் மாதத்தில் நியமித்தது. 1982 பிப்ரவரி மாதம் வரை பயணச் சீட்டுகள் விற்பனை மூலமாக சுற்றுலாக் கழகத்திற்கு அந்நிய செலாவணி ரூ. 1,06,989·55 கிடைத்துள்ளது.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** தலைவரவர்களே, மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களிலிருந்து 1982 ஆம் ஆண்டில், வந்த பயணிகளின் கணக்கு வரவில்லை என்றார்கள். 1980-81-ல் வந்த பிரயாணிகளுடைய புள்ளி விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா? அந்த ஏஜென்டுகளை நியமித்த பிறகு, எவ்வளவு அதிகமாகயிருக்கிறது? 1977-78-ஐ விட எத்தனை சதவிகிதம் அதிகமாக இந்தப் பிரயாணிகள் வந்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவரவர்களே, 1981 மார்ச் மாதத்திலிருந்து இந்த ஏஜென்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 1,000 பயணிகள் அதிகமாக 1981 ஆம் ஆண்டிலே வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. 1982 ஆம் ஆண்டு கணக்கு வந்தால்தான் எந்த அளவிற்கு அதிகமாக வந்திருக்கிறது என்பது தெரியும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** தலைவரவர்களே, இது போன்ற இந்தத் திட்டத்தை வேறு நாடுகளிலே ஏற்படுத்த அரசுக்கு ஆலோசனை உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவரவர்களே, ஸ்ரீலங்காவிலே இப்படிப் பயணி முகவர்களை ஏற்படுத்தும் திட்டம் பரிசிலனையில் இருக்கிறது. மேற்கு நாடுகளிலே, ஐரோப்பிய நாடுகளிலே பயணி முகவர்களை அமர்த்தினால், அது எந்த அளவிற்கு பயன்தரும் என்பதைப் பற்றியும் புள்ளி விவரம் எடுக்க நம்முடைய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு ஆலோசனை வழங்கியிருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவரவர்களே, சிங்கப்பூரில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு டால்பின் மீன் வித்தைகளைக் காட்டுவதுபோல நமது தமிழ்நாட்டில், வெளிநாட்டுப் பயணிகளை கவர்வதற்கு குரங்கு சர்க்கஸ், கிளி வித்தை, எனிச் சேர்க்கும் முதலியவைகளை அரசே பழக்கி, அவர்களுக்குக் காட்டுமா என்பதை அறியவிரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 19]

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ளும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த மிருகங்களையெல்லாம் பழக்குகின்ற முயற்சிகளிலே அவர்கள் பெற்றிருக்கின்ற அனுபவத்தை நமக்குத் தந்து உதவுவார்கள் என்ற நம்பிக்கையோடு அரசு அதை பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கப்பூர், மலேசியா, மற்றும் வெளிநாடுகளைவிட பன்மடங்கு சிறந்த இயற்கை எழில் பொங்கும் காட்சிகள் தமிழகத்தில் இருந்தும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இங்கு அதிகமாக வராமல் இருப்பதன் அடிப்படைக் காரணத்தை அரசு ஆய்ந்து உள்ளதா? அந்தக் குறையைப் போக்க அரசு ஏதேனும் நடைமுறைகளைக் கையாளுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிற்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இன்னும் அதிக அளவிலே வரவேண்டுமென்ற கருத்து, இந்திய அரசினாலே பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அப்படி இந்தியாவிற்குள் வருகிறவர்கள் மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்களைக் கொண்டிருக்கிற தொன்மையான சிறப்பான இடங்களைப் பெற்று இருக்கிற தமிழகத்திற்கு அதிகமாக வரவேண்டும் என்ற கருத்தை தமிழக அரசு இந்திய அரசினிடத்திலே எடுத்து வைத்திருக்கிறது. ஆகவே ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதற்குமே வெளிநாட்டுப் பயணிகளை கவருகிற ஒன்றை நாம் இன்னும் விரிவாகச் செய்ய வேண்டும். பெரிய அளவிலே வெளிநாட்டுப் பயணிகளை இங்கே கொண்டு வந்து சேர்ப்பதற்கான திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசிடத்திலே தெரிவித்து இருக்கிறோம்.

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசைப் பொறுத்தவரை, இந்த வெளிநாட்டுப் பயணிகளை கவர்ந்து இங்கு அதிகம் சுற்றுலா வருவதற்கு ஏதாவது சுற்றுலா வளர்ச்சி பெரிதுபடுத்துவதற்கு அல்லது அதிகப்படுத்துவதற்கு புதிய திட்டங்களை ஏதாவது அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4, 5 ஆண்டுக்காலமாக அப்படி புதிய திட்டங்களை உருவாக்கி, புதிய முயற்சிகளை மேற்கொண்டதன் விளைவாகத்தான் தமிழகத்திலே சுற்றுலாத்துறை ஒரு முக்கியமான இடத்தை வகித்துக் கொண்டிருக்கிறது.

[1983 ஏப்ரல் 19

## தமிழ் நாட்டின் தகவல் நிலையங்களை மற்ற மாநிலங்களிலும் திறக்கும் திட்டம்.

*வினா எண் 800—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் தகவல் நிலையங்களை மற்ற மாநிலங்களிலும் திறக்க அரசுக்கு உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை மாநிலங்களில் இந்த நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

## பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம்.

*வினா எண் 801—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. சி. கோபால்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் மாநிலத்தில் எங்கெங்கு அமுல்படுத்தப்படுகிறது?

(ஆ) அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அவை முன் விவர அறிக்கை ** வைக்கப்பட்டுள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற விவர அறிக்கையின் அடிப்படையில் பார்க்கின்றபோது மாநிலத்திலே நெல் பயிர் விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கு மட்டும்தான் இந்தப் பயிர் பாதுகாப்பு இன்ஷுரன்ஸ் திட்டம் வழங்கப்படுகிறது. அதுவும் குறைந்த அளவில்தான் வழங்கப்படுகிறது. ஆகவே மாநிலத்திலே மற்றைய பயிர்களுக்கும் குறிப்பாக மதுரை போன்ற மாவட்டங்களில் விவசாயப் பெருமக்கள் பெரிய அளவிலே பயிர் செய்கின்ற நெல் தவிர, வெங்காயம் போன்ற பயிர்களுக்கும் இந்தப் பயிர் பாதுகாப்பு இன்ஷுரன்ஸ் திட்டத்தை விரிவுபடுத்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அப்படி எடுத்திருக்கிறது என்றால் அதன் விவரங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

** 403–404–ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1983 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் தவிர, மற்றைய பயிர்களுக்கும் இந்தப் பாதுகாப்புத் திட்டத்தை நீட்டிக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய கொள்கை. ஆனால் குறைந்தபட்சம் கடந்த பத்து வருட பரிசோதனைகள் நடத்தி, அந்தப் பரிசோதனைகளில் இருந்து சராசரியாக எந்த அளவிற்குப் பலன் ஈட்டுகிறது என்பதை ஆராய்ந்து, அதை ஆய்வதற்கு India School of political Economy என்ற மத்திய அரசினுடைய பொறுப்பிலே இருக்கின்றஅமைப்பு ஆய்ந்த பிறகு இந்த பயிர் இனங்கள் எல்லாம் இதிலே சேர்க்கப்படுகிறது. அந்த முயற்சிகளில் அரசு ஈடுபட்டு வருகிறது. India School of political Economy முடிவு தெரிந்தவுடன் இந்தப் பயிரினங்கள் எல்லாம் அந்தத் திட்டத்தில் சேர்க்கப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி விவசாயிகளுக்கு உற்பத்தி செய்கின்ற பயிர்கள் முழுமையாகவோ அல்லது, அரைகுறையாகவோ இயற்கையின் காரணமாகத்தான் பாதிப்பு ஏற்படுகிறது. இப்படிப் பயிர்களுக்குத் பாதிப்பு ஏற்படுகிறபோது, விவசாயிகள் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்படுகிறார்கள். அதைப் போக்குவதற்கு இந்தப் பயிர் பாதுகாப்புப் திட்டம் என்கிற அளவிலே ஒன்றை வைத்துக்கொண்டு, அதுவும் இல்லாமல் பயிர்கள் முழுமையாக பாதித்து விடுகின்ற சூழ்நிலைகளில், அந்த விவசாயிகளை முழுமையாகக் காப்பாற்றுகின்ற வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பெற்றிருக்கின்ற கடன்களை முழுமையாக ரத்து செய்வதற்கு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு இழப்புகள் ஏற்படுகிறபோது, நாச்சுரல் கலாமிட்டிஸ் என்று ஏற்படுகிறபோது அதாவது பெஸ்ட் அட்டாக் போன்றவைகள் ஏற்படுகிறபோது மாநில அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது, ரிசர்வ் வங்கியோடு கலந்து. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்து முழுமையாக அந்தக் கடன்கள் எல்லாம் வெய்வ் செய்யப்பட வேண்டும் அல்லது ரத்து செய்யப்பட வேண்டும் என்பது. இது மாநில அளவிலே செய்யமுடியாத காரியம். காரணம் மத்திய அரசுதான் செய்யமுடியும். அதற்காக மத்திய அரசு Revolving fund to meet out this king of calamities என்ற முறையிலே ஒரு ரிவால்விங் பண்டை ஏற்படுத்தி, விவசாயிகள் பயிர் பாதிப்பிற்கு உள்ளாகிறபோது உதவவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறது. தொடர்ந்து வற்புறுத்தும்.

[1983 ஏப்ரல் 19

**திரு. எ. இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட 25 தாலுக்காக்களில் மட்டும் அமல்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், குறிப்பாக காவிரி டெல்டா பிரதேசமாக இருக்கும் தஞ்சாவூர், தென்னாற்காடு பகுதிகள் சேர்க்கப்படாமல் இருக்கின்றன. அது சம்பந்தமாக அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை கொடுத்தும் கவனிக்கவில்லை என்ற குறை இருக்கிறது. ஆகவே, டெல்டா பகுதியில் அதிகமாக பயிர் பாதிக்கப்பட்டு இருக்கும் இடங்களையாவது வருகிற ஆண்டில் சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா ?

(முற்பகல் 9–20)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தவரையில், டெல்டா பகுதியில் இருக்கும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறபோது அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கான முறையில் அக்கறையோடு செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அந்த அடிப்படையில்தான் தஞ்சைப் பகுதியில் இருக்கிற, கும்பகோணம், மாயவரம், சீர்காழி, பாபநாசம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, ஒரத்தநாடு ஆகிய பகுதிகளிலும் பயிர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பலன் அளிக்கவேண்டும் என்று மாநில அரசு மனப்பூர்வமாக விரும்புகிற காரணத்தால், மைய அரசு பொறுப்பில் இருக்கிற ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனுக்கு எழுதினோம். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், அந்தப் பகுதியில் பாதிப்பு அதிகமாக இருக்கிறது, அவர்களுக்கு உதவி செய்ய நாங்கள் முன்வந்தால், எங்களுக்குப் பாதிப்பு அதிகமாக ஆகிவிடும் என்று அவர்கள் விவசாயிகளுக்கு உதவாத ஒரு மனப்பான்மையை எடுத்து இருக்கின்ற காரணத்தால் — மைய அரசு பொறுப்பில் இருக்கிற ஜெனரல் இன்ஷூரன்ஸ் ஒரு நிலையை எடுத்து இருக்கிற காரணத்தால், அப்படி உதவி செய்ய முடியாமல் இருக்கிறது.

**திரு. த. மாரிமுத்து:** தலைவர் அவர்களே, பயிர் பாதுகாப்புப் பிரச்னையில் அதிகமான அளவில் விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிற காரணத்தால், பயிர் பாதுகாப்பு இன்சூரன்சுக்கு மாநில அளவில் ஆலோசனைக் குழு இன்றையதினம் அமைக்கப்பட உள்ளதா ? ஆமெனில், என்னென்ன முறையில் அமைக்கப்படவுள்ளது ? இல்லையென்றால், விவசாயிகள் நலன் கருதி, மாநில அளவில் ஆலோசனைக் குழு அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, இதற்காக தனிப்பட்ட முறையிலே அந்தந்த வட்டத்திலே உள்ள அதிகாரிகள் அந்தப் பணியைச் செய்து வருகிறார்கள். Non-officials அதிலே சேர்க்கப்படவில்லை.



1983 ஏப்ரல் 19]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, தமிழகம் முழுமையும் இருக்கும் விவசாயிகளையும் இந்தப் பயிர்பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ் ஒரு காலகெடுவுக்குள் கொண்டு வர அரசு முயற்சிக்குமா ? பயிர்கள் பொய்த்துப் போய்விட்டால், ஒரு மாத காலத்திற்குள் அவர்களுக்கு ஈட்டுப் பணம் கொடுக்க அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மைய அரசின் பொறுப்பில் இருக்கும் ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்திடம் பலமுறை நாம் கேட்டு இருக்கிறோம். பலமுறை இதுபற்றி அவர்களிடத்தில் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர்கள் இதில் சற்று பரிவோடு பிரச்னையை அணுகாமல், இதிலே அவர்களுக்கு வரும் லாபம் என்ன, நஷ்டம் என்ன என்ற வகையில் அந்தப் பிரச்னையை அணுகுகிறார்கள். அதனால்தான் நாம் எல்லா மாவட்டங்களிலும், எல்லா வட்டங்களிலும் இந்தப் பயிர் பாதுகாப்புத் திட்டத்தை விரைவாகக் கொண்டுவரமுடியாமல் இருக்கிறோம். ஆனால் மற்ற மாநிலத்திற்கு எடுத்துக்காட்டாக நம்முடைய மாநிலம் இந்தத் திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகிறது. இது குறித்து அடிக்கடி ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்தை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. எனவே காலக்கெடு என்பது ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு எப்போது மனம் கனிகிறதோ அப்போதுதான் அது முடியும் என்ற நிலைதான் இப்போது இருந்து வருகிறது.

## நிலவள வங்கிகள் மூலம் புதுக்கிணறு வெட்ட வழங்கப்படும் கடன் தொகை.

*வினா எண் 802—**திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலவள வங்கிகள் விவசாயிகளுக்கு புதுக்கிணறு வெட்ட கடன் வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் கடன் வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

**திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில சட்டதிட்டங்களைக் கூறி, ரிசர்வ் வங்கி விவசாயிகளுக்கு புதிய கிணறு வெட்டுவதற்குக் கடன் வழங்குவதை நிறுத்தி விட்டதாகச் சொல்லப்படுகிறது ? விவ

சாயிகளுக்குப் பயிர் செய்ய தண்ணீர் வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, மாநில அரசு ரிசர்வ் வங்கி மற்றும் மைய அரசிடம் இது குறித்து வற்புறுத்தி எடுத்துக்கூறுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குக் கிணறு வெட்ட தற்போது கடன் வழங்கப்பட்டு வருகிறது. கடன் வழங்கும் தகுதியுடைய பிரதம நிலவள வங்கி மூலம் கடன்கள் வழங்கப்படுகின்றன. கடன் வழங்கத் தகுதி இல்லாத பிரதம வங்கிகள் தான் கடன் தர முடியாத நிலையில் இருக்கின்றன. ஆனாலும் கிணறுகள் வெட்டுவதற்கு கடன்கள் வழங்குவதற்கு சில விதிமுறைகள் இருப்பது உண்மைதான். அந்த விதிமுறைகளை இன்னும் சற்று அதிகமாக தளர்த்தினால் அதிகப்படியான விவசாயிகளுக்குப் பலன் கிடைக்கும். அதன் மூலம் கிணறுகள் வெட்டுவதற்கு விவசாயிகளுக்கு வாய்ப்பு ஏற்பட்டு, அவர்களையும் செழிக்கச் செய்ய முடியும் என்ற அடிப்படையில் ரிசர்வ் வங்கியோடு கலந்து பேசி நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே கடன் பெற்று பொய்த்த கிணறுகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளதா? அப்படியானால் எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 1898 மனுதாரர்களுக்கு ரூ. 49,56,000 வரை பொய்த்த கிணறுகளுக்கு, அந்த விவசாயிகளுக்கு மாநில அரசு உதவி செய்திருக்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டிபால்டிங் சொஸைட்டிகளுக்கு எல்லாம் இப்படி புதுக் கிணறுகள் வெட்ட கடன் வழங்கும் திட்டம் இல்லை என்று சொன்னார்கள். இன்றையதினம் வட ஆற்காடு மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுகிறது. ஆகவே ஒன்று அந்த டிபால்டிங் சொஸைட்டிகளுக்கு அரசாங்கமே அந்தப் பணத்தைக் கட்டி பிறகு விவசாயிகளிடமிருந்து வசூல் செய்கிற அந்தக் காரியத்தைச் செய்வது அல்லது — தஞ்சைக்கு அடுத்தபடியாக விவசாயத்திற்கு நிலத்தடி நீரை நம்பியிருக்கிற மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம் என்பதால்—வட ஆற்காடு மாவட்டத்திற்கு புதுக் கிணறுகள் வெட்டுவதற்கு கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது இப்படி எந்த முறையிலாவது அந்த விவசாயிகளுக்கு உதவி கிடைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : விவசாயிகளுடைய வளர்ச்சிக்கு அடிப்படைப் பிரச்சினையே தண்ணீர்தான். அந்தத் தண்ணீரை வழங்குவதற்கோ அல்லது கிணறுகள் வெட்ட வேண்





டிய உதவிகள் செய்யவோ தடைக்கற்களை மாநில அரசு விதிக்கவில்லை. ரிசர்வ் வங்கி விதிக்கிற அந்தத் தடைக் கற்கள் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றன. அதை நீக்கவேண்டும் என்று அரசாங்கம் எண்ணி விதிகளை சற்று தளர்த்தி முதலில் கிணறுகள் வெட்ட உதவி செய்து, கிணறுகள் வெட்டி தண்ணீர் கிடைத்து விட்டால் அவர்கள் வாங்கியுள்ள மற்ற கடன்களைக் கூட திருப்பிச் செலுத்தும் வாய்ப்பு ஏற்படும் என்ற முறையில் இந்த அரசு பிரச்சினையை அணுகுகிறது. ரிசர்வ் வங்கியை மீண்டும் வற்புறுத்தும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, நிலவள வங்கி மூலம் விவசாயிகளுக்குக் கிணறுகளை ஆழப்படுத்த 300 மீட்டர் தூரத்திற்குள் கிணறு இருந்தால் கடன் பெற முடியாது என்ற நிலை உள்ளது. ஆகவே, வசதி படைத்தவர்கள் கிணறுகளை ஆழப்படுத்திக் கொண்டு விடுகிறார்கள். ஆகவே, 300 மீட்டர் தூரத்திற்குள் கிணறு இருக்கக்கூடாது என்ற விதியைத் தளர்த்திக் விவசாயிகளுக்குத் தங்கள் கிணறுகளை ஆழப்படுத்த அல்லது புது கிணறுகள் வெட்ட கடன் வசதி செய்து கொடுக்கும் வகையில் அந்த விதியை அரசு தளர்த்துமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் முழுக்க முழுக்க நிலத்தடி நீரை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. நிலத்தடி நீர் முதலில் எடுக்கப்பட்டு தண்ணீர் மீண்டும் உள்ளே செலுத்தப்படாத நிலையில் மழை பெய்து அந்த மழை நீர் மீண்டும் பூமிக்குள் சென்று The Water taken out from the well should be re-charged into the earth என்ற நிலைமை இல்லாமலிருக்குமானால் நிலத்தடி நீர் நாளுக்கு நாள் குறைந்து இருக்கிற நிலத்தைக்கூடக் காப்பாற்ற முடியாதநிலை ஏற்படும் என்ற காரணத்தால் இரிகேஷன் டிப்பார்ட்மென்ட் விஞ்ஞான ரீதியில் குறிப்பிட்ட தூரத்திற்குள் கிணறு இருக்கக்கூடாது என்ற ஒரு அணுகுமுறையை என்றநிலையை மேற்கொண்டிருக்கிறார்கள். தற்போது அதைத்தளர்த்துவது பற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் ஒன்றும் இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கிணறுகள் வெட்டும்போது சரியான ஊற்று அல்லது நல்ல தண்ணீர் இல்லை என்றால், 'பெயில்ட் வெல் ஸ்கீம்' என்ற அடிப்படையில் சலுகை வழங்குவதாக இருக்கிறது. ஆனால் அண்மையில் அதிகாரிகள் வந்து பார்வையிட்டு அளவு எடுத்து செய்கிற காரியங்கள் —சர்டிபிக்கேட் கிடைப்பதில் காலதாமதமாகிறது. ஏன், கிடைப்பதே இல்லை என்ற காரணத்தால் விவசாயிகள் அதனால் பலன் அடையாமல் இருக்கிறார்கள். ஆகவே இந்தத் தடைகளை எல்லாம் நீக்கி விரைவில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குச் சலுகைகள் கிடைக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

[1983 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற நிலைமை சென்ற ஆண்டு துவக்கம் வரை இருந்தது உண்மைதான். இதை, உறுப்பினர்கள் பலர் விவசாயிகள் சார்பில் அரசுக்கு எடுத்துச் சொன்ன பிறகு அந்தக் கடன் வழங்குகிற விதிமுறையை அரசாங்கம் தளர்த்தியிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் அண்மையில் 1,898 மனுதாரர்களுக்கு 48,56,000 வரை சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்று முன்னமேயே நான் சொன்னேன்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, தமிழகத்தில் விவசாயத்திற்கு இலாயக்கான நிலத்தில் நான்கில் மூன்று பங்கு வானம் பார்த்த பிரதேசமாக இருக்கிறது. அந்த நிலையில் தமிழ்நாட்டில் இந்த விவசாயக் கிணறுகள் அதிகமாகத் தேவைப்படுகிற போது ஆழ்குழாய்க் கிணறுகளை அமைக்க விவசாயிகளுக்கு போதிய கடன் கொடுத்து தமிழ்நாட்டின் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா? அதன் அடிப்படையில் மத்திய அரசை வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டீப்போர் வெல்லை கருத்தில் கொண்டு சொல்கிறார்கள் என கருதுகிறேன். நமது மாநிலத்தில் அது இன்னும் அதிகப்படியான அளவில் நடைமுறைக்கு வரவில்லை. ஆனால் பஞ்ச நிவாரணத்தை முன்னிட்டு தஞ்சையில் தற்போது டீப் ட்யூப் வெல்ஸ் பதிப்பித்து, கிட்டத்தட்ட 5,000 லிருந்து 6,000 வரை குழாய்க் கிணறுகள் பதிப்பிக்க உத்தரவிட்டு அது நடைமுறையில் இருந்து, வருகிறது. ஆனால் மாநிலம் முழுவதும் நீட்டிக்கப்படவேண்டிய ஒன்று, இந்தப் பிரச்சினை நீட்டிக்கப்படவேண்டிய ஒன்று என்பதை அரசு உணருகிறது. கர்நாடகா மாநிலத்தில் இது நல்லமுறையில் செயல்பட்டு வருவதாக தகவல் வந்திருக்கிறது. அரசாங்கம் இதைப் பரிசீலிக்கும்.

**அரசு மருத்துவமனைகளைத் தூய்மையாக வைத்துக் கொள்வதற்கான சிறப்புத் திட்டங்கள்**

*வினா எண். 803— **திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு மக்கள நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளைத் தூய்மையாக வைத்துக் கொள்ள அரசிடம் ஏதேனும் சிறப்புத் திட்டங்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1983 ஏப்ரல் 19]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு முதலமைச்சர் 28—10—1981 அன்று அரசு பொது மருத்துவ மனையில் நடந்த கூட்டத்தில் அரசு மருத்துவ மனைகளில் சுத்தமாகவும் நன்றாகவும் பராமரிக்கப்படும் வார்டிலுள்ள செவிலியர்/மருத்துவம் சார்ந்த பணியாளர்கட்கு ரூ. 500 பரிசு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன்படி மருத்துவக் கல்வி இயக்கத்தின் கீழுள்ள 22 மருத்துவ மனைகளிலும் நன்றாகவும் சுத்தமாகவும் பராமரிக்கப்படும் வார்டில் உள்ள செவிலியர்/மருத்துவப் பணியாளர்கட்கு ரூ. 500 வீதம் 22 மருத்துவ மனைகளுக்கு ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ. 11,000 வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9–30)

**திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசு மருத்துவ மனைகள் இன்றைக்குச் சுத்தமாக இருப்பதில்லை. உள்ளே போவதற்கே அருவருப்பாக இருக்கிறது. அதிலும் பொது வார்டுகள், சாதாரண நோயாளிகள் இருக்கக்கூடிய வார்டுகளை சுத்தமாகச் வைத்திருக்க வேண்டுமென்ற உணர்வே அங்கே இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அரசு மருத்துவமனைகளைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு டாக்டர்கள், நர்சுகள் அடங்கிய கண்காணிப்புக் குழு ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிறது. அவர்கள் அங்கே சென்று, என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றது என்பதைக் கண்காணித்து, நமக்குத் தகவல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதே மாதிரியாக, நல்வாழ்வுத் துறைச் செயலாளரையும் நாம் அவ்வப்போது அனுப்பிச் கொண்டிருக்கிறோம். நானும், பல்வேறு மருத்துவ மனைகளுக்கு அவ்வப்போது சென்று கொண்டிருக்கிறேன். சென்ற இரண்டு நாட்களுக்கு முன்பாக, திருச்சி மருத்துவ மனைக்குச் சென்று, அங்கே என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதைப் பார்த்து, அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளில் வார்டுகள் மட்டுமல்ல, அவைகளின் சுற்றுப்புறங்களும் மிகவும் அசுத்தமாக இருக்கின்றன. குறிப்பாக, பெரியார் மாவட்டத்தில், தலைமை மருத்துவ மனையில்கூட, சுற்றுப் புறங்கள் மிகவும் அசுத்தமான நிலைமையில் இருந்து வருகின்றது. அதைத் தூய்மைப்படுத்துகின்ற விதத்தில், கூடுதலாக துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 19

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லக் கூடிய கருத்து நியாயமானது. அங்கே சித்த மருத்துவர் தங்கியிருப்பதற்கு ஒரு வீடு, ஒரு குடியிருப்பு கட்டவேண்டுமென்று குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். அது நிச்சயமாக கவனிக்கப்படும். அதற்குப் பிறகு மீண்டும் அலோபதி மருத்துவமனையாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** தலைவரவர்களை, இந்த சித்த மருத்துவ மனைகளில் போதிய மருந்துகள் இல்லாத குறையால்தான் மக்கள் அலோபதி மருந்தையாவது வாங்கிக்கொள்ளலாம் என்று எண்ணுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரிகிறதா ? குறிப்பாக சிதம்பரம் சித்த மருத்துவமனையில் போதிய சித்த மருந்துகள் இன்றும் கூட இல்லை. மருத்துவ மனைகளில் சித்த மருந்துகள் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால் மக்களுக்கு இப்படிப்பட்ட அவலநிலை இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே, எல்லா சித்த மருத்துவ மனைகளிலும் போதிய அளவுக்கு சித்த மருந்துகள் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, இந்தக் கேள்வி சுண்டக்குடியில் இயங்கி வரும் சித்த மருத்துவ மனையைப் பற்றியதாகும். பொதுவாக தமிழ்நாடு பூராவிலும் எங்கெங்கே சித்த மருத்வதுப் பிரிவுகள் செயல்படுகின்றனவோ அங்கெல்லாம் மக்களுக்குத் தேவைப்படுகிற அளவுக்கு சித்த மருந்துகளைக் கொடுப்பதற்கு நாம் தீவிர செயல் திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். இப்போது எல்லா இடங்களிலும் மருந்து கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். முன்பு எப்படி இருந்தது என்றால் மருந்து விநியோகத்திற்கு கூட்டுறவு சொசைட்டி ஒன்று இருந்தது. அவர்கள் மருந்துகள் கொடுத்தால் உடனடியாகப் பணம் செலுத்தப்படவில்லை என்றால் அதிலே பல சங்கடங்கள் இருந்தன. இப்போது அந்த சங்கடங்கள் இல்லை. நாம் உடனடியாக மருந்து கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் இந்த சித்த மருந்துகளைத் தயார் செய்யக் கூடிய ஒரு அமைப்பையும் நாம் உருவாக்கிக்கொண்டு வருகிறோம்.

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** தலைவரவர்களே, பொதுவாக தமிழ்நாட்டிலே இப்போது சித்த வைத்தியத்தின் தேவையை மக்கள் உணருகிறார்கள். இந்த சித்த வைத்திய முறையை மக்கள் இன்னும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வதற்கு ஏற்ற முறையில் செயல்படுத்துவதற்காக தமிழக அரசு எடுக்கின்ற நடவடிக்கை என்னென்ன என்று அறிய விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 19]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே அடுத்து ஒரு கேள்வி வருகிறது. அதில் விரிவான ஒரு அறிக்கை வைத்திருக்கிறேன்.

**தாலுக்கா தலைநகரிலுள்ள மருத்துவமனைகளில் எக்ஸ்ரே பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.**

* வினா எண் 805—**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் ஒவ்வொரு தாலுக்கா தலைநகரிலும் உள்ள மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் ; அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) மற்றும் (ஆ) தாலுக்கா தலைநகரில் உள்ள மருத்துவமனைகளுக்கு எக்ஸ்ரே பிரிவுகள், மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை, படுக்கை எண்ணிக்கை, எக்ஸ்ரே பிரிவு அமைக்க இடவசதி ஆகிய எல்லாவற்றையும் அறிந்து எக்ஸ்ரே பிரிவு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவரவர்களே, பொதுவாக அரசு மருத்துவ மனைகளுக்கு வருகின்ற பொதுமக்கள் எல்லாம் ஏழை எளிய மக்கள்தான். ஆனால் சில தாலுக்கா மருத்துவ மனைகளில் போதிய எக்ஸ்ரே பிரிவு இல்லாத காரணத்தால் வெளியே போய் எக்ஸ்ரே எடுத்து வரச் சொல்கிறார்கள். ஏன் தாலுக்கா மருத்துவ மனையில் போதிய அளவுக்கு எக்ஸ்ரே வைக்கப்படவில்லை? அதில் என்ன தடங்கல் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே.** தலைவரவர்களே, இப்போது 87 தாலுக்கா தலைமை மருத்துவ மனைகளில் எக்ஸ்ரே பிரிவை நாம் அமைத்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல் 22 தாலுக்கா தலைமையிட மருத்துவ மனைகளில் புதிதாக ஏற்படுத்த திட்டமிட்டிருக்கிறோம். இன்னும் தாலுக்கா தலைமையிடமல்லாத 20 மருத்துவ மனைகளிலும் எக்ஸ்ரே பிரிவுகளை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆகவே, ஏறத்தாழ 80 சதவீதம் மருத்துவ மனைகளில்—தாலுக்கா மற்றும் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில்—எக்ஸ்ரே பிரிவுகளை ஏற்படுத்தியிருக்கிறோம். மேலும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைச் சொல்வது நல்லது என்று கருதுகிறேன். நிறைய எக்ஸ்ரே எடுக்க வேண்டுமென்பது ஒரு தவறான எண்ணம். எக்ஸ்ரே

[1983 ஏப்ரல் 19

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுப்புற சூழ்நிலையைப் பொறுத்த வரையில், அதற்கு நாம் இப்போது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம். அண்மையிலே கூட, சென்னையிலே இருக்கக் கூடிய ஊனமுற்றவர்களுக்கான ஆர்டிபிசியல் லிம்ப் என்ற சென்டரில், சுற்றுப்புற சூழ்நிலை நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக வன இலாகா சோஷியல் பாரஸ்ட் என்ற திட்டத்தின் அடிப்படையில், அங்கே மரங்களை நடுவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறோம். இப்போது இரண்டு நாட்களுக்கு முன்பாக, ஒரு அரசாணையைப் பிறப்பித்திருக்கிறோம். அந்த ஆணையின்படி, ஒவ்வொரு மருத்துவ மனையிலும் அங்குள்ள இடத்தைப் பயன்படுத்தி, மரங்களை அங்கே நடக்கூடிய ஒரு பெரிய திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறோம்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசு மருத்துவமனைகளில் பெரும் பகுதி இன்றைய தினம் அசுத்தமாக இருந்து வருகின்றன. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அதே நேரத்தில், வார்டுகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு ரூ. 500 அரசு பரிசு வழங்குவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி எத்தனை இடங்களில் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அங்கே நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு, போதிய பணியாளர்கள் இல்லையென்று பொதுவாகச் சொல்லுகிறார்கள். ஆகவே, அதிகப்படியான பணியாளர்களை அமர்த்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர்கள் போதாது என்பது மிகவும் முக்கியமான காரணம். அது அரசாங்கத்திற்குத் தெரியும்; எல்லோருக்கும் தெரியும். ஆனால், பணியாளர்கள் தேவைப்படுகின்ற அளவுக்கு, இன்டர்நேஷனல் ஸ்டாண்டர்டுக்கு, அந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்த வேண்டும் என்றால், அதற்கு மட்டும் பல கோடி ரூபாய் செலவழிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நாம் தள்ளப்படுவோம். ஆகவே, அதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்திற்கொண்டு அந்த அளவிற்கு நாம் செலவழிக்கத் தயாராக இருக்கிறோமா என்பதையும் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 19]

## சுண்டக்குடியிலுள்ள சித்த வைத்திய மருத்துவ மனையை அலோபதி மருத்துவ மனையாக மாற்றும் திட்டம்.

*வினா எண் 804—**திரு. த. ஆறுமுகம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரியலூர் தொகுதி, சுண்டக்குடியில் உள்ள சித்த வைத்திய மருத்துவமனையை அலோபதி மருத்துவமனையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** அவ்வாறான செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

**திரு. த. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது அவ்வாறான ஏற்பாடுகள் இல்லையென்று சொல்லுகிறார்கள். அரியலூரிலிருந்து சுண்டக்குடி 20 மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. அதைச் சுற்றி 18 கிராமங்கள் இருக்கின்றன. அங்கிருக்கக் கூடியவர்கள் மருத்துவமனைக்கு வரவேண்டுமென்றால், அரியலூருக்குத் தான் வரவேண்டியிருக்கிறது. எனவே, இந்த ஆண்டாவது அங்கிருக்கக்கூடிய சித்த வைத்திய மருத்துவ மனையை, அலோபதி மருத்துவமனையாக மாற்ற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த அடிப்படையிலே கேட்கிறார்கள் என்பது புரியவில்லை. இப்போது, அங்கிருக்கக்கூடிய சித்த மருத்துவமனை நல்லமுறையிலே செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அந்த சித்த மருத்துவ மனையை, அலோபதி மருத்துவமனையாக மாற்ற வேண்டும் என்று ஏன் கேட்கிறார் என்பது புரியவில்லை. அங்குள்ள மக்கள் நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்ளக்கூடிய மருத்துவ மனையாக அது இயங்கி வருகிறது. எனவே, அந்த சித்த மருத்துவமனையை, அலோபதி மருத்துவமனையாக ஆக்க வேண்டுமென்ற தேவை இருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

**திரு. த. ஆறுமுகம் :** தலைவரவர்களே, இப்போது தேவை இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் கட்டிடம் கட்டப்பட்டு இருக்கிறது. அங்கே சித்த மருத்துவ டாக்டர் தங்குவதில்லை. ஆகையால் அங்கே மருத்துவ அதிகாரி தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

[1983 ஏப்ரல் 19

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாரியம் செயல்படத் துவங்கும் போது, அதை எந்த இடத்திலே அமைக்க அரசு உத்தே சித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னையிலே அமைக்கலாம் என்ற யோசனை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு ஏதாவது யோசனையைச் சொன்னால் அதையும் பரிசீலிக்கலாம்.

**திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, இவ்வாரியத்தின் சார்பில், பழங்காலத்தில் நம்முடைய தமிழ கம் கையாண்ட முறைகளைப் பற்றி அறிந்த வித்தகர்களைக் கொண்டு, ஆய்வு செய்து, ஏதாவது புஸ்தகங்களை வெளியிட அரசிடம் யோசனை உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் பல நூல்களை நாம் ஏற்கனவேயே வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம். அண்மையிலே கூட 12 புத்தகங்களை நாம் வெளியிட்டிருக்கிறோம். அவை களை எல்லாம் எக்ஸிபிஷனிலே கூட போட்டிருக்கிறோம். இங்கே சட்டமன்றத்திலே, நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை நடந்தபோது, நான் பேசுகிற நேரத்திலே கூட அந்த நூல்களைக் கொண்டு வந்திருந்தேன். சில நூல்களைக் குறிப்பிட்டும் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தேவை என்றால், அவற்றில் ஒரு பிரதி அனுப்பிவைக்கிறேன். அவர்களும் ஒரு சில பதிப்புக்களை வாங்கிக் கொண்டால் நன்றாக இருக்கும். அவைகளை விலை கூடுதலானது என்று சொல்ல முடியாது. ஆனால் மிக நல்ல முறையில் பல இடங்களில் வெளியில் கிடைப் பதற்கு அரிதான புத்தகங்கள், ஆகையினால், அவைகளைப் பணம் கொடுத்துக்கூட நாம் வாங்கலாம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர் களே, கொடுக்கப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையிலே மூலிகைச் செடிகள் பயிரிடுவதற்கான விரிவாக்கச் செயல்களை உதவித் தொகை பெறும் திட்டங்கள் மூலம், உழவர்கள் மற்றும் மலைச் சாதியினர் முதலியோருக்கு உபயோகப்படுத்தும் வகையில் ஏற்படுத்தப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். மலை ஜாதியினர் என்று செல்லும்போது வடாற்காடு மாவட்டத் தில் உள்ள ஏலகிரி, ஜவ்வாது போன்ற இடங்களில் நீர் வளமும், இருக்கின்றது. அங்கே காடுகளும் இருக்கின்றன. மலை வாழ்



1983 ஏப்ரல் 19]

மக்களும் இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் இந்தச் செடிகளைப் பயிரிடுவதற்கு இந்த வாரியத்தின் மூலம் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர் களே, வாரியத்தினுடைய ஹெட்குவார்ட்டர்ஸ் சென்னையிலே இருக்கின்ற நிலைமையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தினை எடுத்துக் கொள்ளலாமா என்பது பற்றி ஆராயலாம். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதன் முழு விவரத்தையும் எனக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள் கிறேன்.

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியிலே உள்ள சிறுமலையில் தான் சஞ்சீவி மூலிகை இருந்ததாக கூறப்படுகின்றது. ஆகவே அந்த சிறுமலைப் பகுதி யிலே அந்த வாரியத்தின் தலைமையிடத்தை அமைக்கவும் செடிகளை உற்பத்தி செய்யவும் அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர் களே, நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர் களுக்குச் சொன்னது மாதிரி எந்த எந்தப் பகுதியிலே இந்தச் செடிகளை எல்லாம் வளர்ப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் இருக் கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நினைக் கிறார்களோ அவை பற்றிய முழு விவரங்களையும் எழுத்து மூல மாகக் கொடுத்தனுப்பினால் அவை எல்லாம் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த வாரியத்தினுடைய தலைமையிடம் சென்னையிலேயிருக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சித்தவைத்தியம் என்பது சித்தர்களால் உருவாக்கப்பட்டது. சித்தர்களுக்கு நாத னான சித்தநாதன் இருக்கின்ற இடம் பழனி. எனவே பழனியிலே அந்த வாரியத்திற்கான தலைமையகத்தை அமைப்பதுதான் எல்லா வகையிலும் பொருத்தமாக இருக்கும். இப்போதும் கூட சித்த மருத் துவர்கள் அதிகமாக இருக்கின்ற இடம் அந்தப் பழனி மலைப் பகுதிதான். ஆகவே அங்கே இந்தத் தலைமையிடத்தை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர் களே, இன்னும் அது குறித்த முடிவு எடுக்கப்படவில்லை என்று நான் சொன்னேன். சென்னையிலே இப்போது இருக்கின்றது என்று சொன்னேன். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய யோசனையும் கருத்திலே கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 19

எடுத்தால்தான் நோயைக் கண்டுபிடிக்க முடியும் என்பது தவறு. பல நேரங்களில் தேவையில்லாமல் கூட எக்ஸ்ரே எடுக்கக்கூடிய வழக்கம் இருக்கிறது. அது நல்லது அல்ல. தேவையிருந்தால் மட்டும் எடுத்தால் போதும் என்று அரசு கருதுகிறது.

(முற்பகல் 9–40)

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா அளவிலே உள்ள அரசு மருத்துவ மனைகளில்—அமைச்சர் அவர்கள் முன்னாலேயே அறிவித்திருக்கிறார்கள்—மின்சார தட்டுப்பாட்டின் காரணமாக தடங்கல்கள் ஏற்படாமல் இருக்க, தாலுக்கா மருத்துவமனை களிலேயும், இப்போது பெரிய அரசு மருத்துவமனை களில் உள்ளது போல ஜெனரேட்டர் வாங்கிக் கொடுக்கப் படும் என்று சொன்னார்கள். அது எப்போதிலிருந்து கொடுக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி எக்ஸ்ரே பொறுத்ததாகும்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தாலுக்கா மருத்துவ மனைகளில் ஏற்கனவே எக்ஸ்ரே பிரிவு இருந்தும் கூட, பல மருத்துவ மனைகளில் அது செயல்படாமல் உள்ளதை அமைச்சர் அறிவாரா? அதுபோன்ற நிலைமை எந்தெந்த மருத்துவ மனைகளில் உள்ளது, எங்கெங்கு எக்ஸ்ரே பிரிவுகள் செயல்படவில்லை என்று அறிந்து, அந்த நிலைமை களைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தீவிரமாக ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனைக்கும் போய் நான் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன். எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஒவ்வொரு மருத்துவ மனையாக சென்று எப்படி அங்கே பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று பார்க்கிறேன். எக்ஸ்ரே பிரிவுகளையும் போய் பார்க் கிறேன். அந்தப் பிரிவு செயல்படுகிறதா, கருவிகள் வேலை செய்கிறதா என்று நேரிலேயே செக் செய்கிறேன். மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மருத்துவமனையில் அதுபோன்று எக்ஸ்ரே பிரிவு செயல்படாத நிலை இருக்குமே யானால், தயவுசெய்து எனக்கு எழுதிக் கொடுப்பார்களே யானால் நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.



1983 ஏப்ரல் 19]

மூலிகை வாரியம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 806—திரு. செ. செம்மலை : திரு. ப. வெங்கட சுப்பிரமணியம் ; மற்றும் திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூலிகை வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : **விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வாரியத்திற்கு என்று ரெக்கரிங் எக்ஸ் பென்டிசர் என்ற வகையில், நான்-ரெக்கரிங் எக்ஸ்பெண்டிசர் என்ற வகையில் எவ்வளவு தொகையை அரசு ஒதுக்கியுள்ளது என்ற விவரங்களையும், இந்த விவர அறிக்கையிலே சொல்லப் பட்டிருப்பதைப் போன்று, அந்த மூலிகைச் செடிகளை வளர்ப்பதற்கும், கொள்முதல் செய்வதற்கும் அந்த வாரியத் திற்கு வருமானம் வரக்கூடிய அளவுக்கு ஏதாவது திட்டங்கள் அரசிடம் உள்ளதா என்று விவரத்தையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாரியம் ஒரு அட்டா னமஸ் கார்ப்பொரேஷனாக இருக்கவேண்டும் என்று நாம் ஆணை பிறப்பித்திருக்கிறோம். இதற்கு 31 லட்சம் ரூபாய் ரெக்கரிங் எக்ஸ்பெண்டிசராகவும், 36 லட்சம் ரூபாய் நான் ரெக்கரிங் எக்ஸ்பெண்டிசராகவும் செலவாகும். அந்த வகை யிலே 31 பிளஸ் 36—முதலாவது ஆண்டுக்கு 67 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்றும், அதற்குப் பிறகு ரெக்கரிங் எக்ஸ்பெண்டிசராக 31 லட்சம் ரூபாய் வருடத்திற்குச் செலவாகும் என்றும் ஒரு திட்டம் இட்டிருக்கிறோம். அது மட்டும் அல்லாமல், இந்த வாரியத்திற்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று கேட்டார்கள். அதில் இப்போது நாம் போட்டிருக்கக்கூடிய கணக்கின் அடிப்படையிலே 86.80 லட்சம் ரூபாய் அதற்காக—அர்பன் பிளான்ட்ஸ் போன்ற மூலிகை களை கல்டிவேட் செய்வதன் மூலமாகக் கிடைக்கும் என்று திட்டமிட்டிருக்கிறோம், ஏறத்தாழ 700 ஏக்கர் நிலத்தை இதற்காக ஆர்ஜிதம் செய்ய திட்டமிட்டிருக்கிறோம்.

** 405–406 ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1983 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு தொழிற்பேட்டை சிப்காட் நிறுவனம் ஏற்படுத்துவதற்கு சுமார் 2 கோடி ரூபாய் வரைக்கும் செலவாகும். இதிலே அடிப்படை கட்டிடங்கள் மற்றும் இன்பரா ஸ்ட்ரக்சர் போன்ற அடிப்படை வசதிகள் செய்வதற்கு சுமார் 2 கோடி ரூபாய் வரையில் செலவாகிறது.

**திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர், திண்டுக்கல் வட்டங்களை தொழிற்துறையில் பின்தங்கிய வட்டங்களாக முடிவு செய்து இருக்கிறோம். ஆனால், அமைச்சர் அவர்கள் சிப்காட் சார்பில் ஏற்படுத்துகிற காம்பிளக்ஸ் ஒன்று தண்ணீர் வசதி இல்லாமல் போனதால் அதை கைவிடலாமா என்று ஆலோசிக்கிறோம் என்று சொன்னார்கள். பக்கத்தில் உள்ள வைகை பேரணையிலிருந்து திண்டுக்கல்லுக்கு தண்ணீர் வரக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே மக்களுக்கு வேலை வாய்ப்புச் தொழில் வளர்ச்சி என்ற அடிப்படையில் செம்பட்டி போன்ற பகுதியில் அமைக்க மீண்டும் பரிசீலனைச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய தாலுக்கா என்று அறிவிக்கிறபோது அந்த தாலுக்கா முழுவதும் பரவலாக தொழில்கள் இல்லாததால் அதை தொழிலில் பின்தங்கிய தாலுக்கா என்று அறிவிக்கிறோம். ஆனால், தொழில்பேட்டை என்றால் 500 ஏக்கர் அல்லது ஆயிரம் ஏக்கர் என்று இடம் எடுக்கிறபோது அந்தத் தொழிற்பேட்டைக்குள்ளே 50, 100 தொழில்கள் வரும்போது அந்தத் தொழில்களுக்குத் தேவைப்படுகிற, அந்தத் தொழிலாளர்களுக்குத் தேவைப்படுகிற அனைத்து வசதிகளும் அங்கே இருந்து ஆக வேண்டும். இல்லை என்றால் ஒகூரில் தண்ணீர் இல்லை இப்படி பல பிரச்சினைகள் வரும். எனவே, தொழில் பேட்டை காம்பிளக்ஸ் என்று ஆரம்பிக்கும் போது அங்கே தண்ணீர் வசதி, சாலை வசதி, போக்குவரத்து வசதி இவை எல்லாம் இருக்கும் இடமாக பார்த்து தேர்வு செய்கிறோம். பின்தங்கிய தாலுக்கா என்றால் ஒரே இடத்தில் குவியலாக வேறு தொழில்கள் வராது. ஒரு கிராமத்தில் அல்லது ஒரு ஊரில் அல்லது பல்வேறு இடங்களில் பரவலாக வரும். அங்கே தொழில் வளர்ச்சி ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல இந்த காரணங்களினால் தான் தண்ணீர் வசதி இருக்கிற இடமாகத் தேர்வு செய்வதற்காக சொல்லியிருக்கிறோம். எப்படி இருந்தாலும் மதுரையில்தான் வரப்போகிறது. பொருத்தமான ஒரு இடம் பொதுப்பணித்துறையை கலந்து ஆலோசித்து தேர்வு செய்யப்படும்.



1983 எப்ரல் 19]

**திரு. இரா. முத்தையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் சிப்காட் நிறுவனம் அமைக்க இருக்கிற தொழிற்பேட்டைக்கு தண்ணீர் வசதி இல்லாததால் வேறு தண்ணீர் வசதி உள்ள இடத்தை தேர்வு செய்யலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அங்கே பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்பட்ட வட்டங்களில் உசிலம்பட்டி வட்டமும் ஒன்று. அது பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டு எல்லா உதவியும் செய்வதாக அறிவிக்கப்பட்ட பின்னரும் கூட இன்னும் அந்த பகுதியில் ஒரு சிறு தொழில் கூட உருவாக்கப்படவில்லை. அங்கே தண்ணீர் வசதியும்—இப்போது வைகையிலிருந்து கொண்டு வருவதற்கு கால்வாய்கள் எல்லாம் —உண்டு. எனவே, இதைப் பயன்படுத்தி உசிலம்பட்டி வட்டத்தில் இதை ஆரம்பிப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்ன வேடசந்தூர் பகுதி, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்தையா அவர்கள் சொல்லும் உசிலம்பட்டி பகுதி இப்படி ஏறக்குறைய குறைந்தது 3, 4 இடங்களை தேர்வு செய்து சிப்காட் நிறுவனம் அனுப்பினால் அதைப் பொதுப்பணித்துறையோடு கலந்து இந்த 4-ல் எது பொருத்தமான இடமாக இருக்கிறதோ அதை அரசு அதற்கு பின்னால் முடிவுசெய்யும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே செம்பட்டியில் அதிகாரிகள் எல்லாம் நியமித்து அதிலே பல இலட்சம் ரூபாய் சம்பளமாக கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதை இப்போது தண்ணீர் இல்லாத காரணத்தால் தள்ளி வைத்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நிலக்கோட்டை ஒரு பின்தங்கிய பகுதியாக இருந்தாலும்கூட திண்டுக்கல்லில் உள்ள ஆத்தூர் தொகுதி மாண்புமிகு திரு. வெள்ளைச்சாமி அவர்கள் தொகுதி. அதையும் நிலக்கோட்டை தொகுதியையும் இணைத்து தண்ணீர் உள்ள இடமாக இப்போது அதிகாரிகளால் பார்க்கப்பட்டு வருகிறது. அதிலே ஏற்கெனவே ஜனங்கள் எல்லா வேலையும் முடிந்த பிறகு அதிகாரிகள் எல்லாம் போட்ட பிறகு அதை மாற்றி இருக்கிறீர்கள். இன்னும் அதை ஆரம்பிக்கவில்லையே என்ற ஒரு ஏக்கம் அங்குள்ள மக்கள் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்து அந்த செம்பட்டியை ஒட்டி வேறு இடமாக நல்ல இடமாகப் பார்த்து அதை ஏற்படுத்துமா ? இதை அரசு ஆராயுமா என அறிய விரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 19

திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் : தலைவர் அவர்களே, காஞ்சீபுரம் தலைநகரில் சிற்சபை என்ற ஒரு சித்த வைத்தியர் மிகச் சிறப்பாக சித்த வைத்தியம் பற்றிய நூல்களை வெளி யிட்டிருக்கிறார். உணவுப் பொருட்களான கீரை, பூண்டு போன்ற வற்றிலே எந்தெந்த மூலிகைகள் அடங்கி இருக்கின்றன என் பதைப் பற்றி எல்லாம் எழுதி இருக்கிறார். அப்படிப்பட்ட மூலிகைகள் எல்லாம் எந்த எந்த வியாதிகளைக் குணப்படுத்தும் என்பது பற்றி எல்லாம் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார். அவர் எழுதுகின்ற அப்படிப்பட்ட நூல்களை எல்லாம் வெளி யிடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, அவர் ஒரு சிறந்த சித்த பருத்துவ நிபுணர். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு மிக நன்றாக அறிமுகம் ஆனவர். அவ ருடைய நூல்களை ஓரளவுக்கு நான் படித்துப் பார்த்து இருக் கிறேன். மிக நல்ல நூல்கள் அவை. அவை எல்லாம் நிச்சயமாக வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருந்துகளின் சேசிஸ் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 807—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழிலமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பேருந்துகளின் சேசிஸ் உற்பத்தி செய்வதற்கு புதியதாக அரசுத் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இல்லை.

மதுரை மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 808—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்க இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொழிற்பேட்டை அமைக்கும் பணி துவங்கும் ?



1983 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழ கத்தின் கீழ் மதுரை, புதூர், கப்பலூர், திண்டுக்கல், தேனி, வத்தலக்குண்டு ஆகிய இடங்களில் தொழில்பேட்டைகள் இயங்கி வருகின்றன. மதுரை மாவட்டத்தில் செம்பட்டி, வாடிப்பட்டி ஆகிய பகுதிகளில் '' சிப்காட் '' தொழில் இணையத்தை அமைக்க அரசு அனுமதி வழங்கியது. எனினும் இப்பகுதியில் தொழில் இணையத்திற்குத் தேவையான அளவு நீர் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவாக இருந்தமையால் தமிழ் நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் கேட்டுக் கொண்டதற் கிணங்க மேலே அனுமதி அளிக்கப்பட்ட பகுதியில் தொழில் இணையம் அமைக்கும் பணியை கைவிடவும், போதுமான அளவு தண்ணீர் கிடைக்கும் மாற்று இடங்களை பொதுப் பணித்துறை யினருடன் கலந்து ஆலோசித்து தேர்வு செய்து பின்னர் அரசை அணுகுமாறும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே தொழில் மையம் ஏற் படுத்துவதைப் பொறுத்தவரையில் ஆய்வு செய்யப்பட்டு தண் ணீர் வசதி இல்லாத காரணத்தால் கைவிடப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார். ஆனால் வேடசந்தூர் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. மேலும் தண்ணீர் வசதியைப் பொறுத்தவரையிலே குடகனாற்றிலே இருந்து திண்டுக்கல்லிற்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டும் என்று ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த குடகனாற்றுத் தண்ணீரைக் கொண்டு வருகின்ற சாத்தியக் கூறு கள் இருப்பதாலும், அந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதாலும் அந்தப் பகுதியிலே தொழில் மையங்களை அமைப் பது குறித்து அரசு உத்தரவிடுமா ?

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திற்கு ஒரு சிப்காட் காம்பிளக்ஸ் உண்டு. சுமார் 200 ஏக்கரிலிருந்து 500 ஏக்கர் இருக்கிற அளவிலே அந்த தொழிற்பேட்டை அமைக்கும் காலத் தில் சிப்காட் நிறுவனம் பொதுத் துறையோடு கலந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடம், மற்றும் 2, 3 இடங்களை தேர்வு செய்து அரசுக்கு அனுப்புவார்களானால் அதிலே ஒரு பொருத்தமான இடத்தை அரசு தேர்வு செய்யும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள தொழில் மையம் மதுரை மாவட்டத்தில் ஏற்படுத்துவதற்கு எவ்வளவு ரூபாய் செலவில் முடியும் என்பதை மாண்புமிகு அமைச் சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்பட்டி பகுதியில் இதற்கு முன்னால் அதிகாரிகள் எல்லாம் நியமித்து பெரும் செலவு ஆனதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படி ஒன்றும் அதிகமான செலவு ஆனதாக கணக்கு எதுவும் இல்லை. இடம் பார்க்கச் சொல்லி அந்த இடத்தை தேர்வு செய்யச் சொல்லி அனுப்பியிருந்தார்கள். அங்கே போதுமான தண்ணீர் இல்லாத காரணத்தால் அந்த இடத்திற்கு பதிலாக இன்னும் சில இடங்களை பார்த்து அதிலே ஒரு நல்ல இடமாக தேர்வு செய்ய முடிவு செய்து இருக்கிறார்கள். ஏற்கெனவே சொன்னதைப்போல மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பாலசுப்பிரமணியம், முத்தையா அவர்கள் சொன்ன இடங்களை பார்க்கச் சொல்வோம். அதுபோல், 4, 5 இடத்தைப் பார்த்து வரட்டும். அதற்குப் பின்னால் ஒரு இடத்தை முடிவு செய்யலாம். அது ஆத்தூரா, அல்லது வேடசந்தூரா அல்லது உசிலம்பட்டியா என்பதை அதற்கு பின்னால் முடிவு செய்யலாம்.

**திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, எந்தவிதமான தொழிலும் ஆரம்பிக்காத பகுதி தொழிலிலே பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய உத்தமபாளையம் வட்டத்திலே எந்தவிதமான தொழிலும் கிடையாது. அந்தப் பகுதி விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிற பகுதியாகும். எனவே, அந்த சிப்காட் தொழிற் பேட்டையை அந்தப் பகுதியிலே ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே உள்ள எல்லா வட்டங்களையும் பார்க்கச் சொல்வோம். எந்த வட்டத்திலே தண்ணீர் வசதி இருக்கிறதோ, எந்த வட்டம் அதற்குப் பொருத்தமாக இருக்கும் என்று பார்த்து அதிகாரிகள் பரிந்துரை செய்கிறார்களோ அதற்கு ஏற்ப பின்னாலே அதுபற்றி முடிவு செய்யலாம்.

**மயிலாடுதுறை அருகில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்.**

*வினா எண். 809—திரு. இரெ. இராசமாணிக்கம்; திரு. ஏ. ரி. **சண்முகம் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை அருகில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டத்தின் ஆய்வு முடிந்துவிட்டதா ?

(ஆ) ஆம் எனில், ஆலை அமைக்கும் பணி துவங்கப்பட்டு விட்டதா ?

(இ) மதிப்பீடு எவ்வளவு ?



1983 ஏப்ரல் 19]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறை பகுதியில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை 1,250 டன் பிழி திறன் கொண்ட ஆலையை அமைப்பதற்கு ஆய்வு செய்து முன் உரிமம் வழங்கும்படி கேட்டு மைய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(ஆ) முன் உரிமம் பெற்றவுடன், நிர்மாணப் பணி தொடங்கப்படும்.

(இ) சுமார் ரூபாய் 10 கோடியாகும்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவர் அவர்களே, மயிலாடுதுறை அருகில் கூட்டுறவுத் துறையில் சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சர்க்கரை ஆலை அமைப்பதற்காக மாநில அரசு பரிந்துரை செய்து மைய அரசுக்கு அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள். மாநில அரசு மைய அரசுக்கு எந்தத் தேதியில் பரிந்துரை செய்து எழுதியது என்பதையும் அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலமாக எவ்வளவு டன் உற்பத்தி செய்வதாக அமையும் என்பதையும் தெரிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, ஒரு ஆண்டுக்கு முன்னால் 5—4—1982 அன்று மாநில அரசின் முதல் முறை பரிந்துரை கடிதம் போனது. அதிலிருந்து அங்கே போகிறபோது எல்லாம் அமைச்சர்களைப் பார்த்து சொல்லிக் கொண்டு இருக்கிறோம். தொடர்ந்து நாம் நினைவூட்டுக் கடிதங்கள் எழுதுகிறோம். கெபாசிடியைப் பற்றிச் சொன்னேன். 1,250 டன் பிழிதிறன் கொண்டதாக அந்த சர்க்கரை ஆலை இயங்கும். சுமார் 1,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடிய முறையில் அந்தத் தொழிற்சாலை அமையும்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவர் அவர்களே, அந்த சர்க்கரை ஆலைக்கு எந்த இடம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது ? எத்தனை ஏக்கர் அதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கிறது என்பதைத் தெரிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, மயிலாடுதுறைப் பகுதியில் மணல்மேடு என்ற இடத்தில் இடம் பார்த்து இருக்கிறார்கள். ஆனால் உரிமம் கிடைத்ததற்குப் பின்னாலேதான் அந்தப் பகுதியிலே எந்த இடம் பொருத்தமான இடம் என்று தேர்ந்தெடுத்து முடிவு செய்ய வேண்டும். கரும்பு பயிரிடுகிற பகுதியைப் பொறுத்தவரையிலும் அதைச் சுற்றியிருக்கிற சுமார் 5,000 ஏக்கர் பகுதிகள் அந்த சர்க்கரை ஆலைக்கு வேண்டிய ரிஜிஸ்டர்டு கம்பு பயிரிடுகிற பகுதியாக, மயிலாடுதுறையைச் சுற்றியிருக்கிற பகுதியிலே 5 ஆயிரம் முதல்

7 ஆயிரம் ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து நாமே எடுத்துக் கொள்வதல்ல, விவசாயிகளுக்கு இன்சன்டிவ் கொடுத்து நாம் கரும்பு பயிரிட உற்சாகப்படுத்துவோம்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, கடந்த இரண்டாண்டுக் காலமாக அந்தச் சர்க்கரை ஆலை அமைப்பதற்காக திட்டம் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டாவது உடனடியாக நடவடிக்கை எடுத்து, 1983—84 இல் ஆவது அந்த ஆலைக்கான இடத்தை ஆர்ஜிதம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, லைசென்ஸிங் கமிட்டிக்கு அது போய் இருப்பதாகத் தகவல். மைய அரசு அதைப் பரிசீலித்து விரைவிலே உத்திரவிடும் என்று கருதுகிறேன். நாடாளுமன்றம் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. நான் திருப்பிச் சொல்வதாக கருத வேண்டாம், திராவிட முன்னேற்றக் கழக நாடாளு மன்ற உறுப்பினர்கள் அங்கே இதைப்பற்றிக் கேள்விகள் கேட்கலாம் அல்லது கவன ஈர்ப்பு மூலம் கொண்டுவரலாம், அமைச்சர்களைப் பார்த்துச் சொல்லச் சொல்லலாம். இங்கேயிருந்து என்னென்ன அனுப்ப வேண்டுமோ அவைகள் எல்லாம் அனுப்பப்பட்டு மத்தியிலேதான் தேங்கியிருக்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு, அங்கே இந்த பிரச்னையை எழுப்பி அதை விரைவுபடுத்துமாறு கோரலாம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அங்கே நாடாளுமன்றத்தில் இவைகளை எடுத்துச் சொல்லும்படி அவர்களைக் கேட்டுக் கொள்ளலாம். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினர்கள் அங்கே பேசலாம், கேட்கலாம். நிலம் ஆர்ஜிதம் செய்து தொழிற்சாலை கட்டுகிற பகுதி மிகக் குறைவான பகுதி தான். எனவே உடனடியாக அந்தப் பணிகளைத் துவக்கி ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டுக் காலத்திற்குள்ளே உற்பத்தியை துவக்கிவிட முடியும்.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மணல்மேடு பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க செயற் குறிப்பு இருப்பதாகச் சொன்னார்கள். மணல்மேடு பகுதியில் ஒரு பஞ்சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தொழில் கூடங்கள் இல்லாத பகுதியான தரங்கம்பாடி வட்டத்தில் அமைக்க அரசு ஆய்வு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **வினாக்கள் - விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.**



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மணல்மேடு பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை இருப்பது எனக்குத் தெரியும். அந்த இடம் முடிவு செய்யப்பட்டு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்று நான் சொல்லவில்லை. மணல்மேடு பகுதி பார்க்கப்பட்டிருக்கிறது. அந்த பகுதியில் எந்த இடத்தில் அமைப்பது என்பதைப் பற்றி அரசு விரைவில் லெட்டர் ஆப் இன்டென்ட் கிடைத்தவுடன் முடிவு செய்யும்.

## மேல்புத்தூர் கிராம ஆதி திராவிடர் மக்களுக்கான குடியிருப்பு மனைகள்.

*வினா எண் 810— திரு. ப. வெங்கட சுப்பிரமணியம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரம் வட்டம் மேல்புத்தூர் கிராம ஆதி திராவிட மக்கள் குடியிருப்புமனை வேண்டி கோரிக்கை விடுத்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில் அக்கோரிக்கை மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ) : காஞ்சீபுரம் வட்டம், மேல்புத்தூர் கிராம ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனை வழங்கப்படுவதற்காக நிலமெடுப்பு சட்டம் 1894-ன் கீழ் 4(1) அறிவிக்கைக்கான செயற் குறிப்பு ஒன்று செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டு அரசு ஆணை (நிலை) எண். 1367, சமூகநலம், நாள் : 25—3—1983-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. ப. வெங்கட சுப்பிரமணியம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மேல்புத்தூர் கிராமத்திற்கு குடியிருப்பு மனைகள் கோரி 2½ ஆண்டுகளாகியும் இந்த மனைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த மனுக்கள் மீது ஏதாவது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பரிசீலனை செய்து நடவடிக்கையெடுக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மேல்புத்தூர் கிராமத்தில் வசிக்கக்கூடிய மக்கள் ஏரிக்கரையின் ஓரத்தில் வசிக்கின்ற காரணத்தால் மழைக்காலங்களில் அங்கே தண்ணீர் வரக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அரசு உடனடியாக அவர்களுக்கு வீட்டுமனைகளை வழங்க நடவடிக்கைகளை எடுக்கும்.

[1983 ஏப்ரல் 19

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபோன்று காஞ்சீபுரம் வட்டத்தில் எவ்வளவு விண்ணப்பங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன? குடியிருப்பு மனைகளில் வீடுகளை கட்டிக்கொள்ள அரசு என்னென்ன உதவிகளை செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கேட்டிருக்கிற கேள்வி பேஸ்புந்தூர் கிராமத்தைப் பற்றியது. காஞ்சிபுரம் வட்டத்தில் எத்தனை வீடுகள் என்பதை பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாக கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ந. மாரிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, காஞ்சீபுரம் வட்டம் மட்டுமல்லாமல் தமிழ்நாடு முழுவதிலுமே ஆதிதிராவிட மக்களுக்கு இப்படிப்பட்ட பிரச்னைகள் இருக்கின்றன. ஆடுகளுக்கும், மாடுகளுக்கும் கட்டுந்தறி இருக்கிறது; குருவிகளுக்கும், குஞ்சுகளுக்கும் கூட கூடு கட்ட இடமிருக்கிறது. ஆனால் இந்தியா சுதந்திரம் பெற்று 36 ஆண்டுகள் ஆகியும் இன்னும் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைகள் இல்லையென்ற பரிதாபமான நிலையை ஒரு முடிவிற்குக் கொண்டு வர ஒரு திட்டம் கொண்டு வந்து அரசு நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற ஆதி திராவிட மக்களுக்கு பெரும்பாலும் இந்த வீட்டு மனைகள் பிரச்னை இருப்பதை அரசு உணர்ந்திருக்கிறது. அந்த வகையில் இந்த அரசு பொறுப்பேற்று அதிலே அதிக அக்கறை செலுத்தி, அதிகமான அளவிலே ஏற்கெனவே வீட்டுமனை பட்டாக்களை வழங்கிக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை தொடர்ந்து நிறைவேற்றும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



1983 ஏப்ரல் 19]

## 2. தகவல் கோரல்

### (அ) சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர்வழங்குவது பற்றிய உடன்பாடு.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்று தென்னாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க
கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தத்தை, தமிழக முதல்வர் மாண்பு
மிகு புரட்சித் தலைவர் அவர்களும், ஆந்திர முதல்வர் மாண்பு
மிகு திரு. என். டி. ஆர். அவர்களும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்
இந்தச் சபை தங்கள் மூலமாக, ஏதாவது அனைத்துக்
கட்சி சார்பாக பாராட்டுத் தெரிவிக்க இருக்கிறதா என்று
தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட தகவல் இதுவரையில் வரவில்லை.

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. கே. கல்லன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி
மாவட்டத்தில் கடந்த 4 ஆம் தேதி முதல் அனைத்து வழக்
கறிஞர்களும் ஊட்டி, குன்னூர், கூடலூர் பகுதிகளில் திடீர்
உண்ணாவிரதம் இருந்து, அரசிடம் சில கோரிக்கைகளை வைத்
திருக்கிறார்கள், கோர்ட் வேண்டுமென்று........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நோட்டீஸ் கொடுத்
திருக்கிறீர்கள் என் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறீர்கள்
என்று நினைக்கிறேன்.

(முற்பகல் 10—10)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறையிலே விவாதிக்கலாம்
இதுவரையிலே நானும், மாண்புமிகு டாக்டர் நெடுஞ்செழியன்
அவர்களும், மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்களும்
பேசியவை அனைத்தும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படு
கின்றன.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

## 3. அறிவிப்புகள்

### (அ) உரிமைக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

பேரவைக்கு ஓர் அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1983–84ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கின்றேன்.

1. திரு. கே. ஆர். சுந்தரம்.
2. திரு. இரா. கருப்பையா
3. திரு. ப. பொன்னுரங்கம்
4. திரு. கு. பா. பழனியப்பன்
5. திரு. செ. பட்டாபிராமன்
6. திரு. சோ. கலிதீர்த்தான்
7. திரு. சா. கிருட்டினமூர்த்தி
8. திரு. மா. சுப்பிரமனியன்
9. திரு. எம். பிச்சை
10. திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்
11. திரு. கி. சட்டநாதகரையாளர்
12. திரு. வெ. அரங்கராசன்
13. திரு. பி. தங்கவேலு
14. திரு. ஏ. சந்திரசேகரன்

முறையாக நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1983–84 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு இவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவையின் 245 (4) ஆவது விதியின் கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.





## 4. கவன ஈர்ப்பு.

### சேலம் உருக்காலைத் திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்த நியமிக்கப் பெற்ற அலுவலர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் கவன ஈர்ப்பு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

அடுத்து திரு. செ. செம்மலை, செல்வி ப. விசயலட்சுமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, '' சேலம் உருக்காலைத் திட்டத்தின் கீழ் நில ஆர்ஜிதத்தினால் பாதிக்கப் பெற்றவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பணிகளுக்கென ஆரம்பிக்கப்பெற்ற தனித் தாசில்தார் அலுவலகத்தை 31—3—1983 முதல் மூட ஆணையிட்டுள்ளதால், பாதிக்கப்பெற்ற நிலச் சொந்தக்காரர்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத்துணைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

சேலம் உருக்காலை நிறுவனத்திற்காக தேவைப்படும் நிலங்களை கையகப்படுத்துவதற்கு வருவாய்த்துறையில் வட்டாட்சியர் (Thasildar) வருவாய் ஆய்வாளர் (Revenue Inspector) உதவியாளர் ( Assistant ) போன்ற அலுவலர்களை அரசு நியமித்தது. இங்ஙனம் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தங்களது பணிகளை முடித்து விட வேண்டுமென பணிக்கப்பட்டனர். இருப்பினும் வேலைகள் முடிவுறவில்லையென்றால், அவர்களின் பணிக்காலம் செய்து முடிக்கப்பட வேண்டிய வேலைகளை கருத்தில் கொண்டு மேலும் நீடிக்கப்பட்டு வந்தது. இங்ஙனம் நீடிக்கப்பட்ட பணிக்காலம் அண்மையில் 31—1—1983-ல் முடிவடைந்தது. மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களின் காலம் 31—3—1983 வரையில் மேலும் நீடிக்கப்பட்டது.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1983 ஏப்ரல் 19

2. இப்பொழுது இவர்கள் செய்து முடிக்க வேண்டிய பணிகள் மிகவும் குறைந்த அளவே உள்ளன. அவைகளின் சுருக்கம் கீழ் வருமாறு :—

(i) சேலம் சார்பு நீதிமன்றத்தில் (Sub-Court)-ல் அதிக இழப்பீட்டுத் தொகை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள 24 வழக்குகளுக்கான விவரங்களை தயார் செய்து நடத்தவேண்டியிருக்கிறது. கையிருப்பிலுள்ள ரூ. 25 இலட்சத்துக்கான கணக்குகளையும் நிர்வகிக்க வேண்டியுள்ளது.

(ii) கையகப்படுத்தப்பட்ட நிலங்களை சட்டப்பூர்வமாக சேலம் உருக்காலை நிறுவனத்திற்கு அளிப்பதற்குத் தேவையான ஆவணங்களை தயார் செய்ய வேண்டியிருக்கிறது.

(iii) சுமார் 100 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை மேற்சொன்ன நிறுவனத்திற்கு மாற்றம் செய்ய வேண்டியிருக்கிறது.

3. மேற்சொன்ன அலுவல்களை கவனிப்பதற்காக தனி அலுவலர்களின் பணிக்காலத்தை 30—6—1983 வரையில் நீடிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சியர் அரசை வேண்டினார். அவரது வேண்டுகோளை ஆய்வு செய்தபின் 30—4—1983வரை அரசு அவர்களின் பணிக்காலத்தை நீட்டித்திருக்கிறது.

4. இங்ஙனம் நீடிக்கப்பட்ட காலத்திற்குள் தனி அலுவலர்கள், எஞ்சியுள்ள பணிகளைச் செய்து முடித்துவிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பின்னும், ஏதேனும் வேலை எஞ்சியிருந்தால் அவை வருவாய்த்துறையில் உள்ள மற்ற அலுவலர்களிடம் ஒப்படைக்கப்படும். நில உரிமையாளர்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாது கவனித்துக் கொள்ளப்படும்.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவர அறிக்கையில் இந்த அலுவலகம் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தாசில்தார் அலுவலகத்திற்கு ஏற்படும் அனைத்துச் செலவுகளையும் சேலம் ஸ்டீல் பிளான்ட் நிறுவனமே ஏற்றுக் கொள்வதால் அரசாங்கத்திற்கு எந்தவிதமான நிதி ஒதுக்கீடோ, செலவோ இல்லை. எனவே ஒரு மாத கால அவகாசம் கொடுத்திருப்பது ஒருவேளை அந்தப் பணிகள் முடிவதற்குப் போதுமானதாக இல்லை என்றால் மேலும் ஒரு மாதம் கால அவகாசத்தை நீட்டிப்பது குறித்து மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 19]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அநேகமாக எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன. இன்னும் 24 வழக்குகள்தான் முடிய வேண்டியிருக்கின்றன. 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ஆம் தேதி வரையில் காலத்தை நீட்டித்துக் கொடுத்து அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் தேவைப்படுமானால் மாண்புமிகு உறுப்பினவரர்கள் கேட்டபடி ஒரு மாத காலம் இன்னும் நீட்டிக்கப்பட வேண்டுமா என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : " தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 1974-75 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (ஆ. இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1974–75-ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையின் முன்மொழிய ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :—

MESSAGE

"In pursuance of Article 203, Clause (3)) of the Constitution of India, I,
SUNDER LAL KHURANA, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for grants for Excess Expenditure for the year 1974-75."

## 6. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். 1974-75

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1974–75 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய அறிவிப்பில் இரண்டாவது வரிசையில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் அவற்றின் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை அந்தந்த இனங்களுக்கு 1974–75 ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

### நிறைவேற்றப் பெற்ற 1974-75 ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.

| | | | (ரூபாய்) |
|---|---|---|---|
| கோரிக்கை | 1. | நிலவரித் துறை .. .. | 3,51,969 |
| ஷை | 7. | மாநிலச் சட்டமன்றம் .. | 43,025 |
| ஷை | 11. | மாவட்ட நிர்வாகம் .. | 1,10,364 |
| ஷை | 18. | மருத்துவம் .. .. | 1,54,82,432 |
| ஷை | 19. | பொதுச் சுகாதாரம் .. | 27,51,887 |
| ஷை | 20. | வேளாண்மை .. .. | 9,34,597 |
| ஷை | 22. | கால்நடை வளர்ப்புத் துறை .. | 65,57,197 |
| ஷை | 35. | பாசனம் .. .. .. | 1,19,17,937 |
| ஷை | 36. | பொதுப் பணிகள்— கட்டிடங்கள். | 56,00,380 |
| ஷை | 37. | பொதுப் பணிகள்— பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும். | 16,88,341 |



| | | | (ரூபாய்) |
|---|---|---|---|
| கோரிக்கை | 39. | சாலைப் போக்குவரத்துத் திட்டம். | 51,99,150 |
| ஷை | 41. | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும். | 41,55,018 |
| ஷை | 43. | எழுதுபொருள்-அச்சுத்துறை | 51,57,736 |
| ஷை | 44. | வனத் துறை .. .. | 7,32,092 |
| ஷை | 46. | ஜமீன்தார்களுக்கு இழப்பீடு | 6,35,911 |
| ஷை | 49. | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 10,96,651 |
| | | பெரு மொத்தம் | 6,24,14,687 |

## 3. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

### (இ) நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு 1983 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

### (ஆ) நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு 1983.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 7. நாள் குறிப்பிடப்பெறாத தீர்மானம்

நீதிபதி இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன் அறிக்கை மீது அரசு எடுத்த நடவடிக்கை.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் 1983ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ஆம் தேதியன்று வைக்கப்பெற்ற, நீதிபதி திரு. கே. எஸ். இராமமூர்த்தி விசாரணைக் குழுவின் அறிக்கை மீது 1982ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் தேதியிட்ட பொதுத் (சட்டமும், ஒழுங்கும்-அ) துறையின் 1794ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பெற்றவாறு அரசு எடுத்த நடவடிக்கை குறித்து விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

(தீர்மானம் முறையே வழிமொழியப் பெற்றது.)

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு இந்த மன்றத்திலே வைக்கப் பட்டிருக்கின்ற நீதிபதி திரு. கே. எஸ். இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன் மீது விவாதிக்க அனுமதி தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்தத் தீர்ப்பைப் பற்றி பேசுவதற்கு முன்னால், எந்த சூழ்நிலையில் இந்த இராமமூர்த்தி கமிஷன் நியமிக்கப்பட்டது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீதிபதி இராமமூர்த்தி விசாரணைக்கு முன்னால் கீழச் சங்கணாங்குளம், மேலச் சங்கணாங்குளம் ஆகிய இரண்டு கிராமங்களிலும் ஆதி திராவிடர்கள் வசிக்கிறார்கள். கீழச் சங்கணாங்குளத்தில் 180 தேவர்கள் வீடுகளும், மேலச் சங்கணாங் குளத்தில் 20 வீடுகளும் இருக்கின்றன. இதில் 60 ஆதிதிரா விடர்கள் வசிக்கிறார்கள். இந்த இரண்டு கிராமத்தில் இருக்கிற வர்களும் தொடர்ந்து 20 ஆண்டுகளாக அந்தக் கீழச் சங்கணாங் குளம் மாடசாமித்தேவர், சங்கரத் தேவர் வீடுகளில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போல் காசி என்பவர் நீலகண்டத் தேவர் வீட்டில் பணியாற்றுகிறார். நீலகண்டத் தேவரும், மாடசாமித் தேவரும், நெருங்கிய சொந்தக்காரர்கள். திருவிழாக் கொண்டாடுவதில் ஏதோ அவர்களுக்குள் மனக் கசப்பு ஏற்பட்டு, இரண்டு தேவர்களும் பிரிந்து வழக்கு போடும் காரியத்தைச் செய்திருக்கிறாகள். மணி என்பவர் மாடசாமித் தேவர் வீட்டில் தொடாந்து 20 ஆண்டுகளாகப் பணியாற்றுகிறார்.





அதே போல் காசி என்பவர் நீலகண்டத் தேவர் வீட்டில் பணியாற்றுகிறார். திடீரென்று ஏறத்தாழ 6 மாதங்களுக்குப் பின்னர் மணி என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். 17 பெண்கள் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள். 24–9–1980 அன்று மேலச் சங்கணாங்குளத்திற்கு அண்ணா நகர் என்று பெயர் வைப்பதற்கு நீலகண்டத் தேவர் தலைமையில் கூட்டம் நடந்தது. கூட்டம் முடிந்ததற்குப் பின்னர் ஏறத்தாழ 6 மாதத்திற்குப் பின்னால், அவரை அழைத்து அங்கே இருக்கின்ற மாதா கோவில் கதவை அடைத்து, 17 பெண்களை கற்பழித்து விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அதைத் தொடர்ந்து ஜான் வின்செண்ட் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர், முதல்வர் அவர்கள், மற்ற அதிகாரிகள் ஆகியவர்களுக்கெல்லாம் 25–9–80 அன்று கடிதம் எழுதியிருக்கிறார்.

(முற்பகல் 10-20)

அந்தக் கடிதத்தின் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 27–9–1980 அன்று மாவட்ட அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டி அந்த வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே சட்டமன்ற உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். அந்தப் பேச்சு பத்திரிக்கையிலே வெளியாகியிருக்கிறது. பத்திரிகைகளில் வெளியான தற்குப் பின்னால் அதன் தொடர்பாக பல்வேறு கிளர்ச்சிகளை ஆரம்பித்து 17 அரிசன பெண்களைக் கற்பழித்து விட்டார்கள், மணி என்பவர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார் என்று பத்திரிக்கையிலே எழுதப்படுகிறது. அதிலும் குறிப்பாக மாடசாமித் தேவர் அவர்களைப் பற்றியோ, அவருடைய சகோதரர் ராமச்சந்திரனைப் பற்றியோ, விசாரணையில் எதுவும் சொல்லப் படவில்லை. அவர்கள் சம்பந்தப்பட்டார்களா என்பதும் இல்லை. சங்கரத் தேவரும் அவருடைய மகன் சின்னத்தம்பியும் தான் இதிலே சம்பந்தப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் வின்செண்ட் அவர்கள் தனது மனுவிலே தொடர்ந்து ராமச்சந்திரன், கிராம முன்சீப் தான் மணி என்பவரைக் கொலை செய்திருக்கிறார்கள் (குறுக்கீடு). உறுப்பினர் வின்சென்ட் அவர்கள் மன்னிக்க வேண்டும். மாண்புமிகு நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ஜான் வின்சென்ட் அவர்கள் அங்கே மனுவை அனுப்புகிறார்கள். அதிலே கிராம முன்சீப் ராமச்சந்திரன் என்பவர் தான் மணி என்பவரைக் கொலை செய்து விட்டார், பெண்களைக்கற்பழித்து இருக்கிறார் கள் என்று குறிப்பிடுகிறார்கள். அதே நேரத்திலே இந்த விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்னாலே தமிழக முதல்வர் அவர்கள் அந்த இடத்தைப் பார்ப்பதற்கு முன்னால் மத்திய அமைச்சர் அவர்கள் போய் பார்க்கிறார்கள். அங்கே கற்பழிப்பு ஒன்றும் நடக்கவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள்,

அதே போன்று அங்கேயிருந்த அதிகாரிகள், இதை நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக்காரணம் யாரும் முக்குலத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இல்லை. அன்றைக்கு இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள். டெபுட்டி சூப்பிரண்ட்டாக இருந்தவர்கள் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள். அங்கேயிருந்த காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் ஐயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அருணாச்சலம் என்ற இன்ஸ்பெக்டர் முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர்கள். மற்ற மேல் அதிகாரிகள் அத்தனை பேரும்– டி.ஐ.ஜி.யும் எஸ். பி.யும்– அங்கே இருந்தவர்கள் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆகவே தேவர் இனத்தைச் சேர்ந்த யாரும் அந்த தினத்தில் அந்தப் பகுதியில் வேலை பார்க்கவில்லை என்று நான் குறிப்பிடுவதற்குக் காரணம் பின்னால் சொல்கிறேன். அதற்குப் பின்னால் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் அமைச்சர் அவர்களைப் பார்த்துச் சொல்கிறார்கள். அதற்குப் பின்னால் முதல் அமைச்சர் அவர்கள் போனதற்குப் பின்னாலே 16–8–1980 அன்று கோட்டாட்சியர் விசாரித்து 30–9–1980 அன்று அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கை அனுப்புகிறார்கள். அந்த அறிக்கையிலே இப்படிப்பட்ட எந்தச் சம்பவமும் நடக்கவில்லை என்று அவர்கள் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். அதே போல் அன்றைக்கு இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர், சூப்பிரன்டெண்ட் அவர்களும் விசாரித்து ஆதி திராவிடர்கள் எழுப்பிய குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டு அரசுக்கு ஒரு அறிக்கை அனுப்புகிறார்கள். அதற்கு மேல் தான் பாராளுமன்றத்திலே கேள்வி கேட்கப்படுகிறது. அதற்குப் பின்னால் 11–12–80 ஆம் நாள் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு நபர் கமிஷனாக இராமமூர்த்தி கமிஷனை நியமிக்கிறார்கள். அந்தக் கமிஷன் நியமித்த உடனேயே அவர்கள் அந்தக் கீழச்சங்கணாங்குளம், மேல் சங்கணாங்குளம் பகுதியை ஏறத்தாழ 6 முறை பார்த்திருக்கிறார்கள். 6 முறை பார்த்து அந்த இடங்களில் 2 மணி நேரம், 3 மணி நேரம் என்று அங்குள்ள 20 வீடுகளுக்கும் அங்கே உள்ள 150 வீடுகளுக்கும் சென்று, இப்படி நடப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கிறதா என்று 6 முறை அந்தக் கிராமத்திற்குச் சென்று பார்த்திருக்கிறார்கள். அதிலே பல்வேறு சாட்சியங்கள் விசாரிக்கப்படுகிறது. அரசுத் தரப்பிலே கூட 28 சாட்சியங்களை விசாரித்திருக்கிறார்கள். எதிர்த்தரப்பிலேயும் சாட்சியங்களை விசாரித்து இருக்கிறார்கள். ஆனால் அரசுத் தரப்புச் சாட்சியத்திலே அரிசனங்களும், தேவமார்களும் சாட்சியம் சொல்லி இருக்கிறார்கள். எதிர்த் தரப்பிலேயும் தேவமார்கள் வகுப்பைச் சேர்ந்தவர்களும், ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களும் சாட்சியம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அங்கே தேவர்கள், அரிசனங்கள் என்ற பிரச்சினையே எழவில்லை. ஜாதிப் பிரச்சினையும் இல்லை, அங்கே நடந்த நடை முறை



அரசியல் காரணமாகத்தான் நடந்தது என்பதற்கு நீதிபதி அவர்கள் ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறார்கள். ராஜா செல்வம் என்பவர்தான் இறந்த அந்த மணியினுடைய மனைவி. அவர்கள் தான் முதல் சாட்சி. அவர்கள் தனது அறிக்கையிலே 66 வது பாராவிலே அரசியல் ஆதாயம் தேடும் சிலரின் கைப்பாவையாக ராஜா செல்வம் இந்த மனுவைக் கொடுத்து உள்ளார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நீதிபதியே சொல்லியிருக்கிறார்கள் அரசியல் காரணங்கள் என்று. மாடசாமித் தேவர், மாண்புமிகு உறுப்பினர் ஜான் வின்சென்ட்டுக்கு எதிர்ப்பாக காங்கிரஸ் அபேட்சகருக்கு ஆதரவாக வேலை செய்திருக்கிறார்கள். அதை உள் நோக்கமாக வைத்து அந்தக் குடும்பத்தின் மீது பழி வாங்க வேண்டும் என்று ஆரம்பித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதிலே அரசு எடுத்த நடவடிக்கைகளைப் பற்றித்தான் விவாதம். கமிஷனைப் பற்றி இங்கே விவாதம் செய்யக் கூடாது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : நீதிபதி சொல்லியிருக்கிற அந்தக் காரணங்களை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். திட்டமிட்டு சதி செய்தவர்களின் தூண்டுதலாலே அவர்கள் இந்த வாக்கு மூலத்தைக் கொடுத்து இருக்கிறார்கள் என்று நீதிபதி விசாரித்தவர்களைப் பற்றி எழுதுகிறார். நீதிபதியின் தீர்ப்புக்கு நான் போகவில்லை என்று சொன்னாலும், இங்கே அரசு எடுத்து இருக்கும் முடிவைப் பற்றி திட்டமிட்டு ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாவட்ட காவல் துறை சூப்பிரன்டெண்ட் கமிஷனின் அறிக்கையின் 76 வது பாராவில் சொல்லப்பட்டு இருக்கிறது— விரிவான விசாரணை நடத்த 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் நாளன்று அக்கிராமத்திற்குச் சென்ற போது அவர் முன் வந்து யாரும் புகார் செய்யவில்லை. அதே போல், மாவட்ட ஆட்சித் தலைவர் செல்கிற போதும் யாரும் எந்தப் புகாரும் கொடுக்கவில்லை. அதற்குப் பின்னால், 21–10–80ஆம் நாள் தான் இந்தக் கதையே ஆரம்பம் ஆகிறது. இது குறித்து விசாரிக்கப்பட்ட சாட்சிகள் 7 பேருடைய சாட்சியங்களையும் நம்ப முடியாது. இதிலே ஒரு வேடிக்கை என்னவென்று சொன்னால், அந்தக் கமிஷனின் அறிக்கையின் அட்டையிலேயே எழுதப்பட்டு இருக்கிறது. ''17 ஆதி திராவிட பெண்கள் கற்பழிக்கப்பட்டனர்'' என்று , ஆனால் விசாரிக்கப்பட்டது 7 பேர் மட்டுமே.. அந்த 7 பேருடைய சாட்சியங்களையும் நம்ப முடியாது. பொய்யாகச் சொல்கிறார்கள். அருமையான கட்டுக்கதை. கட்டுக் கதைகளும் நம்ப முடியாத அளவிற்கு அளப்புக் கதைகளாக இருக்கின்றன என்று அந்த சாட்சியங்களைப் பற்றி நீதிபதியே கூறியிருக்கிறார். இப்படிக் கூறிய

[திரு. எஸ் ஆண்டித்தேவர்] [1983 ஏப்ரல் 19

தோடு மட்டுமல்லாமல், மணி என்பவர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார் என்பதையும் விசாரித்து அதையும் ஆதாரம் அற்றது என்று அவர்கள் தள்ளுபடி செய்கிறார்கள். அத்தனை சாட்சியங்களும் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சாட்சியங் களைப் பார்த்து அதுவும் ஆதாரம் அற்றது என்று தள்ளுபடி செய்து இருக்கிறார்கள்.

அங்கேயிருக்கின்ற அரிசனங்களும், தேவர்களும் ஒன்றாகவே இருந்து கொண்டு மணியின் சடலத்தை கொளுத்திய போது இரு வகுப்பினரும் சேர்ந்தே இருந்து செய்து இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் இந்த தீர்ப்பில் இத்தனையையும் கூறி அதை நம்பமுடியாது என்று சொல்கிறபோது ''டெர்ம்ஸ் ஆப் ரெபரென்ஸை'' பார்த்தால் தெரியும். அவர்கள் நியமிக்கப்பட்டதன் காரணமே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், சங்கனாங் குளம் கிராமத்தில் 1980-ஏப்ரல் மே மாதங்களில் சில ஆதி திராவிடப் பெண்களைக் கற்பழித்ததாகவும் மணி என்பவ ரைக் கொலை செய்ததாகவும் சொல்லப்படும் சம்பவங்கள் குறித்து விசாரித்து தெரிவித்தல், இக்குற்றச் சாட்டுகளில் உண்மை எதுவும் உள்ளதா என்று கண்டறிதல்; ஆம் எனில் இந்த நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பான குற்றவாளிகளைக் கண்டுபிடித்தல்; இனிமேல், இத்தகைய நிகழ்ச்சிகள் நிகழா வண்ணம் தடுக்க தக்க நடவடிக்கைகளைப் பரிவுரை செய்தல்' என்பதாகும்.

ஆகவே, அவர்கள் எதற்காக நியமிக்கப்பட்டார்களோ அந்த இரண்டு குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படவில்லை என்பதற்கு பின்னால் அவர் பல பரிந்துரைகளைக் கொடுக்கிறார். அந்த பரிந்துரை மீது தான் நான் பேசலாம் என்று விரும்புகிறேன். அங்கேயுள்ள போலீஸ் அதிகாரிகளைப்பற்றி அவர்கள் கடுமை யாக எழுதி இருக்கிறார்கள். கிருஷ்ணசாமி, சப்—இன்ஸ்பெக்டர் அருணாசலம், இன்ஸ்பெக்டர் இவர்கள் தேவர்களுக்கு உடந் தையாக இருந்தார்கள். காவல் துறையினர் அவர்களுக்கு அஞ்சி......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள். இன்னும் 4, 5 உறுப்பினர்கள் பேசவேண்டி யிருக்கிறது.

திரு.எஸ்.ஆண்டித்தேவர் : நான் தான் தீர்மானம் கொடுத் தேன். அமைச்சர் அவர்கள் எழுந்து ஜி.ஓ. தவறாக இருக்கிறது என்று சொல்லி விட்டால் நான் பேசாமல் கூட இருந்து விடுகிறேன். இதிலே விவாதம் நடத்தி ஜாதிபிரச் னையைக் கிளப்பவேண்டும் என்று நான் எண்ணவில்லை.



1983 ஏப்ரல் 19] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

நீதிபதி சொல்கிறபோது—''திசையன்விளை காவல் நிலையம், வள்ளியூர் காவல் நிலையம் ஆகியவற்றிற்கு நியமிக்கப்படும் காவல் துறை அதிகாரிகள் திறமை மிக்கவர்களாக இருக்க வேண்டும்; அவர்கள் தேவர் வகுப்பினரின் நடவடிக்கைகளை அடிக்கடி கண்காணிப்பதற்கு உரிய நேர்மையும் திறமையும் தைரியமும் உடையவர்களாக இருத்தல் வேண்டும்'' என்று சொல்கிறார். தேவர் வகுப்பினரைக் கண்காணிப்பது என்று சொன்னால், பிரிட்டிஷ் காலத்தில் ரேகை சட்டம் இருந்தது போல் மற்றுமொரு சட்டம் கொண்டு வருகிறார்களா என்ப தைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே போன்று தான் அவர்களுடைய பரிந்துரையில் குற்றம் சாட்டப்பட்ட வர்கள், குற்றத்தில் பழி சுமத்தப்பட்டவர்கள் குற்றம் புரியவில்லை என்று திட்டவட்டமாக தெளிவாகச் சொல்லி விட்டு, இப்படி ஒரு பரிந்துரை செய்து இருக்கிறார்.

கற்பழிப்புக்குள்ளான பெண்கள் திரு. காசி என்பவருக்கு ஏதேனும் ஒரு வகையில் சொந்தக்காரர்களாக இருக்கிறார்களே தவிர வேறு யாரும் இல்லை. இச்சாட்சியங்கள் யாவும் காசி என்பவரால் சொல்லிக் கொடுக்கப்பட்டது. மேலும் அப்பெண்கள் கொடுக்கும் சாட்சியங்கள் வேறுபாடுகளும் முரண்பாடுகளும், நேரம், காலம், அனைத்தும் பற்றிய பொருத்தம் இன்மையும் உள்ளன. எனவே ஆதிதிராவிட பெண்கள் கற்பழிப்பு என்று சொல்லப்படும் குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று சொல்கிறார்கள். அடுத்து, திரு. மணி கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் குற்றச் சாட்டைப் பொறுத்தவரை, திரு. மாடசாமித் தேவர், திரு. சங்கரத் தேவர் மற்றும் ராமச்சந்திரத் தேவர் ஆகியோருக்கு எதிராக சில முக்கிய சூழ்நிலை சந்தர்ப்ப சாட்சிகள் இருப்ப தாகத் தோன்றினாலும், ஒரு முழுமையான கருத்து ஏதும் உருவாகவில்லை.

(முற்பகல் 10–30)

அரை குறையான விவரமே வருகிறது. எனவே மேற் கூறப்பட்ட மூவரும் குற்றவாளிகள் அல்ல என்றாலும் அது கௌரவமான, கண்ணியமான விடுவிப்பு அல்ல ''It is not an honourable acquittal'' சந்தேகத்திற்கிட மில்லாத வகையில் குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்பதால் மட்டுமே அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள், என்று அதைக் குறித்தும் பரிந்துரை செய்கிறார். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காவல் உதவி ஆய்வாளர் கிருஷ்ணசாமியும், ஆய்வாளர் அருணாசலமும் நேர்மையற்ற முறையில் பிறருடன் தீய கூட்டுச் சேர்ந்து தீய சூழ்ச்சிகளில் ஈடுபட்டனர் என்று நீதிபதி சுட்டிக்காட்டியிருக்கிறார். அப்படியிருந்தாலும் அவர்கள்மீது எந்தவிதமான நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை. அது ஏன் என்று தெரியவில்லை.

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1983 ஏப்ரல் 19

அரசுக்கு ஒரு நல்ல பெயர் கிடைக்கும். எனவே இந்த ஆணையை வாபஸ் பெறுகிறோம் என்று இந்த மன்றத்திலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

***திரு. என். வி. என். சோமு** : தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் சங்கணாங்குளம் பகுதியில் நடைபெற்ற, இந்தச் சம்பவம் குறித்து, ராமமூர்த்தி கமிஷன் போடப்பட்டு, அந்த கமிஷனின் ரிப்போட்டின் மீது இந்த விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த சம்பவம் நடைப்பெற்றது 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம். ஆனால் அரசு, நீதிபதி ராமமூர்த்தி கமிஷனை அமைத்தது டிசம்பர் திங்களில். ஏறத்தாழ 8 மாதங்கள் கழித்து இந்தக் கமிஷன் அமைக்கப்பட்டது. இத்தகைய தேவையற்ற தாமதத்தால் பிரச்னைகள் தீருவதற்குப் பதில், பிரச்னைகள் பெரிதாக உருவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அத்தோடு நீதிபதி ராமமூர்த்தி அவர்கள் தன்னுடைய பரிந்துரையில், சில தனிப்பட்டவர்களை பல குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவித்திருக்கிறார்கள். விடுவித்ததோடு மட்டும் அல்லாமல், அவர் சொல்லியிருப்பது — ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினருக்கு பயப்படக்கூடிய வகையில் காவல் துறையினர் அங்கே இருக்கக் கூடாது என்றும் அவர் சொல்லியிருப்பது, இன்டைரக்ட் இம்பிளிமென்டேஷன் என்ற வகையில் மறைமுகமாக, குறிப்பிட்ட சமுதாயத்தினரை, தேவர் சமுதாயத்தினரை, அது பழி சொல்வதற்கு ஆளாக்கப்பட்டது போல் தோன்றுவதால், அதை மாண்புமிகு ராமமூர்த்தி அவர்கள் தவிர்த்திருக்கலாம் என்பது என்னுடைய கருத்து. இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

நீதிபதி ராமமூர்த்தி அவர்கள் தன்னுடைய பரிந்துரையில் இதுபோன்ற வகுப்புத்தகராறுகள் அல்லது ஊர்த் தகராறுகள் ஆகிய எல்லாவற்றிற்குமே முக்கிய காரணம் கள்ளச் சாராயம் பரவியிருப்பதுதான் என்று சொல்லுகிறார்கள்.

அவர் தன்னுடைய அறிக்கையில், 470-வது பாராவில், My inspection of the village shows that illicit distillation is going on in a very large scale. This is only again due to inefficiency and indifference of the Police. During my several inspections of the village, I found in innumerable places, illicit distillation of arrack was going on. I noticed evidence of improvised ovens in innumerable places in the fields and the evidence of the fire and burning, generated for illicit distillaion of arrack. The illicit distilation of arrack is a certain source for making money and also for people



1983 ஏப்ரல்19] [திரு. என். வி. என். சோமு]

to indulge in acts of rowdism. The Police should take up this matter in all seriousness and conduct raids as frequently as possible to prevent illicit distillation.

என்று சொல்லியிருக்கிறார்கள், அதிலே
inefficiency and indifference of police
என்று நீதிபதி ராமமூர்த்தி அவர்கள் சொல்லியிருப்பதை அரசாங்கம் தன்னுடைய கவனத்திலே கொள்ள வேண்டும். காவல் துறையின் கையாலாகாத தன்மையும், பொறுப்பற்ற தன்மையும் தான் இதற்குக் காரணம் என்று அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, நீதிபதி ராமமூர்த்தி அவர்கள் சம்பவம் நடைபெற்ற அந்தப் பகுதிக்கு பல முறை சென்றபோதும், அங்கே சாராயம் காய்ச்சுகின்ற அடுப்புகளை பலமுறைகளும் பார்த்திருக்கிறார். ஒரு முறை சோதனைக்கு ஒரு நீதிபதி வருகிறார் என்கிறபோதே, காவல் துறை நீதிபதிகளுக்கு தனி மதிப்பு அளிக்கிறது என்ற வகையில் காவல்துறையினர் அந்த அடுப்புகளை அகற்றியிருக்க வேண்டும். ஆனால் அவர் பலமுறை அந்தப் பகுதிக்குச் சோதனைக்குச் சென்றிருக்கிறார், அப்போதெல்லாம் அந்தச் சாராயம் காய்ச்சும் அடுப்புகளைப் பார்த்திருக்கிறார் என்றால் காவல்துறை அதிகாரிகளின் அக்கறையின்மை தெரிகிறது. சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வரவேண்டும்.

அந்தக் கள்ளச்சாராயம் தான் அந்தப் பகுதியில் ரௌடிகள் ஏற்பட முக்கிய காரணம் என்று நீதிபதி அவர்கள் தம் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் யாராலும் துன்புறுத்தப்படக்கூடாது என்பதுதான் எங்களுடைய கொள்கை. இரு சாராரும் எப்படி மற்றவர்களால் தாக்கப்படக் கூடாது என்று எவ்வளவு திட்டவட்டமாகக் கருத்து கொண்டிருக்கிறோமோ, அந்த அளவுக்கு இரு சாராரும் ஒருவருக்கொருவர் தாக்கிக் கொண்டு, துன்பத்திற்குள்ளாகவும் கூடாது என்றும் நாங்கள் கருத்தைக் கொண்டிருக்கிறோம். இந்தக் கொள்கையை பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே, தம்முடைய ''ஒரே ரத்தம்'' என்ற நூலில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே ஒரு பகுதியினை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு இந்த அவையில் படிக்கிறேன்.

மேலும் மாடசாமித் தேவர், சங்கரத் தேவர் முதலானோரின் நடவடிக்கைகள் நெருக்கமாகவும் கண்டிப்பாகவும் கண்காணிக்கப்பட வேண்டும் என்று நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார். மாடசாமித் தேவர் இந்த நாடு விடுதலை பெற்றபின் 1952-லேயே இந்தியாவின் வாலிபால் குழுக்கு தலைமை தாங்கி ரஷ்யாவுக்குச் சென்றவர் ;'தி ஒர்ல்டு பெஸ்ட் ஹிட்டர்' என்று பெயர் வாங்கியவர் ; இந்தியாவுக்கு நல்ல புகழைத் தேடித் தந்தவர். அதைப்போன்று தமிழ்நாட்டிலே 6 ஆண்டு காலம் வாலிபால் குழுக்கு தலைவராக இருந்தவர். அவர் இப்படிப் பட்டவர்: அவர்மீது குற்றச்சாட்டும் இல்லை ; இந்த விசாரணைக்குள்ளும் அவர் இல்லை. அவரைக் கண்டிப்பாகக் கண்காணிக்க வேண்டுமென்று சொல்லியிருப்பது சரியல்ல.

திசையன்விளை காவல் துறை ஆய்வாளர், உதவி ஆய்வாளர் ஆகியோரும் வள்ளியூர் காவல் துறை உதவி கண்காணிப்பாளரும் தேவர் வகுப்பினரைச் சாராத வேறு வகுப்பினராக இருத்தல் நலம் என்று குறிப்பிட்டிருக்கிறார். சங்கரத் தேவர் உண்மையிலேயே தவறு செய்திருந்தால் தூக்கில் இட்டால் கூட நாங்கள் கவலைப்படமாட்டோம். ஆனால் இந்த அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள். அதற்காக அந்த காவல் நிலையங்களில் தேவர் இனத்தைச் சேர்ந்தவர்களைப் போடக்கூடாது என்று பரிந்துரை செய்திருக்கிறார்: அரசு அந்த பரிந்துரையை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அதைப்போன்று திசையன்விளை காவல் நிலையத்திலும் வள்ளியூரிலும் உள்ள காவல் துறை அதிகாரிகளின் பணிகளைப் பொறுத்தவரை திருநெல்வேலி மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் போன்ற உயர்மட்ட அதிகாரிகள் நேரடிக் கட்டுப்பாடு செலுத்தி கண்காணிக்க வேண்டும். திசையன்விளைக் காவல் துறை அதிகாரிகள் சங்கணான்குளம் கிராமத்தைத் திறமையான முறையில் மேற்பார்வையிட வகை செய்ய, சங்கணான்குளம் கிராமத்துக்குச் செல்லும் அணுகுசாலையில் நான்குநேரி திசையன்விளை சாலையை இணைப்பதற்குச் சாலை ஒன்று உடனடியாக அமைக்கப்பட வேண்டும். இப் பகுதியில் கள்ளச்சாராயம் வடித்து இறக்குவது பெரிய அளவில் நடைபெற்று வருகிறது. காவல் துறையினர் இதுபற்றிக் கவனமாக நடவடிக்கை எடுத்து கள்ளத்தனமாகச் சாராயம் வடித்து இறக்குவதைத் தடுக்க அடிக்கடி திடீர் சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். கள்ளச் சாராயத்தைத் தடுக்க வேண்டும் ; இதில் எனக்கு கருத்து வேறுபாடு இல்லை.

அதைப்போன்று சங்கணாங்குளம் ஆதி திராவிடர்கள் தங்களுடைய வாழ்க்கையைத் தாங்களே நடத்த இயலும் வகையில் சிறுதொழில் துறையின் சிறப்புப் பிரிவு ஒன்று அங்கு





தொடங்கப்படலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கக்கூடிய ஒன்று, கருத்து மாறுபாடு இல்லை. அரசு இன்னும் பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அவர்களுடைய பொருளாதாரத்தை வளரச் செய்வதில் இங்கே யாரும் தடையாக இருக்கமாட்டார்கள். ஆனால் மாடசாமித் தேவர் அல்லது சங்கரத் தேவர் அல்லது இராமச்சந்திரத் தேவர் ஆகியோரின் குடும்பத்தினர் எவரும் எந்தக் கோயிலுக்கும் அறங்காவலராகவோ (டிரஸ்டி) அல்லது எந்த கிராமத்துக்கும் கிராம முன்சீப்பாகவோ, கர்ணமாகவோ நியமிக்கப்படக் கூடாது என்று சொல்லியிருப்பது எந்தவகையிலே நியாயமாகும் ? சங்கரத் தேவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டால் அவருடைய சகோதரர்கள் இராமச்சந்திரத் தேவர் அல்லது மாடசாமித் தேவர் என்ன தவறு செய்தார்கள் ? அவர்களுடைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள், வம்சத்தைச் சேர்ந்தவர்கள் அறங்காவலராகவோ கிராம முன்சீப்பாகவோ, கர்ணமாகவோ நியமிக்கப்படக்கூடாது என்பது சரியல்ல.

மாடசாமித் தேவர் அவருடைய சகோதரர்கள் ஆகியோரின் குடும்பத்தினர் எவரும் துப்பாக்கி வைத்திருப்பதற்கான உரிமம் கொண்டிருந்தால் பொது மக்களின் பாதுகாப்பு கருதி அது உடனடியாக ரத்துசெய்யப்படவேண்டும் என்று இருக்கிறது. எங்காவது பெரிய ரயட்டிங் நடந்திருந்தால் கூட அங்கே இப்படிப்பட்ட நிலை இல்லை. தமிழ்நாட்டிலே பல்வேறு இடங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அங்கெல்லாம்கூட இப்படிப்பட்ட நிலை இல்லை. ஆனால் இவர்கள் பரம்பரையினர், பெரும் விவசாயிகள், பெரும் பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள்—அவர்கள் தங்களுடைய நிலபுலன்களைக் காக்க 'கன் லைசென்ஸ்' வைத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு இந்த அரசு இந்த பரிந்துரையை ஏற்றுக்கொண்டால் அது இந்த பெரும் சமுதாயத்திற்கு இழைக்கின்ற தீங்கு. தேவர் சமுதாயம் கண்காணிக்கப்பட வேண்டும், அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் காவல் துறை அதிகாரிகளால் கண்காணிக்கப்பட வேண்டும் என்று சொல்வது மறுபடியும் அவர்களை குற்றப் பரம்பரையினர் என்று கருதுவதாக அமைந்துவிடும் ; அந்த நிலை வரக்கூடாது.

தேவர்களும் அரிசனங்களும் அங்கே சகோதரர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் ; எந்தவிதமான தகராறும் இல்லை. ஆகவே அரசு ஆணை எண். 1794, பொது (சட்டம்—ஒழுங்கு) துறை, நாள் 15–10–1982 என்பதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆணையை வாபஸ் பெற்றுக்கொண்டோம் என்று இந்த மன்றத்திலே அறிவித்தால் அந்த சமூகத்தினர் நீதி நிலைநாட்டப்பட்டதாகக் கருதுவார்கள் ; அதன் மூலம் இந்த

'' யார் தாழ்த்தப்பட்டு கிடக்கிறார்களோ ; யார் ஒதுக்கப்பட்டு உழல்கிறார்களோ — யார் பிற்படுத்தப்பட்டு பள்ளத்தில் உருண்டு வீழ்ந்திருக்கிறார்களோ — அவர்கள் தான் ஒருவருக்கொருவர் ஆயுதம் தாங்கிக் கலவரம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நாலு வேங்கைகள் சேர்ந்து நாற்பதாயிரம் மான்கள் கொண்ட கூட்டத்தை ஒற்றுமையில்லாக் கூட்டமாக ஆக்கிவிட்டன. வேங்கைகள் வேடிக்கை பார்க்கின்றன. மானும், புலியும் ஒரே துறையில் தண்ணீர் குடித்தன என்று அந்தக் காலத்தில் ஆட்சிச் சிறப்புக்கு எடுத்துக் காட்டினை எழுதிக் காட்டுவார்கள். இப்போது மானும் புலியும் கூட ஒரே துறையில் தண்ணீர் குடிக்க வேண்டாம். மானும், மானுமாவது ஒரே துறையில் தண்ணீர் குடிக்க வேண்டாமா ?'' என்று கேட்டு, 4, 5 ஆண்டுகளுக்கு முன்னாலேயே மிகத் தெளிவாக தம்முடைய கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதையேதான் நானும் சொல்ல விரும்புகிறேன். பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும், ஒருவரோடொருவர் மிக இணக்கமாகவும், ஒற்றுமையாகவும் வாழ வழி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அதற்கான துரித பணிகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சங்கணாங்குளம் பகுதியில் ஒரு சிறு தொழிற்சாலையை ஏற்படுத்தி, அந்தப் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நீதிபதி ராமமூர்த்தி அவர்கள் தம்முடைய பரிந்துரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை அரசு கவனத்தில் ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கமிஷனை நியமிக்க 8 மாத காலம் காலந் தாழ்த்தி நடவடிக்கை எடுத்ததைப் போல, இதையும் காலந் தாழ்த்தாமல், உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அமைகிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே வைக்கப்பட்டுள்ள ஜஸ்டீஸ் திரு. கே. எஸ். இராமமூர்த்தி கமிஷன் ரிப்போர்ட் சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆண்டித் தேவர் அவர்கள் ஒரு வருத்தத்தைத் தெரிவித்து அந்த அறிக்கையில் கொடுத்துள்ள பரிந்துரைகளை வாபஸ் பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு கோரிக்கைகளை அருமை நண்பர் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைப் பற்றிச் சொல்லி இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அந்த ரிப்போர்ட்டிலே 1-வது பக்கத்திலே 2-வது பாராவிலே 'தேவர்கள் என்ற சொல் குறிக்கும் இடங்களில் எல்லாம்,





மாடசாமித் தேவர், சங்கரத் தேவர், இராமச்சந்திரத் தேவர் ஆகிய மூன்று சகோதரர்களையே அச்சொல் குறிப்பிடும்'' என்று சொல்லி இருக்கிறார்கள். அந்தச் சமுதாயத்திலே உள்ள மற்றவர்களையோ நல்லெண்ணங்களைக் கொண்ட பெரியவர்களையோ அது குறிக்காது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அவ்வாறு தேவர்கள் என்று கமிஷன் ரிப்போர்ட்டிலே குறிக்கப்பட்டிருப்பது அந்தத் சமுதாயத்தைக் குறிக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித் தேவர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று எண்ணுகிறேன்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** துணைத் தலைவர் அவர்களே, நீதிபதி 'தேவர்' என்று குறிப்பிட்டது மூன்று சகோதரர்களை மட்டும் குறிக்கும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் தேவர் வகுப்பினர் என்று சொல்லவில்லை. இங்கே நான் குறிப்பிடுவது தேவர் வகுப்பினர் என்று சொல்வதுதான் ஜாதியைக் குறிக்கின்றது என்பது. ஆனால் தேவர் என்பதற்கு அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அந்த மூன்று சகோதரர்களைத் தான் குறிக்கும் என்று. அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இங்கே உபயோகப்படுத்துகின்ற வார்த்தைகள் அனைத்தும் தேவர் வகுப்பினர் என்று குறிப்பிடுவது ஒட்டுமொத்தமாக ஜாதியைக் குறிக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு விளக்கிக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10.40)

**திரு. எல். இளையபெருமாள் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வகுப்பு என்ற வார்த்தையை எடுத்துவிடுவதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. தேவர் சமுதாயமே கெட்டு விட்டது என்று நான் சொல்லவில்லை. நடந்த சம்பவம் என்பது உண்மை. எத்தனை கேஸ்கள் நடக்கின்றன. அவற்றில் எல்லாம் நீதிபதி கொடுப்பதுதான் கடைசித் தீர்ப்பு. சட்டத்தைப் பார்த்து, சாட்சியங்களின் தரத்தைப் பார்த்து எவ்வாறு மனதிலே படுகின்றதோ அந்த வகையில் முடிவெடுக்கிறார்கள். ஆனால் இந்த நீதிபதி அவர்களுடைய தீர்ப்பிலே அவர்கள் சொன்னதிலே நாம், குற்றம் கண்டு, அவர்கள் செய்த பரிந்துரையினை வாபஸ் பெறவேண்டும் என்றும் அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் நாம் சொல்வது சரியல்ல. அது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கமிஷன் மட்டுமல்ல, ஒரு நீதிமன்றத்திலே பணிபுரிந்தவர், நீதிமன்றத்திற்குத் தகுதியான அந்தஸ்தை உடையவர் கொடுத்திருக்கின்ற பரிந்துரையை ஏற்றுக்கொள்வதுதான் இதுவரையிலும் வழக்கமாக இருக்கின்றது. ஆகவே அரசாங்கம் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே சாட்சியங்கள் சொன்னதிலே சில தகவல்கள் தெரி கின்றன. திசையன்விளை, வள்ளியூர் போன்ற இடங்களில் நடந்த கலவரங்கள் சம்பந்தமாக அவ்வப்போது போலீசுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. ஆனால் போலீஸ்காரர்கள் விசா ரணை செய்யவில்லை. தாசில்தாருக்கும் கொடுக்கப்பட்டது. ஆனால் தாசில்தார் விசாரணை செய்யவில்லை என்றெல்லாம் அந்தக் கமிஷனிலே வாக்குமூலம் அளிக்கப்பட்டதிலிருந்து தெரிய வருகின்றது. அந்தக் கமிஷனின்போது நானும் இருந்தேன். அந்த வாக்குமூலத்தைக் கேட்டேன். அதுபற்றி விசாரிக்கின்ற போது வாக்குமூலங்களை எல்லாம் கேட்டபோது. எஸ்.பி. டி. எஸ்.பி., கலெக்டர்., ஆர்.டி.ஓ., தாசில்தார் ஆகிய அனை வருடைய வாக்குமூலங்களையும் கேட்டபோது அவர்கள் உடனடி யாக விசாரிக்கவில்லை என்பது தெரிகின்றது. நாங்கள் ஒரு வாரம் சென்று போனோம். ஒரு மாதம் சென்று போனோம். நாங்கள் போனபோது எல்லாம் ஆள் இல்லை என்றுதான் சொல்லி இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. ஆதி திராவிட மக்கள் பால் இரக்கம் கொண்டு அந்த தேவர் சமுதாயத்தைச் சார்ந்த வர்கள்தான் ஆதி திராவிட மக்களுக்காக பரிந்துரையாக சாட்சி யம் சொல்லி இருக்கிறார்கள். தேவர் சமுதாயத்திலே உள்ள நல்லெண்ணம் உடையவர்கள் மனிதாபிமானத்தோடு அவ்வாறு சொல்லி இருக்கிறார்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள் கொடுத்த ரிப்போர்ட்டிலே மனிதாபிமானமற்ற செயல் நடந் திருக்கின்றது என்பதை மறுக்கவில்லை. ஆனால் தகுந்த சாட்சி யங்கள் இல்லை. சரியாகச் சொல்லப்படவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அளிக்கப்பட்ட வாக்குமூலங்களைப் பார்க்கின்ற போது தெரிந்தோ தெரியாமலோ ஒருசில அரசியல்வாதிகளின் தலையீடு காரணத்தால் அதிகாரிகள் மிரட்டப்பட்டிருக்கின்றார் கள் என்பது தெரிகின்றது. அந்த அதிகாரிகள் சாட்சியங்கள் அளித்தபோது அரசியல் வாதிகள் குறித்து அஞ்சி சில இடங்களை விட்டுவிட்டோம் என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தக் கமிஷன் ரிப்போர்ட் முழுவதையும் சாட்சியங்களையும் வாக்குமூலத்தையும் படித்துப் பார்த்தால் அருமை நண்பர் திரு. ஆண்டித்தேவர் அவர்களுக்கு உண்மை விளங்கும். அவர்களும் நியாயம் வேண்டும் என்கிறார்கள். ஏழைகளுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்கிறார்கள். இரண்டு சமுதாய மக்களும் ஏழைகள் என்கிறார்கள். ஆனால் தெரிந்தோ தெரியாமலோ கடந்த காலங்களிலே ஜாதிக் கொடுமை என்பது சங்கணாங்குளத்திலே மட்டுமல்ல. திருநெல்வேலியிலே மட்டுமல்ல இராமநாதபுரத் திலே மட்டுமல்ல இந்தியாவிலே பல இடங்களில் இந்தமாதிரி பாவமான காரியங்கள் நடந்திருக்கின்றன. இன்று வரையிலும் அவர்கள் செருப்பு போட்டுக் கொண்டு செல்லக்கூடாது. ஹோட்டல்களில் சமமாக வரக்கூடாது. கோயிலுக்கு போகக் கூடாது இந்து என்று ஒத்துக் கொண்டாலும் சுடுகாட்டிலே தனியாக வைக்கப்படவேண்டும் என்ற நிலைமை இருக்கின்றது. சென்னையிலே இருக்கின்ற கிருஷ்ணாபுரம் சுடுகாட்டிலே கூட



சென்னை-600 008
136641

ஆதிதிராவிடர்களை ஒரு பக்கமாக வைக்கவேண்டும். ஆதி திராவிடர்களை ஒரு பக்கமாக வைக்கவேண்டும். ஐயரை இன்னொரு பக்கமாக வைக்கவேண்டும் என்ற நிலைமை இருக் கின்றது. அரசாங்கச் சட்டம் இருக்கிறது. தீண்டாமை ஒழிப்பு சட்டம் இருக்கிறது. சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்று இருக்கிறது. ஆனால் நடைமுறையில் இல்லை என்பதை இந்திய மண்ணில் பூராவும் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டும் அல்ல. இவர்கள் சொல்வதில் கூட ஆதி திராவிடர்களும் பின் தங்கிய மக்களும் ஆகிய இந்த 2 பிரிவினர்கள் ஏழைகள் மட்டும் அல்ல அதிலும் ஆதி திராவிடர்கள் ஏழைகள் மட்டும் அல்லாமல் ஏழை பிளஸ் தீண்டாமை என்ற ஜாதியின் பெயரால் வந்த பாவ சுமை 3 ஆயிரம் ஆண்டுகளாக அவர்களிடையே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பெரியார் அவர் களும் காந்தி அவர்களும் எவ்வளவு சொல்லியும் அண்ணல் அம்பேத்கார் அவர்கள் தன்னுடைய பிறப்பு முதல் இறப்பு காலம் முடியும் வரையில் இந்தக் கொடுமையின் உண்மையை சொல்லி இதற்கு இந்து மதம் இடையூராக இருக்கக்கூடாது என்று சொல்லி அவர்கள் தன்னுடைய வாழ் நாளில் முடியாத காரணத் தினால் தான் அவர் புத்த மதத்தில் சேர்ந்தார்கள். அதை ஏன் சொல்கிறேன் என்றால் இந்த ஜாதிக் கொடுமைகள் இழிக்கப் படுவதை இன்று கூட இந்த ரிப்போர்ட்டில் 3-வது பக்கத்தில் 8-வது பாராவில் இ. பி. கோ. 193-வது பிரிவுகள் என்ன பிரிவு என்றால் இந்த சாதாரண காரியங்களுக்கு உடந்தையாக இருந் தார்கள் என்று அவர்கள் போட்டு இருக்கிறார்கள். பக்கத்தில் உள்ள சிவந்தியாபுரம் என்ற இடத்திலே அரிசன மக்கள் ஒரு ரைஸ் மில் வைத்து இருந்தார்கள். அதை பலாத்காரமாக கொடுமையாக மிரட்டி எழுதி வாங்கிக் கொண்டு சிவில் கோர்ட் டில் வழக்கு நடந்து 11—12—1980-ல் அது மிரட்டி வாங்கப்பட்டு என்று இருப்பதை சகோதரர் அவர்களுக்கும் நான் சொல்ல கடைமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்த நீலகண்ட தேவர், செல்லதுரை தேவர், முருகன் ஆகியவர்கள் சேரன்மாதேவி கோட்டாட்சித் தலைவர் இடத்தில் 16—9—1980-ல் மனு கொடுத்து உண்மையை சொல்லியிருக்கிறார்கள். 22-10-1980-ல் இந்த நிலைமையை விசாரிக்கவேண்டும் என்று ஆணையர் அவர் கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். ஆகவே நீதிபதி அவர்கள் சொல்லியதில் கூட எங்களுக்கு ஒரு குறைஉண்டு. சொன்ன சாட்சிகள் அத்தனையும் நம்ப முடியவில்லை என்று சொன்னால் இந்த நிலைமை நடந்ததை அவர்கள் புரிந்தாரோ இல்லையோ என்பதை நான் சந்தேகிக்கின்ற ஒரு எண்ணத்தை கொள்ள வேண்டி இருக்கிறது. எப்படி இருந்தாலும் ஒரு நீதிபதி கொடுத்த தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு அதில் சொல்லப்பட்டது சமு தாயத்தின் கொடுமையால் ஏற்பட்டது. தேவர் சமுதாயம் செய்தது என்று நான் சொல்லவில்லை. தனிப்பட்டவர்கள் செய்ததற்கு தனிப்பட்ட காரியத்தை அரசு மீண்டும் தீர்க்கமாக

[திரு. எல். இளையபெருமாள்] [1983 ஏப்ரல் 19

விசாரித்து அந்த தீர்மானத்தின்படி மேலும் கடுமையான நட
வடிக்கைகளை எடுத்து உண்மை குற்றவாளிகளை தண்டிக்க
வேண்டும் என்று கேட்டு அமைகிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி
வட்டம் சங்களான்குளம் கிராமத்தில் நடந்த நிகழ்ச்சி குறித்து
திரு. ராமமூர்த்தி கமிஷன் அவர்களுடைய ரிப்போர்ட்டை அரசு
ஏற்றுக் கொண்டிருப்பது பொதுவாக சரியானது என்று நான்
கருதுகிறேன். உண்மையில் இந்தப் பிரச்சினை ஜாதி என்ற
வடிவத்திலே அது திசை திருப்பப்பட்டாலும் கிராமப்புறங்களில்
உள்ள பெரும் பணம் படைத்த நிலப்பிரபுக்கள் அங்கு இருக்கக்
கூடிய ஏழை எளியவர்களை அவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்த
வர்களாக இருந்தாலும் எப்படி துன்புறுத்துகிறார்கள் என்
பதற்கு நாட்டில் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு இது ஒரு எடுத்துக்
காட்டு. நீதிபதி ராமமூர்த்தி கமிஷன் அவர்கள் கொடுத்துள்ள
ரிப்போர்ட்டைச் சட்ட மன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும்
ஆழ்ந்து படிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்று
தமிழகத்தில் நடந்து வரக்கூடிய இந்த நிகழ்ச்சிகள் சம்பந்தமாக
என்ன என்ன என்ற உள் விவகாரங்களை தெரிந்து கொண்டு
அவைகளை தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கு அது
உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். இரண்டு
வாதத்திலும் வாதாடக்கூடிய வக்கீல்கள் ஏராளமான
வாதங்களை அளித்து இருக்கிறார்கள். மாடசாமி அவர்
களுடைய வகையறாக்கள் வக்கீல்கள் 17 நாட்களுக்கு
மேலாக அந்த கமிஷனுக்கு முன்னால் வாதாடி இருக்
கிறார்கள். இவ்வாறு எல்லாம் அவ்வளவு நேரம் கொடுத்து
வந்ததற்கு பிறகும் அவர்கள் கொடுத்து இருக்கக்கூடிய தீர்ப்பு
களில் அந்த கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் குற்றச்
சாட்டை ஏற்றுக் கொள்ளத் தக்கது என்று அவர்கள் குறிப்
பிட்டதை அந்த கமிஷன் எவ்வளவு பாரபட்சம் அற்ற முறையில்
இந்தப் பிரச்சினையை அணுகி இருக்கிறது என்பது தெளிவு.
ஆனால் திரு. மணி என்பவருடைய கொலை சம்பந்தமாக அவர்
கள் கூறியிருக்கிறார்கள் மேற்கூறிய மூவரும் குற்றவாளிகள் அல்ல
என்றாலும் அது கௌரவமான கண்ணியமான விடுவிப்பு
அல்ல "It is not an honourable acquittal" சந்தேகத்
திற்கு இடம் இல்லாத வகையில் குற்றம் நிரூபிக்கப்படவில்லை
என்பதால் மட்டுமே அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள் என்று
கூறியிருக்கிறார்கள். இது அரசாங்கத்தினுடைய இந்த மன்றத்தி
னுடைய கவனத்திற்கு வரவேண்டிய ஒன்று ஆகும். ஆகவே
கமிஷனுடைய அடிப்படையில் அது சரியாக விசாரிக்கப்படாத
காரணத்தால் அந்த வழக்கில் நிரூபணம் ஆகவில்லை என்று கூறி
யிருக்கிறார்கள். நான் இங்கே கேட்க விரும்புகிறேன். அவர்
களுடைய தரப்பில் காவல்துறை உதவியாளரான திரு. கிருஷ்ண
சாமியும், ஆய்வாளர் திரு. அருணாசலமும் நேர்மை அற்ற



1983 ஏப்ரல் 19] [திரு. என். சங்கரய்யா]

முறையில் சிலருடன் கூட்டுச் சேர்ந்து தீய சூழ்ச்சியில் ஈடுபட்ட
னர் என்று கமிஷனின் முடிவு வந்திருக்கிறது. இதைப்பற்றி
அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை
நான் அறிய விரும்புகிறேன்? ஏன் என்றால் அரசாங்கத்தினு
டைய நிலை ஆணையில் இதைப்பற்றிய குறிப்புக்கள் இல்லை.
ஆகவே இது ஒரு ஜாதி பிரச்சனை அல்ல. அரசாங்கத்தினுடைய
அதிகாரிகள் வேறு பிறருடன் தீய கூட்டுச் சேர்ந்து தீய சூழ்ச்சியில்
ஈடுபட்டதன் விளைவாக ஏற்பட்டது என்பதை பார்க்கும்போது
அந்தக் குறிப்பிட்ட அதிகாரிகள் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை
என்ன ? ஏன் என்றால் அப்போது தான் இப்படிப்பட்ட சம்பவங்
கள் மீண்டும் ஏற்படாமல் இருக்கும் என்பதை நான் இந்த
நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே பொதுவாக இன்று
இந்த ஜாதிச் சச்சரவுகள் ஏற்படுவது தொழிலாளர்கள்
விவசாயிகள் பொதுமக்கள் என்று பல்வேறு உழைப்பில் ஈடு
பட்டு இருக்கக்கூடியவர்கள் ஒற்றுமையை சீர்குலைப்பது ஆகும்.

(முற்பகல் 10·50.)

அதுவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் இருக்கக்கூடிய மக்களும்
தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கக்கூடிய மக்களும் ஒருவருக்
கொருவர் சண்டையில் ஈடுபடுவது என்பது நம் நாட்டின் ஜன
நாயகத்திற்கு மிகவும் பாதகமானது. எல்லா மக்களும் நம்முடைய
சகோதரர்கள்தான். ஏழை எளிய பெண்களுடைய உரிமைகள்
காப்பாற்றப்பட வேண்டும். விவசாயிகளுடைய, விவசாயத்
தொழிலாளர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்.
கிராமப்புறங்களிலே உள்ள நிலப்பிரபுக்கள் வர்க்கத்தினுடைய
பொருளாதார சுரண்டல் அரசியல் ஆதிக்கத்தினுடைய ஒரு
விளைவுதான் இந்தச் சம்பவம் என்று பார்த்து தீவிர நிலச்
சீர்திருத்தம் மூலமாக நிலப்பிரபுக்கள் கையிலே உள்ள உபரி
நிலங்களை எடுத்து விவசாயத் தொழிலாளர்களுக்கு விநியோகிப்ப
தன் மூலமாகத்தான் உண்மையிலேயே சமத்துவ உணர்ச்சியை
ஏற்படுத்த முடியும். அதோடு சகல அரசியல் கட்சிகளும்
கிராமப்புறங்களில் உள்ள அரிசன மக்களுக்கு கொடுக்கப்பட
வேண்டிய சிவில் உரிமைகளையும் பாதுகாப்பதற்கு நாம் மக்கள்
அனைவரையும் ஒன்று திரட்டி இந்தத் தீண்டாமைக் கொடுமை
கள் அனைத்தும் தமிழ்நாட்டிலே ஒ க்கப்பட வேண்டுமென்பதற்
காக பெருமுயற்சிகள் எடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். ஆகவே அந்த அடிப்படையில் இந்த அரசாங்கம் இந்தக்
கமிஷனுடைய ரிப்போர்ட்டை பரிந்துரையை ஏற்றுக் கொண்டு
இருக்கிறார்கள். அது பொதுவாக சரியானது என்று கருது
கிறேன். ஆதிக்கம் செலுத்தக்கூடிய சில நபர்களிடமிருந்து மற்ற
மக்களைப் பாதுகாப்பதற்காக சில நடவடிக்கைகள் தேவை என்று
கமிஷன் முடிவுக்கு வந்திருக்கிறார்கள். துப்பாக்கி லைசென்ஸ்கள்
கொடுக்கக்கூடாது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதே
போல் போலீஸிலே உள்ள அதிகாரிகளைப் பொறுத்தவரையிலும்
யதார்த்தக் கண்கொண்டு பார்த்தால் சில சென்சிடிவ் ஏரியாஸ்

அதாவது இப்படிப்பட்ட வகுப்புக் கலவரங்கள் இன்றைக்கு சாதகமாக இருக்கக்கூடிய சில இடங்களில் அந்த அதிகாரிகளைப் போடுவது பொருத்தமாக இருக்கும் என்பதை நானும் வற்புறுத்த விரும்புகிறேன். ஆகவே இந்த கமிஷனுடைய அறிக்கைகளை ஒரு எடுத்துக் காட்டாக வைத்துக் கொண்டு அரசாங்கம் தொடர்ந்து அரிசன மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அரிசன மக்களுக்கும் மற்ற மக்களுக்கும் மோதல் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும் அவர்களுக்கிடையே ஒற்றுமையை வளர்ப்பதற்கும் இன்றைக்கு இந்த வகுப்புவாதப் பிரச்சினைகள் மூலம் தமிழகத்திலே உழைப்பாளி மக்கள் ஒன்று சேர்ந்து போராட வேண்டிய காரியத்திற்கு இடைஞ்சலாக இருப்பதை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி அவர்களுடைய விசாரணைக் கமிஷன் அறிக்கை மீது என் கருத்துக்களை கூறுவதற்கு அனுமதித்ததற்காக நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். நீதிபதியினுடைய விசாரணையிலே குற்றம் சாட்டப்பட்டதாக சொல்லப்படுகிற அந்த ஏழு பேர்களும், சாட்சி காசிக்கு சொந்தக்காரர்கள். எனவே அவர்கள் பொய் சாட்சியம் சொல்லும்படியாக சாட்சியால் தூண்டப்பட்டவர்கள் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ரீராஜசெல்வம் தன் கணவரைக் கொலை செய்ததைத் தான் பார்க்கவில்லை என்றும் ஆனால் காசி, சிங் இவர்கள் தன்னிடம் வந்து சொன்னதாகச் சொல்லியிருக்கிறார் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நீதிபதி அவர்கள் காசியின் சாட்சியம் பொய்யானது என்பதையும் காசி, ராஜாசிங் சாட்சியத்தை அருமையான கட்டுக்கதை நம்பமுடியாத அளப்புக்கதை என்றும் சொல்லக்கூடிய அளவுக்கு தன்னுடைய தீர்ப்பைச் சொல்லியிருக்கிறார்கள் தங்களுடைய விசாரணையிலே குற்றம் நிரூபிக்கப்படவில்லை கொலை செய்யப்படவில்லை என்று தெரிந்த பிறகு மாடசாமித்தேவர், சங்கரத்தேவர் அவர்களுடைய குடும்பத்தினர் கோயில் அறங்காவலர்களாகவோ! கிராம அதிகாரிகளாகவோ நியமிக்கப்படக் கூடாது என்று பரிந்துரை செய்திருப்பது என்ன நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. திருடன் மகன் திருடனாகத்தான் இருக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. நல்லவர்கள் யாரும் இருக்கலாம். சம்பந்தப்பட்டவர்கள் யாராவது தவறு செய்திருந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர அவர்கள் குடும்பத்திலே பிறந்தவர்களும் கோயில் அறங்காவலர்களாகவோ கிராம அதிகாரிகளாகவோ நியமிக்கப்படக்கூடாது என்று போட்டிருப்பது எந்த வகையில் நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. அதேபோன்று திசையன்விளை, வள்ளியூர் காவல் நிலையங்





களில் நியமிக்கப்படும் காவல்துறை அதிகாரிகள் திறமை உள்ளவர்களாக இருக்க வேண்டும், தேவர் வகுப்பினரின் நடவடிக்கைகளை அவர்கள் அடிக்கடி கண்காணிக்க வேண்டும் என்று கூறுவது ஒரு சமூகத்தினரை பழித்துக் கூறுவதாக நான் கருதுகிறேன். நம்மைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்பட்ட மக்களும் மட்டுமல்ல எல்லா தமிழர்களும் ஒன்று என்று எண்ணுகிற அளவிலே இங்கே ஒரு அமைதி நிலவ வேண்டுமென்று எண்ணுகிறவர்கள் நாங்கள். இப்படி குறிப்பிட்ட சமூகத்தினரை மட்டும் கண்காணிக்க வேண்டுமென்று சொல்கிறபோது மற்ற சமூகத்தினரின் பார்வையிலே அவர்கள் ஒரு குற்றப்பரம்பரையாக தோற்றம் தரக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதால் சாதிக் கொடுமை தலைதூக்கும் என்பதால் நான் இதைச் சொல்கிறேன். சாதிக்கொடுமை வேண்டாம் வேண்டாம் என்று எப்போது சொல்கிறோமோ அப்போது சாதிக் கொடுமை இருக்கிறது என்றுதான் பொருள். எனவே சாதிக் கொடுமைகள் வேண்டாம் என்று சொல்கிற நேரத்திலே சாதியைப்பற்றி பாகுபாடின்றி எல்லா சமூகத்தினரும் ஒன்று என்று எண்ணம் ஏற்பட வேண்டும். சம்பந்தப்பட்ட காரியங்கள் நடக்கிற நேரத்திலே காவல் துறை அதிகாரிகளாக இருந்தாலும் சரி, மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தாலும் சரி நிச்சயமாக தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல, இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் அவர்கள் இருவருமே ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள். அப்படியிருக்கிறபோது இப்படியொரு தவறு நடைபெறும் என்று நினைத்திருப்பார்களானால் அவர்கள் அதை செய்திருக்க முடியும். அதைப்போல திசையன்விளை காவல்துறை இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், வள்ளியூர் காவல் துறை உதவி சூப்பிரண்டெண்ட் இவர்கள் எல்லாம் தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது; வேறு வகுப்பினராக இருக்கவேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறீர்கள். தேவர் வகுப்பினர் தேவர்களுக்கு சவுகரியம் செய்து விடுவார்கள் என்று சொன்னால், மற்ற சமூகத்தினர் தங்கள் சமூகத்திற்கு செய்ய மாட்டார்களா ? அப்படியானால் தமிழ் நாட்டிலே இருக்கிற சமுதாயத்திலே பிறக்காத வேறு யாராவது தான் அங்கே போலீஸ் அதிகாரிகளாக நியமிக்கப்பட வேண்டுமா? ஆகவே அவைகளை யெல்லாம் விட்டுவிட வேண்டும். கமிஷன் பரிந்துரை செய்திருக்கிற மற்றவைகளை, ஆதிதிராவிட மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பது போன்ற காரியங்களை செய்து கொடுப்பது வரவேற்கக் கூடியதொன்றாக இருக்கும். அதைவிடுத்து ஒரு சமுதாயத்தினர் இந்த வேலைக்கு அமரக் கூடாது என்று சொல்லியிருப்பதை திரும்பப் பெற வேண்டும். அவர்கள் குடும்பத்திலே யாருமே அறங்காவலராகவோ கிராம அதிகாரிகளாகவோ நியமிக்கக் கூடாது என்பதை திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

[1983 ஏப்ரல் 19

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, நீதிபதி திரு. கே. எஸ். இராமமூர்த்தி விசாரணைக் குழுவின் அறிக்கை மீது, பொதுத் துறையின் 1794 ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப் பெற்றவாறு அரசு எடுத்த நடவடிக்கை குறித்து, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டுமென்ற தீர்மானத்தையொட்டி, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள், தங்கள் கருத்துக்களை எடுத்து தெரிவித்திருக்கிறார்கள். இந்த பிரச்னையைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித்தேவர் அவர்கள் அதனுடைய வரலாறு, மற்றவைகளையெல்லாம் கூட எடுத்துத் தெரிவித்தார்கள். இதிலே முதலில் நான் குறிப்பிட்டு கூறிக்கொள்ள விரும்புகிறேன். எந்த ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் மீதும் காழ்ப்புணர்ச்சியோ அல்லது உள் நோக்கமோ இந்த அரசிற்கு இல்லையென்றும், அந்த அடிப்படையில் இந்த பிரச்னையை அணுகவில்லை என்றும், ஒரு சுமூகமான சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்ற எண்ணத்தினுடைய அடிப்படையிலே தான் கமிஷன் நியமிக்கப் பட்டது என்றும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம் சங்கனாங்குளம் கிராமத்தில் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் தேதி ஆதி திராவிட பெண்கள் கற்பழிக்கப்பட்டனர் என்றும், மணியென்ற ஆதிதிராவிடர் கொலை செய்யப்பட்டார் என்றும் கூறப்பட்ட குற்றச் சாட்டுகளைத் தொடர்ந்து, அரசாணை நிலை 2730, பொதுத் துறை, நாள் 11–12–80-ல் ஒரு நபர் விசாரணைக் குழுவாக சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. கே. எஸ். இராமமூர்த்தி அவர்களை அரசு நியமித்தது. இவ்வாறு நியமிப்பதற்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள் எடுத்து தெரிவித்ததற்கிணங்க, அந்த பகுதியைப் பற்றிய பல்வேறு பிரச்னைகள் பத்திரிகைகளில் பல்வேறு விதமாக, வந்து, அதுமட்டுமல்லாது குமரி மாவட்டத்தினுடைய நிகழ்ச்சிகளுக்காக சென்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகிற நேரத்தில், யாருக்கும் சொல்லாமல், எதிர்பாராத விதமாக சங்கனாங்குளத்திற்குச் சென்றார்கள். அங்கே இருக்கிற நிலைமைகளை நேரடியாக கண்டறிவதன் மூலமாக சில உண்மைகள் புலப்படலாம் என்று கருதி அங்கே போனார்கள். அப்போது நானும் கூட உடன் போயிருந்தேன். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் உடன் வந்தார்கள். அங்கே ஆதிதிராவிடப் பெண்கள் பலபேர் அழுதுகொண்டே சிலபல குறைகளை எடுத்துச் சொல்லி, தாங்கள் கற்பழிக்கப்பட்டோம் என்றெல்லாம் சொன்னார்கள். எந்த ஒரு தீர்ப்பையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கே அளிக்கவில்லை. எந்த கருத்தையும் பத்திரிகைகளுக்கும் தெரிவிக்கவில்லை. இருந்தாலும் கூட இதனு



1983 ஏப்ரல் 19] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

டைய உண்மை நிலைமைகளை எல்லாம் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பது தான் பொருத்தமாக இருக்குமென்று கருதி சென்னைக்கு வந்த இரண்டு, மூன்று நாட்களுக்குள்ளாகவே திரு. கே. எஸ். இராமமூர்த்தி அவர்களைக் கொண்ட ஒருநபர் குழு நியமிக்கப் பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதற்கிணங்க எது எது பற்றி விசாரித்து அறிக்கை தரவேண்டுமென்று அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற டெர்ம்ஸ் ஆப் ரெபரென்ஸ் பொறுத்தவரையில் நான் சிலவற்றை தெரிவிக்க விரும்புகிறேன். திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், சங்கானாங்குளம் கிராமத்தில் 1980 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் ஆதி திராவிட மகளிர் சிலர் குற்றம் சாட்டப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றியும், மணி என்பவர் கொலை செய்யப்பட்டதாக கூறப்பட்டது பற்றியும், விசாரணை செய்து அறிக்கை அளிக்க வேண்டுமென்பது ஒன்று ; அடுத்ததாக மேலே குறிப்பிட்ட குற்றச்சாட்டிலே உண்மை இருக்கிறதா என்பதை கண்டறிந்து, இந்த நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிந்து தெரிவிக்கவேண்டும் என்பது இரண்டு ; இத்தகைய நிகழ்ச்சிகள் வருங்காலத்தில் நிகழாத வண்ணம் தடுப்பதற்கு வழிமுறைகளை பரிந்துரைக்க வேண்டுமென்பது மூன்று ; அந்தவகையிலே விசாரணைக் குழு அறிக்கையை 28—4—82-ல் அரசிற்கு அளித்தது. 1952-ம் ஆண்டு ஆணைக்குழு சட்டத்தின் 3, 4 பிரிவுகளில் விசாரணை விதிகளின்படி விசாரணை அறிக்கையை அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆறு மாதத்திற்குள் அறிக்கையையும், அதன்மேல் எடுத்த நடவடிக்கைக் குறிப்புகளையும் சட்ட மன்றத்திலே வைக்க வேண்டும். அதன்படி 28—10—82-ற்குள் சட்டமன்றத்திலே அந்த அறிக்கையை வைத்திருக்க வேண்டும். செப்டம்பர் 82-லே சட்டமன்றக் கூட்டம் மிக குறுகிய காலமே நடந்ததால், அதற்குள் அறிக்கையை அச்சிட்டு பிரதிகளை அரசு அச்சகத்திலேயிருந்து பெற்று அவையிலே சமர்ப்பிக்க முடியவில்லை.

(முற்பகல் 11—00)

ஆனால், 28—12—1982-க்குள்ளாக, இந்த விசாரணைக் குழுவினுடைய அறிக்கை அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் உறுப்பினர்களுக்கு, போய்ச் சேர வேண்டுமென்று அவரவர்களுடைய முகவரிக்கு அங்கங்கே அனுப்பி வைக்கப்பட்டது. அதிலே, விசாரணைக் குழு முன் கூறப்பட்டிருக்கிற சாட்சியங்களுடைய வாக்குமூலங்களை ஆராய்ந்து, இந்த ஒரு நபர் குழு தன்னுடைய முடிவுகளைக் கீழ்க்கண்டவாறு எடுத்து தெரிவித்தது. மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். கற்பழிப்பு பற்றி பேசிய அனைத்துப் பெண்களுமே திரு. காசி என்பவருக்கு ஏதேனும் .ஒரு வகையில் சொந்தக்காரர்களாகவே இருக்கிறார்களே தவிர, வேறு யாரும் அல்ல. சாட்சியங்கள் யாவும் காசி என்பவரால் சொல்லிக் கொடுக்கப்பட்டவையே. மேலும் அப்பெண்கள் கூறும் சாட்சியங்களில்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 19

அங்கேயெல்லாம் இந்தக் கண்காணிப்பு வைக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இந்த இரண்டு காவல் நுறைகளைப் பொறுத்த வரையில், காவலர்கள் அந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டாமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் நான் திட்டவட்டமாக, தெளிவாக எடுத்துச் சொல்கிறேன். இப்பொழுது, அந்தப் பரிந்துரையின்படி நடவடிக்கை எடுக்கும்படி காவல் துறை இயக்குநரும் பணிக்கப்பட்டார்.

அதன்படி இப்பொழுது வள்ளியூர் காவல் உதவிக் கண்காணிப்பாளர், திசையன்விளை, வள்ளியூர் ஆகிய [illegible]ர்களில் காவல் ஆய்வாளர், உதவி ஆய்வாளர் ஆகியோர்கள் தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல. வருங்காலத்திலும் இப்படிப்பட்ட நிலைமைகள் கவனத்தில் கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, நான் சொல்கிறேன் காலாகாலத்திற்கும் அந்த ஸ்டேஷனுக்குத் தேவரைப் போடுவதே இல்லை என்ற முடிவை நாம் எடுப்பதாகவும் இல்லை. சில சில சமயங்களிலே, சில சந்தர்ப்பங்கள் வரும்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று இராமநாதபுரத்திலே கலவரங்கள் வந்தபொழுது, இரண்டு சாதியினர்களுக்கிடையே கலவரங்கள் வந்தபொழுது சிலபல இடங்களிலே ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களே அதிகாரிகளாக இருப்பதனால் சில தொல்லைகள் வருகின்றன என்ற குற்றச்சாட்டு வந்தவுடனே, உடனே மாற்ற வேண்டிய அவசியம், மற்றவர்களைக் கொண்டு வர வேணடிய அவசியம் வருகிறது. ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் சிலயிடங்களிலேலே காவல் துறை அதிகாரிகளாக இருக்கின்றபொழுது அதைச் சேர்ந்த ஒரு கொலை வழக்கோ, ஒரு திருட்டு வழக்கோ, கொள்ளை வழக்கோ, மற்றவைகளோ ஏற்படுகின்றபொழுது அவர்களுடைய சலுகையின் கீழ் இருக்கிறார்கள். தயவு செய்து இவரை இந்த ஊரை விட்டு மாற்றுங்கள், வேறு ஒருவரைப் போடுங்கள் என்றெல்லாம் விண்ணப்பங்கள் வருகின்றபொழுது அதற்கிணங்க அப்படிப்பட்டவர்கள் அங்கு இல்லாமல் இருப்பது நமக்கும் நல்லது; அவர்களுக்கும் நல்லது; ஒரு நியாயம் கிடைக்க வேண்டுமென்று பொதுமக்கள் எண்ண வேண்டும் என்ற அந்த அடிப்படையிலே செய்யப்படுவதே தவிர, இது நிரந்தரமாக இருக்காது என்பதையும், நீதிபதிக்கு மதிப்பளிக்க வேண்டுமென்ற முறையில் தான் இந்த உத்தரவு இடப்பட்டிருக்கிறது என்பதையும், விரைவிலே இது கண்காணிக்கப்பட்டு, இதற்கு இனிமேல் அவசியமில்லை என்ற நிலை ஏற்படுகின்றபொழுது இந்த உத்தரவு வாபஸ் வாங்கப்படும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

Thiru S. Andithevar: Sir, Preferably the Assistant Superintendent of Police, Inspector and Sub-Inspector of Police, Tisayanvilai and Valliyoor should belong to some other community other than the Thevars.



1983 ஏப்ரல் 19] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

மற்றத் தேவர்கள் என்ன செய்தார்கள்? ஒரு சங்கரத்தேவர் ஏதோ
ஒரு பகுதியில்—கொலை வழக்கில்கூட ஒருவர் கொலை செய்
தால் தூக்குப் போடுகிறோம்—ஆனால் நிரூபிக்கப்படாத ஒரு
வழக்குக்காக அந்த இனத்தவர்களையே தவறானவர்கள் என்று
இப்படி ஒரு உத்தரவைப் போடுவது..........

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர்
அவர்களே, அதையும் நான் குறிப்பிட்டேன். நம் நாட்டைப்
பொறுத்தவரையில் சரியாகவோ தப்பாகவோ ஜாதிக்கு ஜாதி
ஒரு ஒற்றுமையும் தொடர்பும் வந்து விடுகின்ற காரணத்திற்
காகத்தான் இந்த நிலைமைகள் வருகின்றன. சில பலயிடங்
களில் சில சூழ்நிலைகள் வரும் பொழுது அவரை மாற்ற வேண்
டிய அவசியம் வருகிறது என்று சொன்னேன். ஆகவே, இது
தற்காலிகமான ஒன்றே தவிர, அவர்கள் அந்த நீதிபதிக்கு
அளிக்கின்ற முறையில் செய்திருக்கிறார்களே தவிர இது நிரந்
தரமாக இருக்காது என்பதையும், ஆகவே, அந்த ஸ்டேஷனைப்
பொறுத்தவரையில் என்றைக்குமே தேவர்கள் வர முடியாத
ஒரு சூழ்நிலை தான் இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள்
கொள்ள வேண்டியதில்லை என்பதையும் இதைப் பொறுத்து
நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதிகாரிகளின் பணிகளைப் பொறுத்தவரையில் திருநெல்
வேலி மாவட்டக் காவல்துறை கண்கணிப்பாளர் போன்ற
உயர் மட்ட அதிகாரிகள் நேரடிப் கட்டுப்பாடு செலுத்தி கண்
காணிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே
ஆட்சேபனை இருக்க முடியாது. இன்னும் கொஞ்சம் கண்
காணிப்பு சரியாக இருந்திருக்குமேயானால் இந்த விளைவு
களெல்லாம் கூட வந்திருக்காது. இரு தரப்பினரையும் கூப்
பிட்டு வைத்து சமரசம் பேசுகின்ற தன்மைகள் ஏற்பட்டிருக்கு
மேயானால் இவ்வளவு மாச்சர்யங்கள்கூட வந்திருக்காது.
இதன் மீது நடவடிக்கை எடுக்க காவல் துறை இயக்குநரை
அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க திசையன்விளை வள்ளி
யூர் அதிகாரிகளின் பணிகள் நேரடியாகக் கண்காணிக்கும்படி
திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இந்தத்
தீர்ப்பின்மீது கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். திசையன்
விளை காவல் துறை காவல் அதிகாரிகள் சங்கனாங்குளம்
கிராமத்தைத் திறமையான முறையில் மேற்பார்வையிட வகை
செய்ய சங்கனாங்குளம் கிராமத்திற்குச் செல்லும் அணுகு
சாலை, நாங்குனேரி திசையன்சாலை, திசையன் விளை சாலை
இணைப்பதற்குச் சாலை ஒன்று உடனடியாக அமைக்கப்பட
வேண்டும். இப்பரிந்துரையின்படி இந்தச் சாலை அமைக்க
அமைக்க உடனடியாக ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும்
அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 19

மாடசாமித் தேவர் அல்லது சங்கரத் தேவர் சங்கனாங்குளம் பகுதியில் கள்ளச் சாராயம் வடித்து இறக்குவது பெரிய அளவில் நடைபெற்று வருகிறது. காவல் துறையினர் இதுபற்றி கவனமாகக் நடவடிக்கை எடுத்து கள்ளச் சாராயம் வடித்து இறக்குவதைத் தடுத்து அடிக்கடி திடீர் சோதனைகள் மேற்கொள்ள வேண்டுமென்று ஒரு பரிந்துரை செய்திருக்கிறார்கள். இதை ஆட்சேபிக்க வேண்டிய அவசியமில்லை இதைக் கடுமையாக ஆக்க வேண்டும்; இதற்கான கண்காணிப்பு செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

சங்கனாங்குளம் ஆதி திராவிடர்கள் தங்களுடைய வாழ்க்கையைத் தாங்களே நடத்த இயலும் வகையில் சிறு தொழில்கள் துறையின் சிறப்புப் பிரிவு ஒன்று அங்கு தொடங்கப்படலாம் என்று குறிப்பிட்டிருக்கிறது. காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரி இப்பரிந்துரையின் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். சங்கனாங்குளம் கிராமத்தில் சுமார் 100 ஆதிதிராவிடர்கள் குடும்பங்களே உள்ளன என்றும், அவர்களுடைய முக்கியமான தொழில் விவசாயத் தொழிலே என்றும், அவர்கள் விவசாயத் தொழிலாளர்களே என்றும், அவர்கள் கோழி மற்றும் கால்நடைகள் வளர்ப்புத் தொழிலை மேற்கொள்வதையே பெரிதும் விரும்புகின்றனர் என்றும், இருப்பினும் சுமார் 25 பெண்கள் பனை ஓலை பொருள்கள் உற்பத்தி செய்யத் தெரிந்தவர்கள் என்றும், ஆண்கள் தங்களுக்குத் தேவையான செங்கற்களை உற்பத்தி செய்யத் தெரிந்தவர்கள் என்றும் தெரிய வந்தது. காதி கிராமத் தொழில் வாரிய அலுவலர்கள் அம்மக்களிடம் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து செங்கல் உற்பத்தியும், பனை ஓலைப் பொருள்கள் உற்பத்தியும் செய்ய ஆரம்பித்தால் அத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள்கள் எளிதில் கிடைக்கும் என்றும், பொருள்களை விற்பதற்கும் வழி செய்யப்படும் என்றும் கூறி, அவர்களைச் சம்மதிக்க வைத்துள்ளனர். காதி கிராமத் தொழில் வாரியத்திலிருந்து பொருள் உதவி அளிக்கும் வகையில் இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 11-10.)

அடுத்து, மாடசாமித் தேவர், அவருடைய சகோதரர், ஆகியோருடைய குடும்பத்தினர் யாராவது துப்பாக்கி வைத்திருப்பதற்கான உரிமை வைத்துக் கொண்டிருந்தால், பொதுமக்களின் பாதுகாப்பைக் கருதி, உடனடியாக ரத்து செய்யப்பெறவேண்டுமென்ற தீர்ப்பு வழங்கப்பட்டது. இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி திருநெல்வேலி மாவட்ட



1983 ஏப்ரல் 19] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஆட்சித் தலைவர் பணிக்கப்பட்டிருக்கிறார். சம்பந்தப்பட்ட
குடும்பத்தினர், மாடசாமித் தேவர் தம்பி, இந்துக் கல்லூரியில்
உதவிப் பேராசிரியராக பணிபுரியும், சத்திய மூர்த்தி என்பவ
ரிடம் மட்டும் தான் துப்பாக்கி வைத்திருப்பதற்கு உரிமம்
உண்டு என்றும், ஏற்கனவே சங்கனாங்குளம் கிராமத்தில், இரு
வகுப்பினருக்குமிடையே மோதல் ஏற்படும் நிலை இருந்தபோது,
திருநெல்வேலி மாவட்ட வருவாய்த் துறையின் 7–11–1980-ஆம்
நாளிட்ட ஆணையின்படி, துப்பாக்கி, கோட்டார் காவல்
நிலையத்தில் 28–11–1980 அன்று டெப்பாசிட் செய்யப்பட்டது
என்றும் தெரியவருகிறது. மாடசாமி தேவரிடத்திலோ,
அல்லது மற்றவர்களிடத்திலே துப்பாக்கி உரிமம் இல்லை. அவரு
டைய தம்பியிடத்தில் தான் இருக்கிறது. கோட்டாரில்
7–11–1980 ஆணைக்குட்பட்டு, 28–11–1980-ல் டெபாசிட்
செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக மாண்பு
மிகு உறுப்பினர்கள் எடுத்து தெரிவித்ததற்கிணங்க, அந்த
இரண்டு இடத்திலேயும் தேவர் வகுப்பைச் சார்ந்தவர்கள்
அதிகாரிகளாகப் போடக்கூடாது என்றும், ஆக அதுமட்டு
மல்ல, மாடசாமி தேவர் மற்றும் சங்கரத் தேவர் ஆகியவர்
கள் மீது நெருக்கமாகவும் கண்டிப்பாகவும் கண்காணிக்க
வேண்டுமென்கிற இரண்டு தன்மையைப் பற்றித்தான்
அவர்கள் எடுத்துச்சொல்லுகிறார்கள். ஆக நீதிபதி இருக்கின்ற
சூழ்நிலைக்கேற்ப அவர்கள் தீர்ப்பை அளித்தார்கள் என்பதற்காக,
அந்தத் தீர்ப்புக்கு மதிப்பளிக்கிற முறையில் அரசு ஏற்றுக்கொண்
டாலும், ஆக இரண்டையும் பொறுத்தவரையில், விரைவிலே
அரசு அந்த உத்தரவை வாபஸ் வாங்கப்பெற்று, அவர்கள்
ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு ஆதரவாக
இருக்குமென்று கூறி, இந்த மற்றைய சிபாரிசுகளை நடை
முறைப் படுத்துவதன் மூலம் நல்லதொரு சூழ்நிலை ஏற்படுமே
தவிர, அது எந்த விதத்திலேயும் பாதிப்பை ஏற்படுத்
தாது என்றும் கூற விரும்புகிறேன்.

இந்தச் சங்கனாங்குளம்
திரு. எல். இளையபெருமாள் : முதலமைச்சர் அவர்களும், மற்றைய அமைச்சர்
விஷயத்திலே, நேரில் சென்று உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டு
களும் அங்கே இருக்கிற சுற்றுப்புறம், சூழ்நிலை
மென்பது ஒன்று. அங்குள்ள அவதியைக் கண்டும், அது போடப்பட்டது.
களிலே, ஆனால் நம்முடைய முன்னவர் அவர்கள் பதில் சொல்கிறபோது
வாபஸ் வாங்கவேண்டுமென்பதோ, அல்லது காலங்கடந்து இருக்
காது என்று சொன்ன உறுதியின் பேரில் அங்கே இவ்வளவு
முயற்சிகளை எடுத்துக்கொண்டு, அதில் உண்மையைத் தெரிந்தும்,
நம்பகமான சில கடமைகளைத் தான் செய்திருக்கிறார்களே
யொழிய, சரியான சாட்சியங்கள் இல்லாததால் அவர்கள் யாரை
யும் குற்றவாளிகளாக்கவில்லை. ஆனால் கடந்த காலத்திலே
நடந்த பல தொல்லைத் துயரங்களால் தான் பல குறுகிய
மனிதாபிமானத்தோடு, இந்தப் பரிந்துரைகளை நம்முடைய

[(திரு. எல். இளையபெருமாள்] [1983 ஏப்ரல் 19

அரசாங்கத்திற்கு ஜஸ்டீஸ் இராமமூர்த்தி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்று சொல்லுகின்ற நிலைமையிலே அந்த மாதிரியான கேடான நிலை ஒரு தனிப்பட்ட சமுதாயத்திற்கு உண்டாகாது என்ற நிலையை அவர்கள் உருவாக்க வேண்டியது, யார் இந்தத் தவறுகளுக்கு உடந்தையாக இருந்தார்களோ, அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தாலன்றி, இந்தப் பரிந்துரையை வாபஸ் பெறுவதோ, அல்லது வேகமாக நடைபெறாது என்றோ ஒரு எண்ணம் உண்டாக்கக்கூடிய பதிலானது நிச்சயமாக தவறு செய்கிறவர்கள் எதையும் செய்து தப்பித்துக்கொள்ளலாம். முதலமைச்சரவர்கள் அங்குள்ள நிலைமையைப் பார்த்தும் இந்தச் சூழ்நிலைக்குவந்த பிறகும், நமக்கு ஆதரவு இருக்கிறது என்று எண்ணி தவறான எண்ணங்களுக்கு இடம் அளிக்காத நிலைமையிலே அரசாங்கம் கண்காணிக்க வேண்டுமென்றும் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்தச் சங்கனாங்குளம் தன்மையைப் பொறுத்தவரையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நானும், மற்றவர்களும் சென்று இருந்தபோதுகூட அங்குள்ள ஆதிதிராவிட பெண்கள் மற்றவர்கள் எல்லாம் சாட்சியம் சொல்லும்போது கூட, முதல்வர் அவர்கள் திரும்பத் திரும்பக் கேட்டார்கள். தேவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், சமுதாயத்தினுடைய அடிப்படையில் இந்தத் தொல்லைகளைக் கொடுக்கிறார்களா, குறிப்பிட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்கிறபோது அவர்கள் தேவர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களா என்பது தெரியவில்லை என்றும் ஆக ஒரு சமுதாயத்தைப் பொறுத்தவரையில் இது அமையவில்லை. அவர்கள் கண்காணிக்கப்படவேண்டுமென்பது நீதிபதியினுடைய தீர்ப்புக்கு மதிப்பளிக்கின்ற முறையில் நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். கண்காணிக்கப்பட்டு, எந்தத் தன்மையும் இல்லை என்கிறபோது, அதை திரும்பப் பெறுவது—சாதாரணமாக கொலை செய்தவன் கூட, போய்விட்டு திரும்ப வந்ததற்குப் பிறகு, சில காலத்திற்குக் கண்காணிக்கப்படுகிறான். பிறகு கண்காணிக்கப்படுவதில்லை என்ற அந்த அடிப்படையிலேதான் லிஸ்டிலேயிருந்து எடுத்திருக்கிறோம். இப்போது கண்காணிக்கப்படவேண்டிய அவசியமில்லை என்ற தன்மை வருகின்றபோது கட்டாயம் எடுப்போமே தவிர, ஆக சமுதாயத்தை என்றென்றைக்கும் இழிவு படுத்துகிற முறையையோ அல்லது ஒதுக்கி வைக்கின்ற உள்நோக்கமோ இந்த அரசிற்கு இல்லை என்பதை திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னேன்.

**திரு. என். சங்கரய்யா :** இதிலே காவல் துறை உதவி ஆய்வாளர் கிருஷ்ணசாமியும், ஆய்வாளர் அருணாசலமும் நேர்மையற்ற முறையில் தீய கூட்டுச் சேர்ந்து, தீய சூழ்ச்சியில் ஈடுபட்டனர். அவர்களைப் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அவர்களைப்பற்றி ஸ்டிரிக்சர்ஸ் வந்திருக்கிறது.



1983 ஏப்ரல் 19]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் எடுத்துச் சொல்லியது போன்று காவல் துறையினுடைய உதவி ஆய்வாளர் கிருஷ்ணசாமி மீதும்,ஆய்வாளர் அருணாசலத்தின் மீதும் நீதிபதி கொடுத்த தீர்ப்பின் அடிப்படையிலே தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று காவல்துறை இயக்குநர் பணிக்கப்பட்டுள்ளார்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிய போது பரிந்துரையை நாங்கள் ஏற்றுக்கொண்டு செய்தோம். குறிப்பிட்ட அந்த குடும்பம்தான் தவறு செய்திருக்கிறதே தவிர இந்த இனம் அல்ல என்று சொல்லிவிட்டு அஸிஸ்டென்ட் சூப்பிரன்டென்ட் ஆப் போலீஸ், வள்ளியூர், எஸ். ஐ. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இவைகளுக்கு தேவமார் இனத்தைச் சேர்ந்தவர்களை போடக்கூடாது என்பது ஜனநாயகத்திற்கு புறம்பாக, இந்த ஜாதி மீது இருக்கின்ற தடையா? ஏன் அதை மட்டுமாவது நீக்கக்கூடாது? அதைப் போன்று மாடசாமித் தேவர், அவருடைய சகோதரர்கள் செய்தால், அதற்காக அவர்களுடைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் டிரஸ்டிகளாகவோ அங்கேயிருக்கிற கிராம அதிகாரியாகவோ வரக்கூடாது என்று இந்த இரண்டும் இருப்பது ஜனநாயகத்திற்கும் புறம்பாக ஒரு தவறு யார் செய்து இருந்தாலும் கொலை செய்தவனுக்குக் கூட தூக்கு தண்டனை வருகிறதே தவிர அவருடைய குடும்பத்தைத் தண்டிப்பது இல்லை, அங்கே ஆதாரம் இல்லை. நிரூபிக்கப்படவில்லை என்று சொன்னதற்குப் பின்னாலும் இந்தத் தடை ஒரு சமூகத்திற்கு வைப்பது நியாயம் தானா? முதல்வர் அவர்களும் வந்துவிட்டார்கள். அதை அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்வார்கள். காரணம் பெரிய இனத்தின் சார்பாக நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு ஒரு திட்டவட்டமான அறிவிப்பு வேண்டும். வருங்காலத்திற்கும் தடை விதிக்கின்ற ஒரு சட்டமும் உரிமைகளுக்குத் தடை செய்கின்ற ஒரு நிலையும் வருமானால், அது எந்த அளவிற்கு நல்லதாக இருக்கும் என்று.....

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 19

வேறுபாடுகளும் முரண்பாடுகளும், நேரம், காலம், இடம் பற்றிய பொருத்தம் இன்மைகளும் உள்ளன. எனவே, ஆதி திராவிடப் பெண்கள் கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளத்தக்கது அன்று என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலிருந்து, அந்தக் குழு தன்னுடைய கருத்தை நடுநிலை வகித்து ஆராய்ந்து தரவேண்டும் என்ற வகையில் இருந்தது என்பதும், அந்தக் குழுவினுடைய தலைவராக இருந்த திரு. இராமமூர்த்தி அவர்கள் உள்நோக்கம் கொள்கிற அளவுக்குத் தன்மைகளைக் கொண்டவர் அல்ல என்பதும், அது மட்டுமல்லாமல் அதிலே சம்பந்தப்பட்டிருக்கிற இரு வகுப்பைச் சேர்ந்தவர் அல்லர் என்பதும், அந்த இடத்தைச் சேர்ந்தவர் அல்லர் என்பதும் நாம் நன்றாகக் காணக்கூடிய வகையில் இருக்கிறது. அவர்கள் விசாரித்தறிந்ததற்குப் பிறகு, இந்த முடிவைத் திட்டவட்டமாக, தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. மணி கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டைப் பொறுத்தவரை திரு. மாடசாமித் தேவர், திரு. சங்கரத் தேவர் மற்றும் திரு. இராமச்சந்திரத் தேவர் ஆகியோருக்கு எதிராக சில முக்கிய சூழ்நிலை, சந்தர்ப்ப சாட்சியங்கள் தோன்றினாலும் ஒரு முழுமையான கருத்து எதுவும் உருவாகவில்லை. அரைகுறையாக விவரமே வருகிறது. எனவே மேற்குறிப்பிட்ட மூவரும் குற்றவாளிகள் அல்ல என்றாலும் அது கௌரவமான கன்னியமான வாய்ப்பு அல்ல, It is not an honourable acquittal" சந்தேகத்திற்கு இடம் இல்லாத வகையில் குற்றம் நிருபிக்கப்படவில்லை என்பதால் மட்டுமே அவர்கள் மட்டுமே அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள் என்று திட்டவட்டமாகஅவர்கள் அதிலேயே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சந்தேகத்திற்கு இடமற்ற வகையிலே அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்று சொல்ல முடியவில்லை. இருந்தாலும்கூட அறைகுறை சாட்சியங்களை வைத்திருப்பதன் காரணமாக முழுமை பெறமுடியாத தன்மை காரணமாக, Benifit of doubt goes to the accused என்கிற இலக்கணத்தின் அடிப்படையில் நாங்கள் இந்தத் தீர்ப்பு அளித்திருக்கிறோம் என்றுதான் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். காவல் உதவி ஆய்வாளர் கிருஷ்ணசாமியும் ஆய்வாளர் அருணாசலமும் நேர்மையற்ற முறையில் பிறருடன் தீய கூட்டு சேர்ந்து சில சூழ்ச்சிகளில் ஈடுபட்டனர். யார், யார் காரணமாக இருந்திருக்கின்றனர். என்றெல்லாம் கண்டு பிடிப்பதற்கு அடிப்படையாக அவர்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல், மேலும் இத்தகைய நிகழ்ச்சிகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்கு, என்ன, என்ன யோசனைகள் இந்தக் குழு தர முடியும் என்று அரசு கேட்டதற்கிணங்க சிலபல யோசனைகளை அவர்கள் தந்திருக்கிறார்கள். அதைப்பற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். அதிலே மாடசாமித் தேவர், சங்கரத் தேவர் முதலானவர்களின்



1983 ஏப்ரல் 19] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நடவடிக்கைகளை அவர்களுக்காகவும் கண்டிப்பாகவும் கண்
காணிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். காவல் துறை
இயக்குநர் இது குறித்து நடவடிக்கை எடுக்கும்படி பணிக்கப்பட்
டிருக்கிறார். அதன்படி சம்பந்தப்பட்டவர்களின் நடவடிக்கை
கள் கண்காணிக்கப்படுகின்ற அளவுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்
கிறார்கள் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, மாண்பு
மிகு உறுப்பினர் சொல்வது போன்றும் மற்றவர்கள் எடுத்துச்
சொல்வது போன்றும் ஒரு குறிப்பிட்டச் சமுதாயத்தினரைக்
கண்காணிக்க வேண்டுமென்றோ, அல்லது குறிப்பிட்ட சமுதாயத்
தினர் கண்கணிக்கப்பட வேண்டிய அளவிலே இருக்கிறார்கள்
என்றோ சொல்லவில்லை. சமுதாயம் என்கின்ற பிரிவு இதிலே
வரவில்லையென்றும், மாடசாமித் தேவர், சங்கரத் தேவர் முத
லானவர்களுடைய நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டு
மென்றுதான் எடுத்துச் தெரிவித்து இருக்கிறார்கள். அது கூட
நிரந்தரமாக, காலம்காலமாக அவர்கள் ஆயுள்காலம் முழு
வதும் கண்காணிக்கின்ற நிலை ஏற்படும் என்று நான் கூற
வில்லை. நீதிபதி அவர்கள் தீர்ப்பளித்திருப்பதன் காரணமாக
நாம் அதை மதித்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள
வேண்டியிருக்கிறது. அவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்த
தற்குப் பிறகு, அப்படிப்பட்ட ஒரு கண்காணிப்பு நடவடிக்கை
தேவையில்லையென்ற சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது, அரசு
நிச்சயம் அப்படிப்பட்ட கண்காணிக்க வேண்டிய அவசியமில்லை
யென்று உத்தரவிட்டு விரைவிலே வாபஸ் வாங்கிக்கொள்கிற
சூழ்நிலை ஏற்படும். ஆயுள் காலம் முழுவதும் இது நடைபெறும்
என்று நாம் சொல்வதற்கில்லை. ஏனென்றால், அப்படிப்பட்ட
நிலைமையிலே, கண்காணிக்கப்பட வேண்டிய தன்மையிலே
இல்லை, அவர்கள் அப்படிப்பட்டவர்கள் இல்லை என்பதை
எல்லாம் மாண்புமிகு ஆண்டித் தேவர் அவர்களும் முதல்வர்
அவர்களும் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அப்படி இருக்கிற
பொழுது, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு கண்காணிக்க
வேண்டிய அவசியமே இல்லையென்கின்ற நிலை ஏற்படுகின்ற
பொழுது, திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். காலாகாலத்திற்கு
இல்லையென்பதையும் அதற்கு மதிப்பளிக்க வேண்டுமென்
பதையும் தெரிவித்து, தனிப்பட்ட முறையிலே தவிர, எந்த
வகுப்பையும் குறைத்து மதிப்பிடுவதற்காகவோ, அவர்களைக்
குற்றவாளிகளாகக் கருதுவதற்காகவோ இல்லை என்பதைக்
கூறிக்கொள்கிறேன். திசையன்விளை காவல் துறை ஆய்வாளர்
உதவி ஆய்வாளர் ஆகியோரும், வள்ளியூர் காவல் துறை உதவிக்
கண்காணிப்பாளர் அவர்களும் அதே வகுப்பைச் சேர்ந்தவர்களாக
இருக்கக் கூடாது. வேறு வகுப்பினராக இருந்தால் நலம் என்று
எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதிலும் கூட ஒரு
சமுதாயத்தைப் பற்றி அவர்கள் சொல்லாமல், குறிப்பிட்டு எடுத்
துச் சொல்லி இருக்கிறார்கள். இரண்டு இடங்களைப் பற்றி
மட்டும்தான் சொல்லியிருக்கிறார்கள். தேவர்கள் சமுதாயம்
வாழ்கின்ற இடங்கள் ஏராளமாக இருக்கின்றன என்றாலும்

[1983 ஏப்ரல் 19

**திரு. என். வரதராஜன் :** தலைவரவர்களே, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சட்டப்பேரவை கூட்டத்தை நடத்திட வேண்டும் என்பதுபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண். 7—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,32,78,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

**திரு. என். ஏ. பூங்காவனம்:** தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,32,78,000ல் ரூ. 100 குறைக்கவேண்டும். ''

(ஆ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ;** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப் பின்கீழ் ரூ. 36,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

**திரு. ந. வேணுகோபால்:** தலைவரவர்களே, வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகளை வேலையில்லாத படித்த பட்டதாரி இளைஞர்களிடம் ஒப்படைப்பதுபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 36,15,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

**திரு. கே. கல்லன் :** தலைவரவர்களே, தற்போதுள்ள தேர்தல் முறைகளில் சீர்திருத்தங்கள் கொண்டு வருவதைப்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 36,15,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

**திரு. என். ஏ. பூங்காவனம் :** தலைவரவர்களே, தனியார் அச்சகத்தில் வாக்காளர்கள் பட்டியல் அச்சிடுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 36,15,000-ல்ரூ. 100 குறைக்கப் வேண்டும். ''



1983 ஏப்ரல் 19]

(இ) கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 35,85,85,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

**திரு. பாபு ஜனார்த்தனன்:** தலைவரவர்களே, ஓய்வூதியம் பெறும்சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம் உயர்த்தித்தராமை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 35,85,85,000 ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. கே. எம், தங்கமணி :** தலவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 35,85, 85,000 ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவரவர்களே, ஓய்வு பெறும் அரசு ஊழியர்கள் 5, 10 ஆண்டுகள் கூட ஓய்வூதியம் பெறாமல் அவதிப்படும் நிலையை மாற்றி ஓய்வுபெற்ற உடனேயே சம்பந்தப் பட்ட ஊழியரோ அல்லது குடும்பத்தினரோ ஓய்வூதியம் பெற ஏற்பாடு செய்யப்படாமல் இருப்பதுபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைபின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 35,85,85,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 35,85, 85,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதி ராமமூர்த்தி அவர்கள் கொடுத்திருப்பதிலேகூட சந்தேகத்திற்கு இடம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். முழுவதும் நிருபிக்கப்படவில்லை என்ற காரணத்தால்தான், 2 குற்றச்சாட்டுகளுக்கு நான் தீர்ப்பு அளிக்க முடியவில்லை என்று எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். திரும்பத்திரும்ப நான் முதலிலே சொன்னது மாதிரி, ஜாதி என்ற அளவிற்கு உள்ளபடியே யாராக இருந்தாலும், திறமைக்கு நாம் மதிப்பு அளிக்கின்றோம், தகுதிக்கு நாம் மதிப்பு அளிக்கின்றோம். ஆனால் குறிப்பிட்ட இரண்டு இடங்களிலே ஏற்பட்டு இருக்கிற நிலைமையின் காரணமாக ஒரு செல்வாக்கு மிகுந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றபோது அந்த அதிகாரிகள் மற்றவர்களோடு தொடர்பு கொள்ளவருமே என்ற காரணத்தால் அதை நிரந்தரமாகக்கூட இருக்கவேண்டும் என்றுகூட தீர்ப்பு அளிக்கவில்லை. இருந்தால் நலம் என்றுதான் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த தீர்ப்பை மேற்கொள்கின்ற முறையிலேதான் நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறோமே தவிர, விரைவிலே நிலைமையை ஆராய்ந்து நான் முதலிலே சொன்னது போல் அப்படிப்பட்ட ஒரு உத்தரவு இருப்பதை வாபஸ் வாங்கிக்கொள்வதற்காக அரசு ஆயத்தமாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். எந்த ஒரு சமுதாயத்தினரையும், உள்நோக்கத்தினுடைய அடிப்படையிலே அதை புறக்கணிக்கவேண்டுமென்றோ ; அதனுடைய உரிமைகளைப் பறிக்கவேண்டும் என்றோ அரசுக்கு எந்த எண்ணமும் இல்லை. ஆனால் நீதிபதி இப்படித்தான் தீர்ப்பு வழங்கவேண்டும், இப்படித்தான் சொல்லவேண்டும், இப்படித்தான் சிபாரிசு பண்ணவேண்டும் என்று நாம் சொல்வதற்கு இல்லை. அந்த அடிப்படையிலே தான் நான் விளக்கங்கள் தந்தேன். அந்த விளக்கங்களினுடைய அடிப்படையிலே ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படவேண்டும், நல்ல அமைதி காக்கப்படவேண்டும், உரிமைகள் காக்கப்படவேண்டும், அதற்கு எல்லாத் தரப்பினரும், எல்லா வகுப்பினரும், ஒத்துழைப்பும் உதவியும் நல்கிட வேண்டும். ஏன் என்றால் நோக்கம் நிறைவேற்றப்படவேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட நிலைகள் மேற்கொள்ளப்படுகிறதே ஒழிய மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் போன்றவர்கள் இதிலே அச்சம் கொள்ளத் தேவையில்லை, ஐயப்பாடத்தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



## 8. அறிக்கை அளித்தல்

### சென்னைக்கு கிருஷ்ணா நதிநீர் வழங்குவதுபற்றிய உடன்பாடு.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணாவிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் பற்றி ஆந்திர மாநில முதலமைச்சரைச் சந்தித்துப் பேசி ஒரு ஒப்பந்தத்திற்கு வரவேண்டும் என்ற நோக்கத்தோடு புறப்படும்போது, இந்த அவையில் இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர்களின் உறுப்பினர்களின் ஆதரவோடும், ஆசி-யோடும் நான் செல்கிறேன், நம்பிக்கையோடும் செல்கிறேன், வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் செல்கிறேன் என்று குறிப்பிட்டேன். அந்த ஒப்பந்தம் கையெழுத்தாகிவிட்டது என்பதை நான் தெரிவிப்பதோடு, அதைப் பற்றிய தெளிவான அறிக்கையை விரைவில் சட்டமன்றத்தில் வைக்க இருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11—20).

## 9. வரவு-செலவுத் திட்டம் 1983-84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண். 7—மாநிலச் சட்டமன்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,32,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். ''

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளரை நியமித்துக்கொள்ளவும் — அவர்களுக்கு (உதவியாளருக்கு) அரசு சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண். 7—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,32,78,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும். ''

திரு. கே. எம். தங்கமணி : தலைவரவர்களே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அஞ்சலக கார்டு, கவர் மற்றும் தபால் தலைகள் இலவசமாக வழங்க வகை செய்யப்படாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 7—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,32,78,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும், ''

(ஏ) கோரிக்கை எண் 43—பல்வகை

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 80,85,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

**திரு. த. வேணுகோபால் :** தலைவரவர்களே, இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் குடிபெயர்ந்துள்ள ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 80,85,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. கே. எம். தங்கமணி :** தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 80,85,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 80,85,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(உ) கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச்செலவு.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,11,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவரவர்களே கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,11,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''





**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவரவர்களே கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,11,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. என். ஏ. பூங்காவனம் :** தலைவரவர்களே கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,11,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஊ) கோரிக்கை எண் 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,96,54,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டு விவசாயிகள் அரசிடத்தில் பெற்றுள்ள அனைத்துக் கடன்களையும் அவர்கள் நலன் கருதி அரசு தள்ளுபடி செய்ய வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,96,54,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்',

**திரு. கே. எம். தங்கமணி:** தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,96,54,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. என். ஏ. பூங்காவனம்:** தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,96,54,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மானியக் கோரிக்கையை பொருத்தும், தேர்தல்கள் பற்றிய மானியக் கோரிக்கையை பொருத்தும் விவாதம் நடத்துவதில் நான் பதிலுரைப்பது என்றும், மற்றைய மானியக் கோரிக்கைகள் முழுவதுமாக அப்படியே ஓட்டுக்கு விட்டுவிடலாம் என்றும் அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுத்தாலும் கூட, நாளைக்கு காவல் துறை மானியம் வருவதன் காரணமாக, கில்லட்டின் என்று சொல்வதும் நாளைக்குத்தான் வரும். நாளைக்கு முழுவதுமாக அந்தப் பிரச்னைக்கு விட்டு விடவேண்டும் என்பதனால், இவைகள் எல்லாம் இன்று சேர்க்கப் பட்டிருந்தாலும் கூட, நேரத்தின் அருமையைக் கருதி, இன்றே இந்த விவாதத்தை நடத்தி முடித்து விடுவது தான் பொருத்தமாகவும், சிறப்பாகவும் இருக்கும் என்ற காரணத்தைச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். நான் இறுதியாக என்னுடைய உரையை அளிக்க இருக்கிறேன். இந்த மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை **என்னுடைய முன்னுரையாக ஏற்று, அவைக் குறிப்பில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சிலவற்றைச் சொல்லக் கடமைப்படுகிறேன்.

சட்ட மன்றத்திற்கு என்று புதிய கட்டிடம் 1911 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. தற்போதுள்ள சட்ட மன்றக் கட்டிடம் எந்த அளவுக்கு இப்போதுள்ள சூழ்நிலையில் பொருந்தும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்போது சட்ட மன்ற உறுப்பினர்கள் 120. தற்போது சட்ட மன்ற உறுப்பினர்கள் 234. இது குறித்து கேட்டபோதெல்லாம் முன்பே பலதடவைகள் சொல்லப்பட்டது. தஞ்சாவூருக்கும் திருச்சிக்கும் இடையிலே சட்ட மன்றக் கட்டிடம் கட்டப்படும் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால் தற்போது சட்டமன்ற வளாகத்திற்குள்ளேயே அந்தக் கட்டிடத்தைக் கட்ட இருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. நீங்கள் எங்கே கட்டினாலும், கட்டாவிட்டாலும், அதைப்பற்றி சில கோரிக்கைகளை விடுக்க நான் விழைகின்றேன்.

---

**407-430—ம் பக்கங்களில் இணைப்புகள் III, IV, V ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அளிக்கப்படும் எல்லா வசதிகளும், பிரதான எதிர்க்கட்சித் தலைவருக்கும் அளிக்கப் படுவதாக இங்கே பலமுறை கூறப்பட்டது. நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தமது அறைக்குச் செல்வதற்கு வசதியாக லிப்ட் வசதி போடப்பட்டு உள்ளது. அதைக் கண்டு நான் பொறாமைப் படவில்லை. மாறாக மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், இங்கே சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் 7 ஆண்டுக் காலம் இந்த நாட்டை ஆண்டுக் கொண்டிருந்தார்கள். அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அறையை சற்று எண்ணிப் பாருங்கள் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதிலே பிளஷ்-அவுட் என்று சொல்லப்படுகிற லெட்ரீன் வசதி கூட இல்லை. சிறுநீர் கழிக்கக் கூட இடம் இல்லை. 4 பேர்கள் உள்ளே போனால், 4 பேர்கள் வெளியே வந்துவிட வேண்டிய நிலைதான் அங்கே இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

ஆனால் அது இன்னமும் நமது முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்காது என்று நான் கருதுகிறேன். ஆனால், அவை முன்னவர் அவர்கள், அதைக் கண்கூடாகக் கண்டிருப்பார்கள் என்றும் நான் நினைக்கிறேன். ''தண்டவாளத்திலே தலையை வைத்துப் படுத்தாலும், தலையிலே கிரீடம் வைத்தாலும், இரண்டையும் ஒன்றாகக் கருதுபவன் தம்பி கருணாநிதி'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை இங்கே நான் நினைவு கூர்கிறேன்.

அடுத்து, ஆளும் கட்சி கொறடாக்களுக்கும், பிரதான எதிர்க்கட்சிக்கொறடாக்களுக்கும், ஆந்திரம், பிகார் போன்ற மாநிலங்களில் தனி அறைகள், கார்கள், ஜீப்கள் தனியாக என்று—இதை நான் எனக்காகச் சொல்லவில்லை, யாரும் வந்துவிடலாம் இந்த இடத்திற்கு, நானே கூடப் போய்விடலாம்—பல வசதிகளை தனியாக அளித்திருப்பதை ஆளும் தரப்பிலே உள்ளவர்கள் கூட நன்றாக அறிவார்கள். மாநில சட்டமன்றக் கூட்டத்தினை 3 மாதங்களுக்கு ஒரு முறை தவறாமல் கூட்டவேண்டும் என்று அதன் அவசியத்தை வலியுறுத்தி எடுத்துக் கூறவிரும்புகிறேன். அப்படிக் கூட்டப்படுமானால், அது பல முக்கிய அவசர, அவசியம் வாய்ந்த பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு வசதியாக இருக்கும்

(முற்பகல் 11-30.)

தற்போது ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கிய பகுதிகளில் மாதம் இருமுறை உறுப்பினர்கள் தங்கள் தொகுதியினைச் சுற்றிப் பார்க்க ஜீப்புகள் பெட்ரோல் உட்பட வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் சென்னை, மதுரை போன்ற மாநகராட்சிப் பகுதிகளில் அவ்வாறு வழங்கப்படுவதில்லை. ஆகவே மாநகராட்சிப் பகுதி

கைத்தறித் துணித் தேக்கத்தைப் போக்க, 60 இலட்சம் பேருக்கு வேட்டி, சேலை கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். நான் உறுதியாகச் சொல்கிறேன், கொடுப்பதைக் கெடுக்கும் கெடுமதி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை. நீங்கள் எதைக் கொடுத்தாலும், பொதுமக்களுக்குக் கொடுப்பதைத் தடுப்பதற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மனம் இல்லை. மனம் வராது. மனம் வந்தால் அவன் திராவிட முன்னேற்றக் கழகத்தவன் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதுவெல்லாம் வறுமையைப் போக்க நிரந்தரமான பரிகாரம் இல்லை. எவ்வளவு நாள் விளம்பரத்திலே காலம் கழிக்கப் போகிறீர்கள்? மக்கள் திரும்பவும் இன்னும் இரண்டு ஆண்டு ஆளுங்கள். தயவு செய்து இனியாவது கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முயற்சி எடுங்கள். தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியை மக்கள் மறந்து இருப்பார்கள் என்று மட்டும் எண்ணாதீர்கள். எல்லா வகையிலும், எல்லாத் துறைகளிலும் இருள் சூழ்ந்து இருக்கும் காரியத்தைக் காக்க போர்க்கால நடவடிக்கை போல இயங்க வேண்டும்.

இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் இங்கே குடிபெயர்ந்துள்ள ஏழை மக்கள் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு அளிப்பது பற்றி விரைவான முடிவு காண வேண்டும். இரண்டொரு நாட்களுக்கு முன்பு கேள்வி நேரத்தில் கூட அதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். எல்லோருக்கும் வேலை வாய்ப்பு தர வேண்டும். நாதியற்று வீதியில் திரியும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு தர வேண்டும். அந்தத் தமிழர்களுக்கு, தமிழ் ரத்தம் ஓடும் அவர்களுக்கு நாம் எவ்வளவு விரைவில் வேலைவாய்ப்பு தர முடியுமோ அவ்வளவு விரைவாகத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தின் ஒவ்வொரு வட்டத்தின் தலைநகரிலும் வேலை வாய்ப்பு அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டும். அந்தந்த வட்டங்களில் உள்ள மக்கள் அந்தந்த அலுவலகங்களில் பதிவு செய்து கொள்ள வசதி செய்து தரவேண்டும். தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், கிழக்குத் தஞ்சை, மேல் தஞ்சை என்று இருக்கிறது. கிழக்குத் தஞ்சை அலுவலகம் நாகப்பட்டினத்திலும், மேல் தஞ்சை அலுவலகம் தஞ்சாவூரிலும் இருக்கிறது. ஆகவே, அங்கே போனால், இங்கே போ என்றும், இங்கே போனால் அங்கே போ என்றும் புட்பால் விளையாடுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு வேலை வாய்ப்பு அலுவலகத்தை நிறுவி அவர்களுக்கு விரைவான முறையில் வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தர வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.



இங்கே பலபேர் நீண்டகாலம் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கப் போகிறவர்கள் இருக்கிறார்கள். சில பேர்—என்னைப் போன்றவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இல்லாதவராக ஆகி விடுவோம். அப்படிச் சட்டமன்ற உறுப்பினராக இல்லாதவராகி விடுகிறவர்களுக்கு நமது இன்றைய புரட்சித் தலைவர் அரசு மாதம் ஒன்றுக்கு 250 ரூபாய் கொடுத்து வருகிறது.

(முற்பகல் 11-40)

இந்த ஓய்வு ஊதியத்தை அதிகமாக ஆக்கித்தர வேண்டும். அவர்கள் 500 கேட்கிறார்கள் என்றால் இரண்டையும் கூட்டி—எங்கள் ஊரில் நமது மாண்புமிகு நாவலர் அவர்களுக்கு தெரியும் ராமய்யா நயினார் அவர்கள் பற்றி, பழைய சுயமரியாதைக்காரர் அவர். அவர்கள் மத்தியசம் செய்வார் நீ 10 ரூபாய் சொல்கிறாயா நீ 8 ரூபாய் சொல்கிறாயா சரி அந்த 10யையும் 8யையும் கூட்டி அதில் பாதியை ஆளுக்கு 9 ஆக எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வார்கள். அப்படியாவது ஒரு நிலையை 250 ரூபாய் கொடுப்பவர்களுக்கு நீங்கள் உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள் அரசு உடைமையாக்கப்பட்ட பேருந்துகளில் 3 பேருக்கு இடவசதி அளிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. கணவன், மனைவி இன்னும் ஒரு துணை ஆள். யாருக்கு துணை ஆள் என்று தயவு செய்து கேட்டுவிடாதீர்கள். இந்த 3 பேருக்கு அளிப்பதைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு 2 பேருக்கு போதும் என்று அமைத்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் எல்லாம் மிக வயதானவர்கள், மிக விரைவிலேயே காலத்தை எட்டக்கூடியவர்கள் என்னைப் போன்றவர்கள். அவர்களுக்கு ஒரு இடம் நீங்கள் தர வேண்டும் என்று மிகமிகத் தாழ்மையோடு நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் மூலமாக அதை கேட்டுக் கொள்கிறேன். அவை முன்னவர் அவர்கள் நினைத்தால் அதைச் செய்து விடுவார்கள் என்பது எனக்குத் தெரியும்.

தற்போதுள்ள வறட்சிநிலை காரணமாகத் தமிழ் நாட்டு விவசாயிகள் அரசிடத்தில் பெற்றுள்ள அத்தனை கடன்களையும்—எல்லா கடன்களையும் நீக்குவதாக முன்பு ஒரு தடவை சொன்னதாக நினைவு—அவர்கள் நலன் கருதி அதாவது 2 ஆண்டுகளுக்கு மட்டும் மிக மிகப் பஞ்ச காலமாகிய இந்த 2 ஆண்டுகளுக்காவது அவர்கள் பெற்றுள்ள அத்தனை கடன்களையும் அவர்கள் நலன் கருதி அரசு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை விடுத்து வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

களிலும்அது போல்தொகுதிகளைச் சுற்றிப் பார்க்க மாநகராட்சி அல்லது பொதுத்துறையிலே உள்ள ஜீப்புகளை உறுப்பினர் களுக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கி றேன்.

அடுத்து மாநகராட்சிப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அவரவர்கள் தொகுதிகளில் தனி வீடுகளைக் கட்டித் தரவேண்டும். குறிப்பாக ஸ்கேவஞ்சர்ஸ் என்ற வகையிலே பெருக்குகின்ற ஆயாக்களுக்கும், சட்டமன்றத் துப்புரவாளர்களுக்கும் தனி வீடுகள் கட்டித்தர முன்வரவேண்டும் என்ற கோரிக்கையை தாழ்மையோடு விடுக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். அடுத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, தொகுதி வேலைகளைக் கவனிக்க எழுத்தர்கள், கடைநிலை ஊழியர்கள் போன்றோரை நியமிக்க வேண்டும். அதைச் செய்யமாட்டீர்கள். ஆனால் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நான் விடுக் கிறேன்.

அடுத்து வாக்காளர் பட்டியலை அடிக்கடி தயாரிக்கிறீர்கள். ஆனால் அது பயன்படுவதில்லை. ஒவ்வொரு முறையும் பட்டியல் தயாரிக்கப்படுகின்றது. பிறகு தேர்தலை தள்ளிப் போடுகிறீர் கள். மீண்டும் ஊராட்சி ஒன்றியத் தேர்தலுக்காக பட்டியல் தயாரிக்கப்படுகின்றது என்று அறிவிப்பு வருகின்றது, பின்னர் தேர்தல் தள்ளிப் போடப்படுகின்றது. அப்படி அறிவிப்புச் செய்வதிலேயே 7 ஆண்டுகள் கடந்துவிட்டன. இப்படியே போனால் பஞ்சாயத்து எப்படி இருக்கும் என்பதைக் கூட மக்கள் கற்பனைப் பண்ணிப் பார்க்கக்கூடிய சூழ்நிலை உருவாகக் கூடும். ஆகவே அதைத் தவிர்த்து விரைவிலே தேர்தலை நடத்த ஆவன செய்ய வேண்டும் என்றும் அதிலே உள்ள சிக்கல்களைத் தவிர்க்க ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள் கிறேன். புலி வருகின்றது, புலி வருகின்றது என்று சொல்வதைப் போல பஞ்சாயத்துத் தேர்தல் வருகின்றது, பஞ்சாயத்துத் தேர்தல் வருகின்றது—நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சொல்லவில்லை— நான் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களைச் சொல்லவில்லை—புலி வருகின்றது, புலி வருகின்றது என்று சொல்லி பொது மக்களை ஏமாற்றப் பார்க்கி றார்களோ என்பதுதான் என்னுடைய பகிரங்கமான குற்றச் சாட்டாகும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணன் திரு. கிட்டப்பா அவர்கள் இங்கே ஒரு காகிதத்திலே எழுதி வைத்துக்கொண்டு படிக்கிறார்கள்





என்று நினைக்கிறேன். ஆனாலும் கூட அவர் பேசியதாகத்தான் அவை அவைக்குறிப்பிலே ஏறும். புலி வருகின்றது, புலி வரு கின்றது என்று நான் சொல்லவில்லை. இங்கே எதிர்க்கட்சியின ரும், மற்றும் உள்ளவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க— தேர்தல் எப்போது வரும், தேர்தல் எப்போது வரும் என்று கேட்டவர்கள் நீங்கள்தான்— தேர்தலை நடத்துகிறோம் என்று நாங்கள் சொன்னால் உடனே ஸ்டே வாங்குகின்றவர்களும் எதிர்க் கட்சியினராகத்தான் இருக்கிறார்கள். ஆகவே தான் இப்போது பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த முடியாத நிலையில் நகராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக் கப்பட்டு பெண்களுக்கும், அரிசன, ஆதி திராவிட மக்களுக்கும் இட ஒதுக்கீடு செய்கின்ற சட்டமுன் வடிவைக் கொண்டுவந்து விட்டோம். எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமாகத் தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடத்த இருக்கிறோம் ஆகவே யாரும் புலி வருகின்றது, புலி வருகின்றது என்று சொல்கின்ற அளவுக்கோ அல்லது அப்படிச் சொல்லி அதனால் பயப்படுகின்ற அளவுக்கோ இந்த மன்றத்திலே இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு என். கிட்டப்பா :** மாற்றுத் தலைவர் அவர்களே, புலி வருகின்றது, புலி வருகின்றது என்று நான் சொன்னதை அவர் தான் சொன்னதாக நினைத்துக்கொண்டு இங்கே சொல் கிறார்கள். அப்படிச் சொல்லி இருந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல. இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் தேர் தலை நிறுத்தி விட்டது, அதற்கான ஆயத்தங்களைச் செய்து விட்டது என்று சொன்னார்கள். ஆனால் திராவிட முன் னேற்றக் கழகத்தின் மிகச் சாதாரணத் தொண்டன் என்ற முறையில் நான் அதனை மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மறுக்கிறேன்.

வாக்காளர் பட்டியல் தயாரிப்பதைப் பொறுத்த வரையில், வேலையில்லாத படித்த பட்டதாரி இளைஞர்கள் எத்தனையோ போர்கள் இருக்கிறார்கள், அவர்களிடத்திலே அந்தப் பணியினை ஒப்படைப்பது சாலச் சிறந்தது. இது வேலையில்லாத் திண் டாட்டத்தைக் கூட ஓரளவுக்குக் குறைக்கும். முழுக்க அல்ல.

ஏதோ நான் காகிதத்தில் எழுதி வைத்துப் படிக்கிறேன் என்று சொன்னார்கள். இங்கே பல பேர் காகிதத்தில் எழுதி வைத்துத் தான் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். நான் காகிதத்தில் எழுதி வைத்துக்கொண்டு பேச வேண்டிய அவல நிலையில் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக— குறி தவறிவிடக்கூடாது என்பதற் காகத்தான் நான் அந்தக் கருத்துக்களை எழுதி வைத்துக்கொண்டு பேசிக்கொண்டு இருக்கிறேன்.

ஜாபிதா. இப்படி ஆண்டுதோறும் வாக்காளர் ஜாபிதா தயாரித்துக் கொண்டிருப்பது இந்தியத் துணைக் கண்டத்திலே ஒரு வேலையாக இருக்கக்கூடிய நிலைமை சரிதானா என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். இதற்கு ஒரு [illegible] வைக்க வேண்டுமானால் இந்தியத் துணைக் கண்டத்து குடிமகன் குறிப்பாக தமிழ்நாடு என்று சொன்னால் 5 கோடி மக்கள் இருக்கிறார்கள். ஒரு மனிதனினுடைய பிறந்த தேதி, அவனுடைய போட்டோவை இணைத்து வரிசை எண் 1, 2 என்று கொடுத்து நாலே முக்கால் வரை வருகிறபோது அவர் எந்த நபர் என்று தெரிந்துவிடும். அந்த வகையிலே வரிசை எண் என்று கொடுத்து, பிறந்த தேதியுடன், அவருடைய போட்டோவை இணைத்துக் கொடுத்தால் அதையே நகராட்சி, ஊராட்சி எந்தத் தேர்தலாக இருந்தாலும் பயன்படுத்தக்கூடிய நிலைமை உருவாகும். 21 ஆண்டோ, 18 ஆண்டோ, எத்தனை ஆண்டு என்று நிர்ணயிக்கிறோமோ அந்த அளவுக்குத் தேர்தல் வருகிறபோது அதைக் கொண்டுவந்து காட்டுகிறபோது அதைப் பார்த்து அங்கே இருக்கிறவர்கள் பதிவு செய்து கொள்ளமுடியும்.

(முற்பகல் 11-50)

அப்படியிருந்தால் அதிலே போர்ஜரி என்பதற்கே இடமில்லை. அங்கே இருக்கிற வாக்காளர்களை இங்கே கொண்டு போய் விட்டார்கள் என்பதற்கு இடமே இல்லை. புதிய, புதிய வாக்காளர்களைச் சேர்த்துவிட்டார்கள் அல்லது அவர்கள் தவறானவர்கள், இவர்கள் மோசமானவர்கள்; அந்தக் கட்சி இப்படிச் செய்தது, இந்தக் கட்சி அப்படி செய்தது என்று சொல்வதற்கே இடமில்லாமல் போய் விடும். ஆகவே அந்த அடிப்படையில் வாக்காளர் ஜாபிதா தயாரிக்கிறபோது இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ்நாடு ஒரு முன் உதாரணமாக இருக்கிற வகையில் இப்படிச் செய்யலாம். ஒவ்வொரு ஆண்டும் தேர்தல் நேரத்தில் வருகிறபோது தங்களுடைய போட்டோவை மட்டும் அவ்வப்போது புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற நிலையிருந்தால் நலமாக இருக்கும். இதற்கு கோடிக்கணக்கிலே செலவழிக்க வேண்டியிராது. மிகவும் குறைந்த செலவிலே முடித்துவிட முடியும். அப்படி ஒவ்வொரு முறையும் வருகிறபோது ரெனியூவல் செய்த தேதி என்று மட்டும் தேர்தல் நேரத்தில் அதிலே முத்திரையிட்டு கொடுக்கலாம். அவர்கள் அப்போது உருவம் மாறியிருந்தால் வேறொரு போட்டோவை கூட ஒட்ட வழிவகை செய்யலாம். இது நல்லதொரு ஆலோசனையாக இருக்குமென்று நம்புகிறேன். இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இப்படிப்பட்ட வேலைகளுக்கு குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை அல்லது வேலையில்லாத பட்டதாரிகளுக்கு வேலை என்று அவர்களுக்கு வேலைகளை நாம் கொடுக்க





லாம். இதை பார்ட்-டைம் ஒர்க் என்கிற முறையிலே வேலை செய்து கொண்டிருக்கக்கூடியவர்களுக்கே மேலும் பணம் கிடைப்பதைப் போல இல்லாமல், இப்படி இருக்கக்கூடியவர்களைப் பயன்படுத்தி இதைச் செய்வோமானால் அவர்களுக்கு நிரந்தரமான நிவாரணமாக இருக்கும், வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும்; போர்ஜரி, தேர்தல் தில்லுமுல்லுகள் இல்லாமல் தவிர்த்து விட முடியும். வாக்காளர்களை மாற்றுகிறார்கள் என்ற குறைபாடு, வாக்குப் பதிவு போடக்கூடியவர்களின் அவல நிலை என்பவை வராமல் போகும் என்று நான் நம்புகிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களை இதனைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக சட்டமன்றம். சட்டமன்றம் என்று வருகிறபோது வரக்கூடிய பொதுமக்களுக்கு இருக்கக்கூடிய வசதிகள் போன்ற சூழ்நிலைகள் சரியாக இல்லை. சட்டமன்றத்தை வேறே ஒரு இடத்திலே அமைக்கவேண்டுமென்பது வேறு விஷயம். ஆனால் இருக்கிற வரையில் வரக்கூடிய பொதுமக்களுக்குத் தங்குவதற்கும் மற்றவற்றிற்கும் வசதிகளைச் செய்வதென்பது மிக முக்கியமானதாகும். ஏற்கெனவே இது குறித்து சொல்லப்பட்டு ஓரளவிற்கு செய்யப்பட்டிருக்கிறது. அதை மேலும் நல்ல முறையில் வசதிகளை வந்து போகக்கூடியவர்களுக்கு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உணவு விடுதி நிரந்தரமாக நல்லதாக இருக்கிற வகையில், ரொம்ப சிம்பிள் என்ற நிலையில் இருந்தால் கூட பரவாயில்லை. அங்கே இருக்கக்கூடியவர்கள் பட்டைசாதம் வாங்கி சாப்பிடுகிறார்கள், தயிர்சாதம் சாப்பிடுகிறார்கள் என்றாலும் பரவாயில்லை. எப்போதும் நியாயமாக, நாணயமாக, நாகரீகமாக, ஓரளவிற்கு நிர்வாகம் செம்மையாக இருக்கிற சூழ்நிலையில்அப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு அது கொடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் முதலியவர்கள் மறுவாழ்வு கொடுக்கவேண்டுமென்ற நிலையில் பலபேர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை நாம் நியமனம் செய்து, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக அவர்களுக்கு பொருள்களை கொடுத்து, அப்படிப்பட்ட சூழ்நிலையில் கொண்டுவருவது நல்லதாக இருக்கும். இருக்கிற நிலைமையில் அங்கேயிருக்கிற உணவு விடுதியை மாற்றியமைத்தால் நல்லதாக இருக்குமென்று கருதுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க அங்கே பூங்கா நல்லமுறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. விளையாட்டு அரங்கமும் நல்லமுறையில் இருக்கிறது. அதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். காடு மேடாக இருந்து வெளியிலே வந்தாலே பாம்பு கடிக்குமோ என்ற நிலை முன்பு இருந்தது. ஒரு நாள் அங்கே உட்கார்ந்திருந்த போது பூரான்

[1983 எப்ரல் 19

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் இங்கே கொண்டு வந்து இருக்கக்கூடிய மானிய கோரிக்கை எண். 7—மாநில சட்ட மன்றம், கோரிக்கை எண். 8—தேர்தல்கள், கோரிக்கை எண். 42-ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும், கோரிக்கை எண். 43—பல் வகை, கோரிக்கை எண். 57—பல்வகை மூலதனச் செலவு, கோரிக்கை எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் ஆகிய கோரிக்கைகள் மீது அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வின் சார்பாக என்னுடைய உணர்வுகளை இந்த மன்றத்திலே வைப்பதிலே நான் பெருமைப்படுகிறேன். முதலாவ தாக மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும். ஒரு இலாக்காவுக்கு ஒதுக்கக்கூடிய ஒருதொகை ஏதாவது ஒருடிபார்ட் மெண்டுக்கு தமிழ்நாடு அரசு பணம் ஒதுக்குகிறது என்று சொன்னால் அந்த டிபார்ட்மெண்டிலிருந்து ஆண்டுதோறும்இலாப நஷ்ட கணக்கு என்று வந்து இத்தனை பர்சன்டேஜ் இந்த அரசுக்கு மீண்டும் திருப்பித்தருகிறோம் 10 சதவீதம், 15 சதவீதம், 20 சத வீதம் ஆண்டுக்கு என்று இருக்க வேண்டும்.

சிங்கப்பூரை, மலேஷியாவை, ஜப்பானைப் பார்க்கிறபோது ஏதாவது ஒரு துறைக்கு 100 கோடி ரூபாய் ஆண்டுக்கு ஒதுக்கு கிறார்கள் என்று சொன்னால் அதனால் 30 கோடி ரூபாய் லாபம் பெற்று அரசாங்கத்திற்கு என்று போக்குவரத்துச் செலவுகள், அவர்களுடைய நடைமுறைச் செலவுகள், போனஸ் எல்லாம் போக அரசாங்கத்திற்கு என்று 15 சதவீதம், 20 சதவீதம் என்று கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கிற காரணத்தினால் எப் போதுமே அரசாங்கம் ஓவர் டிராப்ட் வாங்க வேண்டிய அவசியம் இல்லாமல் எந்தக் காரியத்திற்காக ஒதுக்குகிறார்களோ, எந்தத் துறைக்குச்செலவிடுகிறார்களோ அந்தத் துறையே நட்டக் கணக் குக் காட்டாமல் அது எந்த முறையில் மக்களுக்குத் தேவையோ அந்த முறையிலே சீர்திருத்தக்கூடிய சூழ்நிலை அமைந்து நல்ல ஒரு லாபத்தை ஈட்டக்கூடிய முறையில் சுய கட்டுப்பாட்டுடன் வளர்ச்சி பெறக்கூடிய வழிவகைகளைக் காணமுடிகிறது என்பது நாங்கள் வெளி நாடுகளுக்குச் சுற்றிப் பார்க்கச் சென்றபோது தெரிந்து கொண்ட ஒரு உண்மையாகும். உதாரணமாக மின் சாரம் என்று சொன்னால் நாம் பல கோடி ரூபாய் கொடுத்துக் கொண்டே போகிறோம், ஆனால் நட்டத்திலே இருக்கிறது. போக்குவரத்து என்று சொன்னால் எவ்வளவு பணம் இருந்தும் கூட மிகச் சிறப்பாக நடக்கிறது, இந்தியத் துணைக் கண்டத் திலே மிகச் சிறப்பாக நடக்கிறது என்று சொல்கிற அதே நேரத் திலே சில நேரங்களில் நட்டமும் வருகிறது என்ற வகையிலே நட்டத்தைத் தவிர்க்கக்கூடிய வகையில் அரசாங்கம் எவ்வளவு பணம் ஒதுக்குகிறதோ அதற்கேற்ப அதிலே லாபத்தைப் பெற்று அதனை ஈட்டிக் கொண்டு அரசுக்கு ஜெனரல் பண்ட் என்ற முறை யிலே தமிழ்நாடு அரசினுடைய பொது நிதிக்குக் கொடுக்கக்



1983 ஏப்ரல் 19] [டாக்டர் கே. சமரசம்]

கூடிய நிலைமை உருவாகுமானால் புத்தம்புதிய முறைகளில் ஓவ் வோர் ஆண்டும் அரசாங்கம்தொடர்ந்து நடப்பதற்கும் அத்தகைய சூழ்நிலையை உருவாக்குவதற்கும் வளர்ச்சி பெறக்கூடிய இந்திய துணைக் கண்டம் போன்ற இந்த ஜனநாயக நாடுகளுக்கு ஏது வாக இருக்கும். அப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வகை மூலதனச் செலவு என்று வருகிறபோது வேலை வாய்ப்பு அலுவலகம் என்பதை கூடுதலாக்க வேண்டும். அப்படிக் கூடுதலாக்க வேண்டும் என்று சொல்கிற அதே நேரத்திலே வேலை வாய்ப்புப் பெற்றவர்களுடைய விவரம் ஒவ்வொரு நாளும் ஒவ் வொரு ஆண்டும் அங்கே குறிக்கப்பெற வேண்டும். ஒவ்வொரு துறையிலேயும் அந்தத் துறைக்கான வேலை வாய்ப்பு அலுவலகம் இருப்பது நல்லது. அது ஒரு செக்ஷன். அண்ணா டிரான்ஸ் போர்ட் கார்ப்பரேஷன் இருக்கிறது என்று சொன்னால் வேலை வாய்ப்பு அதிலே ஒரு பகுதி, பல்லவன் என்று சொன்னால் அதிலே அது ஒரு பகுதி, மின்துறை என்று சொன்னால் அதிலே ஒரு பகுதி, இப்படி எந்த வேலைக்கு யார் மனுப் போடுகிறார்களோ அந்த டிபார்ட்மெண்டின் மூலமாகவே அங்கே இருக்கின்ற வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தால் பலவிதமான காலதாமதங்களைக் குறைப்பதற்கும், தரக்குறைவு இல்லாமல் செய்வதற்கும், ஊழல் இல்லாமல் தடுப் பதற்கும், அலைச்சல் இல்லாமல் செய்வதற்கும் ஏமாற்றத்தைத் தவிர்க்கக்கூடிய முறையிலேயும் அமையும். எந்த இலாகாவிலே அது இருக்கிறதோ அந்த இலாகாவே வேலை வாய்ப்பை ஏற்படுத் திக் கொடுக்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்தால் அது ஏமாற் றத்தைக் குறைக்கும். அது மட்டுமல்லாமல் ஒன்றியங்களாக இருந் தாலும் கூட தலைமை அலுவலகம் என்றாக இருக்க வேண்டும். விவசாயக் கூலி என்று சொல்கிறோம், வேட்டி, சேலை கொடுக் கிறோம். எல்லாப் பணிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்பட இந்த அலுவலகம் அமைவது சாலச்சிறந்ததாக இருக்கும் என்பது என்னுடைய திடமான அபிப்பிராயம் ஆகும். அதை அமைத்து அதன் மூலமாக அவசரப் பணியா, பகுதி நேரப் பணியா, பயிற்சிப் பணியா, எப்படி வழங்க வேண்டுமென்பதற்கு நேரடியான தொடர்பு,வேலையற்றவர்களுக்கும் நிர்வாகத்திற்கும் நேரிடையே ஏற்படும் பல்வேறு சிக்கல்களையும் தவிர்க்கமுடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும்.

அடுத்து, தேர்தல்கள் என்று வருகிறபோது ஊராட்சித் தேர்தல் என்று சொன்னால் அதற்கு ஒரு வாக்காளர் ஜாபிதா, நகராட்சி என்று சொன்னால் ஒரு வாக்காளர் ஜாபிதா, சட்ட மன்றம் என்று சொன்னால் வாக்காளர் ஜாபிதா, அதே போல் பாராளுமன்றம் என்று சொன்னால் அதற்கு ஒரு வாக்காளர்

குடித்ததும் உண்டு. அந்த நிலைமை போய் இப்போது நல்ல முறையில் இருக்கிறது. அதே நேரத்தில் விடுதியில் போவோர், வருவோர் மிகவும் அதிகமாக இருக்கிறது. எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் திருடி விட்டார்கள். நாய் வந்தது என்ற நிலைமை இருக்கிறது. அந்த விடுதியின் இரண்டு பக்கமும் கேட்டுகள் இருக்கின்றன. ஆனால் என்ன பிரயோஜனம்? கேட்-கீப்பர்ஸ் என்று யாரும் அங்கே கிடையாது டூரிஸ்டுகள் அதிகமாக அங்கே வந்துவிடுகிறார்கள். வேறு எங்கேயாவது போகிறவர்களைக் கூட சாப்பிடுவதற்காக அங்கே கொண்டு வந்து ஓட்டலில் சாப்பிடச் செய்கிறார்கள். அங்கே பொது மக்களுக்கும் உதவக்கூடிய வகையில் ஓட்டல்கள் அமைந்திருப்பதால்தான் பிரச்சினைகள் வருகின்றன. அதை மாற்றி எம்.எல்.ஏ, ஆஸ்டலுக்கென்று இருக்கக்கூடிய உணவுவிடுதியாக இருந்தால் பெருமளவிற்கு தவறுகள்த் நிகழாது. அங்கே யார் யாரோ வந்து பேசக்கூடிய சூழ்நிலைகள் இருப்பதால், அவர்கள், எம்.எல்.ஏ,க்கள் கூட வந்தவர்களா அல்லது ஓட்டலுக்குச் சாப்பிட வந்தவர்களா, அங்கே எதற்காக வந்தார்கள் என்று எண்ணக்கூடிய சந்தேகம் ஏற்படுகிறது. அவனோடு வந்தவனா இவன் அல்லது இவனோடு வந்தவனா அவன் என்ற முறையில் எல்லோரையும் உள்ளே விட்டு விடுகிறார்கள். கல்யாணத்தில் சாப்பிடப் போகிறபோது, பெண் வீட்டுக்காரனா, அல்லது மாப்பிள்ளை வீட்டுக்காரனா என்று தெரியாமல் தவிக்கிற மாதிரி நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலையில் தவறுகள், குற்றங்கள் நிகழ்வதற்கு அதுவே ஒரு காரணமாக அமைந்து விடுகிறது. ஆகவே இதில் ஒரு கட்டுப்பாடு மிகஅவசியமாகத் தேவைப்படுகிறது. வெளியிலேயிருக்கிற இரண்டு கேட்டுகளிலும் கேட்-கீப்பர்ஸ் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே ஒரு நூலகம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொலைபேசி டைரக்ட்டாக கொடுக்கவிருப்பதாக அறிகிறேன். அதைப்போல தபால் தந்தி இலாக்கா கூட முதல் மாடியிலேயே இருப்பது நலமாக இருக்கும். பஸ்ஸிற்கு போகிறோம், டிரெயினிற்கு போகிறோம் என்று சொன்னால் அவர்கள் அதற்காகப்பதிவு செய்து வைக்கவேண்டுமென்ற நிலைமை இருக்க வேண்டும். பல நேரங்களில் எங்களுடைய போன் வேலை செய்யாமல் நாங்கள் பதிவு செய்வதற்காக அங்கே சொல்ல முடியாமல், அங்கே போய் பஸ்ஸில் ஏறமுடியாமல் போகிற நிலைமைகள் இருக்கின்றன. இது மிகவும் சின்ன விஷயம். தயவு செய்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நாம் நிறைவேற்றுகிறோம் என்று சொன்னால் அது நீதிமன்றத்திலே பாதிக்கப்படுகிறது. அந்த நிலை இருக்கலாமா? ஒரு ஆளும் கட்சி அரசியல் கட்சி என்று சொன்னால் நாம் ஏதாவது பொது மக்களுக்கு வாக்குறுதி கொடுத்துவிட்டுத் தான் வருகிறோம்.



வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு நாம் இங்கே கொண்டு வருகின்ற சட்டம், நீதிமன்றத்தாலே தகர்க்கப்படுகிறது அல்லது எதிர்க்கப்படுகிறது அல்லது முறியடிக்கப்படுகிறது என்று சொன்னால், மீண்டும் அரசியல் கட்சி வளர முடியுமா? மக்களுக்குச் சேவை செய்வதற்குத்தான் நாம் வந்திருக்கிறோம். மக்களாட்சியை ஒத்துக் கொண்டுதான் நாம் அமர்ந்திருக்கிறோம், இந்தியாவிலே ஜனநாயகம் இருக்கிறது என்று சொன்னால், மக்கள் மன்றத்தினுடைய குரலை, சட்டமன்றத்தில் நிறைவேற்றி, அந்தச் சட்டமன்றத்திற்கு முரணாக நடப்பவர்கள் மீது விசாரித்து, நடவடிக்கை எடுக்கத்தான் நீதிமன்றமே தவிர, சட்டமன்றத்தின் செயல்களையே நிராகரிப்பது, முறியடிப்பது, எதிர்ப்பது, புறக்கணிப்பது என்றால், மக்களாட்சித்தத்துவத்தை வளர்க்கிறோமா, வதைக்கிறோமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையிலேஇன்றுஇருக்கக்கூடிய சூழ்நிலையில் சுதந்திரத்துற்காகப் பாடுபட்டது மக்களா அல்லது நீதிமன்றமா, அல்லது மக்கள் மன்றமா என்பதைக் கூட எண்ணிப் பார்க்க வேண்டும். மக்களுடைய கருத்துக்களை நாம் கொண்டு வருகின்ற பொழுது அதை எந்த அளவுக்கு நாம் அமுலாக்க முடியுமோ, அதை அமுலாக்கத் தவறினால் அரசியல் கட்சிகளே பலவீனப்படும். அது காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, தி.மு.க. வாக இருந்தாலும் சரி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் சர்க்கார் போட்ட எத்தனையோ சட்டங்கள் கோர்ட்டுகளுக்குப் போய் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. தி.மு.க. அரசு போட்ட சட்டம்—200 ஆண்டுகளாக இருந்த குதிரைப்பந்தயம் ஒழிக்கப்படும் என்று இங்கே சொல்லிவிட்டு, அதற்காகச் சிலை வைத்தார்கள். அச் சட்டம் நீதிமன்றத்திற்குப் போய் நிராகரிக்கப்பட்டது. இன்றையதினம் அது அடையாளச் சின்னமா? அவமானச் சின்னமா என்று பொதுமக்கள் கேள்வி கேட்கிறார்கள். மால்கோ தேசிய மயமாக்கப்படும் என்று சொல்லப்பட்டது. நீதிமன்றத்திலே அது முறியடிக்கப்பட்டது. அதேபோல், பினாமி நிலம் பற்றிய சட்டம், இப்படி எத்தனையோ பல்வேறு பிரச்சினைகளாக இருந்தாலும், சட்டமன்றத்திலே வரக்கூடிய தீர்மானம் நீதிமன்றத்திலே தகர்க்கப்பட்டால், சட்டமன்றத்தினுடைய நிலையே தகர்க்கப்படுகிறது, ஜனநாயகம் வீழ்ச்சி அடைகிறது என்பதை எண்ணிப் பார்த்து, நிச்சயமாக, இதற்கு நல்லதொரு முடிவு காணக் கூடிய வகையில் .......... (மணியடிக்கப்பெற்றது).

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களாலே கொண்டு வரப்பட்டிருக்கிற மாநிலச் சட்டமன்றம், தேர்தல்கள், ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும், பல்வகை, பல்வகை மூலதனச் செலவு, மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் ஆகிய மானியக் கோரிக்கைகள்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1983 ஏப்ரல் 19

மீது, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய ஒருசில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு ஒரு புதிய கட்டிடம் தேவை; எல்லா வசதிகளும் கூடிய ஒரு விசாலமான கட்டிடம் தேவையென்ற கருத்து இன்றைக்கு மட்டுமல்ல, பல ஆண்டு காலமாகவே சொல்லப்பட்டு வருகிறது. நான் நம்முடைய சட்டமன்றப் பேரவையினுடைய நிகழ்ச்சிக் குறிப்புகள் பழையவற்றைப் பார்க்கிறேன். 1975ஆம் ஆண்டு இதே மாமன்றத்திலே இதே மாண்புமிக்க முன்னவர் அவர்கள், இதே பிரச்சினையைப் பற்றிச் சொல்லியிருப்பதை நான் படித்துப் பார்க்கின்றேன். இப்பொழுது இருக்கிற இந்தச் சட்டமன்றப் பேரவைக் கட்டிடம் 100 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட கட்டிடம் என்று அவர்கள் ஒத்துக் கொண்டு விரைவாக ஒரு கட்டிடம், எல்லா வசதிகளோடு கட்டப்பட வேண்டும் என்ற நியாயத்தை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு 7, 8 ஆண்டுகளுக்கு மேலானாலும்கூட, அது, சம்பந்தமாக எந்தவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லையென்றுதான் நாங்கள் நினைக்கவேண்டியிருக்கிறது. கடந்த ஆண்டுகூட அவர்கள் சொல்கின்ற நேரத்திலே ஒரு புதிய கட்டிடம் கட்டுவதற்கான முயற்சியிலே நாங்கள் இரண்டு மூன்று இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அந்த இடங்களில் கட்டுவோம் என்ற செய்தியினைச் சொன்னார்கள். ஆனால், இந்தப் பிரச்சினையை எங்கே ஆரம்பித்தோமோ அதே நிலையில்தான் இன்னும் இருப்பதாக நான் அறிகிறேன். ஆகையினாலே அவர்கள் விரைவான ஒரு முயற்சியினை எடுத்துக்கொள்வது மெத்தப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். பல்வேறு குழுக்களின் சார்பிலே பல்வேறு மாநிலங்களுக்குச் செல்கின்ற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு மாநிலங்களில் புதிதாகக் கட்டப்படுகிற கட்டிடங்களைப் பார்க்கின்றபொழுது, இங்கே அது மாதிரியான ஒரு கட்டிடம் தேவை என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் விரைவாக இதில் ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அது மிக அவசியமும் கூட.

சட்டசபையைப் பொறுத்தவரையிலே சட்டசபைக்கென்று ஒரு தனி அமைச்சர் தேவை. நாடாளுமன்றத்திலே இன்றைக்கு இது மாதிரியான ஒரு அமைச்சர் இருக்கிறார். ஆகவே, இங்கே சட்டமன்றத்தைப் பொறுத்த அளவிலே அரசாங்கத் தரப்பிலே கொறடா மட்டுமே இருக்கிறார். சட்டமன்ற அலுவலகங்களைக் கவனிக்க ஒரு அமைச்சர் முழுமையாக இருப்பாரானால், இன்னும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு, உறுப்பினர்கள் மத்தியிலே ஒரு நல்ல உறவு,



1983 ஏப்ரல் 19] [திரு. என். எஸ். வி. சித்தன்]

ஏற்படுவதற்கு, இன்னும் நல்லமுறையிலே இந்தச் சட்டமன்றம்
செயல்படுவதற்குத் துணையாக இருக்கும். அரசாங்கம் அதைப்
பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றக் கட்டிடத்தைப் பொறுத்த அளவிலே, இந்த
ஆண்டு இந்தக் கூட்டத் தொடர் நீண்ட நாளைக்கு நடந்து
கொண்டிருக்கிறது. ஆனாலும்கூட, சட்டமன்றக் கூட்டத்
தொடர், ஆண்டிலே 3 அல்லது 4 முறை கூட்டப்பட வேண்டு
மென்ற கருத்து பல்வேறு சமயங்களில் வலியுறுத்தப்பட்டு
வருகிறது. பொதுவாக, நீண்ட நாட்களுக்கு ஒரு கூட்டத்தை
நடத்துவதை விட்டுவிட்டு, அதை இரண்டு அல்லது 3 பிரிவாக
அரசாங்கம் கூட்டுமானால், உறுப்பினர்களின் தொகுதியிலே
இருக்கிற பல்வேறு பணிகளைப் பார்த்துக் கொள்வதோடு சட்ட
மன்றத்திற்கு வருவது பொருத்தமாக இருக்கும். இப்பொழுது
ஏறத்தாழ 1½ மாதத்திற்கு மேலாகச் சட்டமன்றக் கூட்டம்
நடக்கின்ற காரணத்தினாலேதான் உறுப்பினர்கள் முழுமையாக
அதிலே கலந்துகொள்ள இயலவில்லையென்று நான் கருதுகிறேன்
ஆகவே, சட்டமன்றக் கூட்டத் தொடரை 3 அல்லது 4 முறை
களுக்கு மேலாக அரசாங்கம் கூட்ட வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

இதே சட்டமன்றத்துலே பல்வேறு முறைகளில் நாங்கள்
சொல்லியிருக்கிறோம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்ட
மன்றத்திற்கு வரவேண்டும். இங்கே கோட்டைக்கு வந்தால்கூட
சட்டமன்றப் பேரவைக் கூட்டத்திற்கு வந்து அவர்கள் கலந்து
கொள்வார்களானால், தொகுதியிலே இருக்கின்ற பல்வேறு பிரச்
சினைகளைப் பற்றி உறுப்பினர்கள் சொல்கின்ற நேரத்திலே,
அவைகளைக் குறிப்பெடுத்துக் கொண்டு அரசாங்கத்தின்
சார்பிலே அவர்கள் பதில் சொல்வது பொருத்தமாக
இருக்கும்.

(நண்பகல் 12-00)

ஆகவே, முதலமைச்சரவர்கள் இங்கே சட்டமன்றக் கூட்டத்
தொடர் நடக்கின்ற காலத்தில் தினமும் வர வேண்டுமென்ற
கோரிக்கையை நான் சொல்ல விரும்புகிறேன்.

முடியுமானால், இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடரை
சென்னையிலே மட்டும் நடத்துவதைவிட, தென்மாவட்டங்
களிலேயும், குறிப்பாக மதுரையிலேயோ அல்லது வேறு ஊர்
களிலேயோ ஆண்டுக்கு ஒரு முறை நடத்துவதற்கு அரசாங்கம்
முயற்சித்தால் அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் சட்டமன்ற
நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்ளவும் அதன் மூலம்
மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கவும் துணையாக இருக்கும்.
எனவே. அதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1983 ஏப்ரல் 19

நம்முடைய சட்டமன்றத்தில் விவாதங்களும், வாதங்களும்
நடைபெறுகின்றன. ஆனால் மாண்புமிகு பேரவைத் தலைவர
வர்களோ அல்லது பேரவைத் துணைத் தலைவரவர்களோ
பல்வேறு காலகட்டங்களில் நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து
நீக்குகிறேன் என்று அறிவிப்பது ஒரு பயங்கரமான ஆயுதமாகவே
இருப்பதாகவே நான் கருதுகிறேன். தேவை இருக்கிறதோ
இல்லையோ, பாராளுமன்ற சம்பிரதாயத்தை ஒட்டியிருக்கிறதோ
இல்லையோ, மொத்தமாக எக்ஸ்பஞ்ச் செய்கிறேன் என்று
சொல்வது ஜனநாயகத்திற்கு, பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கு
முரணானது என்பதை வேதனையோடு கூற விரும்புகிறேன்.
ஒரு சில வார்த்தைகள் அல்லது ஒரு சில வாக்கியங்கள்
புறம்பாக இருந்தால் அதற்காக மொத்தமாக எடுப்பது என்பது
நியாயமானதல்ல. இதன் காரணமாகப் பல்வேறு குறை
களையும், தொகுதிகளிலே உள்ள நிலைமைகளைப் பற்றி
அங்கத்தினர்களின் மனத்தில் இருக்கக் கூடிய குறைகளையும்,
அரசாங்கம் செய்யக்கூடிய பல்வேறு குறைகளையும் ஊழல்
களையும் பற்றிச் சொல்வதற்கு வாய்ப்பில்லாமல் போகிறது.
எனவே, நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன் என்று
சொல்லுகின்ற அந்த ஆயுதத்தைத் தயவுசெய்து மிகக் குறை
வாக, தேவயான அளவிற்கு மட்டும் கொஞ்சமாகப் பயன்
படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு சபாநாயகரவர்கள் மன்றத்தை நடத்திச் செல்
கிறார்கள். அவர்கள் மன்றத்தை நடத்திச் செல்வது குறித்து
யாருக்கும் அதிகமான கருத்து வேறுபாடு இல்லை. மெத்த
சாமர்த்தியமாக அவர்கள் இந்த அவையை நடத்திச் செல்
கிறார்கள். அவர்களுக்கே பாதுகாப்பு அளிக்க வேண்டுமோ
என்கின்ற அளவிற்கு அண்மையிலே நடந்த நிகழ்ச்சிகளுக்குப்
பிறகு ஐயம் ஏற்பட்டிருக்கிறது. சபாநாயகராக இருந்தாலும்
சரி, உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, இந்த மன்றத்தில்
உறுப்பினர்களாக இருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் நல்ல
தொரு பாதுகாப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இந்த மன்றத்தைப் பொறுத்த வரையில், உறுப்பினர்கள்
இந்த மன்றம் நடந்து கொண்டிருக்கும் பொழுது ஓய்வாக
அமர்ந்து பேசி ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம்
செய்து கொள்வதற்கு இப்பொழுது இருக்கின்ற இடம் போது
மானதாக இல்லை என்று நான் கருதுகிறேன், மன்றத்தின்
இடதுபுறத்தில் ஒரு தோட்டம் இருக்கிறது. அதில் கொஞ்சம்
வசதிகளைச் செய்து, பதுப்பித்துக் கொடுத்து நாடாளுமன்றத்
தில் சென்ட்ரல் ஹால் இருப்பதைப் போல அமைத்துக் கொடுத்
தால் மேலவை உறுப்பினர்களும், சட்டப் பேரவை உறுப்
பினர்களும் ஒன்றாகக் கலந்து பேசுவதற்கு உதவியாக
இருக்கும் என்பதை அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 19] [திரு. என். எஸ். வி. சித்தன்]

உறுப்பினர்கள்
இப்பொழுது இருக்கின்ற வசதிப்படி,
போகின்ற
தேநீர் அருந்தப் போனாலும்கூட ஓரத்திலே,
இருக்கின்ற
வழியிலே, இடைஞ்சலாக இருக்கின்ற இடத்திலே
கொடுக்க
காரணத்தினாலே அரசாங்கம் இதைச்செய்து
அரசாங்கத்திற்கு
வேண்டும். இதற்காக அதிகப் பணம்
நிச்சயமாகச் செலவாகாது என்று நான் கருதுகிறேன்.

பேசுகின்ற
இரண்டாண்டுகளுக்கு முன்னால்கூட நான்
பொழுது சொன்னேன். பெட்டிஷன் கமிட்டி என்று சட்ட
சபை சார்பில் நாம் நியமனம் செய்ய வேண்டும். அதன்
மூலமாகப் பொதுமக்களுடைய பல்வேறு குறைகளைப் பெற்று,
அந்தப் பெட்டிஷன் கமிட்டியின் மூலம் கொடுத்தால் அந்தக்
குழு அதனை ஏற்று அரசாங்கத்திற்குக் கொடுத்து, அதன்
மூலமாகக் குறைகளைத் தீர்ப்பதற்கான முறைகளில் பல்வேறு
நாடுகளில், பல்வேறு சட்டமன்றப் பேரவைகளில் இருப்பதாக
நான் அறிகிறேன். எனவே, அதையும் அரசாங்கம் கொண்டு
வருவது பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களின் ஊதியம் பற்றி
ஒரு விவரத்தை நான் சொல்ல விரும்புகிறேன். 1946 ஆம்
ஆண்டிலேயிருந்து 1952 ஆம் ஆண்டு வரையில் சட்ட
மன்றப் பேரவை உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு
முதலில் ஊதியம் வழங்கப்படவில்லை. பின்னாலே நாம்
சொன்னோம்; அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதற்கான ஒரு
உத்தரவை வழங்கியது. ஆனால் அவர்களுக்கு 1982 ஆம்
ஆண்டிலிருந்துதான் அந்த ஓய்வூதியம் வழங்குவதற்குத்
தற்பொழுது நடைமுறை இருக்கிறது என்று நான் கருது
கிறேன். ஆனால் முன்னால் இருந்த உறுப்பினர்களுக்கு,
1952, 1957, 1962, 1967ஆம் ஆண்டுகளிலே இருந்தவர்
களுக்கெல்லாம் 1980 ஆம் ஆண்டிலிருந்து ஓய்வூதியம் கொடுக்
கின்ற நேரத்திலே இந்த 1946 ஆம் ஆண்டிலேயிருந்து 1952
ஆம் ஆண்டு வரையில் இருந்த சட்டமன்றப் பேரவை
உறுப்பினர்களுக்கு அந்த இரண்டு ஆண்டுகளுக்கும்
சேர்த்துக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும் என்று நான்
கருதுகிறேன். மிஞ்சி மிஞ்சிப் போனால் 40 அல்லது 45
பேர்கள்தான் இருப்பார்கள். அவர்கள் அருகி வருகின்ற
பரம்பரையாக இருக்கிறார்களே தவிர, நிச்சயமாகப் பெருகி
வருகின்ற பரம்பரையாக இருக்காது. ஆகவே, 1946—
1952 ஆம் ஆண்டிலேயிருந்தவர்களின் எண்ணிக்கை குறைவாகத்
தான் இருக்கும். அரசாங்கத்திற்கு மிஞ்சி மிஞ்சிப்
போனால் இரண்டு அல்லது இரண்டரை இலட்சம் ரூபாய்
தான் இழப்பு ஆகும் என்று நான் அறிகிறேன். ஆகவே,
இது நியாயமான கோரிக்கையாக இருக்கிறது. ஏனைய முன்
னாள் உறுப்பினர்களுக்கு 1980 ஆம் ஆண்டிலேயிருந்து

அதுபோல இன்றைக்கு தொலை பேசி என்ற வசதி, தொலை பேசியாக இல்லாமல், தொல்லை பேசியாகத்தான் இருந்துக் கொண்டிருக்கிறது. நான் கேள்விப்படுகிறேன். ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனியான எண் கொடுத்து, ஒரு தொலை பேசியைக் கொடுப்பதாக என்று. அது இந்த வாரத்திற்குள்ளே வரும் என்று சொல்கிறார்கள். விரைந்து வர வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றப் பிரிவிலே பணியாற்றுகின்ற வாச் அண்டு வார்டு இங்கு காலையிலே 7–00, 7–30 மணியிலே இருந்து, 1–30 அல்லது 2–00 மணி, வரையிருந்து, இன்னும் மாலையிலே கூட நாம் நிகழ்ச்சிகளை வைத்துக் கொள்கிறோம். அப்படி வைத்துக் கொள்கிற நேரத்திலே அவர்களுக்கு தினப் படியாக ரூ. 4 கொடுப்பதாக நான் அறிகிறேன். இது மிகவும் குறைவு. இந்த அரசாங்கம் இதை ரூ. 2லிருந்து ரூ. 4 ஆக உயர்த்தியிருக்கிறது என்று நான் கருதுகிறேன். இருந்தாலும் கூட, இன்றைக்கு இருக்கின்ற விலைவாசியை கருதிப் பார்க்கின்ற நேரத்துலே, ரூ. 4 என்பது மிகக் குறைவு. அதைக் குறைந்த பட்சம் ரூ. 10 ஆக உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய சட்டமன்றப் பேரவையினுடைய நடவடிக்கைகளை எடுத்துச் சொல்கிற பத்திரிகையாளர்களுக்கு பாஸ் வழங்குகின்ற நேரத்திலே, அது மாநிலம் முழுவதும் அரசாங்கத்தினாலே அங்கீகரிக்கப்பட்ட நிருபர்களுக்கு மாநிலம் முழுவதும் இருக்கிற நம்முடைய பேருந்திலே இலவசமாகப் பயணம் செய்வதற்கு ஆன முறைகளை அவர்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பத்திரிகையாளர்களுக்கு இந்த மன்றத்தின் மூலமாக நான் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். சட்டமன்ற நிகழ்ச்சிகள் காலையிலே 9–00 மணியிலேயிருந்து, பிற்பகல் 1–30 மணி அல்லது 2–00 மணி வரை நடந்தாலும் கூட, ஏதோ ஒரு நேரத்திலே சற்று சூடாக, அல்லது சற்று வாதங்கள் வந்தாலும் கூட, அதைத் தயவு செய்து பெரிது படுத்தி வெளியிட வேண்டாம்—சட்டமன்றத்திலே வரலாறு காணாத அமளி, சண்டை, மோதல், சச்சரவு என்று போடுகின்ற காரணத்தினாலே, வெளியில் இருக்கிறவர்கள் என்ன கருதுகிறார்கள் என்றால், சட்டசபையிலே உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள் இதைத்தான் செய்வார்கள் போலிருக்கிறது. ஒரு நல்ல காரியத்தைச் செய்ய மாட்டார்களோ என்ற எண்ணம் மக்கள் மனத்திலே ஏற்பட்டிருக்கிற காரணத்தினாலே—என்னைக் கூட கேட்டிருக்கிறார்கள். என்ன இந்த சட்டசபையில் நீங்கள் உருப்படியாக வேலை பார்க்கிறீர்களா என்று கூட கேட்கிறார்கள். ஆகையினாலே இந்த 10, 15 நிமிடத்திற்கு வருகின்ற செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேவண்டாமென்று நான் கேட்டுக் கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.



அதைப் போலவே சட்டமன்றப் பேரவையிலே பணியாற்றுகின்ற தற்காலிக ஊழியர்களை 10, 12 ஆண்டுகளாக தற்காலிகப் பட்டியலிலே இருக்க வைத்துக் கொண்டிருக்கிறோம். இது முறையாகுமா? நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கூட இங்கே இருக்கிறார்கள். ஆகவே அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று அவர்கள் கேட்பது ஒரு நியாயமான கோரிக்கை. எனவே அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய சட்டமன்றத் துறையிலே சட்டமன்றம் கூடுகின்ற நாட்களிலே, தற்காலிகமாக ஒட்டு மொத்த பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் இளநிலை உதவியாளர்களாகவும், தட்டச்சர்களாகவும், கடைநிலை ஊழியர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள். தட்டச்சர்களுக்கு சிறப்பு ஊதியம் வழங்குவதிலும் அரசாங்கம் முனைந்து செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய கள்ளக் குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சிவராமன் அவர்கள் சொன்னார்கள். அவருடைய ஊரிலிருந்து சென்னைக்கு வருவதாயிருந்த திருவள்ளுவர் நகரப் பேருந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. கள்ளக்குறிச்சியைப் பொறுத்த வரையில், இரயில், வசதி இல்லாத காரணத்தாலே, சட்டமன்றத்திற்கு வருவதற்கு அது இடைஞ்சலாக இருக்கிறது. பஸ்கள் அங்கே பல நேரங்களில் நிறுத்துவதில்லை. ஆகவே நாங்கள் மிகவும் கஷ்டப்படுகிறோம். அவர்களுக்கு தனிப் பேருந்து, ஏற்கனவே இருந்த 618ஏ என்ற திருவள்ளுவர்ப் போக்குவரத்து கழகப் பேருந்து வந்து கொண்டிருந்தது.

(பிற்பகல் 12–10)

அதைத் தொடர்ந்து விட வேண்டும் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் நமக்குக் கொடுத்திருக்கின்ற இந்த நியாயமான கோரிக்கைகளை ஏற்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்திலே நாங்கள் சொல்லியிருக்கின்ற அத்தனை நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு பதில் சொல்வார்கள் என்று அமைகிறேன், நன்றி, வணக்கம்.

திரு கோவைத்தம்பி: மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற மாநிலச் சட்டமன்றம், தேர்தல்கள், என்ற தலைப்பில் என்னுடைய ஒரு சிலக் கருத்துக்களை இணைத்துக் கொள்ளுமாறு அன்போடு வேண்டுகிறேன். இந்த மானியத்தின் மீது நான் பேசும் போது இந்தியாவில் இருக்கின்ற அரசியல் சாசனத்தில் உள்ள 356 என்ற அந்த பிரிவு, சட்டமன்றம் கலைப்பு என்ற சட்டத்தை தூக்கியெறிய வேண்டும். மன்னிக்க வேண்டும். தூக்கி எறிந்தால் கூட பிறகு எங்கேயாவது ஒட்டிக் கொள்ளும். அதை எரித்து விடுவதற்கு எல்லோரும் முயற்சி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை, இந்தியாவில் முதலிலே தமிழ் நாட்டில் நாம் உருவாக்க வேண்டும் என்று பணிவோடு விரும்பி

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1983 ஏப்ரல்

கொடுத்து இவர்களுக்கு 1982 ஆம் ஆண்டிலேயிருந்து கொடுப்பது மாற்றாந்தாய் மனப்பான்மை ஆகாதா என்று எண்ணத் தோன்றுவதற்கு இடம் இருக்கின்ற காரணத்தினாலே அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மெம்பர்ஸ் சர்வீஸ் பிராஞ்ச் என்று, சட்டமன்றப் பேரவையினுடைய உறுப்பினர்களின் வசதிக்காக ஒரு பிராஞ்சை, குழுவை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சட்டப் பேரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வருகின்ற உறுப்பினர்களுக்குப் பல்வேறு வசதிகள் இருக்கின்ற காரணத்தினால் அந்த ஒரு பிராஞ்சை ஏற்படுத்தி, பெரிய அதிகாரி அதன் பொறுப்பில் இருந்தால் அவர்களின் தேவைகளைக் கவனித்துக் கொள்வதற்குப் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

நம்முடைய மன்றத்தின் சார்பிலே, பேரவையின் சார்பிலே செலக்ட் கமிட்டிகள் பொறுக்குக் குழுக்கள் போடப்பட்டிருக்கின்றன. ஏழு அல்லது எட்டு இருக்கும் என்று நான் கருதுகிறேன். அல்லது குறைவாக இருந்தாலும்கூட, அந்தப் பொறுக்குக் குழுவின் பணி அவ்வளவு முனைப்பாக இருக்கிறதா என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்படுகிறது. பலமாதங்களாக நமக்கு அது சம்மந்தமாக முழுமையான அறிக்கை கிடைக்கவில்லை. ஒன்றிரண்டு குழுக்களினுடைய அறிக்கைகள் மட்டுமே நமக்கு கிடைத்திருக்கிறது. பல்வேறு பொறுக்குக் குழுக்களில்கூட அதில் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்கள் கூட வருவதில்லை என்றுகூட நான் கேள்விப் படுகிறேன்.

அது மாதிரியான ஒரு மெத்தனம் இருக்கக்கூடாது. பொறுக்கு குழு அதனுடைய பணியை விரைந்து செயல் படுத்தவேண்டும். ஏனென்றால் மக்களுடைய வரிப்பணங்கள் அதிலே பல ஆயிரக் கணக்கான பணங்கள், பல இலட்சக்கணக்கான பணங்களை ஈடுபடுத்துகிற காரணத்தால், அதிலே கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு கூட்டத் தொடர் ஆரம்பிக்கிறபோது, அது முடிகிற நேரத்திலே எந்தப் பொறுக்குக் குழுவினுடைய பணி எந்த அளவிற்கு இருக்கிறது என்ற அறிக்கை இந்த சபைக்கு வர வேண்டும். 1, 2, 3 ஆண்டுக் காலம் என்று கூறுகின்ற நேரத்தில், பொறுக்குக் குழுவினுடைய பணி எந்த அளவிற்கு இருக்கிறது என்ற அறிக்கையினை இந்த மன்றத்தில் கொடுப்பார்களே யானால், பொறுக்குக் குழுவினுடைய பணிகளை நாம் தெரிந்துக்



1983 ஏப்ரல் 19] [திரு. என். எஸ். வி. சித்தன்]

கொள்வதற்கு எளிதாக இருக்கும். நம்முடைய, செலக்ட்
கமிட்டியைப் பொறுத்தவரையில் 4 குழுக்களும், ஜாயின்ட்
செலக்ட் கமிட்டியைப் பொறுத்தவரையில் 4 குழுக்களும்,
ஆக இந்த 8 குழுக்களுடைய அறிக்கை இந்த சபைக்கு
வர வேண்டியிருக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்த குழுக்
களினுடைய பணிகளை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று
இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து பொதுவாகவே சட்டமன்ற உறுப்பினர்கள்'
வசதி . செய்து கொடுங்கள் என்று கேட்பது பொருந்
தாது, முறையாக இருக்காது என்று நான் கருதுகிறேன். ஏனென்
றால், நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், பல
கோடிக் கணக்கான மக்கள் இன்னும் சாதாரண நிலையில்,
கஷ்டப்படுகின்ற நிலையிலே இருக்கின்ற போது, சட்டமன்ற
உறுப்பினர்களுக்கு இந்த வசதியைச் செய்து கொடுங்கள் என்று
சொல்வது பொருத்தமாக இருக்காது என்ற எண்ணம் எனக்கு
இருந்தாலும் கூட, சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக்
கொண்டிருக்கிற அந்தப் பணியினை இன்னும் நல்ல முறையிலே
செய்வதற்காக தற்போதுள்ள முறையில் 7 நாட்களுக்குச் சட்ட
மன்றக் கூட்டத் தொடருக்கு வருவாரேயானால், ஒரு முறை
தொகுதிக்கு சென்று வரலாம் என்ற ஒரு ஏற்பாடு இருக்கிறது.
இதை 6 நாட்களாகக் குறைப்போமேயானால், ஒவ்வொரு
விடுமுறை காலத்திலும் தொகுதிக்குச் சென்று, அங்கு நடைபெறு
கிற விழாவில் கலந்துக் கொள்வதற்கு எளிதாக இருக்கும். ஆகவே
6 நாட்கள் சட்டமன்ற கூட்டத் தொடருக்கு வந்தால் ஒரு
முறை தொகுதிக்கு போய் வரலாம் என்கிற ஏற்பாட்டினை
அரசாங்கம் செய்வது பொருத்தமாக இருக்குமென்று நான்
கருதுகிறேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் விடுதியைப் பொறுத்த
அளவிலே இதற்கு முன்னால் பல்வேறு முறை சொல்லியிருக்
கிறோம். இப்போதும் சொல்கிறோம். வழங்கப்படுகின்ற உணவு
தரமாக இல்லை. ஆளும் கட்சியிலிருந்து பேசிய டாக்டர் சமரசம்
கொஞ்சம் நாசுக்காக சொன்னார்கள். ஆக நாம் கொடுக்கின்ற
பணத்திற்கு அந்த உணவு உரியதாக இல்லை. தரமானதாகவும்
இல்லை. பல்வேறு முறையிலே சொல்லியிருக்கிறோம். சட்ட
மன்ற உறுப்பினர் மட்டும் அங்கே உணவு அருந்துவது இல்லை.
அவர்களைப் பார்க்க வருகின்றவர்கள் கூட உணவு அருந்துகின்ற
காரணத்தினாலே—டில்லியிலே நாடாளுமன்றத்தைத்தான் நான்
மறுபடியும் சொல்ல வேண்டியிருக்கிறது. அங்கே நாடாளு
மன்றத்தில் ரயில் கேண்டின் என்று சொல்லி, ஒரு அற்புதமான
முறையிலே நடத்தி வருகிறார்கள். இந்த சட்டமன்ற உறுப்பினர்
கள் விடுதியில் இருக்கின்ற காண்டினையும் நல்ல முறையிலே
நடத்துகின்ற வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இரண்டாவதாக பல்வேறு உறுப்பினர்கள் எந்தக் கருத்துக்களைச் சொன்னாலும், அது தங்களுடைய கருத்துக்களாகவே, இந்த பாணியத்தின் மீது அமையும் என்ற காரணத்தால் பொதுவான கருத்துக்கள் என்ற அடிப்படையில் இந்த 356ஆவது பிரிவுக்கு ஒரு முடிவு கட்டுவதற்கு தமிழகத்தைப் பொறுத்த அளவிற்கு அனைத்துக் கட்சிகளும், ஒத்துழைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி சினிமாக்களில் காட்டுகின்ற காட்சிகளைப் பற்றி பலமுறை இந்த மாமன்றத்தில் நான்கூட சம்பந்தப்பட்ட துறை அமைச்சரிடமும் மாண்புமிகு தலைவரிடமும் முறையிட்டும்கூட இவைகள் எல்லாம் கண்டிக்கவேண்டிய விதத்தில் இந்தச் சட்டமன்றத் தலைவர் மூலமாக நாட்டுக்குத் தெரிவிக்காத காரணத்தால் மிகவும் நலிந்துபோன நிலையில் நையாண்டிச் செய்கின்ற விதத்தில் இன்று திரைப்படங்கள் மூலமாக எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும், அது ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற நிலையில்லாமல், எதிர் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற நிலை இல்லாமல், பல் வேறுதரப்பட்ட சினிமாக்களில் சட்டமன்ற உறுப்பினர்களைக் கேவலப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையிலிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே இந்த மாமன்றத்திற்குப் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி கொள்கையிலே கருத்துக்களை சொல்வதிலே திரைப்படங்கள் மூலமாக இது மக்கள் மத்தியிலே பதியக்கூடிய விதத்திலே நாகரீகமாகவும், நயமாகவும் சொல்லி வந்தார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் கூட அல்லது டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கூட சினிமாவுக்கு வசனம் எழுதும்போதும்கூட, அல்லது நடிக்கும்போதும் கூட கருத்துக்களைச் சொல்லும்போது மிகவும் மோசமாக அல்லது சட்டமன்ற உறுப்பினர்களைக் குறிப்பிட்டுக் காட்டி கருத்துக்களைச் சொல்லவில்லை என்பதை நாம் நன்கு அறிவோம். அது நம்நாடு சினிமாவாக இருந்தாலும், அல்லது கலைஞர் அவர்கள் எழுதிய மந்திரி குமாரி என்ற சினிமாவாக இருந்தாலும், எதுவாக இருந்தாலும் ஒரு தனிப்பட்டவர்களைத் தாக்கக்கூடிய விதத்தில் அவைகள் அமையவில்லை என்பதை இந்த மன்றத்தை நடத்திச் செல்கின்ற முன்னவர் அவர்கள், அல்லது அவைத் தலைவர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆனால், இன்று சினிமா என்ற பெயரால் இன்று பல்வேறு தரப்பட்ட நிலைகளில் மக்கள் மத்தியில் தங்களை அடையாளம் காட்டமுடியாத நிலையில் இருக்கின்றவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களைத் தவறாகப் படம் பிடித்துக்காட்டி வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏழு ஆண்டுகளுக்கு முன்பு டெல்லியில் ஒரு சம்பவம் நடந்ததை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு காவல்துறை உயர் அதிகாரி ஏதோ ஒரு காரணத்திற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை அவமானப் படுத்திய காரணத்தால் அந்தக் காவல்



துறை அதிகாரி நாடாளுமன்றத்திலே கொண்டு வந்து நிறுத்தப்பட்டு மன்னிப்புக் கேட்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்பதை நாம் கடந்த, 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு பத்திரிகையிலே படித்தோம். இன்று மட்டரகமாகவும், எழுதுவதற்கு ஆற்றல் இல்லாமலும், திறமை இல்லாமலும், தாங்கள் எப்படியும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கேவலப்படுத்துவதன் மூலமாக தாங்கள் புகழப்படுகிறோம் என்ற எண்ணத்தோடு தமிழ்நாட்டில் ஒரு சில எழுத்தாளர்கள் தோன்றிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு சில பட அதிபர்கள் தோன்றியிருக்கிறார்கள். பலமுறை சட்டமன்ற உறுப்பினர்களை பொதுமக்கள் மத்தியிலே இழிவு படுத்துகின்ற முயற்சியில் இருந்து பாதுகாக்க வேண்டும் என்று இந்த மன்றத்தில் சொல்லிக்கூட இதை சம்பந்தப்பட்ட துறையைச் சேர்ந்தவர்களோ, மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும், இனியாவது கடுமையாக நடவடிக்கை எடுத்து இப்படி சட்டமன்ற உறுப்பினர்களைக் கேவலப்படுத்துகின்ற ஒரு சூழ்நிலையை சினிமாப் படங்கள் மூலமாக காட்டுபவர்களுக்கு ஏற்படுத்தித்தர வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை இந்த மன்றத்தில் ஏற்படுத்துவதற்கு தவறுமேயானால் அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மீது அனுதாபம் உள்ள பொது மக்களே அப்படிப்பட்டவர்களைக் கண்டித்து வன்முறைக்கு இலக்காக்குவார்களோ என்ற பயம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட சினிமாப் படங்கள் வரும்போது அதனைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் அல்லது சென்சார் செய்யும் அதிகாரம் தமிழக அரசுக்கு இல்லையென்றாலும், அதை எப்படி தடுத்து நிறுத்த முடியுமோ அந்த வகையில் அதைச் செய்ய வேண்டும். அப்படி தடுத்து நிறுத்தப்படவில்லை என்று சொன்னால், மக்கள் அதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை என்கிற நிலைமை வருகிறபோது, அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களின் மேல் அனுதாபம் கொண்ட பொதுமக்கள் இப்படி பேசும் அல்லது எழுதும் எழுத்தாளர்கள், பட தயாரிப்பாளர்கள் திரையிடுகின்ற சினிமா தியேட்டர்கள் அல்லது வேறு இடங்களில் அவர்களை எதிர்த்து அர்த்தால் அல்லது ஆர்ப்பாட்டங்கள் செய்ய முற்படுவார்களானால், அது பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் சூழ்நிலை உருவாக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன். இந்த உணர்வு தமிழ் நாடு முழுவதும் இன்றைக்கு அதிகமாகிவருகிறது என்பதை மாமன்ற தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அரசுக்கு நான் பணிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு தரப்பட்ட கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் நானும் ஒரு சில கோரிக்கைகளை சட்டமன்ற உறுப்பினன் என்ற முறையில் வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கண்டிப்பாக, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு உதவி
யாளர் தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்ட
மன்ற உறுப்பினர்கள் விடுதியில் உள்ள உறுப்பினர்களுக்கான
அறையில் தனித்தனி தொலை பேசி அமைக்கப்படுகிற நிலைமை
கள் இருப்பதாக அறிகிறேன். அப்படி அமைக்கப்படும் தொலை
பேசிகளுக்கு 'லோக்கல் கால்' உள்ளூர் தொலைபேசி பேசு
கின்ற பேச்சுக்கு ஒரு உச்ச நிலையை அரசு நிர்ணயிக்கக்கூடாது
என்பது தான் என்னுடைய கருத்து என்பதை நான் பணிவோடு
தெரிவித்துக் கொள்கிறேன். உள்ளூரில் பேசும் லோக்கல் கால்
என்று சொன்னால் அவர்கள் சம்பந்தப்பட்ட பணிகளின் காரண
மாகப் பேசலாம் அப்பப்பட்ட பணிகளின் காரணமாக அவர்
கள் பேசும்போது, ஒரு நாளைக்கு 10 கால், அல்லது 20 கால்
என்று தான் பேச வேண்டும் என்று வரம்பு விதிக்கக்கூடாது
என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்
ட்ரங்கால் என்ற நீண்ட தூர கால் பேசுகின்ற ஒவ்வொரு உறுப்பி
ரிடமிருந்தும் அதற்கான கட்டணங்களை வேண்டுமானால் வசூ
லித்துக்கொள்ளலாம்.

இரயில்வே கூப்பன்களைப் பொறுத்த வரையில், 2,000,
3,000 என்று வரம்பு வைத்து இருக்கிறீர்கள். இந்த வரம்பு
தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பக்
கத்துத் தொகுதியில் உள்ள உறுப்பினருக்கும்—உதாரணமாக—
திருவள்ளூர் போன்ற தொகுதியில் இருந்து வருகின்ற உறுப்பினர்
களுக்கும்—எங்களைப் போன்று 400 கிலோ மீட்டர் 500 கிலோ
மீட்டர் தூரத்தில் இருந்து வருகின்ற உறுப்பினருக்கும் ஒரே
அடிப்படையில்தான் இந்தக் கூப்பன் தரப்படுகிறது. இந்தக்
கூப்பன்களுக்குப் பதிலாக, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு
இருப்பதைப்போல, இரயில்வே பாஸ் கொடுப்பது சிறந்ததாக
இருக்கும். அதற்காக நம்முடைய அரசு மத்திய அரசுக்கு—
இரயில்வே இலாகாவிற்கு ஒரு குறிப்பிட்ட தொகை செலுத்தி
விடலாம். அப்படி பாஸ் கொடுத்தால் உறுப்பினர்களுக்கும்
கௌரவமாக இருக்கும். இல்லையென்றால் திடீர் என்று ஊருக்
குச் செல்ல வேண்டும் என்ற நிலை வருகிறபோது, ஒரு ஆர்ப்பாட்
டம் அல்லது போராட்டம் ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிற
போது, அப்போது இரயிலில் பயணம் செய்ய வேண்டும் என்ற
நிலை வருகிறது அங்கே இடம் கிடைக்காத நிலை இருக்கிறது
என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், நாடாளுமன்ற உறுப்பி
னர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்
கையை மத்திய அரசுக்கு நாம் தெரிவிக்க வேண்டும். இந்த
நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்ததற்குக்
காரணம் குடும்பக் கட்டுப்பாட்டை நாம் தீவிரமாக அமல்
படுத்தியதுதான் என்பதை தமிழக மக்கள் அறிவார்கள். குடும்பக்





கட்டுப்பாட்டை தமிழக அரசு தீவிரமாக அமுல்படுத்தியதால்,
அதன் விளைவாக தமிழகத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்
களின் எண்ணிக்கை குறைந்துள்ளதால், அதை அதிகரிக்காவிட்
டால், அந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நாம்
தீவிரமாக அமல் நடத்த முன்வர மாட்டோம் என்ற ஒரு எச்
சரிக்கையை மத்திய சர்க்காருக்கு நாம் தர வேண்டும் என்று
பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மைய அரசு அறிவிக்கும்
திட்டங்களை நாம் தீவிரமாக முழுமையாக நிறைவேற்றுகிற
போது நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை
குறைகிறது என்று சொன்னால், அது நம்மை மப்பை.பத்தியமாக்கும்
சூழ்நிலை ஏற்படுகிறது என்பதைச் சொல்லி, குடும்பக்கட்டுப்
பாடு திட்டத்தை நாம் தீவிரமாக அமல்படுத்துவதால், நாடாளு
மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் சூழ்
நிலையை உருவாக்க வேண்டும் என்று மைய அரசுக்கு யோசனை
சொல்ல வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், சட்டமன்ற உறுப்பினர்
களின் எண்ணிக்கையைக் கூட பெருகி வரும் ஜனத்தொகை அடிப்
படையில் அதிகப்படுத்த வேண்டும் என்பதை நான் பணிவோடு
கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே படியைப் பற்றிப் பேசினார்கள். சட்டமன்ற உறுப்
பினர்களுக்கு படி இருக்கிறது. வளாகத்தில் பணியாற்றிக்கொண்
டிருக்கின்ற நிரந்தரமற்ற ஊழியர்களுக்கு படி கொடுக்கப்படு
கிறது. ஆனால், சட்டமன்றத்தில் என்ன நடக்கிறது என்பதை
வெளியே உள்ள மக்களுக்குத் தெரிவிக்கின்ற பத்திரிகையாளர்
களுக்கு படி இல்லை என்கிற ஒரு குறை இருக்கிறது என்பதை
நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். இதைச் சொல்வதாலே
பத்திரிகையாளர்கள் என்னுடைய பேச்சைக்கூட கொஞ்சம் பெரி
தாகப் போட்டாலும் போடலாம். ஆகவே, சட்டமன்றத்தில்
என்ன நடக்கின்றது என்பதை வெளியே மக்களுக்கு அறிவிக்கின்ற
வகையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு சட்டமன்றம் நடக்கும்
நாட்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் வாங்குகிற படியில் ஐந்தில்
ஒரு பங்காவது கொடுக்கும் சூழ்நிலையைத் தமிழக அரசு உரு
வாக்கினால் அது அவர்களுக்கு உற்சாகமாக இருக்கும். இங்கே
நாம் பேசி முடித்துவிட்டு, வளாகத்தில் சென்று காபி அல்லது
டீ சாப்பிடுகிறபோது நமக்கு பாட்டா வருகிறது என்கிற மகிழ்ச்
சியில் அருந்துகிறோம்.

(பிற்பகல் 12—20)

ஆனால் அவர்கள் தங்களுடைய சொந்த காசிலே செலவிடும்
போது கொஞ்சம் உற்சாகம் குன்றும் சூழ்நிலை ஏற்படுகிறது.
அவர்கள் 20 அல்லது 25 பேர்கள்தான் இருப்பார்கள். தினம்
10 ரூபாய் என்றால் கூட பெரிய செலவு ஒன்றும் வந்துவிடாது.

றைக்கு சரியாக பதில் வருவதில்லை. அதிலே நல்லமுறையில் அக்கரை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிகச் சிறிய பிரச்னைகளிலே கூட நாம் இன்றைக்கு காலதாமதப் படுத்துகிறோமே என்று கவலை அடைய வேண்டிய நிலை இருக்கிறது. அதை மாற்ற அரசு முயற்சி எடுக்க வேண்டும்.

அடுத்து இந்த சட்டமன்றைத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலை செய்யக்கூடிய சிப்பந்திகளுக்குக் கூட அவர்கள் 10, 12 ஆண்டு காலமாக தொடர்ந்து வேலை செய்துக் கொண்டிருந்தாலும், அவர்களை இன்னும் தினக்கூலியாகவே வைத்திருக்கிறோம். அவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் பணி செய்த கால முறையினை சீனியாரிட்டி லிஸ்ட் வைத்துக் கொண்டு, முன் உரிமைகள் கொடுக்கக்கூட முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்ற நிலைமை இருக்கிறது. செக்யூரிட்டியாக இருப்பவர்களுக்குக் கூட தினப்படி 4 ரூபாய்தான் என்ற நிலைமை இருக்கிறது. விலைவாசி உயர்ந்து வருகிற இந்த நேரத்தில், அதையெல்லாம் சற்று அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும்.

அதிலே இளநிலை உதவியாளர்கள், தட்டெழுத்தர்கள் போன்றவர்களுக்கெல்லாம் கூட, இப்படிப்பட்ட பிரச்னைகள் இருக்கின்றன. அவைகளை களைய அரசு முயற்சி எடுக்க வேண்டும். அவர்கள் இந்த சட்டமன்றத்துறையிலே பணி செய்ததற்காக சான்றிதழ்களைக் கேட்டால் கூட கொடுப்பதற்கு இன்றைய தினம் பேரவையின் அலுவலர்கள் தயாராக இல்லை என்று சொல்லுகிறார்கள். மேலவையில் அத்தகைய உதவிகள் இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். இதுபோன்ற சின்ன சின்ன கோரிக்கைகளைக்கூட நிறைவேற்றாமல் இருப்பது சரியல்ல. அவர்களுடைய உதவியோடுதான் நாம் காரியங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களுடைய கோரிக்கையையும் சற்று அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து டெலிபோன் வசதிகள். இங்கேயிருந்து யாரிடம் தொடர்பு கொள்ள வேண்டும் என்று விரும்பினாலும் அது முடிவதில்லை டெலிபோன் மூலமாக. அப்படிப்பட்ட மோசமான நிலை இருக்கிறது. அதைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சட்டமன்றம் கூடுகிற நேரத்திலே சென்னையிலேயிருந்து டெலிபோன் செய்து வெளியிலே—வெளி மாவட்டங்களிலே உள்ளவர்களோடு பேச வேண்டும் என்றாலோ, அல்லது வெளி மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு தொடர்பு கொள்ள வேண்டும் என்றாலோ அது முடிவதேயில்லை. இதுபோன்ற குறைகளை தீர்த்து, மாண்புமிகு உறுப்பினர்கள், தொலைபேசியில் எப்போதும், எங்கேயும் யாருடனும் தொடர்பு கொள்ள வசதி செய்யும் வகையில் அரசு முயற்சிகளை மேற்கொண்டு, அதில் அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, அமைச்சர்களுடைய துறைகள் என்று எடுத்துக் கொண்டால், இன்று பாராளுமன்றத்திலேயும், கேரளம் போன்ற மாநிலச் சட்டமன்றங்களிலேயும், அந்தந்த துறைகளுக்கென்று தனித்தனியாக ஆலோசனை குழுக்கள் இருக்கின்றன. இன்று எத்தனையோ பிரச்னைகளை இந்த அவையில் நாம் விவாதிக்கிறோம். மானியங்களின் மீது வைக்கப்படும் அறிக்கைகளின் மீது, சட்டமன்ற உறுப்பினர்கள் வருடத்திற்கு ஒரு முறை கூடி விவாதிக்கிறோம். அத்தொடு கூட இத்தகைய குழுக்களை போட்டால், மாண்புமிகு உறுப்பினர்களில் 4 பேர்கள் 5 பேர்கள் என்று மட்டுமே வைத்து, இத்தகைய மானியக் கோரிக்கைகளை வாங்கி நெருக்கமாக சில பிரச்னைகளை ஆராய்ந்தால், அவைகளை நிறைவேற்றுவதில் அது இன்னும் விரைவாகவும், உதவியாகவும் இருக்கும். அப்படிப்பட்ட குழுக்களை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சட்டமன்றம் கூடுகிற நேரத்திலே, அதைப்பற்றிய விமர்சனங்களை ரேடியோவிலே செய்தியாக சொல்லப்படுகிறது. அது மிகவும் குறுகிய காலம். ஒரு 5 நிமிடங்கள் என்று மட்டும் வைத்து இந்தச் செய்திகளை சொல்லுகிறார்கள். கிட்டத்தட்ட 4, 5 மணி நேரங்கள் தொடர்ந்து, மாநிலப் பிரச்னைகளை விவாதிக்கும் ஒரு சட்டமன்றத்தின் நிகழ்ச்சிகளை, 5 நிமிடத்தில் சுருக்கி சொல்லி விட முடியாது. அப்படிச் சொல்கிறபோது, வரதராஜன் பேசினார் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. வரதராஜன் என்ன ஊமையா? ஏதோ இவர்கள் ரேடியோவில் சொல்கிறபோதுதான் அவர் வாய்திறந்து பேசினார் என்பதற்கு. மக்கள் சம்பந்தப்பட்ட எவ்வளவோ முக்கியப் பிரச்னைகள் இங்கே விவாதிக்கப்படுகின்றன. கொள்கைப் பிரச்னைகள் இருக்கின்றன. மக்கள் அன்றாடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும், எத்தனையோ முக்கியப் பிரச்னைகள் இங்கே விவாதிக்கப்படுகின்றன. உணவுப் பிரச்னைகள், தண்ணீர் பிரச்னை, தொழில் பிரச்னை, ரெவின்யூ பிரச்னை என்று எத்தனையோ இருக்கின்றன.

உதாரணமாக நாம் பினாமி சட்டத்தை நிறைவேற்றி அனுப்பினோம் அதற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை அதன்மீது எத்தனையோ வாதங்கள். கருத்து வித்தியாசங்கள் எவ்வளவோ. இதுபோன்ற பிரச்னைகளை மக்கள் மத்தியில் வைத்தால், அதற்கு பயன் உண்டு. நாங்கள் சொல்கிற கருத்துக்கள் என்றல்ல, அமைச்சர்கள் சொல்கிற கருத்துக்களை வைக்கலாம், மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கிற கருத்துக்களைக் கூட, அங்கே விரிவாகச் சொல்லலாம். ஆனால்

ஆகவே, இந்த வகையில் ஒரு புதிய முறையை இந்தியாவிலேயே முதன் முறையாக இங்கே கையாள வேண்டுமென்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

புதிய சட்ட மன்றம் கட்டுவது பற்றி கடந்த ஆண்டு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள். நிதிநெருக்கடி இல்லை என்று சொன்னால் புதிய சட்ட மன்றத்தை கட்டக்கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முயல வேண்டுமென்றும் அந்த புதிய சட்டமன்றத்தைக் கட்டும்போது இப்போது இருக்கிற புதிய சட்ட மன்ற விடுதி போல 4 ஆண்டுகளில் அல்லது 5 ஆண்டுகளில் இடிந்து விழக்கூடிய சூழ்நிலையில் இல்லாமல் உறுதியான முறையில், நல்ல முறையில் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருடைய அறையிலும் தொலைக் காட்சி வைக்கப்படாவிட்டாலும் குறைந்தது ஒரு ஒலிபெருக்கிப் பெட்டியையாவது அங்கே இருக்கிற வானொலி பெட்டியோடு இணைத்து ஒவ்வொரு உறுப்பினர் அறையிலும் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் மாநிலச் செய்தியையாவது, இந்தியச் செய்தியையாவது, சட்டமன்ற நிகழ்ச்சியையாவது கேட்டுக்கொள்க்கூடிய வாய்ப்பை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் அந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தொகுதியைச் சுற்றிப் பார்வையிடுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாகனம் அளிக்க வேண்டுமென்று உத்தரவு இருக்கிறது ஆனால் ஊராட்சி ஒன்றிய வாகனங்கள் நல்லமுறையில் இல்லை. வாகனம் நல்லமுறையில் அமையாததால் சுற்றுப்பயணம் இடையிலே தடைபடுகிறது. எனவே, அந்த மாவட்டத்தில் எந்த ஒரு இலாகாவில் இருந்தும் வாகனத்தை எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று, விடைபெறுகிறேன்.

திரு என் வரதராஜன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, சட்டமன்றம், தேர்தல், இன்னபிற அளவிலே இருக்கிற கோரிக்கைகள் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய ஜனநாயக அமைப்பில் சட்டமன்றம் என்பது முக்கியமான ஜனநாயக அமைப்பு. அதனுடைய செயல்பாட்டை இன்னும் ஊக்குவிப்பது அரசாங்கத்தின் கடமை. கடந்த பட்ஜெட் கூட்டத்திற்கும் இந்தக் கூட்டத்திற்கும் இடையிலே சில நாள்தான் சட்டசபை கூடி இருக்கிறது. இந்த முறையை மாற்றியமைக்க வேண்டும். மூன்று மாத காலத்திற்கு ஒருமுறை



சட்டசபையைக் கூட்டினால், நாட்டிலே எழுகின்ற பிரச்சனைகளைத் தவிர்க்க, அவ்வப்போது மக்களுடைய கருத்துக்களைப் புரிந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும். ஆகவே, கடந்த ஆண்டு ஏற்பட்ட நிலையை தவிர்த்து இனி வருகின்ற காலத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை சட்டமன்றத்தைக் கூட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டசபையைக் கூட்டுகிற காலத்திலே குறிப்பிட்ட காலத்திலே அமைச்சர்களுடைய வருகைக்கு உத்தரவாதம் வேண்டும். இன்றைக்கு இங்கே அவை முன்னவர் தான் உட்கார்ந்துகொண்டு, இந்த அவையின் அலுவல்களை சுமக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கதுதான் என்றாலும் குறிப்பிட்டுக் கூறுகின்ற அளவுக்கு அமைச்சர்களின் வருகைக்கு உத்தரவாதம் இருக்க வேண்டும்.

அடுத்து, முதலமைச்சருடைய கேள்வி-பதில்கள் இந்த அவையிலே அமையவில்லை என்ற குறை இருக்கின்றது. முதலமைச்சருக்கு முடியாவிட்டால் அவருக்குப் பதிலாக நம்முடைய அவை முன்னவரே கூட அவருடைய கேள்விகளுக்கு பதில் அளிக்கலாம். குறிப்பாக காவல் துறை சம்பந்தமான கேள்வி எழுப்ப முடியவில்லை ; பதில் பெற வழியில்லை என்ற நிலை இருக்கிறது. இந்த நிலையை தவிர்க்க வேண்டும். அவை முன்னவராவது பதில் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த சபை நம்முடைய தமிழ்நாட்டிலே மிக உயர்ந்த அமைப்பு. இப்படிப்பட்ட ஒரு இடத்திலே பாதுகாப்பு ஊழியர்களை நீங்கள் இன்னும் அதிகமாக்கலாம். இங்கே செக்யூரிட்டி ஏற்படுத்த வேண்டியது உங்கள் பொறுப்பு. ஆனால் அதற்கு மாறாக துப்பறியும் இலாகாவைச் சேர்ந்த காவலர்கள் இந்த வளாகத்திலே சுற்றிக்கொண்டிருப்பது சரியல்ல. இந்த நிலையை அரசு கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். பேரவை முன்னவரும் அவைத் தலைவரும் இதிலே அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது இன்று சிறிதாக இருந்தாலும் நாளை பெரிதாக ஆகும். அது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதுகின்ற கடிதங்களுக்கு விரைவான பதிலைப் பெற்றுத் தருவது பேரவைக்கு முக்கியமான நிகழ்ச்சியாக இருக்க வேண்டும். மக்களுடைய தேவைகளை கருதி, மக்களுடைய கோரிக்கைகளை நிறைவு செய்கின்ற வகையில் நாங்கள் கடிதங்கள் எழுதுகிறோம். என்ன நடக்கிறது என்று அறிந்து மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். மக்கள் பிரச்சனைகளை அவ்வப்போது எழுப்புவதற்கும், என்ன நடக்கிறது என்பதை அவர்களுக்குத் தெரிவிப்பதற்கும் கடிதம் எழுதுகிறோம். அதற்கு பதில் வருவது முக்கியமானது. இன்

அதற்கு மாறாக இன்று ஒரு சாரார் கூறுகிற கருத்துக்களுக்கு மட்டும் தான் ரேடியோவில் இடம் கிடைக்கும் என்ற நிலை மாற்றப் படவேண்டும். தமிழகத்தினுடைய சம்பந்தப்பட்ட துறை, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, இந்த நிகழ்ச்சியை விரிவாக இன்னும் சற்று ஒரு மணி நேரம் கூட இதற்கென்று ஒதுக்கி வைக்க அவர்களை கேட்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்க வேண்டும். அப்படிப்பட்ட முக்கியமான நிகழ்ச்சி அது. ஏனெனில் மக்களின் உணர்ச்சிகளை அவர்களுடைய உயிர் துடிப்புகளை இங்கே நாம் சொல்லி அதற்கு தீர்வு காண்கின்ற ஒரு முக்கியமான மன்றமாக இது இருக்கிற காரணத்தால், அதை சற்று விரிவான வகையில் அவர்களுக்கு—மக்களுக்கு இதை தெரிவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை நம்முடைய தமிழக அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் வற்புறுத்த விரும்புவது பத்திரிகையாளர்கள், இந்த அவையிலே மிக நெருக்கடியான நிலைமையிலே உட்கார்ந்து இருப்பதை நாம் பார்க்கிறோம். அவர்களுக்கு சற்று விஸ்தார மான ஏற்பாடுகளை நமக்குள்ள வசதி வாய்ப்புகளைப் பயன் படுத்தி, அதற்கு உட்பட்டு அவர்களுக்கு செய்துக் கொடுக்க வேண்டும். அத்தோடு அவர்களுக்கு பாஸ் வசதி, இதர வசதி களையும் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த மன்றத்தின் செய்திகளை மக்களுக்கு தெரிவிக்கிற ஒரு நுறையாக அவர்கள் இருப்பதினால், அவர்களுக்கு எந்த அளவுக்கு வசதி வாய்ப்புகள் செய்து கொடுக்க முடியுமோ, அந்த அளவுக்கு செய்துக் கொடுக்க அரசு துரிதமாக நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மிக முக்கியமான பிரச்னை. சட்டசபையைப் பார்க்க வருகிற பொதுமக்கள், வாக்காளர்கள், அவர்கள் தங்குவதற்கு இங்கே இடம் இல்லை. வெளியிலே-சீலை தக்கு கட்டிக் கொடுத்த பர்ண சாலையைப் போன்று கூரை வேய்ந்த ஒரு இடத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். அந்த இடத்தில் அவர்கள் பரிதாபமாக காத்திருக்கிறார்கள். நீங்கள் புதிய கட்டிடம் கட்டி அவர்களுக்கு இடம் ஒதுக்கும்போது, பின்னால் பார்த்துக் கொள்ளலாம். இப்போது இருக்கின்ற கட்டிடத்திலேயே ஓரளவிற்கு அவர்களுக்கு சிறப்பான அமைப்பை செய்துக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். இந்த ஜன நாயகத்தின் முக்கிய அங்கமான அந்த வாக்காளப் பெரு மக்க ளுக்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துக் கொடுப் பதற்கு, அரசு முன் வரவேண்டும்.

அடுத்து சட்டசபைக் கூட்டம் நடைபெறும் காலத்திலும் சரி, அமைச்சர்கள் மாநிலங்களில் சுற்றுப் பயணம் மேற் கொள்ளும் சமயத்திலும் சரி, மக்களை சந்திக்க, சட்டமன்ற உறுப்பினர்களை சந்திக்க என்று அவர்கள் தனியாக நேரம் ஒதுக்க வேண்டும்.





அவர்கள் மக்களுடைய பிரதிநிதிகள், அவர்கள் பல காரியங் களைச் சொல்லவேண்டி இருக்கும். பல விஷயங்களை அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டி இருக்கும். அப்படிப்பட்ட ஒரு முயற்சிக்கு இன்றைக்கு இடம் இருப்பதாக நான் பார்க்க வில்லை. ஆனால் அதிலே ஆளும் கட்சிக்கு சில பலகீனங்கள் இருக்கின்றன. நான் அதைக்கூடச் சொல்லவேண்டாம் என்று நாக்கை இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கிறேன். ஆகவே அதைப்பற்றி நான் சொல்லவில்லை. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அமைச்சரவர்களைச் சந்திக்கவேண்டும். அவர் களிடத்திலே சில காரியங்களைச் சொல்லவேண்டும். சில தவறுகளைத் தவிர்க்கக்கூடிய கருத்துக்கலைச் சொல்லவேண்டும் என்ற நிலைமை இருக்கின்றபோது அமைச்சர்களிடத்திலே தனியாகப் பேசுவதற்குக் கூட நேரம் இல்லாத வகையில் சுற்றுப் பயணத்தை அமைத்தால் அது சரியாக இருக்காது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

அடுத்து, இந்த சட்ட மன்றத்திற்குப் பக்கத்திலே அலுவலர் களையும், மற்றவர்களையும் நாம் பார்க்க முடிகின்றது சந்தைக் கடை மாதிரி இருக்கின்றது. சட்டமன்ற உறுப்பினர்கள் உட்காருகின்ற வகையிலே அங்கே ஒரு ஏற்பாட்டைச் செய்யக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, சட்டமன்ற நூலகத்திலே பல நாடுகளைச் சேர்ந்த சிறந்த புத்தகங்களை சட்ட மன்ற உறுப்பினர்கள் படிக்கின்ற வகையிலே வைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அப்படிப்பட்ட சிறந்த வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். இவை எல்லாம் சின்னச் சின்ன வசதிகள்தான். ஆழ்ந்த கவனம் செலுத்தி, அதிகமான பணத்தை ஒதுக்கீடு செய்யக்கூடிய அளவில் உள்ள காரியங்கள் அல்ல அவை. மிக எளிதில் செய்யக்கூடிய காரியங்கள்தான். ஆகவே அவற்றைச் செய்யவேண்டும்.

அடுத்து சட்டமன்ற கட்சியினருக்கு ஒவ்வொரு அறைகள் கொடுத்திருக்கிறீர்கள், அங்கே டெலிஃபோன் வசதி இல்லை என்றால் எப்படித் தொடர்பு வைத்துக்கொள்ள முடியும். அங்கே கூட்டங்கள் நடத்துகிறோம். விவாதங்கள் நடத்துகிறோம். நாளைக்கு என்ன பேசலாம், என்ன விவாதிக்கலாம் என்பதைப் பற்றி எல்லாம் பேசுகிறோம். அப்படிப்பட்ட நேரங்களில் பேரவை முன்னவரோடு தொடர்பு கொள்ள விரும்புகிறோம். ஆகவே அந்த அறைகளுக்கு எல்லாம் டெலிஃபோன் வசதி செய்து கொடுப்பது ஒரு நல்ல காரியம். இந்த அவையின் நடவடிக்கை கள் சிறப்பாக அமைவதற்கு அப்படிப்பட்ட வசதிகளை அந்தத் துறையிலே இருப்பவர்கள் செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

[திரு. என். வரதராஜன்] [1983 ஏப்ரல்]

வார்டுக்கு மொத்தமாக ஒரு வோட்டு சாவடியாக அமைத்து
மக்கள் வந்து வோட்டு போடவேண்டும் என்று அவர்கள்
தீர்மானிக்கிறார்கள். இந்த வோட்டுச் சாவடிகள் அந்த
வார்டு இருக்கும் இடத்திலிருந்து கிட்டத்தட்ட 4 மைல் 5 மைல்
தூரத்தில் இருக்கிறது. ஆகவே அவ்வளவு தூரம் வந்து மக்கள்
வோட்டு போட வேண்டிய நிலை இருக்கிறது . என்னுடைய
அனுபவத்தில் சொல்கிறேன். 10 மைல் 12 மைல் வரக்
கூடிய ஒரு ஆபத்து கூட கொடைக்கானலில் அதாவது
நம்முடைய தமிழகத்தில் இருக்கிறது. அப்போது அந்த ஜனங்
கள் சுற்றிக்கொண்டு வந்து வோட்டுப் போடவேண்டும். அவர்
கள் அருகாமையில் வோட்டு போடுவதற்கான தகுந்த வோட்டுச்
சாவடிகளை அமைக்கவேண்டும். ஒரு மலைப்பிரதேசம் இருந்
தால் அதில் 400 வோட்டுகள் இருக்கும் என்றால் கூட அந்த
இடத்தில் ஒரு சாவடி அமைப்பது தப்பு இல்லை. அதற்கு
ஸ்பெஷலாக இன்றைய தினம் தேர்தல் கமிஷனிடம் அனுமதி
வாங்க வேண்டும் என்றால் வாங்கலாம். ஆகவே அந்த பிரதே
சங்களை கவனித்து அந்த வோட்டுச் சாவடிகளை அமைக்க
வேண்டும். அது அருகாமையில் இருக்கவேண்டும். இப்போது
இருக்கக்கூடிய ஒரு பெரிய குறை அது. அதேபோல் தான்
நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள்
சொன்னார்கள், இன்றைக்கு வோட்டர்கள் ஜாபிதா தயாரிக்கும்
போது கூட அதை ஒரு சிறந்த ஜாபிதாவாக வைத்துக்கொண்டு
அதை திருத்திக்கொண்டே போகலாம். அதற்குண்டான ஏற்
பாடுகள் இன்றைக்கு தேவை. அப்படி வந்தால் வோட்டர்
கள் அவர்களுடைய வோட்டுக்களை எல்லாம் பதியவைப்பார்
கள். இன்றைக்கு 100-க்கு 25 சதவீதம் 30 சதவீதம் வோட்டர்
கள் பதியப்படுவது இல்லை. அப்படிப்பட்ட பலவீனங்கள்
நடக்கின்றன. அந்த பலவீனங்களை நாம் போக்கவேண்டும் என்று
சொன்னால் என்ன செய்ய வேண்டும் என்று அரசு ஆலோசனை
செய்ய வேண்டும். நான் வற்புறுத்த விரும்புவது எல்லாம்
இந்த ஜனநாயகத்தில் வெறும் அலுவலர்களைக் கொண்டு
காரியத்தை நிகழ்த்தி விடலாம் என்று நீங்கள் அழுத்தமான
கருத்தை வைத்து இருந்தால் அதில் செம்மையான அடி உங்க
ளுக்கு கிடைக்கும். அவ்வளவு தான் நான் சொல்ல விரும்பு
கிறேன். மக்களுடைய பிரதிநிதிகளை அலுவலர்களோடு
இணைத்து போடவேண்டும். அது எந்த கட்சியாக இருக்கட்டும்.
அதில் ஒன்று தவறு செய்தால் ஒன்று தவறு செய்யாமல் அது சரி
செய்துகொள்ளக்கூடிய ஏற்பாடாக இருக்கும். ஆகவே குடும்ப
கார்டு விநியோகத்தை எடுத்துக் கொண்டால் என்ன ஏற்பட்டிருக்
கிறது பல பகுதிகளை விட்டுவிட்டார்கள் அவர்கள் இடத்திற்கு.
அதை கண்காணிக்கவேண்டும். நம்முடைய வோட்டர்கள் முழு
மையான வோட்டர்களாக வோட்டு அளிப்பதற்கு அவர்கள்
வோட்டுச் சாவடிக்கு அருகாமையில் வந்து வோட்டு அளிப்பதற்கு
வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.



1983 ஏப்ரல் 19] [திரு. என். வரதராஜன்]

அடுத்து ஒரு வார்த்தை நான் சொல்ல விரும்புவது, 18 வயது வந்தவர்களுக்கு எல்லாம் இன்றைக்கு உள்ளாட்சித் துறையில் வோட்டு உரிமை கொடுத்து இருக்கிறோம். அதேபோன்ற நிலையை பொதுத்தேர்தலுக்கும் கொடுக்கவேண்டும் என்ற நிலையை எடுப்பதற்கு நாம் வற்புறுத்த வேண்டும் அப்படி ஜனநாயக முறைகளில் தேர்தல் நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் போது அப்படிப்பட்ட சிறந்த முறைகளை எல்லாம் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் இலங்கை, பர்மா அகதிகளுடைய புனர் வாழ்வு சம்பந்தமாக அவர்களை கவனிக்கவில்லை என்று ஒரு குறை இருக்கிறது. மேற்கொண்டு அதற்குள் செல்லவில்லை. நீங்கள் விவர குறிப்பு ஒன்று கொடுத்து இருக்கிறீர்கள். ஆகவே அதை பரிசீலிக்க வேண்டும். அவர்களுக்கு அளிக்கப்படும் உதவியை உயர்த்திக் கொடுக்க வேண்டும். நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் விடுதியின் அருகில் 100, 200 பேர்கள் ஒரு மாதமாக அந்த ஆலமரத்தின் அடியில் உட்கார்ந்து கொண்டு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவு துயரமான நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுடைய புனர் வாழ்வுக்கான உதவித் தொகையை உயர்த்தி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்,

திரு என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மானிய கோரிக்கை எண்கள், 7, 8, 42, 43, 57 ஆகியவைகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற கூட்டங்கள் சம்பந்தமாக எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது மாநிலம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் தொடர்ந்தாற்போல் $1\frac{1}{2}$ மாதமாக இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்றுக்கொண்டு இருக்கிறோம். இதற்கு அடிப்படை காரணம் கால கிரகத்தில் சட்டமன்ற கூட்டத்தை 3 மாதத்திற்கு ஒரு முறை தொடர்ந்தாற் போல் நடத்தினால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வராது. எதிர்காலத்தில் குறைந்த பட்சம் 3 மாதத்திற்கு ஒரு முறை சட்டமன்ற கூட்டங்களை நடத்த வேண்டும் என்று அரசை நான் மிகவும் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, உறுப்பினர்கள் எழுதுகிற கடிதங்களுக்கு மந்திரிகளிடம் உடனுக்குடன் பதில் கிடைக்கிற ஒரு நல்ல நிலை இருந்தால் குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த கடிதம் வந்தால் தொகுதி மக்களிடம் அல்லது தன் தொகுதியில் உள்ள தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அமைச்சர்களுக்கு கடிதம் எழுதினால் அல்லது சம்பந்தப்பட்ட துறைக்கு கடிதம் அனுப்பினால்

[திரு. என். வரதராஜன்] [1983 ஏப்ரல் 19

அடுத்து சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படுகின்ற ஓய்வூதி
யத்தைப் பொறுத்த வரையில், அதுவும் கடைநிலை ஊழியர்
களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஓய்வூதியத்தைப் பொறுத்த
வரையில் 100 ரூபாய் என்று இருந்ததை 125 ரூபாய் என்று
உயர்த்தி இருக்கிறோம். ஆனால் இப்போது விலைவாசிகள்
எல்லாம் உயர்ந்துகொண்டிருக்கக்கூடிய காலத்திலே வாழ்க்கை
யின் பளு உயர்ந்து கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலே
அதனை உயர்த்துவதற்கு அரசு மனிதாபிமானத்தோடு முயற்சி
களை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
பலபேர் இங்கே அது குறித்து வற்புறுத்த வேண்டும். எனக்கு
கல்வியினைச் சொல்லிக்கொடுத்த ஒரு ஆசிரியர் என்னுடைய
கண் முன்னாலேயே தெருவிலே பிச்சை எடுத்துக்கொண்டிருந்
ததை நான் பார்த்தேன். இது நடந்த உண்மை. ஏதோ
சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. ஆகவே
இந்த ஓய்வூதியத் தொகையை உயர்த்திக் கொடுக்கவேண்டும்.
திட்டவட்டமாக இவ்வளவு உயர்த்துங்கள் என்று சொல்லவில்லை
இப்போது கொடுக்கப்படுகின்ற 125 ரூபாய் என்பது போதாது,
அதை அதிகப்படுத்த வேண்டும் என்று தான் கேட்டுக்கொள்
கிறேன்.

அவர்கள் மேலும் பல கோரிக்கைகள் குறித்து வற்புறுத்தி
வருகிறார்கள். அதாவது அவர்களிடத்திலே இருந்து ஏதாவது
ஒரு திட்டத்தின் அடிப்படையிலே பணத்தைப் பிடித்துக்கொண்டு
வரவேண்டும் என்றும் அவர்கள் ஓய்வு பெறுகின்றபோது 10
ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்ற ஒரு வேண்டுகோள் இருக்கின்றது. அதுபற்றிப்
பரிசீலிக்கிறோம் என்று பல முறை அவையிலே அறிவித்திருக்
கிறார்கள். ஆகவே அதுபற்றி போதுமான கவனம் செலுத்தி
முயற்சி மேற்கொள்ளவேண்டும்.

தேர்தல்கள் சம்பந்தமாக கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன். நம்முடைய தேர்தலிலே இன்றைக்கு இருக்கக்
கூடிய ஜனநாயக முறைகள் கூட அழிந்துவிடுமோ என்று
அச்சப்படுகின்ற நிலைமை தமிழகத்திலே உருவாகி வருவதை
அரசு கவனத்தில் கொள்ளவேண்டும். ஒரே ஒரு சட்டமன்றத்
தொகுதியின் தேர்தலுக்கே பல கோடிக்கணக்கான ரூபாய்
செலவழிக்கப்படுமேயானால் ஜனநாயகத்தைப் பாதுகாக்க
முடியுமா ? ஆகவே ஊழல்களை வேறு எங்கும் தேடி அலைய
வேண்டியதில்லை. அங்கேயே அதற்கு இடம் இருக்கின்றது.
ஆகவே அவற்றை எல்லாம் மாற்றி அவற்றை ஒரு கட்டுதிட்டத்
திற்குள்ளே நிறுத்துவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள
வேண்டும். இப்போது இருக்கின்ற ஜனநாயகத் தேர்தல் என்ப



1983 ஏப்ரல் 19] [திரு. என். வரதராஜன்]

தையே மாற்றியமைக்க வேண்டும் என்ற நிலைமையில் பலவித
மான சட்ட திட்டங்களைச் செய்ய வேண்டும் என்று கருதக்
கூடிய நிலைமை இன்று இந்தியா பூராவுமே ஏற்பட்டிருக்கின்றது.
ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்முடைய மாநில அரசு
அதற்கான விவாதங்களை நடத்தி அதுபற்றிய குறிப்புக்களை
இங்கே வைத்து அடுத்து வருகின்ற தேர்தல் எப்படி இருக்க
வேண்டும் என்பது குறித்து ஆராய்கின்ற வகையிலே மாநில
அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து விகிதாச்சார பிரதிநிதித்துவம் வேண்டும் என்று
கருத்துக்கள் எல்லாம் எழுந்து இருக்கின்றன. அப்படிப்பட்ட
சர்ச்சைகள் எல்லாம் எழுந்திருக்கின்றன. அந்த வகையிலே
தேர்தலுக்கான செலவைக்கூட அரசே கொடுக்கலாமா என்ற
நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது. இப்படிப்பட்ட ஒரு காலத்
தில் தேர்தலுக்கான செலவு என்பது பல லட்சத்திற்கு உயருமே
யானால் அது தமிழ்நாட்டிலே உள்ள ஜனநாயகத்திற்கு மட்டு
மல்ல, இந்தியாவின் ஜனநாயகத்திற்கே ஆபத்தான விதை.
அந்த விதை பிறகு வளர்ந்து பெரிய மரமாக முளைத்துவிடும்.
தேர்தல் என்று ஒரு தேதியினை அறிவித்த பிறகு அந்தத்
தொகுதியிலே புதிய வேலைகளைத் துவக்குவது என்பது
சர்வசாதாரணமாக இருக்கின்றது. சாலைகள் போடப்படு
கின்றன. மற்ற காரியங்கள் செய்யப்படுகின்றன. அதிலே
இருக்கின்ற குறைகளைக்கூட சபைக்குச் சொல்லி இருக்கிறோம்.
ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம்.

இன்றைய தினம் விவசாய தொழிலாளர்களுக்கு வேட்டி
சேலை என்று அறிவித்து இருக்கிறோம். அங்கே போய் விசா
ரித்தால் இன்றைய தினம் கடன் வாங்குபவர்களுக்குத்தான்
வேட்டியும் சேலையும் தருகிறார்கள் விவசாய தொழிலாளர்
களுக்கு அல்ல என்று சொல்கிறார்கள். அது வேறு விஷயம்.
இதே வேட்டி சேலை கொடுக்கக்கூடிய திட்டம் அரசு திட்டமாக
இருந்தாலும்கூட தேர்தல் காலத்தில் அரசு அதை வினியோகிக்கும்.
ஆனால் அது எப்படி ஜனங்கள் நினைக்ககூடிய நிலை இருக்கும்.
அது வோட்டுக்கு கொடுக்கக்கூடிய வேட்டி சேலையாக மாறும்.
அதிலே அப்படிப்பட்ட நிலை ஏற்படக்கூடாது. அதற்கு முன்
னால் அரசு திட்டங்களை நிறைவேற்றட்டும், அது காரியங்கள்
செய்யட்டும் மக்கள் வோட்டுகளை பெறட்டும். ஆனால் தேர்
தல் என்று ஒரு தேதியை அறிவித்த பிறகு அதிலே உறுதியாக,
கராராக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தேர்தலுக்கு வோட்டு போட வரும் ஜனங்கள்
எல்லா உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் இது தெரியும்
4 மைல் 7 மைலுக்கு அப்பால் இருந்து வந்து வோட்டு போட
வேண்டிய நிலை இருக்கிறது. தாசில்தார் அல்லது ஆர்.டி.ஓ.
களிடம் நாம் வோட்டு சாவடிகளை நிச்சயிக்கும்படி சொல்லி
விடுகிறோம். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் ஒரு

அதை கட்டாயம் மாற்றியமைப்பதற்கு உரிய நடவடிக்கை
எடுக்கவேண்டும். உடனடியாக போன் கொடுப்பதற்கு ஆவன
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது நீங்கலாக
நம்முடைய சட்டமன்றத் தொகுதிகளிலே நடக்கிற வேலை
களைப் பற்றி, தொகுதிகளில் உள்ள நிலைமைகளைப் பற்றி,
மாவட்ட ஆட்சி, நிர்வாகப் பிரச்னைகளைப் பற்றியெல்லாம்
கூறியிருக்கிறோம். அவைகளுக்கு தீர்வும், அவைகள் சம்பந்தப்
பட்ட பணிகள் உடனடியாக செய்வதற்கும் இந்த மானியத்திலே
கருத்துக்களை சுருக்கமாக சொல்லிக் கொள்கிறேன். பல்வேறு
கருத்துக்களை உறுப்பினர்கள் அனைவரும் நிறைய சொல்லி
இருக்கிறார்கள். அவற்றோடு என்னுடைய கருத்துக்களையும்
இணைத்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு தற்
காலிகத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால்
கொண்டுவரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையின் மீது என்
னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுக்கு
நிறைய சலுகைகளைச் செய்திருக்கிறீர்கள். அன்றைக்கு எங்
களுக்கிருந்த நிலைமைகள் எல்லாம் மாண்புமிகு நிதியமைச்சர்
அவர்களுக்கு நன்றாகத் தெரியும். தினசரி படி 12½ ரூபாய் ;
ஒரு மாதச் சம்பளம் 150 ரூபாய் என்று இருந்தது ; இன்றைக்கு
தினசரி படி 50 ரூபாய் ; சம்பளம் 1,000 ரூபாய் என்று செய்து
கொடுத்திருக்கிறீர்கள். எவ்வளவோ சலுகைகளை செய்து
கொடுத்து பெட்டி, பேனா, பென்சில், ரப்பர் என்றெல்லாம் கூட
கொடுக்கிறீர்கள். பெட்டி, பேனா போன்றவைகளை கொடுப்பது
கூட தேவையில்லை ; இது போன்ற சலுகைகளை சற்றுக்
குறைத்துக்கொள்ளலாம் என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

சட்டமன்றத் துறையில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள்
தினக் கூலிகளாக மிக மோசமான நிலையில் இருக்கிறார்கள்.
தயவுசெய்து அவர்களை கவர்ன்மென்ட் சர்வென்ட்ஸ்களாக ஆக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேறு எந்தத் துறையில்
வேலை கிடைத்தால் கூட மறுபடியும் எம்ப்ளாய்மென்டில் பதிவு
செய்துவிட்டு அவர்களுக்கு சர்வீஸ் ரெஜிஸ்ட்டர் ஓப்பன் செய்து
பிறகு செல்லவேண்டுமென்ற நிலையில்லாமல், ஏற்கனவே கவர்ன்
மெண்டிலே வேலை செய்கிறார்கள் என்ற நிலையை உருவாக்கி
அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கி
றேன்.

நம்முடைய சட்டமன்ற ஹாஸ்டல்களில் பணியாற்றக் கூடிய
பெண்களைப் பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அந்த
பெண்கள் என்ன பாவம் செய்தார்கள் ? அவர்களுக்கு ஒரு
நாளைக்கு சம்பளம் ரூ. 4.40 ; வெகு தூரத்திலிருந்து வருகின்ற
வர்கள் பஸ்ஸிற்கே ஒரு ரூபாய்க்கு மேல் கொடுத்து





விடுகிறார்கள். நாங்களெல்லாம் சாப்பாடு வாங்கி வரச் சொன்
னால் தான் அவர்களுக்கு சாப்பாடு கிடைக்கும். நாங்கள்
ஓட்டலுக்கு போய் சாப்பிட்டு விட்டால் அவர்கள் பட்டினி
கிடக்கிறார்கள். அங்கே வேலை பார்க்கிற ஆண்களுக்கு எப்படி
சம்பளம் கொடுக்கிறீர்களோ, அதைப் போலவே இந்தப் பெண்
களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். ஆண்களுக்கு பியூன்கள் என்ற பெயரில் சம்பளம்
அதிகம். ஆனால் பெண்களுக்கு ஏதேதோ பெயர்களை வைத்து
சம்பளத்தை குறைத்துக் கொடுப்பது நன்றாக இல்லை. அவர்
களுக்கு சம்பளத்தை உயர்த்தி, ஆண்களுக்கு கொடுக்கக்கூடிய
சம்பளத்தை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரிகையாளர்களைப் பற்றி எல்லா உறுப்பினர்களும்
சொன்னார்கள். நிச்சயமாக அவர்களுக்கு செய்ய வேண்டியது
தான். போலீஸ் துறையைச் சேர்ந்தவர்கள் காலையிலிருந்து
சாயந்திரம் வரை இங்கேயே இருக்கிறார்கள். அவர்களுக்கு
4 ரூபாய் என்பது போதாது. அதையும் 10 ரூபாயாக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றத்திலே கடந்த காலத்திலே மாண்புமிகு நிதி
அமைச்சர் அவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் அப்போது
எதிர்க்கட்சித் தலைவராக சிறப்பான முறையிலே பணியாற்றி
னார்கள். அவர்கள் இங்கே இப்போது பேரவை முன்னவராக
இருக்கிறார்கள். சட்டமன்றம் ஆண்டு ஒன்றிற்கு 100 நாட்
களாவது கூட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி
ஒரே காலத்தில் ஜனவரியிலேயிருந்து விடாப்பிடியாக இங்கே
அமர்ந்து கொண்டிருப்பதாலே தொகுதியில் இருக்கிற அவசரமான
வேலைகளை கவனிக்க முடியாமல் இருக்கிறது. சட்டமன்றத்
தில் கலந்து கொண்டால் தான் நல்லது என்று நினைக்கக்கூடிய
ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. பட்ஜெட் கூட்டம்
என்றால் 40 நாட்களுக்கு மேலே இருக்கக் கூடாது என்ற நிய
தியை வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு மூன்று மாதங்
களுக்கொருமுறை 10 நாட்களோ, 15 நாட்களோ கூட்டத்தைக்
கூட்ட வேண்டும். அவ்வாறு வைத்து அன்றாடம் வரக்கூடிய
பிரச்சினைகளை வெகு விரைவில் தீர்க்கக்கூடிய நிலைமையை
உருவாக்க வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் பெண் உறுப்பினர்களுக்கு
முன்பு சர்வீஸ் கமிஷனுக்கு எதிரே இருக்கும் விடுதியில் அறைகள்
கொடுத்திருந்தார்கள். இப்போது அந்த ஹாஸ்டலை பார்ட்டி
களுக்கு கொடுத்திருக்கிறார்கள். அந்த விடுதியில் பெண் உறுப்
பினர்களுக்கு அறைகளைக் கொடுத்தால் அது சாலச் சிறந்ததாக
இருக்கும். மற்ற விடுதிகளில் எல்லா அறைகளையும் சேர்த்து
ஆண் உறுப்பினர்களுக்கு கொடுத்து விடலாம். சட்டமன்ற
உறுப்பினர்களுக்கு எத்தனையோ வசதிகளை செய்து கொடுத்து

[திரு. என். ஏ. பூங்காவனம்] [1983 ஏப்ரல் 19

அதற்கு இந்த முறையில் நடவடிக்கை எடுப்பதாக அரசு சொல்லி இருக்கிறது என்று பதில் வந்தால் அதை மக்களிடம் சொல்வதற்கும் அந்த நடவடிக்கையை தொடர்ந்து செய்வதற்கும் உதவிகரமாக இருக்கும்.

(பிற்பகல் 12.40)

ஆகவே அந்தக் கடிதங்களை உடனுக்குடன் அனுப்புவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளிலே பணியாற்றக் கூடிய நேரத்திலே ஒரு எழுத்தரை—கிளார்க்கை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் அரசு. ஏன் என்று சொன்னால் கணக்கற்ற முறையில் மக்களிடமிருந்து கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஒன்றியங்களிலே எங்களுக்கு தரப்பட்டுள்ள அறையிலே அந்த எழுத்தரும் இருந்து அவைகளின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். ஆகவே எழுத்தர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றத் துறையிலே சேர்ந்து பணியாற்றக் கூடிய ஊழியர்கள் 8, 10 ஆண்டுக்காலமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரையில் பணிகள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறது. அது மாத்திரம் அல்ல, வேறு துறைக்குப் போக வேண்டுமானால் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக அனுப்பப்படுகிறவர்களைத் தான் அங்கேயும் எடுப்பார்கள். தமிழ் நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலமாகக் கிடைக்கக் கூடிய நிலையை வைத்துக்கொண்டு இங்கே சட்டமன்ற ஊழியர்களை இன்றைக்கு, நாம் அவர்களுக்கு என்றைக்கு வேலை கிடைக்கும் என்ற நிலையற்ற நிலைமை நம் முன்னாலேயே இருக்கிற காரணத்தினால் அவர்களுக்கு எல்லாம் சர்வீஸ் என்ற அடிப்படையிலே வேலை வாய்ப்புக் கொடுத்து நிரந்தரமாக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து காவலர்களுக்குப் படி. காலையில் ஒரு நாளைக்கு காபி, நாஸ்டா பண்ணக்கூடப் போதாது இந்த 4 ரூபாய் படி. வெறும் 4 ரூபாயை காவலர்களுக்கு படி. கொடுத்தால் அது எந்த வகையிலே பொருந்தும், எப்படி சரியாக இருக்கும் என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை மனிதாபிமானத்தோடு அணுக வேண்டும். அதை காவலர்களுக்கு உயர்த்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 19] [திரு. என். ஏ. பூங்காவனம்]

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் பணியாற்றக் கூடிய சுகாதாரப் பணியாளர்கள், நகராட்சிகளில், ஊராட்சிகளில் வேலை செய்கின்ற டெம்பரரி தொழிலாளர்களின் கூலியே அங்கே 9 ரூபாய் என்றால் இங்கே 4.50 தான் இவர்களுக்குத் கொடுக்கப்படுகிறது. இங்கே தலைமையகத்திலே சட்டமன்றத் திலே இப்படி கூலியைக் கொடுத்துவிட்டு கீழே உள்ள இடங்களிலே நகராட்சிகளிலே, ஊராட்சிகளிலே ஜாஸ்தியாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அது சரியாக இருக்குமா என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறையோடு கலந்து பேசி அவர்களுக்கு அதிகமாகத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களாக இருந்தவர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையிலே, 50, 52 என்ற அடிப்படை பிரச்சினை எழுப்பப் பட்டு இருக்கிறது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தேசிய இயக்கக் காலத்திலே போராட்டத்திலே ஈடுபட்டவர்களும் அதிலே இல்லாதவர்களும் என்று பார்த்து 46-க்கும் 52-க்கும் இடைப்பட்ட காலத்திலே 50-லிருந்து ஒரு பகுதியாகவும் 52-ல் இருந்து ஒரு பகுதியாகவும் கொடுக்கப்பட்டது. அரசு இதனைப் பரிசீலனை செய்து மற்ற உறுப்பினர்களுக்கு என்ன தரப்படு கிறதோ அதே வசதியை அவர்களுக்கும் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வயதானவர்கள், ஒரு குறிப்பிட்ட எல்லையைக் கடந்தவர்கள் தான் அந்த 46-லிருந்து 52-க்கு வருகிறவர்களாக இருப்பார்கள். ஆகவே அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திரு. கிட்டப்பா அவர்கள் இங்கே சொன்னது மாதிரி 3 பாஸ் உறுப்பினர்களுக்கு இருக்குமானால்—அதைக் குறைத்து—இவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதுள்ள தேர்தல் முறை சம்பந்தமாக பல்வேறு சிக்கல்கள், வாக்கெடுப்பு, தேர்தல் நடக்கிற முறைகள் இவைகளைப் பற்றி எல்லாம் எனக்கு முன்னாலே பேசிய தோழர்கள் எல்லாம் நிறையச் சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள டெலிபோன் வசதிகள் சம்பந்தமாக சொல்ல விரும்புகிறேன். கடந்த $1\frac{1}{2}$ மாத காலமாக என்னுடைய அறையிலே ஒருநாள் கூட டெலிபோன் வேலை செய்யவில்லை. பலமுறை இதைப்பற்றி புகார் பண்ணியும் போன் வேலை செய்யவில்லை என்ற சூழ்நிலை இருக்கிறது.

இருக்கிறீர்கள். நீங்கள் ஜீப்பை கொடுத்திருக்கிறீர்கள். அந்த ஜீப்பிற்கு ஒரு மாதத்திற்கு 50 லிட்டர் பெட்ரோல் போட்டுக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அவைகள் எல்லாம் மிகவும் பாராட்டத்தக்கவை. கார் இல்லாத எங்களைப் போன்ற சாதாரண எம்.எல்.ஏ.க்களுக்கு தொகுதியில் மக்களை சந்திப்பதற்காக இந்த நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறீர்கள். இவைகளைத் தவிர எங்களுக்கு நிறைய தபால்கள் வருகின்றன. மக்களிடமிருந்து குறைபாடுகள் பல வருகின்றன. இவைகளை எல்லாம் எங்களால் சரியாக கவனிக்க முடியவில்லை. எனவே யூனியன்களில் எப்படி சேர்மேனிற்கு ஒரு கிளார்க் என்று வைத்திருக்கிறோமோ அதைப் போல. சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கிளார்க்கை கொடுக்க வேண்டும் என்னுடைய தொகுதியில் இரண்டு யூனியன்கள் இருக்கின்றன. அந்த யூனியன்களில் எங்களுக்கு அறைகள் எல்லாம் கொடுத்து இருக்கிறீர்கள். அதிலே அமர்ந்துகொண்டு நாங்கள் வேலை செய்கிறோம்.

(பிற்பகல் 12–50)

ஒரு கிளார்க்கையும் கொடுத்துவிட்டால், எங்களாலே எல்லா வேலைகளையும் செய்ய முடியாத நிலைமையிலே, எங்களுக்கு வருகின்ற தபால்களை அவர்கள் பார்ப்பார்கள். நாங்கள் சென்று தினசரி அந்த வேலைகளைப் பார்த்து முடிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற சூழ்நிலையில் கண்டிப்பாக கிளார்க்-கம்-டைப்பிஸ்ட் ஒருவரை நீங்கள் கொடுத்துவிடுங்கள். அப்படி கொடுப்பதற்கு நீங்கள் தயங்கினால், பாதிச் சம்பளம் நீங்கள் கொடுங்கள்; யார் வைத்துக் கொள்ளவேண்டுமென்று விரும்புகிறோமோ, அவர்கள் பாதிச் சம்பளம் கொடுத்து ஒரு கிளார்க்கை வைத்துக் கொள்ள வழி செய்ய வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, பழைய எம். எல். ஏக்கள், 1946, 1950-ல் இருந்தார்களே, அவர்கள் 50, 60 பேர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுத்திருக்கின்றீர்கள். அவர்களுக்கு ஓய்வூதியம் 1980-லிருந்து ரெட்ராஸ்-பெக்டிவ் எபெக்ட் இல்லாமல், 1982-லிருந்துதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இந்தச் சட்டத்தை நாம் எப்பொழுது இன்ட்ரடியூஸ் செய்தோமோ மார்ச் 1980-லிருந்து என்று நினைக்கிறேன்—அதிலேயிருந்து, ஓய்வூதியம் கொடுக்க வேண்டும். பாவம் ஏழைகள் ; அன்றைக்கு எம். எல். ஏக்களாக இருந்தவர்கள். இன்றையதினம் வயதானவர்கள். இன்னும் கொஞ்ச நாள் இருப்பார்கள். அப்படிக் கொஞ்ச காலம் இருக்கக்கூடியவர்களுக்கு அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டும்.





அதோடு அவர்களுக்கு மெடிக்கல் எய்ட் தருகிறீர்கள். அதுவும் பாராட்டக்கூடிய அம்சமே. ரூ. 200 என்று இருப்பதை ரூ. 300 ஆக்கிக் கொடுத்தால், அது சற்று சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு இங்கே அங்கத்தினர்கள் சொன்னார்கள். இங்கே காபி கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். காபி விற்கின்ற இடத்தில் கடந்து கூட போக முடியவில்லை. கிராஸ் பண்ணிப் போக முடியவில்லை. ஆண்களுக்கு என்று தனியாக லவுஞ்ச் இருக்கிறதே, அது ரொம்ப மோசமாக இருக்கிறது. நேற்றையதினம் என்னைப் பார்க்க வந்தவர்களை, அழைத்துச் சென்று அந்த அறையிலே உட்கார வைத்துப் பேசினேன். அங்கிருந்த சோபா எல்லாம் பிய்ந்து போயிருக்கிறது. எங்களுக்கு ரொம்ப நன்றாக இருக்கிறது ஐயா, அதை நான் ரொம்பப் பாராட்டுகிறேன். ஆனால், ஆண்கள் இருக்கக்கூடிய லவுஞ்ச் அறை மிக சிறிதாக இருக்கிறது. அடுத்து அந்த சோப்பாக்கள் பிய்ந்து போயிருக்கிறது. அதை மாற்றிப் பெரிய அறையாக கொடுக்க வேண்டும்.

அது மட்டுமல்லாமல், பஸ்ஸுக்கு இப்பொழுது பாஸ் கொடுத்திருக்கிறீர்கள். அது ரொம்ப மரியாதையாக இருக்கிறது. ஆனால், ரெயில்வே கூப்பன் கொடுத்திருக்கிறீர்களே, அந்த ரெயில்வே கூப்பன் ரூ. 5, ரூ. 1, ரூ.0.50 காசு. நாங்களே சென்று ரிசர்வ் செய்ய முடியவில்லை. யாரிடமாவது கொடுத்தால், போயா, 50 பைசா என்று தூக்கி எறிகிறார்களாம். இது தேவையில்லை. எப்படி பார்லிமென்டில், ஒரு பார்லிமெண்ட் அனெக்சர் என்று வைத்து, உறுப்பினர்களுக்கு டிக்கட்டெல்லாம் ரிசர்வ் செய்ய வழி செய்யப்பட்டிருக்கின்றதோ, அதே மாதிரி, இங்கேயும் சட்டசபைக்கு என்று ஒரு அனெக்சர் வைத்து, இந்த டிக்கட்டுகள் ரிசர்வ் செய்ய வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுத்தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அவையின் அன்றாட நிகழ்ச்சிகள் தவறாமல் புத்தக ரூபமாக, முந்தைய காலங்களில் எல்லாம் வந்து கொண்டிருந்தன. நான் சென்ற முறை இந்த அவையிலேயே சொல்லியிருக்கிறேன். கெசட் சரியாக வருவதில்லை. இங்கே நடக்கக்கூடிய நிகழ்ச்சிகள் அந்தப் புத்தகங்கள்—சரியாக வருவதில்லை. குறிப்பாக, என்னைப் பொறுத்தவரையில், சரியாக வருவதில்லை. சில சமயங்களில் 3 புத்தகம், 4 புத்தகம் என்று வருகிறது. அந்தப் புத்தகம் கூட கவுன்சில் நடவடிக்கை நிகழ்ச்சிகள்தான். இந்தச் சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றிய புத்தகம் வருவதில்லை. அதைக் கண்காணித்து, வரவழைப்பதற்கு நீங்கள் உடனடியாக உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1983 ஏப்ரல் 19

அது மட்டுமல்லாமல், எப்படி பஞ்சாயத்து யூனியன்களிலே
எம். எல். ஏ.க்களுக்கு ஒரு கிளார்க் வேண்டுமென்று கேட்கின்
றோமோ, அதைப் போன்று முனிசிபாலிட்டிஸ், நகரசபைகள்,
கார்ப்பரேஷன்களிலே கூட எம். எல். ஏக்களுக்கென்று ஒரு
அறை ஒதுக்கி, கொடுப்பது மாத்திரமல்லாமல், அங்கும் கிளார்க்
கொடுக்க ஏற்பாடு செய்தால்தான் சாலச் சிறந்ததாக இருக்கும்
என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு கடன்களால் பல விவசாயிகள் மிகவும்
பாதிக்கப்படுகிறார்கள். மழையில்லாத நிலைமையில், விவசாயி
கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட முடியாமல் பாதிக்கப்
படுகிறார்கள். காலையிலே, கேள்வி நேரத்திலே, கையை உயர்த்
திக் கொண்டிருக்கும்போது கூட, நம்முடைய மாண்புமிகு
தலைவர் அவர்கள் கூப்பிடாமல் விட்டுவிட்டார்கள். ஓரிடத்
திலே பழைய காலத்துக் கிணறு இருக்கும், அதை அடுத்து
இன்னொருவர் தன் நிலத்தில் ஒரு கிணறு வெட்டியிருப்பார்.
இப்படி என்றைக்கோ வெட்டிய கிணறுகளுக்கு இன்று
கிணறு வெட்ட லோன் கிடைப்பதில்லை என்றால் அது
எப்படி விவசாயிகளுக்குப் பொருந்தும் என்பதை ஆராய
வேண்டும். அப்படி இருக்கும் பழைய காலத்தில் வெட்டப்
பட்டுள்ள கிணறு அருகில் இருந்தால் ப..ய கிணறாக இருந்
தால்கூட, கண்டிப்பாக கடன் கொடுத்து, அந்த விவசாயிகளை
ஊக்குவிக்கும் முறையிலே நடந்து கொள்ளவேண்டும். அதோடு
அவர்கள் வாங்கிஇருக்கக்கூடிய கடன்கள் பற்றி ஒவ்வொரு இடத்
திலும் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்கின் அடிப்
படையிலே, இந்தக் கடனைச் சற்றுத் தள்ளிவைப்போமானால்,
அல்லது ஏழை விசவாயிகளுக்கு முழுதாகத் தள்ளிக் கொடுக்க
வழி செய்து கொடுப்போமானால் அதுவும் சற்றுச் சாலச் சிறந்த
தாக இருக்கும்.

அதோடு இன்றைக்கு நாம் துணிகள் கொடுக்கின்றோம், இத
னால், கிராமங்களிலே ஏற்பட்டிருக்கக்கூடிய கஷ்டம் இருக்கிறதே.
அது உண்மையிலேயே என்னவென்றால், தாங்கக்கூடிய கஷ்டம்
அல்ல. ஒவ்வொரு ஊரிலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே
உள்ளவர்களுக்கு, நிலம் இல்லாதவர்களுக்கு, சேலை, வேஷ்டி
கொடுப்பதாக இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு புறம் வர
வேற்றாலும் சில பேர்களுக்குக் கொடுத்துவிட்டு பல பேர்களுக்கு
கொடுக்காமல் விட்டுவிடுவது எங்களைப் போன்ற எம். எல். ஏக்
களுக்கும் தொந்தரவு, இந்த அரசிற்கும் கெட்ட பெயர் ஏற்
பட்டுவிடும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல
பேர்களுக்கு துணிகள் கொடுக்க முடியாத நிலையில் நல்லது செய்ய
வேண்டுமென்று அரசு இப்படிச் செய்கின்ற நேரத்தில் அரசுக்கு
கெட்ட பெயர் வந்து விடுகின்ற நிலைமைகள் ஏற்படுகின்றன
எம். எல். ஏ., தொகுதிக்குச் சென்று சுற்றிப் பார்க்கின்ற நேரத்



1983 ஏப்ரல் 19] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

தில், அவர்களுக்குக் கொடுத்தார்கள் எங்களுக்குக் கொடுக்க
வில்லை என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே,
இப்படிப்பட்ட நிலைமை தேவையானதுதானா என்பது பற்றி மறு
பரிசீலனை செய்யுங்கள். கொடுப்பது என்றால் எல்லா ஏழை
களுக்கும் கிராம சேவக்குகளின் மூலமாக வீட்டுக்கு வீடு கொடுக்க
ஏற்பாடு செய்யுங்கள் ; இல்லையென்று சொன்னால் நிறுத்தி
விடுங்கள் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்
படுகிறேன்.

இன்றைக்குப் பாராளுமன்றத்தில் இருப்பவர்களுக்கு பிளேனில்
செல்ல வசதி இருப்பது மாதிரி நமக்கும் இருக்க வேண்டும்.
அதாவது நாம் ஒரு முறை அவசியம் அவசரம் என்றால் உடனடி
யாக வர முடிவதில்லை. டிரெயின் மூலம் வருவது என்றால்
முடிவதில்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் பிளேனில்
வருவதற்கு அனுமதி வழங்கினால் சாலச் சிறந்ததாக இருக்கும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சென்ற முறை சொன்னேன். ஹாஸ்டல் கட்டிடம்
மேலே உடைந்திருந்தது என்று. இந்த முறை கீழே கீன்றாவது
மாடியில் மறுபடியும் விட்டுப் போய்விட்டது. இப்படிப்பட்ட
நிலைமைகளை உடனடியாகக் கண்காணித்து அந்தக் குறைபாடு
களை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து இங்கே ஒரு கான்டீன் வைக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். இப்பொழுது இங்கே சாப்பிடக் கூடிய நிலை
மையை மாற்றி, ஒரு ரூம் வைத்து, கிராமோத்ய பவன் அங்காடி
யின் மூலமாக ஒரு கான்டீன் வைத்து, காப்பி, டிப்பன் ஆகியவை
கள் கிடைக்கும்படி செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று
கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர்களுக்கு
நன்றி கூறி என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்
கிறேன்.

திரு. கு. முத்துக்கிருஷ்ணன் : தலைவரவர்களே, மாநிலச்
சட்டமன்றம், தேர்தல்கள் மற்றும் இன்னும் உள்ள பல்வேறு
மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய சில கருத்துக்களை
எடுத்துச் சொல்கிறேன். தமிழ்நாட்டின் சார்பிலே இப்பொழுது
பாராளுமன்றத்திற்காக இருக்கக்கூடிய எம்.பி.க்களின் எண்
ணிக்கை 39 ஆக இருப்பதை உயர்த்தி, மத்திய அரசு எப்படி
இந்த மாநிலத்திலே 6 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு
பாராளுமன்ற உறுப்பினர் என்ற கணக்கை வைத்திருக்கிறார்
களோ அதை மாற்றி, 5 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு
பாராளுமன்ற உறுப்பினர் என்ற நிலையை ஏற்படுத்தினால்
கூடுதலாகத் தமிழ் நாட்டிலேயிருந்து எட்டு பாராளுமன்ற உறுப்

[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] [1983 ஏப்ரல் 19

பினர்கள் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. பல்வேறு மாநிலங்
களில், உதாரணமாக உத்தரப் பிரதேசத்தை எடுத்துக்கொண்
டால் அதுபோன்ற நிலைமைகள், ஐந்து சட்டமன்ற உறுப்பினர்
களுக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற நிலை இருக்கிறது.
ஆகவே, தமிழ்நாட்டிலே 39 ஆக இருக்கின்ற பாராளுமன்ற
உறுப்பினர்கள் எண்ணிக்கை 47 ஆக உயர்த்தப்பட வேண்டும்
என்பது தமிழ் நாட்டினுடைய நியாயமான கோரிக்கை என்
பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.
எனவே 5 சட்டமன்ற உறுப்பினர்களின் அந்த எல்லைக்குள் ஒரு
பாராளுமன்ற உறுப்பினர் என்ற எண்ணிக்கையை ஏற்படுத்து
வதற்குத் தமிழக அரசு முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே 234 சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி
கள் இருப்பதையும் புனர் ஆலோசனை செய்து இந்தச் சட்ட
மன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையையும் இன்னும் அதிகப்
படுத்த வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்றத் தொகுதிகளைப் பொறுத்தவரையில் பல ஆண்டு
களுக்கு முன்பு ஏற்கனவே செய்யப்பட்ட ஒரு அமைப்பின் அடிப்
படையிலே, அதே சட்டமன்றத்திற்கான கிராமங்கள் சேர்ந்த
அந்த நிலை இருக்கிறது. குறிப்பாகச் சில சட்டமன்ற தொகுதி
களுக்கு உட்பட்ட சில கிராமங்களைப் பொறுத்தவரையில்
அந்தக் கிராமங்களில் வாழுகின்ற மக்கள் பல்வேறு சிரமங்களை
அடைய வேண்டியிருக்கிறது.

குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற ஒரு
கிராமத்தைப்பற்றி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நாகர்
கோவிலுக்கு அடுத்தப்படியாக கன்னியாகுமரி நகரத்திற்கு நடு
விலே புத்தேரி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்
திற்குச் சட்டமன்றத் தொகுதி என்று பார்த்தால் கொளச்சல்
தொகுதியில் உள்ளது; இராஜாக்கமங்கலம் பஞ்சாயத்து யூனி
யனில் இருக்கிறது; ரெவின்யூ வில்லேஜ் என்று எடுத்துக் கொண்
டால் நாகர்கோவில் ரெவின்யூ வில்லேஜில் இருக்கிறது. அங்
குள்ள மக்கள் ஓட்டு போட வேண்டுமென்றால், சட்டமன்றத்
தொகுதி கொளச்சல் தொகுதி; பஞ்சாயத்து யூனியன் இராஜாக்க
மங்கலம், ரெவின்யூ வில்லேஜ் நாகர்கோவில். இப்படி
எந்தச் சம்பந்தமுமே இல்லாமல் நாகர்கோவில் தொகுதி
இருக்கிறது. அதில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்திருக்கலாம்.
அடுத்த ஒரு பர்லாங் தூரத்திலே கன்னியாகுமரி இருக்கிறது.



1983 ஏப்ரல் 19] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

(பிற்பகல் 1-00)

இந்த கன்னியாகுமரி தொகுதியிலே வைத்திருக்கலாம். அந்தத்
தொகுதியை ஒரு சம்பந்தமும் இல்லாமல் பிரிப்பது என்பது
மிக மிக தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமைகிறது என்
பதை நான் எடுத்துச் சொல்லவிரும்புகிறேன்.

ஆகவே அந்த புத்தேரி கிராமத்தை கன்னியாகுமரியோடு
சேர்க்கவேண்டும், இல்லையென்றால், நாகர்கோயிலோடு சேர்க்க
வேண்டும். அவ்வாறு செய்வதுதான் நியாயம், என்பதை இந்த
நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்படிடிருக்கிறேன். தமிழ்
நாட்டில் இதுபோன்ற கிராமங்கள் அந்தந்த சட்டமன்றத்
தொகுதியில் அடங்கியிருக்கிறதா, இல்லையா என்பதைப் பார்த்து
இல்லையென்றால், அதைப் பிரித்து பக்கத்தில் இருக்கின்ற தொகு
தியில் சேர்க்கவேண்டும். இதுபோன்ற பகுதிகள் தமிழ்நாட்
டில் ஏராளமாக இருக்கின்றன. நான் உதாரணத்திற்காக கன்னி
யாகுமரியைக் குறிப்பிட்டேன். தயவு செய்து இதை புனர் பரி
சீலனை செய்வதற்கு தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று இந்த் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்
கிறேன்.

எனக்கு முன்னால் இங்கே பேசிய அருமை நண்பர் சட்ட
மன்ற உறுப்பினர், வேட்டி சேலை கொடுப்பது என்பது, அது
வும் தேர்தல் நேரத்திலே கொடுப்பது போல் ஆகாதா? அது
ஓட்டு சலுகைக்காக கொடுக்கப்படுகின்றது என்ற காரணத்தைக்
கற்பித்துபேசுகிறபோதுசொன்னார்கள். இதைத்தான் நான்சொன்
னேன். ஒரு மாத காலமாக பல்வேறு கட்சிகளின் தரப்பிலே
பல்வேறு உறுப்பினர்கள் பேசினார்கள். வேட்டி, சேலைகள்
கிராமங்களிலே இருக்கின்ற அந்த ஏழை எளிய மக்களுக்கு
கொடுப்பது என்பது, தமிழ்நாட்டில் இப்போது எந்தத் தேர்
தலும் இல்லை. எந்தத் தேர்தலும் நடைபெறவில்லை. ஆக
வே இந்த நேரத்தில், தேர்தல் நடைபெறாத நேரத்தில், தமிழக
அரசு ஒரு நல்ல காரியத்தைச் செய்கிறபோது நீங்கள் எதற்கு
தேர்தலுக்காக கொடுக்கப்படுகிறது என்ற குற்றச் சாட்டைச்
சொல்வது உண்மையிலே வருத்தத்திற்குரியது என்று இந்த
நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது
மட்டுமல்ல, இதைத் சொல்வதற்குக் காரணம், மத்திய அரசு
தண்ணீரை இப்போது ரயில் மூலமாக........

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு உறுப்பினர் முத்துக்
கிருஷ்ணன் அவர்கள் நான் சொன்னதை புரிந்துகொண்டாரா,
அல்லது மாற்றிச் சொல்கிறாரா என்று தெரியவில்லை. நான்
சொல்ல விரும்புவது, வேஷ்டி, சேலைகளை தாராளமாகக்
கொடுக்கவேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு மட்டு
மல்ல, அவர்கள் குடும்பத்தினர் அத்தனை பேருக்கும் கொடுக்க

வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அறிவிப்பதற்கு முன்னால் கொடுங்கள். தேர்தல் தேதியை அறிவிப்பதற்கு முன்னால், தேர்தலுக்காக தேர்தல் தேதியை ச்லுகையாக அது ஆகாதா என்று தான் நான் கேட்டேன். கொடுக்கப்படுகின்ற

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் சொன்னார்கள் என்று நான் சொல்ல வில்லை. சில உறுப்பினர்கள் தேர்தலுக்காக, இந்தப் பணி நடைபெறுகிறது என்று பேசியிருக்கிறார்கள். திரு வரதராஜன் சொன்ன கருத்தை நான் வரவேற்கிறேன். தமிழக அரசைப் பொறுத்தவரையில், இதுபோன்ற குற்றச்சாட்டை சொல்கிற உறுப்பினர்களுக்கு நான் சொல்கிறேன். தமிழ்நாட்டிலே இப் போது எந்தத் தேர்தலும் நடைபெறாத நேரத்திலே, வேட்டி சேலைகள் கொடுப்பது அரசியல் என்று சொன்னால், மத்திய அரசு, இப்போது ரயில்வே வேகன்கள் மூலம் தண் ணீர் கொடுக்கிறார்கள். அது அரசியல் இல்லையா? அதை நீங்கள் எதிர்க்கிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் ஏன் எதிர்க்கவில்லை என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள் கிறேன்.

திரு என். எஸ். வி. சித்தன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் திரு முத்துகிருஷ்ணன் அவர்கள் பேச ஆரம்பித்து எங்கேயோ போகிறார்கள் என்று நான் கருதுகிறேன். தமிழ்நாட்டில் நிலவும் கடுமையான வறட்சியின் கொடுமையால் அவதிப்படும் மக்கள் நிலையைக் கண்டு, மத்திய அரசு தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். அந்த நல்ல முயற்சியை நாம் வர வேற்கவேண்டும். இது மாதிரி திசை திருப்புகின்ற அளவிற்கு உறுப்பினர் போகவேண்டாம். அரசியலுக்காக மத்திய அரசு செய்ய வேண்டிய அவசியமில்லை. மக்களுடைய அவதியைப் போக்க அவர்கள் தண்ணீர் கொடுக்கிறார்கள். தயவு செய்து உறுப்பினர்கள் இதை உணரவேண்டும்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : நான் முதலிலே சொன்ன கருத்தை அவர்கள் கவனித்திருந்தால், இதை அவர்கள் சொல்லி யிருக்க மாட்டார்கள். வேட்டி சேலைகள் கொடுக்கின்ற போது, அந்த ஒரு நல்ல காரியத்தை அரசியலாக்கிச் சொன் னார்கள். இந்தக் குறையைச் சொல்லி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலுக்காக மக்களைக் கவர்வதற் காக, இதைக் கொடுப்பதாக அரசியல் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் பேசியிருக்கிறார்கள். அவர்களுக்குக்காக தான் நான் இதைப்பற்றி சொன்னேன். அப்படியென்றால், மத்திய அரசு இப்போது தண்ணீர் கொண்டுவந்து கொடுத் திருப்பதை ஏன் குறை சொல்லக்கூடாது என்பதற்காக அதைச்



சொல்கிறேன். மாமியார் உடைத்தால் மண்குடம், மரு மகள் உடைந்தால் பொன்குடம் என்ற பழமொழியை இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக பல்வேறு மாவட்டத் தலைநகரங்களிலேயும் மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்திலே பல்வேறு புகார்களைக் கொடுக்கிறார்கள். இந்தப் புகார்கள் கொடுத்த பின்னால் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலே யிருந்து பி.ஏ. ஜெனரல் அவர்கள் இது சம்பந்தமாக அதை விசாரித்து அதற்கான பதில்களை மக்களுக்கு அனுப்புவதற்கு பதிலாக, கன்சல்ட் டிபார்ட்மென்ட்டுக்கு அனுப்புகிறார்களே தவிர, அதைத் தொடர் நடவடிக்கையாக, அந்தக் கோரிக்கை யினுடைய நோக்கும் முடிவைப் பற்றி மக்களுக்கு உரிய நல்ல தகவல்கள் உண்டா, இல்லையா, இருக்கிறதா, அல்லது செய்யப்படுமா என்ற தகவல்களைத் தருவதற்கு, அதற்கான தனி அலுவலகத்தை ஏற்படுத்தி எப்படி பெட்டிசன் கொடுக்கி றார்களோ, அதேபோல் அந்த பெட்டிசன் மீது நடவடிக்கை எடுத்து பல்வேறு இலாக்காக்களிலேயிருந்து தகவல்களை வாங்கி மக்களுக்கு பதில்களைச் சொல்லவேண்டிய ஒரு நல்ல சூழ்நிலையை இந்த அரசு செய்யவேண்டும். அதற்கு ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்திலே அதற்காக, அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் தனி அலுவலகம் ஒன்றை அமைத்துக்கொடுக்கவேண்டும் என்பதை இந்த நேரத் திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து புதிய சட்டசபையை திருச்சியிலே கட்டவேண்டும் என்று நான் முன்பேகூட சொல்லியிருக்கிறேன். சென்னையிலே இல்லாமல் திருச்சியிலே இந்தச் சட்ட மன்றம்— தலைநகரை மாற்றுகின்ற பிரச்சினை போல்— திருச்சியிலே இந்த அமைப்பை ஏற்படுத்தித் தரவேண்டும்.

அடுத்து எம்.எல்.ஏக்களுக்கு சம்பள உயர்வு பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசுகின்றபோது ஏதோ சட்ட மன்ற உறுப்பினர்கள் சம்பளத்தைக் கூட்டிக் கொடுத்தால் மக்கள் தவறாக நினைப்பார்கள் என்று கூட சொன்னார்கள். நான் அவர்களுக்கு பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன். ஒரு சாதாரண செகன்ட்ரி கிரேட் டீச்சர் அல்லது எல்.டி.சி., கூட வாங்குகின்ற சம்பளம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் வாங்குகிறார்கள். ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் தான் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள் என்று கருதாமல், ஒரு எல்.டி.சி., யு.டி.சி., கூட ஆயிரம் ரூபாய்க்கு மேல் வாங்குகிறர்கள், ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கூடுதலாகச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சொல்லக்கூடாத செலவு. நம் ஊரில் பஞ்சாயத்தில் எழுது வார்கள்—கன்னாபின்னா செலவு என்று. அந்தச் செலவிலே இதைச்சேர்த்து இருக்கிறீர்கள். ஆனால் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், நீங்கள் எவ்வளவு ''அதர் அயிட்டம்ஸ்'' என்றதில் ஒதுக்கியிருக்கிறீர்கள் என்றால், 1981 ஆம் ஆண்டு· 33·57 லட்சம். 1982–83 பட்ஜெட் எஸ்டிமேட் 33·75 லட்சம். ஆனால் ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் 34·27 லட்சம். இந்த ஆண்டு எவ்வளவு ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்றால், போன ஆண்டு 34 லட்சம் செலவு, இந்த ஆண்டு, 33·83 லட்சம். ஒரு லட்சம் குறைந்துபோய் இருக்கிறது. ஆக அமைச்சர்களுக்கு வருகிற அதர் எக்ஸ்பென்சிலே மட்டும். இந்த ஆண்டு கூடுகிறது. ஆண்டுக்காண்டு, ஏறிக்கொண்டு போகிறது ஆனால் சட்டமன்றத்திற்கு ஒதுக்கப்பட்டு இருக்கும் அதர் அயிட்டம்ஸீல் ஆண்டுக்காண்டு அதே நிலை நீட்டிக்கிறதே என்ன காரணம்? அமைச்சர்களுக்கு மட்டும் இந்த ஆண்டு 36 லட்சம் ரூபாய்க்குமேல் ஒக்கிதுயிருக்கிறீர்களே, அதர் அயிட்டம்ஸுக்காக அப்படி என்ன உங்களுக்கு மகத்தான செலவு? சம்பளம் கொடுக்கப்படுகிறது. மற்றவைகள் எல்லாம் செய்த பிறகு, விருந்தோம்பலுக்கு செலவு ஒதுக்கிய பிறகு, அதர் ஐயிட்டம்ஸுக்கு 36 லட்சம் நீங்கள் ஒதுக்கிக்கொண்டு, சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், 33 லட்சம் ஒதுக்கியிருக்கிறீர்களே, இது என்ன நியாயம். அப்படி அந்த ஒரு லட்சத்திற்குக் கூட நாவலர் அவர்கள் விளக்கம் போட்டு இருக்கிறார். கீழே ரிவைஸ்டு எஸ்டிமேட் 1982–83 என்று போட்டு, ஏன் ஏறிற்று என்று கேட்டால், அங்கத்தினர் ''பார்-ஈஸ்ட் கன்ட்ரீசுக்கு'' போனார்கள். ஆகையால் கிட்டத்தட்ட நாலு லட்சம் ரூபாய் வரும். நான் ஒப்புக் கொள்கிறேன். எங்களுக்குச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், அதர் ஐயிட்டம்சில் அதிகமான தொகைக்கு ஒரு விளக்க நோட் கொடுத்து இருக்கிறபோது, அமைச்சரவர்களுக்கு அதிகமாகயிருக்கிறதே, அதற்கு ஏன் ஒரு விளக்கக் குறிப்பு தரவில்லை உறுப்பினர்கள் மேற்கத்திய நாடுகளுக்குப் போனார்கள். ஆகையால் 4 லட்சம் செலவு, இந்த ஆண்டு அதர் அயிட்டம்ஸ்களில் செலவு ஏறியிருக்கிறது என்று விளக்கம் இருக்கிறது. ஆனால் அமைச்சரவர்களுக்கு மட்டும் 81-ஆம் ஆண்டு 31 லட்சம் இந்த ஆண்டு 36 லட்சம் என்று சொன்னால், கிட்டத்தட்ட 4 லட்சம் ஏறியிருக்கிறதே, அதற்கு என்ன விளக்கம். ஏன் அதைக் குறிப்பிடவில்லை என்று நான் கேட்க கடமைப்பட்டு இருக்கிறேன். நாவலர் அவர்களிடத்தில் நான் கேட்டுக் கொள்வது எல்லாம், இப்படி சட்டமன்றத்திற்கும் புலப்படாத இப்படி ஒரு நிலையை— இந்திரன் கண்போல்—நீங்கள் மறைத்து வைக்கக் கூடாது என்று நான் கேட்டுக் கொண்டு விளக்கமாக அடுத்து ஆண்டு இவைகளுக்கு விளக்கம் தரவேண்டும் அல்லது தாங்கள் பேசுகிறபோது தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னொன்று. இந்த சட்டமன்றத்தைப் பொறுத்தவரை முக்கியமாக குறிப்பிட விரும்புவது லைப்ரரி பற்றி. இந்த லைப்ரரிக்கு எல்லா சட்டமும் வருகின்றன. பாவம். எல்லா மாநிலங்களிலும் லைப்ரரி கமிட்டி என்று ஒன்று உண்டு. சமீபத்தில் நான் டெல்லிக்குப் போயிருந்தேன். அங்கே நம்முடைய துணை சபாநாயகர் திரு. இலட்சுமணன் லைப்ரரி கமிட்டிக்கு, அந்த செமினாருக்கு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் அதற்காக வரவில்லை என்று சொன்னேன். குறிப்புகளை எடுத்துப் பார்த்தார். நம்முடைய தலைவர் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றத்தில் லைபரரி கமிட்டி என்று ஒன்று கிடையாது என்று எழுதியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் இருக்கும்போது இந்த மாநிலத்தில் மட்டும் லைப்ரரி கமிட்டி ஏன் அமைக்கவில்லை? இங்கேயும் அப்படி ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருந்தால் மற்ற மாநிலங்களோடு நாமும் போய் உட்கார்ந்து விவாதிக்க அல்லது வேறு பல கருத்துக்களைச் சொல்ல வசதியாக இருக்காதா ? சில நேரங்களில் சில கமிட்டிகள் வருகின்றன. அப்படி வருகின்ற நேரத்திலே யார், யாரையோ அனுப்புகிறார்கள். அதைப்பற்றி நான் குறைசொல்ல வில்லை. Seminar on Parliamentary Research and Procedure for Asia, South East Asia and African regions Commonwealth Parliamentary Association

என்று ஒரு செமினார் நடந்தது டெல்லியிலே. எப்போது ? 1982 ஜனவரி 21. அந்த கமிட்டிக்கு நம்முடைய சட்டமன்றத்தின் சார்பில் ஒரு அங்கத்தினர் அனுப்பப்படுகிறார். அங்கே யார், யார் வருகிறார்கள்? இதயதுல்லா வருகிறார், பல்ராம் ஜக்கர் வருகிறார், இன்னும் வேறு நாடுகளிலிருந்து எல்லாம் வருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அந்த செமினாரில் கருத்து சொல்கிறார்கள். அந்த செமினார் ரிப்போர்ட் இருக்கிறது. நம்முடைய சட்டமன்றத்தின் சார்பில் போன அங்கத்தினரும் கருத்து தெரிவித்திருக்கிறார். என்ன தெரிவித்திருக்கிறார் தெரியுமா ? கொஸ்டின் அவர் பற்றி டிஸ்கஷன். கேள்வி நேரத்தை ஒன்றரை மணி ஆக்க வேண்டுமென்று கேட்கிறார். இங்கே ஒரு மணி நேரத்திற்கு பதில் சொல்வதற்கே மந்திரிகளைக் காணோம். அவர் $1\frac{1}{2}$ மணி நேரமாக ஆக்க வேண்டுமென்று சொல்கிறார். எல்லாம் சொல்லிவிட்டு கடைசியில் சொல்கிறார். The Member should be allowed to put questions to the Leader of the Opposition also.

இது என்ன ஜனநாயகம் வரும் ? எந்த பார்லிமென்டரி? முறையின் கீழ் எந்த நாட்டில் இப்படி இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. எதிர்க்கட்சித் தலைவரை அங்கத்தினர்கள் கேள்வி கேட்பதற்கு அவரிடத்திலே ஏதாவது போர்ட்போலியோ இருக்கிறதா ? இதைக் கேட்டவுடன் அங்கே இருக்கிறவர்கள் சிரிக்க மாட்டார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, நம்முடைய
நிதி அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்திலே வைத்திருக்
கின்ற மாணியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்திருக்கிற
திராவிடமுன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துக்களைச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எத்தனையோ மானி
யக் கோரிக்கைகள் இந்த மன்றத்திலே நம்மாலே விவாதிக்கப்
பட்டாலும், இது இந்த மாமன்றத்தைக் குறித்த ஒரு
மானியக் கோரிக்கை. இது நமக்கு நாமே விவாதித்துக்கொள்
கின்ற ஒன்றாகும். இருக்கின்ற பல்வேறு மானியக் கோரிக்கை
யிலே பணியாற்றுகின்ற அல்லது வேலை பார்க்கின்றவர்
களுக்கு எல்லாம் எப்படி எப்படி நன்மைகளைச் செய்யவேண்டும்,
அந்தெந்த இல்லாக்காக்களிலே என்னென்ன தவறுகள் இருக்
கின்றன என்பதையும் நாம் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறேம்.
ஆனால் இந்த மானியக் கோரிக்கையிலேகூட நம்முடைய சட்ட
மன்றத்தைப் பற்றி சிலக் கருத்துக்களைச் சொல்வதோடு இதிலே
பணியாற்றுகின்ற அல்லது மக்களுக்கு உழைக்க வந்திருக்கின்ற
சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் எந்தவிதமான நன்மை
களைச் செய்ய வேண்டுமென்பதையும் இந்த மன்றத்திலே
தெரிவித்து இருக்கிறார்கள். கோரிக்கைகளை வைத்தாலும்
லைக்காவிட்டாலும் நிதி அமைச்சர் அவர்கள் ஒரு பெருந்தன்மை
யானவர், சொல்லாமல் செய்பவர் பெரியோர் என்ற அளவிற்கு
அவர் பல்வேறு காரியங்களை நடத்திச் செல்லக் கூடியவர்கள்.
எனவே அவருக்கு அந்தப் பணியெல்லாம் விட்டுவிட்டு இந்த
மன்றத்தைப் பற்றி சிலக் கருத்துக்களை நான் எடுத்துவைக்க
கடமைப்பட்டு இருக்கிறேன். நம்முடைய நிதி அமைச்சர்
அவர்கள் நமக்கு கொடுத்து இருக்கின்ற பட்ஜெட் மெமோராண்
டத்திலே ஒரு சில விளக்கங்களை நான் முதலிலே தெரிந்து
கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றத்திற்காக
சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட பணம் 1982-83-லே 61.76
லட்சம். செலவானது 63·78 லட்சம். ஆக ஒரு 2 லட்சம்
ரூபாய்தான் கூடியிருக்கிறது. இந்த ஆண்டு எவ்வளவு ஒதுக்கியிருக்
கிறார்கள் என்றால், அதே 63.25 இலட்சம். ஆகவே சென்ற
ஆண்டு செலவானதைவிட, ரிவைஸ்டு எஸ்டிமேட்டிலே இருந்ததை
விட ஒரு 50 ஆயிரம் குறைவாகப் போட்டிருக்கிறார்கள். ஆக
இதிலேயிருந்துஎன்ன தெரிகிறது என்றால் சென்ற ஆண்டு எப்படி
சட்டமன்றம் ஆண்டுக்காண்டு கூடியதோ, அரசிலே சட்டத்திலே
6 மாதம் வரையிலும் சட்டமன்றத்தைக் கூட்டாவிட்டால் அது
தானாக செத்துப்போகும் என்ற காரணத்தால் பாண்டுக்கு
செல் வைப்பதுபோல் ஒரு 10 நாள் கூட்டி அதற்கு உயிர் கொடுத்து
இருக்கிறீர்கள். எனவே இந்த ஆண்டு மறுபடியும் சட்டமன்றம்
கூடப் போவதில்லை என்பதற்கு எடுத்துக்காட்டத்தான் நீங்கள்
ஒதுக்கியிருக்கிற பணம்.





ஏனென்றால் நிறைய நாட்கள் நாங்கள் சட்டமன்றம் கூட்டு
வோம் என்று சொன்னால், அதிகம் நிதி ஒதுக்கியிருக்கவேண்டும்.
அப்படி ஒதுக்காததில் இருந்தே வருங்காலத்தில் சட்டமன்றம்
எப்படி கூடும் என்பது நமக்குத் தெரிகிறது. கேட்டால் நாவலர்
அவர்கள் சொல்வார். போன மாதம் எப்போது சட்டமன்றம்
ஆரம்பித்தது. இப்போது 27-ம் தேதி வரையில் கூட்டம் நடக்கப்
போகிறது. கிட்டத்தட்ட 2 மாதம் இல்லையா என்று
சொல்வார்கள். வைத்தால் குடுமி அடித்தால் மொட்டை
என்பதுபோல், வைத்தால் ஒரேடியாக நாம் 2 மாதம் வைப்
போம். ஒட்டகம் தண்ணீர் குடிக்கிறமாதிரி எல்லாவற்றையும்
ஓரே மூச்சில் பேசிவிடவேண்டியிருக்கிறது. அப்புறம் நமக்கு
எப்போது எம்.எல்.ஏ. என்று ஞாபகம் வருகிறது என்று சொன்
னால், யாராவது வந்து கான்டக்ட் சர்ட்டிபிகேட் வாங்குகிற
போதுதான். அப்படி யாரும் சர்ட்டிபிகேட் வாங்க வரவில்லை
யென்றால், அது கூட நமக்கு மறந்துவிடுகிறது. சாதாரண
பொதுமக்களாக நாம் ஆகிவிடுகிறோம். எனவே நாவலர் அவர்
களை நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கே இருக்கின்ற மற்ற
சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல
3 மாதத்திற்கு ஒரு முறை சட்டமன்றத்தைக் கூட்டுங்கள். சில
நேரங்களில் பிரச்சினைகள் பழையதாகிப் போய்விடுகிறது. 10
மாதம், அல்லது 6, 7 மாதத்திற்கு மேல் ஒரு பிரச்சினையாகி
விட்டால், ஆறிய கஞ்சி பழம் கஞ்சி என்பதைப்போல் சுவாரஸ்யம்
இல்லாமல் போய்விடுகிறது. சட்ட மன்றத்தை அடிக்கடி
கூட்டினால் இப்படிப்பட்ட பிரச்சினை வராது என்பதை
நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

நம்முடைய அமைச்சர் அவர்களிடத்தில் நான் ஒரு விளக்
கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய
அமைச்சர்களைப்பொறுத்த வரையில், அவர்களுக்கு ஏற்பட்டு
இருக்கின்ற செலவினங்களையெல்லாம் இதிலே சுட்டிக்
காட்டி, அவர்களுக்குச் சம்பளம், டூர் எக்ஸ்பென்ஸ், என்டர்
டெயின்மென்ட், ஆஸ்பிடாலிடி எக்ஸ்பென்ஸ் இவ்வளவு என்று
இதற்கெல்லாம் ஒதுக்கீவிட்டு, கடைசியில் அதர் எக்ஸ்பென்டி
சர் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதர் எக்ஸ்
பென்டிசர் என்று சொன்னால் பெயரைச் சொல்லக்கூடாது
அதிலே எவ்வளவு செலவாகியிருக்கிறது என்று சொன்னால்,
ஆண்டுக்காண்டு அதிகமாயிருக்கிறது. 1981-ஆம் ஆண்டு
33·47 லட்சம். 1982-ஆம் ஆண்டு பட்ஜெட் எஸ்டிமேட், 30·77
லட்சம். அதே 1982-83 ரிவைஸ்டு எஸ்டிமேட் 35·88
லட்சம். ஆனால் இந்த ஆண்டு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள்.
என்று கேட்டால், 36·02 லட்சம் ஆக 1981-ஆம் ஆண்டு
33 லட்சமாக இருந்தது இன்று 36 லட்சத்திற்கு அதர்
அயிட்டம்ஸ் என்ற வகையில் அமைச்சர்களுக்கு ஏற்படுகிற

[1983 ஏப்ரல் 19

திரு. செ. செம்மலை : மாண்புமிகு துணைத் தலைவரவர்கனே, அந்த கான்பிரன்சிலே சட்டமன்றத்தின் சார்பிலே நான் தான் அனுப்பப்பட்டேன். அந்த பாயின்ட்டை நான் அங்கே எடுத்துச் சொன்னதற்குக் காரணம் சட்டமன்றத்திலே எதிர்க் கட்சித் தலைவருக்கு அமைச்சருடைய அந்தஸ்து அளிக்கப்படு கிறது. எதிர்க்கட்சித் தலைவருக்கு அமைச்சருக்கு உள்ள அந் தஸ்து அளிக்கப்படுகிற காரணத்தால் இப்படி கேள்வி நேரத் திலே அவரையும் கேள்வி கேட்கும் உரிமை அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுவதில் தவறு இல்லை என்ற கருத்தை அங்கே தெரி வித்தேன் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, இது விசித்திரமான ஜனநாயகம். இலாகா இருக்கிறவர்களிடம்தான் அங்கத்தினர்கள் கேள்வி கேட்பார்கள். இலாகா இல்லாதவரிடம் என்ன கேள்வி கேட்பார்கள் ? இதை மாண்புமிகு நாவலர் அவர்களுடைய முடிவுக்கு விட்டுவிடுகிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, எதிர்க்கட்சித் தலைவருக்கு இலாக்காக்கள் ஒதுக்கப் படவில்லை என்பது அனைவரும் அறிந்த விஷயம். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சொல்லி தெரியவேண்டியதில்லை. இலாகா சம்பந்தமாக மற்ற பிரச்சனை கள் வரும்போது அவரை கேள்வி கேட்கிற உரிமையை கொடுக்க வேண்டுமென்ற அந்தக் கருத்தைத்தான் அந்த கான்பிரன்சிலே சொன்னேன்.

திரு துரைமுருகன் : அது என்ன பதில் என்பது ரெப்பிர சென்டேஷன் அனுப்பியவர்களுக்குத்தான் தெரியும். நான் அதை விட்டுவிடுகிறேன். சென்ட்ரல் கவர்ன்மென்டிலிருந்து பல வகை களுக்கு பணம் கொடுக்கிறார்கள். ஆனால் அந்தப் பணத்தை நீங்கள் வாங்க முடியவில்லை ; அதை பயன்படுத்த முடியவில்லை உங்களால். இப்போது சென்ட்ரல் கெசட் எல்லாம் வருகிறது. அந்த சென்ட்ரல் கெசட் தமிழிலே கூட வேண்டும். அதற்காக மத்திய அரசு பணம் கொடுக்கிறது. அந்தப் பணத்தை நீங்கள் பயன்படுத்தாததால் அது திரும்பப் போயிருக்கிறது.

அதைப்போன்று இப்போது 6-வது பிளான் டிராப்ட் ஒன்று கொடுத்தார்கள். ஆங்கிலத்தில் மட்டும்தான் அவர்கள் கொடுத் தார்கள். தமிழில் கொடுக்கவில்லை. இங்கே இருப்பவர்கள் எல்லாம் ஆங்கிலம் தெரிந்தவர்கள் அல்ல. அப்படி என்றால் அதிலே என்ன இருக்கிறது என்பது எல்லா உறுப்பினர்களுக்கும் எப்படித் தெரியும் ? ஐந்தாண்டுத்திட்ட வரைவினையும் தமிழில் கொடுக்கவில்லை. என்ன திட்டம் தீட்டியிருக்கிறார்கள் என் பதை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் தமிழில்



1983 ஏப்ரல் 19] [திரு. துரைமுருகன்]

கொடுக்க வேண்டும். அதற்காக மத்திய அரசு பணம் கொடுக் கிறது. அந்தப் பணத்தை நீங்கள் பயன்படுத்தவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

இன்னொன்று, நம்முடைய பாராளுமன்றத்தில் நடை பெறுகின்ற விவாதங்களை எல்லாம் வால்யூமாக பைன்ட் செய்து உறுப்பினர்களுக்குக் கொடுக்கிறார்கள். இங்கே அப்படி கொடுப் பதில்லை. பிட், பிட்டாகக் கொடுக்கிறார்கள். ஒரு ரூபாய்க்கு ஒரு கதை புக் கொடுக்கிறார்களே, அதைப்போல கொடுக்கிறார் கள்: அது அங்கங்கே போய்விடுகிறது ; எங்கே போகிறது என்று தெரியவில்லை. இங்கேயும் அதைப்போன்று வால்யூமாக பைன்ட் செய்து கொடுத்தால் — துணைத் தலைவர் ஆதிக்கத்தில் தான் அது இருக்கிறது என்று கருதுகிறேன் — சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் காலத்தில் தான் அங்கத்தினர்களுக்கு சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகள் பைன்ட் வால்யூமாகக் கொடுக்கப்பட்டது என்ற பெயர் இருக் கும். எங்களிடத்திலே வேண்டுமென்றால் அதற்கான காசை வாங்கிக்கொள்ளுங்கள். எவ்வளவோ செலவு பண்ணுகிறோம். இதற்கும் வெண்டுமென்றால் கொடுக்கிறோம். பென்ட் வால்யூ மாக இருந்தால் வசதியாக இருக்கும் ; அங்கத்தினர்களிடம் அது பாதுகாப்பாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னொன்றைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்களும் மற்றவர்களும் பேசினார்கள். மினிஸ்டர் ட்ரஷரி பெஞ்சில் அதிகமாக இல்லை. அது நம்முடைய ஹவுசுக்கு டிக்னிட்டி இல்லை என்று சொன்னார்கள். அது நியாயமான கருத்து. எப்போது ஹவுஸ் கூடுகிறதோ அப்போது மேலவையும் கூடுகிறது. கதவைச் சாத்திவிட்டு அந்தப் பக்கம் ஒரு சபை, இந்தப் பக்கம் ஒரு சபை நடக்கிறது. கதவைச் சாத்திவிடு வதால் வெயில் காலத்தில் காற்று வேறு வருவதில்லை. ஒரு மந்திரியைப்பற்றி ஒரு கருத்தைச் சொன்னால் இவர் ஓடிப்போய் அவரிடம் சொல்கிறார், அவர் ஓடி வருவதற்குள் பாயின்ட் போய் விடுகிறது ; மூன்றாம் நேரத்தில் எழுந்து நின்றால் நீங்கள் ஒத்துக்கொள்ளமாட்டீர்கள். அதனால் அவையின் 'டெக்கோரம்' ஸ்பாயில் ஆகிறது. இங்கே சட்டசபையை நடத்தும்போது மேல வையை நடத்தக் கூடாது. அதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தை நீண்டநாள் நடத்துகிறோம் என்று சொல் கிறீர்கள். ஆனால் நிறைய வேஸ்ட் பண்ணுகிறீர்கள் டைமை என்பது என் குற்றச்சாட்டு.

முடியாமல் கேன்சல் பண்ணுகிறீர்கள். கேன்சல் பண்ணுவதற்கு
எவ்வளவோ செலவாகிறது. அது மாதிரி அங்கத்தினர்களுக்கு
ஒரு நல்ல காப்பி கிளப்பை வைக்கக் கூடாதா? டெப்டி ஸ்பீக்கர்
அறையிலே போய் குடித்தால் நன்றாக இருக்கிறது. காப்பி.
ஸ்பீக்கர் அறையிலே குடித்தால் நன்றாக இருக்கிறது காப்பி,
அங்கே மட்டும் தனியாக போட்டு அனுப்பி விடுகிறார்கள்.
ஆகவே இதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

அதேபோல மத்தியானத்திலே அவையை வைக்கிறீர்கள்.
என்ன ஆயிற்று அரிசன நல மானியம் 3 தடவை கோரம் இல்லா
மல் ஒத்திவைத்து பத்திரிகையிலே எல்லாம் வந்து ரொம்ப
கஷ்டமாகிவிட்டது. ஏன் என்ன காரணம்? தைரியமாக சொல்
லுங்களேன் மத்தியானம் வைத்தால் தனி டி. ஏ., உண்டு என்று.
அப்போது பாருங்கள் அவையை, புல்லாக இருக்கும். நான் அதற்
காக சொல்லவில்லை. ஒரு ஸ்பிரிட்டாக இருக்கும் என்று சொல்லு
கிறேன். அதற்கு விட மாட்டேன் என்கிறீர்களே. ஏன் உங்களுக்கு
டி. ஏ. இல்லை. அதனால் அத்தனைப் பேருக்கும் இல்லை. தன்
னைப் போல் பிறரை நினைத்து செய்கிறீர்கள். இது நியாயம்
தானா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்னொன்று, எங்களுக்கு பஸ்ஸிலே பாஸ்
கொடுத்திருக்கிறீர்கள் டெர்மினஸ்ஸில் ஏறினால் எங்
களுக்கு இடம் கிடைத்து விடுகிறது. ஆனால் பஸ்
எங்கே புறப்படுகிறதோ அந்தந்த ஊர்களிலேயே
எல்லோரும் எம்.எல்.ஏக்களாக இருக்கிறார்கள். வழியிலே
கூட ஒரு எம். எல். ஏ. இருக்கலாம். உதாரணமாக
திருச்சியிலிருந்து பஸ் புறப்படுகிறது என்றால், எம்.எல். ஏ.
பெரம்பலூரிலே இருப்பார்கள். ஆனால் பெரம்பலூர் எம்.எல்.ஏ.
ஏற வருகிறபோது அதிலே இடம் இல்லை. அப்போது என்ன
செய்கிறீர்கள்? வரிசையாக வருகிற பஸ்களில் எல்லாம் இல்லை
இல்லை என்று சொல்லிக் கொண்டே போகிறான். ராணிப்பேட்
டையிலே பல நாட்கள் நான் அப்படி காத்துக் கொண்டிருந்திருக்கி
றேன். பஸ்ஸில் இடம் கிடையாது முன்னாடி இருக்கிற இரண்டு
சீட்டுகளை அதற்காக காலியாக வைக்க வேண்டும் என்று நான்
கேட்க மாட்டேன். வைத்தால் சர்க்காருக்கு அதனால் நஷ்டம்
வரும். ஆனால் பிளாட் சீட்டுகள் என்று சொல்லப்படுகிற முறை
யில் அவைகள் அப்படியே ஒட்டிக் கொண்டிருக்கும். அதை அர்
ஜெண்டுக்கு எடுத்துப் போட்டு உட்காருகிற மாதிரி, எம். எல். ஏ.
போகிற நேரத்திலே பயன்படுத்துகிற முறையிலே முன்னாடி
அதை ஒட்டி வைத்திருக்க வேண்டும். லக்சுரி பஸ்ஸிலே
வைத்திருப்பார்கள். அதை எடுத்துப் போட்டுக்கொண்டால்
சீட் மாதிரி இருக்கும். ஆகவே, அதற்கு வழிவகை செய்ய
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டி
ருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது).





அடுத்து சட்ட மன்ற உறுப்பினர்களைப் பற்றி சினிமாவிலே
கேவலமாக எடுக்கிறார்கள் என்று கோவைத்தம்பி அவர்கள்
எல்லாம் சொன்னார்கள். நாம் மக்களுடைய கருத்தைத்தான்
பிரதிபலிக்கிறோம். சினிமா என்பது என்ன? சமுதாயத்திலே
இருக்கின்ற நிலைமைகளை எடுத்துத்தான் மக்களுக்குக் காட்சி
பொருளாக ஆக்குகிறார்கள். உள்ளத்துத் துடிப்பை வெளிக்
காட்டுவதுதான் நடிப்பு. மக்களின் மனத்திலே இருப்பதை அறிந்து
அதற்கேற்ப படம் எடுத்துக் காட்டுவதுதான் சினிமாக்காரர்கள்
வேலை. ஊரிலே உள்ளவர்களை எல்லாம் நாம் க்ரிட்டிசைஸ்
பண்ணும்போது நம்மை அவர்கள் க்ரிட்டிசைஸ் பண்ணக்கூடாது
என்பது எப்படி நியாயமாகும்? ஈநாடு படம் எடுத்தார்கள் மலை
யாளத்திலே. அது எப்படி நடக்கின்றது என்பதைக்காட்டினார்கள்.
தண்ணீர் தண்ணீர் படம் எடுத்தார்கள். அது நடக்கின்றது.
எங்கள் நாடு தமிழிலே எடுத்தார்கள், அது நடக்கின்றது. ஆகவே
சட்டமன்ற உறுப்பினர்களைக் குறை சொல்லிப் பேசக்கூடாது
என்பதில்லை. எப்படி இன்னொருவரை நாம் திறனாய்வு செய்
கிறோமோ அப்படி மற்றவர்கள் நம்மைத் திறனாய்வு செய்
கின்றபோதும் அதனைத் தாங்கிக் கொள்கின்ற உள்ளமும்
நமக்கு இருக்கவேண்டும். ஆகவே சினிமாக்காரர்களை நாம் தாக்கு
கின்ற வேலை கூடாது. ஆரிஜினல் என்ற வகையில் அவர் சொன்
னது மாதிரி நாமெல்லாம் கூட அங்கேயிருந்துதான் புறப்பட்டு
வந்திருக்கிறோம். சினிமா உங்களுக்கும் தெரியும், எங்களுக்கும்
தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கொள்கையை விமர்சிப்பது தவறு இல்லை.
ஆனால் ஒரு சினிமாப் படத்தின் பெயரை வேண்டுமானால் நான்
தனியாகச் சொல்கிறேன். அதிலே ஒரு சட்ட மன்ற உறுப்பினரின்
பதவி போய்விடுகின்றது. அவருடைய மனைவி வேறு ஒருவரைக்
கூட்டிக் கொண்டு செல்கிறார். அவர் அன்டர்வியரோடு எருமைக்
கடாவின் மீது ஏறிச் செல்கிறார். இவ்வாறு அதிலே சித்தரிக்கப்
பட்டிருக்கின்றது. இதைத் திரு. துரைமுருகன் அவர்கள் விரும்பு
கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தமாதிரி
சித்தரிக்கக் கூடாது என்று இந்த அவையிலே நான் எச்சரித்து
இருக்கிறேன். இந்த அவையையோ அல்லது சட்டமன்ற உறுப்பி
னர்களையோ அந்தமாதிரி சினிமா படத்திலோ அல்லது பத்திரி
கையிலோ விமர்சித்தால் அது கண்டிக்கத்தக்கது. ரொம்பக் கடு
மையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, சட்ட
மன்ற உறுப்பினர்களை வேறு யாரும் திறனாய்வு செய்யக்கூடாது
என்பது திரு. கோவைத்தம்பியின் வாதம். யாரையும் யார்

[திரு. துரைமுருகன்] [1983 ஏப்ரல் 19

(பிற்பகல் 1—20).

ஏனென்று கேட்டால் ஒரு நாள் திடீரென்று 12 மணி இருக்கும் உடனே நம்முடைய முதலமைச்சரை நம்முடைய சீஃப் செக்ரட்டரி திரவியம் அவர்கள் பார்க்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள் என்று சொல்லி, 12 மணிக்கே சபையை ஒத்திவைத்துவிட்டார்கள். அதுகூட போகட்டும். ஏதோ அவர் உயிரோடு போராடுகிறார்கள். கடைசி நேரத்திலே பார்க்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார் என்று மனிதாபிமான முறையிலே நாம் ஏற்றுக்கொள்வோம். ஆனால் போலீஸ் மானியத்திலே நான் பேசி முடிக்கும்போது 12—15 அல்லது 12—30 இருக்கும். சட்டப்படி நம்முடைய சபை 1·30 மணி வரையில் நடக்க வேண்டும். ஆனால் எதையுமே சொல்லாமல், இன்ன காரணத்திற்காக இந்த சபையை ஒத்தி வைக்கவேண்டும் என்று சொல்லாமல், பிளண்டாக பேரவைத் தலைவர் சொல்கிறார்—மீண்டும் நாளைக் காலை 9 மணிக்கு பேரவை கூடும் என்று சொல்லிவிட்டு போய்க் கொண்டேயிருக்கிறார். ஆகையினால் சட்டத்திலே 1 1/2 மணி வரை சபை இருக்க வேண்டும் என்று இருந்தால், எக்காரணத்தைக் கொண்டாவது அட்வான்ஸாக சபையை நீங்கள் முடிப்பீர்களேயானால் அதற்கான காரணத்தை இந்த அங்கத்தினர்களுக்கு சொல்லியிருக்க வேண்டும். அங்கே நீங்கள் உட்கார்ந்துக் கொண்டே அதைப்பற்றி பேசி முடிவெடுத்திருக்கலாம். ஆனால் எல்லா அங்கத்தினர்களுக்கும் அது அறிவிக்கப்படவேண்டும்.

அடுத்து இந்த அவையின் அஜெண்டாவை கொடுக்கிறீர்கள். டெய்லி நமக்கு கேள்வி பேப்பர் வருகிறதோ இல்லையோ, அஜெண்டா வருகிறதோ இல்லையோ ஒன்று நிச்சயமாக வருகிறது, அதாவது டெய்லி இந்த பிசினெஸ் அட்வைஸ்ஸரி கமிட்டி கூடி, டெய்லி அந்தந்த நிகழ்ச்சி நிரலை மாற்றுவதுதான் வேலை—அந்த விவரம் டெய்லி நமக்கு வருகிறது. படங்கள்கூட இரண்டு நாளைக்கு ஒருமுறைதான் சில கிராமங்களில் மாற்றுகிறார்கள். அதுகூட சில இடங்களில் வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை தான் மாற்றுகிறார்கள். ஆனால் நீங்கள் டெய்லி அஜெண்டாவை மாற்றுகிறீர்களே ஏன் ? அதிலே என்ன போச்சு என்ன வந்தது ? அது என்ன ஆச்சு என்று தெரிவதில்லை. போலீஸ் மானியம் எவ்வளவு நாள் ஆகிவிட்டது. நாளைக்காவது வரும் என்று நான் நினைக்கிறேன். நாளைக்கு என்ன ஆகப்போகிறதோ ? சொல்ல முடியாது, இப்படிப்பட்ட நிலையிலே சபையை நீங்கள் நடத்தக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எத்தனையோ கமிஷன் போடுகிறார்கள். அந்தக் கமிஷனுடைய ரிப்போர்ட்டுகள் வருகின்றன. இந்தச் சட்டமன்றம்தான் சுப்ரிம் பாடி. ஆனால் இந்த மன்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் அந்த அறிக்கையை தருவதே கிடையாது. எனவே, நான்



1983 ஏப்ரல் 19] ]திரு. துரைமுருகன்]

கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து இதுபோன்ற கமிஷன் அறிக்கைகளின் நகல்களை எல்லா உறுப்பினர்களுக்கும் அளிக்க வேண்டும்.

இன்னொன்றையும் மிக முக்கியமான பிரச்சினையாக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். சார் எல்லோரும் எவ்வளவோ விஷயங்களைப் பேசினார்கள். (குறுக்கீடு) இது மிக முக்கியமான பிரச்சினை. எங்களை அவமதிக்கக் கருதி விடக் கூடாது சார். மக்களிடத்திலேயே ஓட்டு வாங்க வெய்யிலிலே நின்று, கும்பிடு போட்டு, அலையோ அலை என்று அலைந்தது நாங்கள் பட்ட கஷ்டம் எங்களுக்கு அல்லவா தெரியும்? நீங்கள் தயவு செய்து வேறு ஒன்றும் செய்ய வெண்டாம். எங்களுக்கு வேறு கௌரவம் கிரிடம் எல்லாம் வேண்டாம். வெளியிலே ஒரு காப்பி கடை போட்டிருக்கிறார்கள். அதைப்போய் பாருங்கள். அங்கே அதன் பக்கத்திலே நம்முடைய தாய் குலத்திற்கு தனியாக இடம் ஒதுக்கியிருக்கிறது—நாவலர் கொஞ்சம் கவனிக்க வேண்டும். செக்ரட்டரி சார், கொஞ்சம் அவரை விட்டுவிடுங்கள் ஒரு முக்கியமான விஷயம்—(சிரிப்பு).

எங்களுக்கு ரொம்ப அவமானமாக இருக்கிறது. அங்கே டீ வாங்கிக் கொண்டு, இன்னொரு கையிலே ஒரு வடையை வாங்கிக் கொண்டு, அதை சாப்பிட ஆரம்பிக்கும்போது, அந்த நேரத்திலே லைப்ரரிக்கு இரண்டு பேர் போவார்கள்—ஒரு இடி இடிக்கிறார்கள் கொட்டி விடுகிறது சாரி சார் என்று சொல்லிவிடுவார்கள். அப்புறம் அந்தப் பக்கமாக தாய்மார்கள் வருவார்கள். அவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கி போக வேண்டும். அப்போதும் டீ கொட்டிவிடும். இரண்டாவது அங்கே ஒரே யூரின் நாற்றம். அதற்கிடையிலே மாண்புமிகு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள். காப்பி வாசனையையும், யூரின் வாசனையையும் சேர்த்து கம்பைன்ட் பண்ணிக் கொண்டு டீ குடிக்கிறார்கள். தனியாக ஒரு காப்பி கடை வைக்கக் கூடாதா? அதைவிட காப்பிக் கடையே இல்லை என்று சொல்லிவிடுங்கள். நல்லது. அதுபோக வெளியிலே சி.ஐ.டி.ஸ். வேறு நடமாட்டம். ஒரே நெரிசல்.

யாராவது ஒருவர் வடையை வாங்கிக் கொண்டு வந்தால், வேறு யாராவது வந்தால் நீங்கள் சாப்பிடுகிறீர்களா என்று கேட்பார். அப்படிக் கொடுக்கும்போது, வடை கீழே விழுந்து விடுகிறது. ஐயோ சாரி சார். இன்னொரு வடை வாங்க வேண்டும். இப்படி ஒரே வேடிக்கை. ஒரு பெரிய சர்க்கஸையே அங்கே நடத்திக் கொண்டிருக்கிறோம். இது நியாயம்தானா கேட்கிறேன்? மெம்பர்களை இப்படி அவமானப் படுத்தக்கூடாது. யாராவது வெளி மாநிலத்தவர்கள் வந்தால், அங்கே அழைத்துக் கொண்டு போனால் என்ன நினைப்பார்கள் நம்மைப் பற்றி, ஆகவேதான் சொல்கிறேன். எவ்வளவோ செலவு பண்ணுகிறீர்கள். பலதடவை டெல்லிக்குப் போக பிளேன் டிக்கட் ரிசர்வ் பண்ணுகிறீர்கள். போக

வேண்டுமானாலும் அவர்களுடைய கருத்திற் கேற்ப திறனாய்வு செய்யலாம் என்பது என்னுடைய வாதம். ஆனால் தங்களுடைய தீர்ப்பு அப்படிச் செய்யக்கூடாது என்பது. இந்த மூன்றையும் இந்த நாட்டு மக்களுக்கு அர்பணித்துவிடுவோம். ஏனென்றால் இந்த மன்றத்தினை உருவாக்குவதே மக்கள் மன்றம் தான்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; இந்த அவையை மதிக்கவேண்டும். இந்தியாவில் உள்ள பலவற்றை கோர்ட் கண்டித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் அந்த கோர்ட்டைப் பற்றி யாரும் பேசக்கூடாது, ஏனென்றால் கன்டெம்ப்ட் ஆஃப் தி கோர்ட் என்ற பிரச்சினை வந்துவிடும் என்ற அச்சம் இருக்கிறது. அதே மாதிரி இந்த அவையை யாராவது அவமதித்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த மன்றத்தின் உறுப்பினர்களையோ அல்லது அவையினையோ யாராவது அவமதித்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தைப் பற்றி அதாவது இந்த சட்டசபையிலே நடக்கின்ற மாதிரி எம்.எல்.ஏ. பேசுகின்ற மாதிரி படம் எடுத்தால் அது கண்டிக்கத்தக்கது. ஆனால் ஒரு சட்டமன்ற உறுப்பினர் வெளியிலே வேறு மாதிரி ஆக்டிவிட்டீஸ்லே இறங்கினால் அதாவது எம்.எல்.ஏ. என்ற போர்வையிலே சாராயம் காய்ச்சுகிறார் என்று கூறுவது தவறு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மன்றமே மன்ற உறுப்பினர்களை வைத்துத்தான் இருக்கின்றது. தனிப்பட்ட காரியங்கள் என்பது வேறு. ஆனால் பொதுவாக இந்த மன்றத்தினுடைய நடவடிக்கையைப் பற்றி அல்லது உறுப்பினர்களைப் பற்றி விமர்சிப்பதற்கு யாருக்கும் அருகதை கிடையாது. ஏனென்றால் மன்றம்தான் சுப்ரீம். ஆகவே யாராவது அவையை அவமதித்தாலோ அல்லது உறுப்பினர்களை அவமதித்தாலோ கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாட்டிலே ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த கருத்தை நான் சொல்கிறேன். நம் நாடு, மந்திரி குமாரி போன்ற படங்களில் கொள்கை மாறுபாடுகள் பற்றிய கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார்கள். அதை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்கிற போது ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பிரச்சினை இல்லை. ஒரு சட்டமன்ற உறுப்பினர் அன்டர்வியரோடு எருமைக்கடாவின் மீது ஏறிக் கொண்டு செல்வது போன்று . . . . .





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், அது பற்றிய விவரங்களை எல்லாம் சொல்லிக் கொண்டே போக வேண்டாம். வேண்டுமானால் அது குறித்து ப்ரிவிலேஜ் கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தால் அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்திலே உள்ள நடவடிக்கைகளைப் பற்றி எந்தவிதமான சினிமாவும் எடுக்கக்கூடாது என்ற கருத்தினை நானும் தலைவரோடு சேர்ந்து சொல்கிறேன்.

திரு கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, எனக்கும் சினிமாத்துறையிலே கொஞ்சம் அனுபவம் இருக்கின்றது என்ற காரணத்தால் சொல்கிறேன். இங்கே போலீஸ் துறை இருக்கின்றது. அன்டர்வியரே இல்லாமல் அறைகளிலே படுத்துத் தூங்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்று சமுதாயத்தின் நலன் கருதி பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற பொது நல ஊழியர்களை இப்படிப் படம் பிடித்துக் காட்டுவது நியாயம்தானா? அப்படிக் காட்டுகின்றவர்களை இந்த மன்றத்திலே நிறுத்தி வைத்து மன்னிப்பு கேட்கின்ற நிலைமையைத் தாங்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1—30)

திரு துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே நடக்கின்ற நிகழ்ச்சிகளை யாராவது வேறு வகையில் பொருள்படுகிற விதத்தில் சித்தரித்தால் அதைப்பற்றி இந்த மன்றத்தில் நடவடிக்கை..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருவருடைய கேரக்டரை ஆசாசினேஷன் செய்வது அது அவர்களுக்கு ஃபண்டமெண்டல் ரைட் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து தேர்தல் பற்றி ஒரு வார்த்தை சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன். மாண்புமிகு நாவலர் அவர்கள் ஜனநாயக முறைப்படி ஒரு கருத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று எனக்கு தெரியும். ஆளும் கட்சியானாலும் எதிர் கட்சியானாலும் இடைத் தேர்தல் வருகிறது. அந்த இடைத் தேர்தலில் அமைச்சர்கள்— மாண்புமிகு நாவலர் அவர்கள் முன்னால் கூட அமைச்சராக இருந்து இருக்கிறார்கள்—

நடைபெறுவதற்கு ஏற்ற வகையில் அமைய வேண்டும் என்ற நோக்கத்தை வைத்து அதை கொள்கை அளவிலே ஏற்று அதற்கான திட்டங்களைத் தயாரிக்கின்ற முயற்சியில் அரசு ஈடுபட்டது. கூடுமானவரையில் இந்தக் கோட்டைக்குள்ளேயே அந்த புதிய சட்டமன்றக் கட்டடத்தைக் கட்ட இயலுமா என்று பார்த்து 2, 3 இடங்களைப் பார்த்து, மத்திய அரசினுடைய அனுமதியை அதுகுறித்து நாம் பெற வேண்டியிருக்கிறது—ஏனென்றால் கோட்டையிலே இருக்கிற அத்தனை இடங்களும் இராணுவத்திற்குச் சொந்தமாக இருக்கின்றன, ஆகவேதான்—இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்களிடத்திலே நாம் விண்ணப்பம் தந்தபோது அப்படி தக்க இடம் இருக்குமானால் ஒதுக்கித் தருவதிலே ஆட்சேபனையில்லை என்று சொல்லி அவர்கள் அதை இராணுவத் துறைக்கு அனுப்பி அவர்களும் சிலபல இடங்களைக் காண்பித்து, பக்கத்திலே இருக்கிற இடங்களைக் காண்பித்து அதைச் சட்டமன்ற கட்டடத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லி ஆனால் சில விதிகளை வைத்தார்கள், பழம்பெரும் மியூசியத்தை எடுத்துவிடக் கூடாது, சிலபல இடங்களை இடிக்ககூடாது என்று சொல்லி சில கட்டடங்களுக்கு மாற்று இடங்கள் புதிதாக நீங்கள் கட்டிக்தர வேண்டுமென்றும் எடுத்துச் சொல்லி அதற்காக ஒரு தனி இடத்தைத் தந்துவிட்டு அதற்குப் பிறகு இந்த இடத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்றும் சொன்னார்கள். அதிலே பல்வேறு இடர்பாடுகள் இருந்ததன் காரணத்தினாலே பல்வேறு இடங்களிலே வேறு எங்காவது கட்டலாமா என்று முடிவு எடுத்து கடைசியிலே இறுதியாக ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. தலைமைச் செயலகம் இங்கேயே அமைந்திருப்பதன் காரணமாக இங்கேயே நடவடிக்கைகள் பணிகள் எல்லாம் நிறைவேற்றப்படுவதன் காரணமாக இதற்கு அருகிலேயேஇருப்பதுதான் நல்லது என்ற முடிவுக்கு வந்து இந்தக் கோட்டைக்கு எதிரிலே இருக்கிற மனைகள், கிட்டத்தட்ட 24, 25 ஏக்கர் நிலப்பரப்பு நமக்குச் சொந்தமாகவே இருக்கிறது. ஆகவே நீட்டுப்போக்கிலே அதனுடைய அகலம் முழுவதையும் பயன்படுத்தி புதிய சட்ட மன்றக் கட்டடத்தைக் கட்டலாம் என்ற அளவுக்கு கொள்ளை . அளவில் ஏற்று அந்த இடத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டிய அந்தக் கூட்டத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதுசம்பந்தமான நடவடிக்கைகள் விரைவிலே எடுக்கப்பட்டு குறைந்தது 2 ஆண்டுக்குள்ளாக அல்லது குறைந்தது 3 ஆண்டுக்குள்ளாகவாவது புதிய சட்டமன்றக் கட்டடம் கட்டவேண்டுமென்ற நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன,





இப்போது 2, 3 கூட்டங்கள் நடத்தப்பட்டு வரைபடங்கள் எல்லாம் தயாரிக்கவும் அதுபற்றிய வல்லுநர்களிடத்திலே பல பேர்களிடத்திலே நாம் கேட்டு அவர்களுக்குரிய தொகைகளைக் கூட தந்து அதிலே போட்டியிட்டு அந்தப் போட்டியின் மூலமாகத் தேர்ந்தெடுத்து நாம் வாய்ப்பு வசதிகளையெல்லாம் பெறலாம் என்ற அளவுக்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அது வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்ற பல்வேறு பிரச்சினைகள் தீரும். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்குவதற்கான பேசுவதற்கான லவுஞ்ச் என்று சொல்லப்படுகின்ற கூடங்கள் இல்லை என்ற குறைபாடும் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் தேநீர்க்கடை இருப்பதன் மூலம் அதிலே எவ்வளவு அல்லல்படுகிறார்கள் என்பதை அவர்கள் அனுபவத்தின் வாயிலாகவும் எடுத்துச் சொல்லி, அங்கே யார் யார் வருகிறார்கள் போகிறார்கள் அவர்களுடைய நடையுடை பாவனை எல்லாம் எப்படி இருக்கின்றன என்பதையெல்லாம் இங்கேயே நடித்துக் கூடக் காண்பித்தார்கள். நூல் நிலைய வசதிகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தப் பக்கத்திலே இருப்பவர்கள் அந்தப் பக்கத்திலே இருக்கின்ற உறுப்பினர்களோடு கலந்துரையாடுவதற்கோ அந்தப் பக்கத்திலே இருப்பவர்கள் இந்தப் பக்கத்திலே உள்ளவர்களோடு கலந்துரையாடுவதற்கோ முடியாத அளவுக்குக் கூட அமைப்புகள் அமைந்திருக்கின்றன. மேலவை உறுப்பினர்களும் பேரவை உறுப்பினர்களும் கலந்துரையாடுவதற்கு ஏற்றவாறு அமையவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துக் தெரிவித்ததைப் போல் அந்த அந்தக் கட்சியினர் தங்கி உட்கார்ந்து பேச அவர்களுக்கான வசதி வாய்ப்புகள் இல்லாமல் இருக்கின்றது. இப்போது மேலவை உறுப்பினர்கள் தங்குவதற்கான லவுஞ்ச் என்று வைத்திருக்கிற இடம்தான் ராபர்ட் கிளைவ் தங்கிய இடம் ஆகும். அப்போது கட்டப்பட்ட கட்டடத்தினுடைய வசதிகளை வைத்துக் கொண்டு நாம் இப்போது சட்டமன்றத்தை நடத்தி வருகிறோம். ஆகவே ஓரளவுக்கு அடிப்படைத் தன்மையாக இருப்பது எப்படியேனும் சட்டமன்றக் கட்டடத்தைக் கட்டிவிடலாம் என்று கருதுகிறேன். கிட்டத்தட்ட 2,425 கோடி ரூபாய் செலவிடுகின்ற தமிழக அரசு சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒரு கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவிடுகிறோம் என்கிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துக் தெரிவித்ததற்கு இணங்க சட்டமன்ற பணிகள் செம்மையாகவும், சீராகவும் நடைபெற வேண்டுமென்பதால் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அத்தனையையும் இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூடுமானவரையில் இரண்டாண்டுக் காலத்திற்குள்ளே பல்வேறு ஒப்பந்தக்காரர்களிடம் சொல்லி இந்தக் கட்டடத்திற்கான வரைபடங்களை,

தேர்தலில் அந்த கடைசி நாள் 5 ஓ கிளாக்குள் தேர்தல் பேச்சை முடித்துக்கொள்ளவேண்டும். அதற்குமேல் மந்திரிகள் யாரும் தொகுதியில் இருக்க மாட்டார்கள். ஆனால் இந்த காலத்தில் என்ன நடக்கிறது என்றால் போலிங் அன்று கூட மந்திரிகள் வீதி வீதியாக சுற்றிக்கொண்டு இருக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இது ஜனநாயக முறைக்கு ஏற்றதுதானா? இதை மாண்புமிகு நாவலர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இரண்டாவதாக அப்படி அமைச்சர்கள் அங்கே எந்தெந்த ஊரில் போலிங் பூத்துகள் இருக்கிறதோ அதற்குள் போய் பார்த்துவிட்டு வரும் அளவுக்குகூட இருக்கிற காரணத்தினால் இது மிஸ்யூஸ் ஆப் பவர் இல்லையா? அது மட்டும் அல்ல அதிகார துஷ்பிரயோகம் செய்வது ஆகாதா என்பதை மாண்புமிகு நாவலர் அவர்களை கேட்க ஆசைப்படுகிறேன்.

அடுத்து தேர்நல் காலத்தில் போலீசுக்கு அதிகமான பவரை நீங்கள் கொடுக்கிறீர்கள். ஒரு போலீஸ் அதிகாரி சென்னையில் உள்ள நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜசேகரை காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்களை அடித்த காரணத்தினால் அவரை உடனே தூக்கினீர்கள் மதுரைக்கு. மதுரையில் எந்த பெரியகுளம் தேர்தல் வரும் என்று பார்த்தீர்கள். பெரிய குளத்தில் கொண்டு போய் கல்லுப்பட்டியில் போட்டவுடனேயே அங்கே சீனி செவத்தியன் என்பவரை போட்டு அடித்தார். அவரை அடித்த உடனே தூக்கினீர்கள் நேராக கடலூருக்கு. உடனே தார்குண்டேவை அடிப்பதற்கு மதுரைக்கு கொண்டு வந்தீர்கள். மதுரையில் அவர் அடித்து முடிந்தவுடன் திருச்செந்தூருக்கு தூக்கினீர்கள் திருச்செந்தூருக்கு போய் கவுண்டிங் என்ற இடத்தில் புகுந்து அடிக்கிறார்.' ஏ மேன் ஈட்டர்' மாதிரி அடிக்கிற தேர்ச்சி பெற்ற ஒரு போலீஸ் ஆபீஸரை நீங்கள் இப்படி எங்கே எங்கே சண்டை வருகிறதோ அங்கே ரிசர்வ் போலீஸை அனுப்புவது போல் எங்கே எங்கே அடிக்கவேண்டுமோ அங்கே அங்கே முகமது அலியை அனுப்பு என்ற ஒரு நிலைக்கு போலீஸ் அதிகாரிகளை தேர்தலிலே நீங்கள் துஷ்பிரயோகம் செய்து இருக்கிறீர்கள் என்பதை நான் சுட்டிக்காட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மானியக் கோரிக்கைகள் மீதும் தேர்தல்கள் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீதும் பெரும்பாலான உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து தெரிவித்து இருக்கிறார்கள். பல உறுப்பினர்கள் பொதுவாக கூறிய ஒரு கருத்து இந்த சட்ட மன்றத்தினுடைய பணிகளும் நடைமுறைகளும் சீர் பெற



வேண்டும் என்பதும் செம்மைபெற வேண்டும் என்பதும் சட்டமன்றத்தினுடைய நோக்கம் சிறப்புற நிறைவேற்றப்பட வேண்டும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற கருத்தை பொதுவாக அவர்கள் எடுத்துச் சொன்னாலும் ஆங்காங்கே பல்வேறு கருத்துக்களை இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு, துரைமுருகன் அவர்கள் என்னுடைய பெருந்தன்மையில் அதிகமான நம்பிக்கையை வைத்து இருக்கிறார்கள். ஆகவே எதை எப்போது செய்யவேண்டும் என்ற அளவுக்கு நல்ல நன்மதிப்பும் நம்பிக்கையும் வைத்து இருப்பதற்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எதை எதை எப்போது செய்யவேண்டும் என்பது எனக்குத் தெரியும் என்பதையும் அவர்கள் உணர்ந்து இருப்பதன் காரணமாக அதற்காகவும் நான் நன்றியை தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆக சட்டமன்றத்தைப் பொறுத்தவரைக்கும் இங்கே பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த கருத்துக்கள் எல்லாம் அரசினுடைய கவனத்தில் கொள்ளப்பட்டு பல்வேறு கருத்துகள் நிறைவேற்றப் படும், சிலபல கருத்துக்கள் உருப்பெறுகின்ற சூழ்நிலையில் இருப்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் .மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியபோது புதிய சட்டமன்ற கட்டிடம் கட்டப்பட வேண்டும் என்ற அவசியத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போல் நான் அதை 7, 8 ஆண்டு காலமாகவே வற்புறுத்தி வருகிறேன் என்றாலும் அது மிக விரைவில் நடைபெற வேண்டும் என்பதுதான் என்னைப் பொறுத்தவரைக்கும் இருக்கிற ஆர்வமும் எழிச்சியும் ஆகும். ஆனால் பல்வேறு காரணங்களால் அது தள்ளப்பட்டு தள்ளப்பட்டு வருவது வருத்தத்திற்குரிய ஒன்றாகும். 1909 ம் ஆண்டு இந்த மன்றம் கட்டப்பட்டது. 1911-ம் ஆண்டு ஓரளவுக்கு சீர்திருத்தப்பட்டது. 1921—22-ம் ஆண்டு ஓரளவுக்கு செம்மைப் படுத்தப்பட்டது என்றாலும் அப்போது திட்டத்தட்ட 50, 60 உறுப்பினர் இருப்பதற்கு கட்டப்பட்ட மண்டபம் இது. இப்போது 235 உறுப்பினர்கள் உட்காரத்தக்க அளவுக்கு இதை அவ்வப்போது சீர் செய்து, சீர் செய்து இடங்களை எல்லாம் குறுக்கி வைத்திருக்கிற அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இங்கே பல்வேறு வசதி இன்மைக் குறையையும் பல்வேறு வகைகளையும் எடுத்துச் சொன்னார்கள். அவைகளை எல்லாம் அரசு உணர்ந்துதான் புதிய சட்டமன்றக் கட்டிடம் வேறு பல மாநிலங்களில் அமைந்து இருப்பதைப்போலவும், குறிப்பாக வேறு பல நாடுகளில் அமைந்து இருப்பதைப்போலவும் சட்டமன்றப் பணிகளும் சட்டமன்ற உறுப்பினர்கள் பணிகளும் மிகச் சிறப்பாகவும், செம்மையாகவும்

உருவாக்கியதற்குப் பிறகு அதை நிறைவேற்றுவதில் ஈடுபட வேண்டும். அதற்குரிய பணத்தை ஒதுக்கித் தருவதிலே நிதியமைச்சர் என்ற முறையிலே நான் தடையாக இருக்கமாட்டேன் என்ற உறுதிமொழியையும் நான் தந்திருக்கிறேன். ஆகவே, விரைவிலே கட்டி முடிக்கப்பட வேண்டும் என்பதுதான் நம்முடைய விருப்பம். பெரும்பாலான மாநிலங்களிலே வசதியான முறையிலே கட்டடங்களை அமைத்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பணிகளைச் செம்மையாக நடத்துவதற்கான வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. சட்டமன்றம் 3 திங்களுக்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டுமென்று எடுத்துச் சொன்ன கருத்தும் எனக்கு உடன்பாடான கருத்துத்தான்.

(பிற்பகல் 1.40)

ஆகவே இப்போதுகூட கிட்டத்தட்ட வருடத்தில், எப்போதும் நாம் வைத்திருக்கிற ஒரு முறை, ஜனவரி தொடங்கிய உடனே ஆளுநர் கூட்டத்தை நடத்துவதென்றும், பிப்ரவரி இறுதியில் ஆரம்பித்து மார்ச் இறுதிக்குள்ளாக வரவு-செலவுத் திட்ட கூட்டத்தை நடத்துவதென்றும், அதற்குப் பிறகு ஜூலை அல்லது ஆகஸ்ட் வாக்கில் ஒரு கூட்டத்தை நடத்துவதென்றும், பிறகு நவம்பர் அல்லது டிசம்பரில் ஒரு கூட்டத்தை நடத்துவதென்றும்தான் பொதுவாக நாம் வைத்திருக்கிறோம். அது தான் பல சமயங்களில் கையாளப்பட்டு வருகிறது. சில நேரங்களில் எதிர்பாராத சூழ்நிலையாலும், மற்றவைகளாலும் இவைகள் தள்ளப்பட்டு விடுகின்றன. மூன்று மாதத்திற்கொருமுறை சட்டமன்றம் நடைபெறுவது கூட ஆட்சி நடத்துகிற எங்களுக்கு மிக ஏற்றதாக இருக்கும். எங்களுக்கு சவுகரியமாக அமைகின்ற ஒன்றுதான். அரசாங்கத்தின் சார்பாக பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நினைக்கக்கூடிய பல கருத்துக்கள் கூட சட்டமன்றத்தின் மூலமாக தெரிவிக்கப்படுகின்றன. பல ஐயப்பாடுகளைப் போக்குவதில் சட்டமன்றம்தான் பயன்படுகிறது. அதுமட்டுமல்லாமல் நாட்டிலே ஆட்சித் துறைகளில், நிர்வாகத் துறைகளில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன. என்னென்ன குற்றங்கள் நடக்கின்றன என்பதை சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே எடுத்துத் தெரிவிக்கிறபோது அவைகள் அமைச்சர்களுடைய கவனத்திற்கு வர, அதுபற்றி அவர்கள் நடவடிக்கை எடுக்க, அவைகளை சீர்படுத்த, செம்மைப்படுத்துவதற்கு கூட அது பயன்படுகின்றது. ஆகவே கேள்வி நேரங்களில் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கேட்கிற கேள்விகள் இந்த ஆட்சியை செம்மையாக நடத்துவதற்கு மட்டுமல்லாமல், சந்தேகத்திற்கு இடமில்லாத அளவிற்கு, பொதுமக்களுடைய நம்பிக்கையையும், நன்மதிப்பையும், பெற்று நடத்துவதற்கு அப்படிப்பட்ட கேள்விகள் எல்லாம் பயன்படுகின்றன.





இங்கே ஒரு உறுப்பினர் கேள்வி கேட்டுவிட்டார்கள்; ஆகவே
ஒரு ஊழல் நடைபெற்று விட்டது ; ஒரு குற்றம் நிகழ்ந்து
விட்டது ; அல்லது ஒரு இடத்திலே கொள்ளை நடந்து விட்டது;
என்று சொன்னால் போதும். அதைப்பற்றி நாங்கள் விசாரித்து
தக்க நடவடிக்கை எடுப்போம் என்று வாக்குறுதி தந்து விடுவோ
மானால், அந்த ஒன்றை வைத்துக்கொண்டே அந்தந்த துறை
களின் அதிகாரிகளை அழைத்து இப்படி நடந்ததே, அதற்கு
என்ன நடவடிக்கையென்று கேட்பதற்கு எங்களுக்கு வாய்ப்பு
ஏற்படுகிறது. இல்லாவிட்டால் எங்களுடைய கண்களுக்கும்,
காதுகளுக்கும் கூட வர முடியாமல் சூழ்நிலைகள் ஏற்படுகின்றன.
ஆகவே சட்டமன்றம் மூன்று மாத காலத்திற்கு ஒருமுறை நடப்
பது ஆட்சியிலே இருக்கிற எங்களுக்கும் கூட வாய்ப்பாக இருக்கும்.
ஆனால் எதிர்பாராத வகையில் தள்ளிக் கொண்டு போய் விடு
கின்றன.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, சட்ட
மன்றம் பொதுவாக வருடத்திற்கு மூன்று தடவைகள் நடக்
கின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
நாடாளுமன்றத்தில் பல்லாண்டு காலமாக எந்த நிலைமைகள்
வந்தாலும் மூன்று தடவைகள் தவறாமல் நடத்துகிறார்கள்.
இப்போது கூட ஏசியட் கேம்ஸ் வந்தபோது கூட்டத்தை கைவிட்
வில்லை அவர்கள். தேதியை மாற்றி, சிறிது அட்ஜெர்ன் செய்து
செஷனை நடத்தினார்கள். ஆகவே மாண்புமிகு முன்னவர் அவர்
களை பொதுவாக சொல்லாமல் ஒரு டெஃபனெட் அஷ்யூரன்ஸ்
ஸாக, மற்ற எந்த பிரச்சினைகள் வந்தாலும் அவற்றை அட்
ஜெஸ்ட் செய்து, மினிமம் மூன்று தடவைகள் செஷன் நடக்கு
மென்று கேரண்டி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பெரும்பாலான
ஆண்டுகளில் சட்டமன்றம் மூன்று தடவைகளில் நடை
பெற்று வந்திருக்கிறது. சிலசமயம் நான்கு தடவைகள் கூட
நடந்திருக்கிறது. சட்டப்படி பார்த்தால் கூட ஆறுமாத காலத்
திற்குள்ளே கூட வேண்டுமென்று இருக்கிறது. ஆகவே மூன்று
தடவைகள் கூட வேண்டுமென்ற கருத்தை நானும் ஏற்றுக்
கொள்கிறேன். அதை நடைமுறைப் படுத்துகிற எல்லா
முயற்சிகளையும் அரசு செய்யும். ஆளுநர் உரையைப் பற்றிய
விவாதத்திற்கும், வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்கும் மேலே
சிலநாட்கள் இடைவெளி வைத்தாலும் கூட, அடுத்து ஒருமுறை
கூட, கடைசியிலே நவம்பர் அல்லது டிசம்பரில் கூடுகிற சூழ்நிலை
வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் சொன்னதைப்
போல மூன்று தடவைகள் என்று வந்து விடும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 19

வாக்காளர்கள் வயதை 18 ஆக உள்ளாட்சி மன்றங்களுக்கு
ஆக்கியிருப்பதைப் போல பொதுத் தேர்தலைப் பொறுத்தும்
ஆக்க வேண்டும். அதற்காக வற்புறுத்துவது நல்லது என்று
மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் போன்றவர்கள் குறிப்பிட்டுச்
சொன்னார்கள். ஆனால் உள்ளாட்சி மன்றத் தேர்தலில் வயதை
நிர்ணயிக்கிற உரிமை மாநில அரசிற்கு இருக்கிறது. பொதுத்
தேர்தல், சட்டமன்றத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகிய
வற்றைப் பொறுத்தவரையில் வாக்காளர்களுடைய வயதை நிர்ண
யிக்கிற பொறுப்பு மத்திய அரசினுடைய எலக்ஷன் கமிஷனிற்கு
இருக்கிறது. அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல அந்த
எலக்ஷன் கமிஷன்தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால்
மாநிலத்தில் நடைமுறைப்படுத்துகிற சூழ்நிலை நமக்கு வருகிற
போது உள்ளாட்சி மன்றங்களுக்கு இப்போது 18 வயதானவர்கள்
வாக்களிக்கலாம் என்ற முறையை நாம் கையாண்டோமே இதே
முறையை பின்பற்ற வேண்டுமென்று அவர்களுக்கு வற்புறுத்தி
எடுத்துச் சொல்வதற்கும், நமக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அந்த
வாய்ப்பு ஏற்படுகிறபோது இந்த அரசு வற்புறுத்தும் என்பதை
குறிப்பிட விரும்புகிறேன். மற்றொன்று, பாராளுமன்றத்
தொகுதிகள் எந்த வகையில் குறைந்து விடாமல் பார்த்துக்
கொள்ள வேண்டுமென்று பல உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்
தார்கள். மாண்புமிகு கோவைத் தம்பி அவர்கள் அது பற்றி
எடுத்துத் தெரிவித்தார்கள். 41 இடங்களாக இருந்தது. பிறகு
எண்ணிக்கையின் அடிப்படையில் 39 ஆகிவிட்டது. இது இன்னும்
குறைந்துவிடுமோ என்று அஞ்சுகிறோம் என்று எடுத்துச் சொன்
னார்கள். இதை நாமே, பல தடவைகள் எடுத்துச் சொல்லியிருக்
கிறோம். குடும்ப நலத் திட்டத்தை, வேறு பல மாநிலங்களை
விடத் தமிழகம் மிகச் சிறப்பாக நிறைவேற்றி வந்ததன்
காரணமாக, பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 41
ஆக ஒதுக்கப்பட்டது. பிறகு 39 ஆகக் குறைத்து ஒதுக்கப்பட்டது.
அதைப் பற்றிக் கூட இந்த சட்டமன்றத்தின் மூலமாக எடுத்துச்
சொல்லியிருக்கிறோம். மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி
யிருக்கிறோம். மாநில முதலமைச்சர்கள் மாநாட்டிலே எடுத்துச்
சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு பிரதமர் இந்திரா காந்தி
அம்மையார் அவர்கள் இங்கே வந்தபொழுது கூட,' அதனால்
ஏற்படுகிற தன்மைகளை எடுத்துச் சொன்னோம். இந்த இட
ஒதுக்கீடு என்று வருகின்றபொழுது, 1951 லே எடுத்த
சென்சஸ் என்னவோ, அந்த சென்சஸ் அடிப்படையிலே ஒதுக்கப்
பட்டது தான் என்றென்றும் இருக்க வேண்டுமே தவிர, அதற்குப்
பிறகு எக்காரணம் குறித்தும், மாற்றவே கூடாது. குடும்பக்
கட்டுப்பாடு திட்டத்தை நிறைவேற்றுகிற மாநிலங்களுக்கு
அது பரிசாக அமைய வேண்டுமே தவிர, அவர்களுக்கு ஒரு
தண்டனை விதிக்கிற அளவுக்கு எண்ணிக்கையைக் குறைக்கக்
கூடாது என்று வாதிட்டதற்குப் பிறகு, இப்பொழுது மத்திய



1983 ஏப்ரல் 19] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அரசு ஒரு திருத்தத்தை அரசியல் சட்டத்தைக் கொண்டு வந்
திருக்கிறார்கள். கி.பி. 2,000 ஆண்டு வரையிலும் இப்பொழுது
இருக்கிற 39 இடங்கள் ஒதுக்கீட்டைக் குறைக்கப் போவதில்லை.
2,000-க்குப் பிறகு வருகிற சென்ஸஸ் அடிப்படையிலே மீண்டும்
நாம் பரிசீலிக்கலாம் என்ற அளவுக்கு அரசியலமைப்புச் சட்டத்
திலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கி.பி.
2,000 வரையில் அதை மாற்றுவதில்லை யென்று வைத்திருக்
கிறார்கள். இருந்தாலும் கூட, 1951-லே அரசியலமைப்புச்
சட்டம் உருவாக்கப்பட்டதற்குப் பிறகு நடைபெற்ற பொதுத்
தேர்தல் 1952-ல். 1951 ஆவது ஆண்டு சென்சஸ்
கணக்கின்படிதான் அது நடத்தப்பட்டது. 1951 ஆவது ஆண்டு
தான் என்றென்றைக்கும் நிரந்தரமாக இருக்க வேண்டும். நாம்
குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுகிறோம் என்றால், இந்த
மாநிலம் அகில இந்திய அரசினுடைய நோக்கத்தை நிறைவேற்று
வதற்கு, நமக்குப் பரிசாக அது அமைய வேண்டுமே தவிர,
பாராளுமன்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கையைக் குறைய
விடக் கூடாது என்று வற்புறுத்துகிறோம்.

இப்பொழுது ஒரு பாராளுமன்றத்திற்கு 6 சட்டமன்ற இடங்
கள் என்று நாம் வைத்திருக்கிறோம். சில மாநிலங்களில் 7
என்று வைத்திருக்கிறார்கள். சில மாநிலங்களில் 8 என்று கூட
வைத்திருக்கிறார்கள். டீ லிமிட்டேஷன் கமிட்டி மறுபடியும்
வருகின்றபொழுது, சட்டமன்றங்களுக்கு எல்லையை வகுப்பதற்
காக வருகின்றபொழுது, நாமும் கூட அதை மாற்றச் சொல்ல
லாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே, ஒரு
சட்டமன்றத் தொகுதிக்கு 80,000, 90,000 வாக்காளர்கள்,
என்று நிர்ணயித்து, இப்பொழுது, கிட்டத்தட்ட, 1,30,000,
1,35,000 என்ற அளவுக்குக்கூட வாக்காளர்களுடைய எண்ணிக்
கைப் போயிருக்கிறது. நம் மாநிலத்தைப் பொறுத்தவரை 39
பாராளுமன்ற உறுப்பினர்களது எண்ணிக்கையை நாம் மாற்ற
முடியாது. ஆனால், ஒவ்வொரு பாராளுமன்றத்தினுடைய சட்ட
மன்ற இடங்களை நாம்—டீ லிமிட்டேஷன் கமிட்டி வருகின்ற
பொழுது சிபாரிசு செய்து, அந்த எண்ணிக்கையைக்கூட கூடுதலாக
ஆக்கிக் கொள்ளலாம். அப்படி ஆக்கிக் கொள்கின்றபொழுது,
6 ஆக இருப்பதை, 8 அல்லது 9 இடம் என்று—அதாவது ஒரு
பாராளுமன்ற சீட்டுக்கு 8 அல்லது 9 சட்டமன்ற உறுப்பினர்கள்
இடம் என்று வைக்கலாம் என்று, இந்த அவையினுடைய கருத்
தைக் கேட்டு, அந்த அளவிலே ஒரு முடிவு செய்யலாம் என்று
அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. அடுத்த டீ லிமிட்டேஷன்ஸ்
கமிட்டியும் வரவேண்டும். அப்படி வரும்போது இந்த அவை
யைக் கேட்டு, அவையினுடைய எண்ணத்தை அறிந்து, அதனுடைய
எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று நாம் கருதிக்
கொண்டிருக்கிறோம்.

நடவடிக்கைக் குறிப்புகளை நீக்குவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நடவடிக்கைக் குறிப்புகளைப் பொறுத்தவரை, அது மாண்புமிகு தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம். சில சமயம் அவையிலே குறைபாடு இருக்கிறது, மாறுபாடாக இருக்கிறது, முறை தவறி இருக்கிறது என்றால், அப்படிப்பட்ட அதிகாரம் பேரவைத் தலைவருக்கு இருந்தால் தான் அவையினுடைய ஒழுங்கு, பாங்கு எல்லாம் சிறப்பாக நடைபெற முடியும். ஆகவே அந்த அடிப்படையிலேதான் சிலவற்றைச் செய்கிறார்கள். அதைப்பற்றி மீண்டும் பேரவைத் தலைவருக்கு எடுத்துச் சொல்லி, மறுபடியும் திருத்திக் கொள்ள அல்லது மாற்றிக் கொள்வதற்குக் கூட வாய்ப்பு வசதிகள் எல்லாம் இருப்பதன் காரணத்தால், அப்படி வாய்ப்பு இருந்தால்தான் அவையை ஒழுங்காக, முறையாக நடத்த வாய்ப்பு ஏற்படும் என்று நான் கூறிக் கொள்கிறேன்.

உணவு விடுதிகளைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நமது உணவு விடுதி சரியாக இல்லையென்று எடுத்துச் சொன்னார்கள். இதற்கு ஹவுஸ் கமிட்டி இருக்கிறது. கான்ட்ராக்ட் விடப்படும்போது, எடுக்கிறவர்கள் சரியாக இல்லாவிட்டால், மோசமான நிலைமை வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள், சிறந்தவர்களை வைத்து நடத்துவதற்கு ஏதாவது ஆலோசனைகளை எடுத்துச்சொல்வார்களானால், ஹவுஸ் கமிட்டி சொல்லுமானால், அதை இந்தச் சட்டமன்றத் துறையினர் கேட்டு நடப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால் மற்ற ஓட்டல்களுக்கில்லாத சில பல வசதிகளை எல்லாம் கூட நாம் அவர்களுக்குத் தருகிறோம். வசதிகளையும் பெற்று நல்ல உணவுகளைச் சமைத்துத் தரவில்லையென்றால், அதை ஏற்றுக் கொண்டவர்கள் பொறுப்பாக அது அமைகிறது. அப்படிப்பட்டவர்களை விரைவில் மாற்றிவிட்டு வேறு ஆட்களை வைத்துக் கொள்வதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் ஹவுஸ் கமிட்டியின் மூலம் அதைச் சொல்வார்களானால், அந்த நடவடிக்கையை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கும் என்று நான் கூறுகிறேன்.

சட்டமன்ற நிகழ்ச்சிக்கு வானொலியில் ஒதுக்கப்படும் நேரம் பற்றி, இன்னும் கொஞ்சம் அதிகமாக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள். வானொலியிலே ஓரளவுக்கு நேரம் ஒதுக்குகிறார்கள். வாரத்திலே ஒரு தடவை அந்த வாரம் நடைபெற்றதை எடுத்துச் சொல்வதற்கென்று 10 நிமிடம், 15 நிமிடம் ஒதுக்கியிருக்கிறார்கள்.





(பிற்பகல் 1–50)

அவர்கள் எடுத்துச்சொல்லியதுமாதிரி கொஞ்சம் கூடுதலான நேரம் ஒதுக்குவது, சட்டமன்ற நேரத்திலே ஒதுக்குவது நல்லது. ஏனென்றால், நாட்டிலேயே, மாநிலத்திலேயே ஆளுகின்ற முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருப்பது சட்டமன்றம். இங்கே இயற்றப்படுகின்ற சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற வகை யிலேதான் நிர்வாகத் துறை இருக்கிறது. ஆகவே, சட்டமன்றம் தான் இதற்கு முழுப்பொறுப்பாகவும் அமைகிறது. நான் முன்பே ஒருமுறை எடுத்துச் சொல்லியதைப்போல, ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பாற்ற சட்டமன்றம் வலிவு பெற வேண்டும்; நிர் வாகத் துறை வலிவு பெற வேண்டும் : இரண்டுக்குமே சம்பந் தப்படாமல் தனித்து இயங்கக்கூடிய வல்லமை பெற்றிருக்கின்ற நீதித் துறையும் சரியாக இயங்க வேண்டும் என்கின்றபொழுது, சட்டமன்றத்தினுடைய நிகழ்ச்சிகள் எப்படி நடைபெறுகின்றன; என்ன நிலைமைகள் ஏற்பட்டன என்பதை நாட்டுமக்கள் புரிந்து கொள்கின்ற அளவிற்குச் செய்யக்கூடிய ஒரே ஒரு பெரும் கருவி வானொலிதான். ஆகவே, வானொலியில் ஒதுக்குகின்ற நேரத் தைக் கொஞ்சம் கூடுதலாக ஒதுக்கி, பல உறுப்பினர்களும் எடுத் துச் சொல்கின்ற பல்வேறு கருத்துக்களையும் எடுத்துச் சொல் கின்ற அளவிற்கு வருமேயானால் மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டமன்றத்திலே எப்படிப்பட்ட பணிகளை ஆற்றிக்கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வது மட்டுமல்லாமல், எப்படிப்பட்ட கருத்துக்கள் பரிமாறப்பட்டன, என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதை நாட்டு மக்கள் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு அது வாய்ப்பாக இருக்கும். வானொலித்துறை யினரேகூட இதைக் கூடுதலாக ஆக்குவதற்கு, வேறு என்னென் னமோ நிகழ்ச்சிகளுக்கெல்லாம் நேரத்தை ஒதுக்கிக்கொண்டு போகின்ற பொழுது இந்தச் சட்டமன்ற நிகழ்ச்சிகளுக்குக் கால் மணி நேரம் ஒதுக்குவதை, கூட ஒரு இன்னும் கால் மணி நேரம் இந்தச் சட்டமன்ற நாட்களுக்கு மட்டும் ஒதுக்குவதில் வானொ லிக்கு அதிகக் கஷ்டம் இருக்காது என்று நான் கருதுகிறேன். அதன் மூலம் ஜனநாயகமும் வளர்கிறது ; ஜனநாயகம் என் பதிலே மக்கள் விழிப்புணர்ச்சியோடு இருக்க வேண்டுமென்பது தான் ஜனநாயகத்தினுடைய அடிப்படைத் தத்துவமாகும். ப களை விழிப்புணர்ச்சியோடு இருக்கும்படிச் செய்ய வேண்டிய பொறுப்பு அரசியல் கட்சிகளுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் இருக்கிறது. எனவேதான், பொதுமக்களுக்கு விளக்கங்கள் தர வேண்டிய பொறுப்பும் அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், அர சியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் இருக்கிறது. அந்தப் பொறுப்பைச் சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் ஏற்றுக்கொண் டிருப்பதன் காரணமாக அதற்கு அதிக நேரம் கொடுத்து வானொ லியிலே கொண்டு வருகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தினால் மிக மிக நல்லது என்பதையும் நானும் சேர்ந்து வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 19

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, தற்காலிகமாக வேலை தருகிறோம். அவர்கள் வேறு வேலை பார்க்கலாம. வேறு வேலைக்குப் போகலாம். ஆனாலும்கூட, அவர்கள் மறுபடியும் இங்கே வந்து போன தடவை எங்களுக்கு வேலை இங்கே கொடுக்கப்பட்டது. எங்களைத் தவிர, வேறு யாருக்கும் கொடுத்துவிடாதீர்கள், எங்களுக்கு தாருங்கள் என்று கேட்கிறார்கள். ஆகவே தருகிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஒவ்வொரு ஆண்டும் வருகிறார்கள் என்றால் வேறு வேலை அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று தான் அர்த்தம். சட்டமன்றம் கூடுகின்ற நாட்களில் இந்தப் பணியைக் கொடுக்கலாம். மற்ற நாட்களில் வேறு பணிகளைப் பார்க்க ஏற்பாடு செய்யலாம் அல்லவா ? அரசாங்கம் நினைத்தால் செய்யலாம். பெரிய சிரமம் ஒன்றும் ஏற்படப் போவதில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆளுக்கு சம்பளம் கொடுக்கிறதா ? இல்லை ஆளுக்கு வேலை கொடுக்கிறதா என்ற பிரச்சினை வருகிறபோதுதான் நாம் சற்றுக் கவனிக்க வேண்டியிருக்கிறது. வேலையே இல்லாமல் நாட்டில் பல பேர் இருக்கிறார்கள், நான் ஒத்துக்கொள்கிறேன். அவர்களுக்கு வேலை வேண்டுமென்பதையும் ஒத்துக்கொள்கிறேன். பல தடவைகள் அவர்கள் எங்களை விட்டுவிடாதீர்கள். போன தடவை நாங்கள்தான் வேலை பார்த்தோம் என்று சொல்கிறார்கள், ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்தை நாம் சிந்திக்கலாம். அவர்களை வேறு பல வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பிருந்து, இந்த 77 நாட்களைத் தவிர, வேறு பல நாட்களுக்கு , அவர்களை இம்மாதிரி பயன்படுத்தமுடியும் என்ற சூழ்நிலை ஏற்படுமேயானால், அதை ஆராய்ந்து அவர்களை நிரந்தரமாக்குவதற்கு முயற்சி செய்யலாமா என்பதை யோசிக்கலாம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நூல் நிலையக் குழு ஒன்று அமையவில்லை என்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே என்றைக்குமே அமையவில்லை. ஆகவே அமைக்க வேண்டுமென்று கேளுங்கள். அமையவில்லை என்று குறையாகச் சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அது அமைய வேண்டுமென்ற கருத்தை எடுத்துக்கொள்கிறேன். ஆனால் நூல் நிலையக் குழு என்று அமைந்து, அதனுடைய பணிகள் செம்மையாக நடைபெற வேண்டுமென்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இதுவரையிலும் நடைபெறாமல் இருந்தது. அவ்வாறு அமைவதின் மூலம் சில பல நன்மைகள் ஏற்பட முடியும். அதைப்பற்றி யோசித்து. நாம் நடவடிக்கைகள் எடுக்கலாம்.





நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நமது நூல் நிலையத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு மாநிலங்களில் உள்ள சட்டமன்ற நூல் நிலையங்களை நீங்கள் போய்பார்த்தால் தமிழகச் சட்டமன்றத்தின் நூல் நிலையத்தில் இருக்கின்ற அளவிற்கு நூல்களும், தஸ்தாவேஜுகளும், மற்றவைகளும், வேறு எந்த சட்டமன்ற நூல் நிலையத்திலும் கிடையாது. நான் கர்நாடக மாநிலத்தின் சட்டமன்ற நூல் நிலையத்தைப் பார்வையிட்டபோது, இங்கே முன்னாள் சட்டமன்றச் செயலாளராக இருந்த ஹனுமந்தப்பா அவர்கள் அங்கேயிருந்தார்கள். அவர்கள் அப்போது சொன்னார்கள்—நீங்கள் தமிழகச் சட்ட மன்றத்தின் நூல் நிலையத்தோடு எங்கள் நூல் நிலையத்தை ஒப்பிட்டுப்பார்க்காதீர்கள். அதற்கு ஈடுஇணையாக எங்கள் நூல் நிலையம் வராது. இது சாதாரணமாகத்தான் இருக்கும் என்று சொல்லித்தான் என்னை உள்ளே அழைத்துப்போனார்கள். நான் எதற்கு சொல்ல வருகிறேன் என்றால், மாண்புமிகு உறுப் பினர்கள் இந்த நூல் நிலையத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதில் எனக்கு பெரும் விருப்பம் உண்டு. குழு அமைக்க வேண்டும். நூல் நிலையத்தை பயன்படுத்துகிறவர்கள் மிக மிகக் குறைவு. அதைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் இந்த அவையிலே நடைபெறுகின்ற விவாதம் சிறப்புப்பெறுவதற்கு வழிவகை ஏற்படும். அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்பது தான் எனக்கு வருத்தமே தவிர, அதைப் பயன்படுத்திக் கொள்கின்ற சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பெறவேண்டும்.

இங்கே செலவினத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் குறிப்பிட்டார்கள். போன ஆண்டு ஒதுக்கியதைத்தான் இந்த ஆண்டும, சட்டமன்றத்தைப் பொறுத்தவரயில், நீங்கள் ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். ஆகவே பொது வாக போன வருடத்தினுடைய தொகையை கிட்டத்தட்ட பார்க் கின்றபோது, அதனுடைய ''ஆக்சுவல்ஸ்' அல்லது ''ரிவைஸ்டு எஸ்டிமேட்', எவ்வளவு வருகிறதோ அதைத் தான் அடுத்த ஆண்டிற்கு நாம் முதலாவதாக வைத்திருக்கிறோம். வேறு பல துறைகளில் பார்ட்—2 ஸ்கீமில்—அதிலே கூடுதலாக திட்டம் போடுகிறபோது, 6 கோடி, 10 கோடி, 20 கோடி என்று போன ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு சற்றுக் கூடுதலாக வரும். ஆனால் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், இப் படிப்பட்ட நல்வாழ்வு திட்டங்கள் போடுவதில்லை. ஆகவே, தான் ஏற்கனவே இருக்கின்ற ஆண்டினுடைய கணக்கை விற்கு கணக்கிடப்பட்டு, போட்டு அதை வைத்திருக்கிறார்கள். கூடுதலாக செலவு ஏற்பட்டுவிடுமேயானால், அதைச் செலவு செய்வதற்கு அட்டி கிடையாது. மறுபடியும அடுத்து வருகின்ற துணை மானியக் கோரிக்கையில் அதற்கான செலவை நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஆகவே இந்த ஆண்டு நாம் அதிகமாக அறிவிப் தற்கு ஒன்றும் இருக்காது என்ற காரணத்தினால் தான் இந்த நிலைமையோடு இது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 19

தேர்தல் செலவைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். அதற்கு வரைமுறைகளெல்லாம் இருக்கின்றன. அதற்குக்கட்டுப்பட்டு கணக்கை எப்படிக் காட்டலாம் என்பதிலே எல்லோரும் வல்லமை பெற்றுத்தான் விளங்குகிறார்கள். ஆனால், அதை எப்படிக் கட்டுப்படுத்துவது என்கிற அளவிற்குத் தெரியாமல் செலவுகள் அதிகமாகி விட்டன. அது நாளுக்கு நாள் அதிகமாக ஆகிவிட்டது.

இங்கிலாந்திலே தேர்தல் நடைபெறுகிறது, பிரிட்டனிலே தேர்தல் நடைபெறுகிறது என்றால் ஓட்டர்களுக்கு இன்ன சாவடிக்கு நீ வரவேண்டுமென்பதையெல்லாம் அரசாங்கமே பொறுப்பு ஏற்றுக்கொள்கிறது. தேர்தல் காலத்திலே வேட்பாளர்கள், மற்றவர்கள் போஸ்ட்டர்கள், பாம்ப்லெட்டுகள் மற்றவைகளைக் கொடுப்பதற்கு ஸ்டாம்பு ஒட்ட வேண்டிய அவசியமில்லை. அவர்களே போஸ்ட்டாபீஸிலே கொண்டு போய், இன்ன கான்ஸ்டிடியூயன்சி என்று போட்டுக் கொடுப்பார்களேயானால், ஸ்டாம்ப் ஒட்டாமலே எல்லா வாக்களர்களுக்கும் அப்பீலாக இருந்தால் அப்பீல் அனுப்பலாம்; போஸ்ட்டல் என்றால் அப்பீல் அனுப்பலாம்; துண்டறிக்கைகள் என்றால் துண்டறிக்கை அனுப்பலாம். அதற்கு ஸ்டாம்பு ஒட்ட வேண்டிய அவசியமில்லை என்று பிரிட்டனிலே வைத்திருக்கிறார்கள்.

அந்தமுறை இந்தியாவிலேயும் வந்து அதையெல்லாம் தாங்குகின்ற அளவிற்கு வந்துவிடுமேயானால்கூட, இப்படிப்பட்ட செலவுகளெல்லாம் கூட பெருமளவிற்குக் குறைய முடியும். ஏனென்றால் வோட்டர்களுக்குப்போய் ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது; உன்னுடைய பெயர் இது; உன்னுடைய ஓட்டுச் சாவடி இது என்று. அந்தப் பொறுப்பை அரசே அங்கே ஏற்றுக் கொள்கிறது. அவர்களே ஒரு கார்டின் மூலமாக எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிவித்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட முறையில் வருகின்றபொழுது வேண்டுமானால் ஓரளவுக்குச் செலவினங்கள் குறையலாமெ தவிர, ஆனால் செலவினத்தை நாளுக்கு நாள் வளர்கின்ற அளவுக்கு இந்தச் சூழ்நிலை, இயந்திரத்தை இயக்குவதற்குப் பெரும் செலவு ஏற்படுகிறது; தேர்தல் இயந்திரத்தை இயக்குவதற்கு ஆகின்றது. அதை எப்படி கட்டுப்படுத்துவது என்பதைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லலாம்.

நான்கு மைல், ஐந்து மைல்களுக்கு ஒரு ஓட்டுச் சாவடி என்பதைப் பெரும்பாலான அளவிற்கு, ஆண்டுக்காண்டு, தேர்தலுக்குத் தேர்தல் பார்க்கின்றபொழுது, ஓட்டுச் சாவடிகளுடைய எண்ணிக்கை ஓரளவிற்குப் பெருக்கப்பட்டிருக்கிறது; அதனுடைய தொலைவும் குறைக்கப்பட்டு வருகிறது. இன்னும் குறைவதற்கான அளவிற்கு ஒரு ஓட்டுச் சாவடியில் இவ்வளவு எண்ணிக்கைதான் இருக்கலாம் என்ற அளவிற்குகூட ஒரு கணக்கு போட்



1983 ஏப்ரல் 19] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அடிப்படையிலேயும் டிருக்கிறார்கள். அந்தக் கணக்கினுடைய அதை இன் ஓட்டுச் சாவடிகளைக் கணக்கிட்டு வைக்கிறார்கள். அண்மையிலே வைப்பதற்னும் எவ்வளவு தொலைவு குறைத்து, முடியுமோ அதை மேற்கான சூழ்நிலைகளை மேற்கொள்ள கொள்ளலாம்.

தினக் கூலி முறை கூடாது என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். நிரந்தரமாக 365 நாட்களுக்கும் இந்தத் துறையிலே இருக்கின்றவர்கள் யாரையும் நாம் தற்காலிகமாக வைக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நாம் தற்காலிகமாக வைத்தாலும் நிரந்தரமாக்குவதற்கு ஏற்பாடு செய்கிறோம். நிரந்தரமாக வேலை காலியாக ஆகுமேயானால் அதற்கு விண்ணப்பித்து அந்த இடத்தைப் பெறலாம் என்று வைத்திருக்கிறோம். ஆனால் தினக் கூலி என்று எப்படி வைத்திருக்கிறோம் என்றால், சட்டமன்றம் கூடுகின்ற நாட்கள் மட்டும்தான் வேலை என்று வருகின்றபொழுது ஆண்டுக்கு 77 நாட்கள், 80 நாட்கள் கூடுகின்றபொழுது 365 நாட்களுக்கும சேர்த்து சம்பளம் கொடுக்கின்ற அளவிற்கு நிரந்தரமாக்க முடியவில்லை. அப்படிப்பட்ட பணிகளுக்கு தினக் கூலிகளாக சட்டமன்றம் கூடுகின்ற நாளிலே மட்டும், விடுதியிலே சில நிலைமைகள் ஏற்படுத்துகிறோம். சட்டமன்ற நடவடிக்கைகளையெல்லாம் பார்ப்பதற்கு, சட்டமன்ற நிகழ்ச்சிகள் நேரத்திலே மட்டும் சில குமாஸ்தாக்களை நாம் நியமிக்க வேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் மட்டும் சில பணியாளர்களை நியமிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களுக்குத் தொடர்ந்து கிட்டத்தட்ட 300 நாட்களுக்கு மேல் வேலை இருக்கிறது. என்ற நிலை வந்தாலும் கூட அவர்களை நிரந்தரம் ஆக்குவதில் கஷ்டம் இருக்காது. அதையும் பற்றி அரசு ஆராயும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, இந்த ஊழியர்கள் 80 நாட்களுக்குதான் செஷன் நடக்கிறபோது வேலை செய்கிறார்கள், ஒவ்வொரு வருஷமும் இது முடிந்துவிட்ட பிறகு இங்கே வரவேண்டியிருக்கிறது, வேறு வேலைக்கு போக வேண்டுமென்றால், எங்கே தேடுவது? அவர்கள் கடைசியில் ரிடையர் ஆகும் வரைக்கும் ரெகுலராகத்தான் வந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்துவார்கள். அதற்கு ஒரு வழிகாண வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆனால், ஒவ்வொரு செஷனுக்கும், அவர்களே வரவேண்டுமென்பதில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: வேறு வேலை இல்லாததால் அவர்கள் இங்கே வருகிறார்கள். அதற்கு என்ன நீங்கள் செய்கிறீர்கள்?

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 19

(பிற்பகல் 2·00)

இந்த அளவோடு வைக்கப்பட்டிருக்கிறதே தவிர, வேறு ஒன்று
மில்லை. 'அதர் எக்ஸ்பென்சஸ்'-ல் அமைச்சர்களைப்
பொறுத்தவரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்
னார்கள். அதில் சொல்லக் கூடாத செலவினம் ஒன்றுமே
இல்லை. இருக்கமுடியாது என்று சொல்லக்கூடாது. எல்லாம்
சொல்லக்கூடிய செலவுதான். எழுதி வைக்கக் கூடிய செலவு
தான். ஆனால் இந்தத் தலைப்பின் கீழ் வரவில்லை.
இது அமைச்சர் மற்றையஅட்மினிஸ்டேரேசன் என்ற அளவிற்கு
அந்தச் செலவிலே வருகின்ற கணக்கே தவிர, இந்தச் சட்டமன்றத்
திலே வருகின்ற கணக்கு அல்ல. அதற்கான விவரங்கள் எல்லாம்
வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதர் எக்ஸ்பன்ஸ் என்று
ஒரு தலைப்பு கொடுத்திருக்கிறார்களே தவிர அதற்குக் கீழே
என்னென்ன செலவு என்று எல்லாம் வருகிறது. அந்த ஆடிட்
செய்வார்கள். இங்கேயே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.
அது எதன் கீழே வருகிறது என்று சொன்னால் டீட்டெய்ட்
டிமாண்டு பார் கிராண்ட்ஸ் என்று வருகிறபோது, அதர்எக்ஸ்பன்சஸ்
என்று வருகிறபோது அலுவலகக் செலவுகள், தொலைபேசிக்
கட்டணங்கள், ஏனைய சில்லரைச் செலவுகள் மோட்டார், வண்டி
கள் வாங்குதல், பராமரிப்புச் செலவு. எரிபொருள் செலவு,
என்று வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எதையும்சொல்
லக்கூடாத செலவு என்று ஒன்றும் இருக்க முடியாது. ஏ.ஜி.-க்கு
பதில் சொல்லித் தீரவேண்டும். பிறகு பி.ஏ.சி.க்கு வந்துதீர
வேண்டும். ஆகவே அந்த தன்மைகளை எல்லாம் பார்க்கின்றபோது
செலவு செய்ய வேண்டுமென்று ஒரு அவசியம் வருகிறபோது
அதைச் செய்யாமல் நாம் இருக்கமாட்டோம். ஆனால் மாண்பு
மிகு உறுப்பினர்கள் பலரும் உறுப்பினர்களுடைய தன்மையைப்
பற்றிச் சொன்னார்கள். நான் எந்த ஒரு நிலைமையும்
இல்லாமல்—கூடுமான வரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர்
அறிவார்கள். அது வறட்சி நிலையாக இருப்பதன் காரண
மாகவும் பல்வேறு வகைகளில் இருப்பதை நாம் திருப்பிவிட
வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாகவும் தான்
எந்த ஒரு கட்டத்தையும் நாம் சிந்திப்பதற்கு முடியாமல்
இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் வற்
புறுத்தினார்கள். இங்கே அரசு அலுவலர்கள் மற்றவர்
களைப் பற்றியும், அவர்களுடைய சம்பளம், ஊதிய உயர்வைப்
பற்றியும் மற்றவைகளைப் பற்றியும் எல்லாம் சொல்லி; இது
கவனிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த ஆண்டு கூட
மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வைக்கப்படுகிற விருந்தும் வேண்
டாம் என்று சொல்லியாகிவிட்டது. விருந்து இந்த ஆண்டுக்கு
ஏற்பாடு செய்யுவிவில்லை. ஊட்டி, ஏற்காடு, கொடைக்கானல்
போன்றவைகளில் விழாக்கள் நடத்த வேண்டாம், ஆண்டு
தோறும் செலவழிக்கப்படுகின்ற மாதிரி இந்த ஆண்டு செலவழிக்க
வேண்டாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. புதிய பணிகள்
எதையும் இந்த ஆண்டிலே புதிதாக தேவையற்ற பதவிகளை



1983 ஏப்ரல் 19] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

உருவாக்கி அதற்கு சம்பளம் கொடுக்க வேண்டாம் என்று கூட
முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்போதுகூட 217 கோடி
ரூபாய் நாம் வறட்சி நிலைக்குத் தேவை என்று கேட்டாலும்கூட
இன்றைக்குக் காலையிலே பத்திரிகையிலே நான் பார்த்தேன்.
கிட்டத்தட்ட 63 கோடி ரூபாய் அவர்கள் ஒப்புதல் அளிக்கக்கூடும்
என்றும் இன்னும் நமக்கு உத்தரவு வந்து சேரவில்லை. அப்படி
வந்தாலும்கூட பெரும் பகுதியை வாங்க வேண்டிய அவசியம்
வந்தாலும் வரக்கூடும். அதுமட்டுமல்லாமல் உணவுப்
பிரச்சனையைப் பற்றி நாம் எடுத்துச் சொல்லுகின்றபோது நாம்
ஒரு ரூபாய் 75 காசு கொடுப்பதன் மூலமாக ஒரு லட்சம் டன்
அரிசியை நாம் கொள்முதல் செய்து கொடுப்பதன் மூலமாக
7 கோடியே 80 லட்சம் ரூபாய் நமக்கு சப்சிடி தரவேண்டியிருக்
கிறது. வெளி மார்க்கெட்டிலே வாங்கி எப்படியும் நாம் அரிசி
தர வேண்டும் என்ற முறையிலே நாம் ஈடுபட்டுக்கொண்டிருக்கி
றோம். அப்படி வாங்கினால் 19 கோடியே 40 லட்சம் ரூபாய் ஒவ்
வொரு லட்சம் டன்னுக்கும் நமக்கு சப்சிடி தரவேண்டியிருக்
கிறது. (குறுக்கீடு) 19 கோடியே 40 லட்சம் கிட்டத்தட்ட ஒரு
லட்சம் டன்னுக்கு. ஆகவே அப்படிப்பட்ட நிலைமை வருகிற
போது கிட்டத்தட்ட ஒரு 80 கோடிக்கு மேலே இந்த
ஆண்டு போனாலும் போகும் என்று கூறப்பட்டிருக்கிறது.
இதற்கு எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து இந்த நிலைமையை
சமாளிக்க வேண்டியிருப்பதன் காரணமாகவும், ஆகவேதான்
சட்டமன்ற உறுப்பினர்கள் பல கோரிக்கைகளை எழுப்பியிருக்
கிறார்கள் அவர்களுடைய மதிப்பு உயர்த்தப்பட வேண்டுமென்
பதிலும் நான் அக்கறை கொண்டவன். இன்னும் சொல்லப்
போனால் மாண்புமிகு உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்
களுக்கு எவ்வளவு மதிப்பும் மற்றவைகளும் மத்திய அரசின்
சார்பாக தருகிறார்களோ அத்தகைய மதிப்பும், நம்முடைய
மாநிலத்திலே இருக்கிற உங்களுக்கும் தரப்படவேண்டும். பொது
மக்களுடைய பிரதிநிதிகளாக வருகிறவர்கள் மதிக்கப்படவேண்டும்
மதிக்கத்தக்க அளவுக்கு பொதுமக்களுடைய பிரதிநிதியாக
இருப்பவர்களும் நடந்து கொள்ளவேண்டும் என்பதையும் நான்
ஒப்புக்கொள்கிறேன். இந்தத் திறன் ஆய்வு செய்யலாமா என்
பதைப் பற்றி ஒரு பிரச்சனை எழுந்தது. ஆகவே அந்த இலக்கணங்
கள் என்று வருகிறபோது சட்டமன்ற உறுப்பினர்கள்
மதிக்கப்படவேண்டியவர்கள். வெளியிலே சட்டமன்ற உறுப்
பினர்களைப் பற்றி—அவமானத்திற்கு அவர்கள் உள்ளாக்கப்
படவேண்டாம் என்ற கருத்தின் அடிப்படையிலே மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களும் சொன்னார்கள். ஒரு தனிப்
பட்டவர்கள் சிலபல தவறுகள் செய்வார்கள் அந்த விமர்
சனம் செய்து அந்தப் பொதுமக்கள் இடத்திலே அவர்களை
காட்டிக் கொடுப்பதிலே தவறு இல்லை. அப்படிப்பட்டவர்கள்
பொதுமக்கள்இடத்திலேஅம்பலப்படுத்தப்படவேண்டும். அப்போது
தான் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருப்பார்கள். ஆனால் சட்ட
மன்ற உறுப்பினர்களைப் பழித்து இழித்து அவமானப்படுத்தி

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 19

கேவலப்படுத்துகின்ற அளவுக்கு நாட்டுக்கு இடம் கொடுத்து
விடுவோமானால் பிறகு காலாகாலத்திலே ஜனநாயகத்திற்கே
மதிப்பு இல்லாமல், அந்த நிலைமைகள் சீர் கெடுகின்ற ஒரு நிலை
ஏற்பட்டுவிடும். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதுதான்.
மாண்புமிகு உறுப்பினர் கோவைதம்பி கூட குறிப்பிட்டார்
கள். கேலி பண்ணுவதாக, கிண்டல் செய்வதாக
சில படங்களை எடுக்கிறார்கள் என்று. அந்த இப்படி
எடுக்கக்கூடாது என்று தடுக்க முடியாது, அந்தக் கொள்
கைகள் எல்லாம் மத்திய அரசினுடைய தணிக்கைக் குழுவினரிடம்
தான் இருக்கிறது. அவர்கள்தான் அதற்காக நடவடிக்கை எடுக்க
வேண்டும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கோவைத்தம்பி
போன்றவர்கள் எல்லாம் இதிலே கொஞ்சம் ஈடுபட்டுக்கொண்டு
இருப்பதன் காரணமாக சட்டமன்ற உறுப்பினர்கள் நல்லவர்
களாக அவர்கள் என்னென்ன நல்ல செயல்களை எல்லாம்
செய்கிறார்கள் என்பதைப்பற்றி படம் எடுத்து வெளியிலே
விடுகின்ற நிலைமை வருமேயானால் இந்தப் படங்கள் எல்லாம்
தானாக அடங்கும். ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களிலே
பலபேர்கள் தங்களுடைய கொள்கை வெறியின் காரணமாக,
சம்பாதிக்க திறமைப்படைத்தவர்கள் எல்லாம்இங்கே வீற்றிருக்
கின்ற 234 பேரும் தனியாகத் தொழில் நடத்தி சென்றார்
களானால் மற்றவர்கள் சம்பாதிக்கிற அளவுக்கு சம்பாதிக்க
முடியாமலா இருப்பார்கள்?

தங்களுடைய நேரங்களையெல்லாம் செலவழித்துக்கொண்டு
234 பேர் இங்கே வந்து உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள்
என்றால் ஏதோ ஒரு காரணத்தாலே, ஏதோ ஒரு கொள்கையிலே
தங்களை ஐக்கியமாக்கிக்கொண்டு, அந்தப் பேரியக்கத்தின்
கொள்கையிலே பற்று கொண்டு இருப்பதன் காரணமாக அவர்கள்
தங்கள் தங்கள் வாழ்வை இழந்து இங்கே வந்து அமர்ந்து இருக்கி
கிறார்களே தவிர, இதிலே ஈடுபட்டிருப்பவர்கள் எல்லாம்
சைனா பஜாரிலோ அல்லது அண்ணா சாலையிலோ அல்லது மற்ற
இடங்களிலோ, ஆவடியிலோ, அம்பத்தூரிலோ தொழில் வைத்தி
திருப்பார்களானால், சிலர் எதைப்பற்றியும் கவலைப்படாமல்
சம்பாதிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறார்களேஅதைப்
போல் இருந்து இருப்பார்களயோனால், இங்கே அவர்களுடைய
திறமையெல்லாம் காட்டிக்கொண்டு இருப்பதைப் போல், தொ
ழிலிலே காட்டியிருப்பார்களானால், எவ்வளவோ ஒவ்வொருவரும்
சம்பாதித்து இருக்கமுடியும். எதற்கு நான் சொல்ல வருகிறேன்
என்றால் , நம்மை நாமே இரித்து, பழித்துப் பேசிக்கொள்ளக்
கூடாது என்பதும் அப்படி யாரும் பேசுவதற்கு இடம் கொடுக்கக்
கூடாது என்பதும், மற்றவர்கள் நம்மை மதிக்கத்தக்க அளவிற்கு
நாம் சட்டமன்றங்களின் நிலை. உறுப்பினர்களின் நிலை உயர்த்
தப்படவேண்டுமென்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதே
நேரத்தில் உறுப்பினர்களும் தங்களை மதிக்கத்தக்க அளவிற்கு
பிறர் போற்றத்தக்க அளவிற்கு, பாராட்டத்தக்க அளவிற்கு
தங்களுடைய நடவடிக்கைகளை கவனித்துக் கொள்ளவேண்



1983 ஏப்ரல் 19] [டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், பொது
மக்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருப்பார்கள். சட்ட
மன்ற உறுப்பினர்கள் என்றால், 1000 கண்கள்பார்த்துக் கொண்டு
தான் இருக்கும். எங்கே போகிறார்கள் என்று பார்த்துக் கொண்டு
இருக்கும். எங்கே வருகிறார்கள் என்று .பார்த்துக் கொண்டு
இருக்கும். எப்படிப் போகிறார்கள் என்று பார்த்துக்கொண்டு
இருக்கும். எதற்காகப் போகிறார்கள் என்று பார்த்துக்கொண்டு
இருக்கும். இப்படி ஆயிரம் கண்கள் பார்த்துக் கொண்டிருக்கும்
போது நாம் தான் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமே தவிர
மற்றவர்களைப் பற்றி குறை சொல்லாத அளவிற்கு நாம் வளர
வேண்டும். அந்த அளவிற்கு இந்த சட்டமன்றத்தின் பணிகள்
மற்றவைகள் எல்லாம் சீர்பெற்று சிறப்புபெற்று இருக்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

டெலிபோன் வசதி பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கான
ஏற்பாடுகள் முடிந்து விட்டன. இந்த மாத இறுதிக்குள் அதை
நிறைவேற்றிவிடுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.
டெலிபோன் வசதியைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு அறைக்
கும் ஏற்கனவே அலுவல் ஆய்வுக் குழுவில் தலைவர்கள் எடுத்த
முடிவிற்கிணங்க தனித்தனியாக டெலிபோன் வசதி பல அடுக்கு
சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியைப் பொறுத்த வரையில்
203 அறைகளுக்கு நேரடி தொலை பேசி வசதி அமைக்கப்படும்.
முன்னால் புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் 20 ப்ளஸ்
100 தானியங்கி தொலை பேசி இணைப்பகம் ஒன்றும், பழைய
சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் 5 ப்ளஸ் 20 இணைப்பகம்
ஒன்றும் நிறுவுவது என்று தீர்மானிக்கப்பட்டு மேற்படி நேரடித்
தொலைபேசி வசதிகள் மற்றும் 2 இணைப்பகங்கள் அமைக்க
அரசு அனுமதி வழங்கி அதற்கான செலவு 16 லட்சத்து 97
ஆயிரத்து 550 ரூபாய் தொலைபேசித்துறைக்கு இத்துறையால்
செலுத்தப்பட்டுவிட்டது. அவர்கள் இந்த மாத இறுதிக்குள்ளாக
அதைச் செய்து முடிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். வேறு
ஏதாவது இடர்பாடு இருந்தால் சிலகாலத் தாழ்வுகள் ஏற்படலாம்.
ஆனால் இந்த மாத இறுதிக்குள்ளே செய்து முடித்துவிடுவதாகச்
சொல்லியிருக்கிறார்கள். அப்படி முடித்துவிடுவார்களானால்,
ஒவ்வொரு அறைக்கும் நாம் ஏற்கனவே முடிவு செய்ததைப்
போல் தொலைபேசி இணைப்புகள் கிடைக்கும் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஒரு சாதாரண
மட்டும் கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற
விவரத்தை குறிப்பைத் தனித்தனியாகக் கொடுப்பதால் கடையில்
வடிக்கைக் நிலைமைகூட இருக்கிறது. பாராளுமன்றத்தில்
போட்டுவிடுகிற என்றால் பேசிமுடித்த உடனேயே டைப்
என்ன செய்கிறார்கள் கொடுக்கிறார்கள். பிறகு அந்த நடவடிக்கைக்
காப்பி ஒன்று

[திரு. துரைமுருகன்] [1983 ஏப்ரல் 19

குறிப்பை பைண்ட் செய்து கொடுத்து விடுகிறார்கள். அதைப் போன்று இங்கேயும் கொடுத்தால் விலைக்குப் போடமாட்டார்கள். எங்கும் காணாமல் போகாது. வீட்டில் பத்திரமாக இருக்கும். பிற்காலத்திற்கும் உதவும். ஆகவே அதைச் செய்யுங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத்தலைவர் அவர்களே, நல்ல யோசனை. இதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அவ்வப்போது இப்படிச் . செய்து கொடுக்க முடியாது. ஒரு பவுண்டு வால்யும் என்று வருகிறபோது, ஒரு ஆண்டிற்கு இரண்டோ மூன்றோதான் வரும். அது வரையில் காத்திருந்து அதையெல்லாம் சேர்த்து வைத்துத்தான் பவுண்டு செய்து தரமுடியும். அப்படித் தருவதில் ஆட்சேபணை இருக்காது. இந்தப் புரோஸீடிங்சைப் பொறுத்தவரையில் இப்போதிலிருந்தோ அல்லது இதுவரையில் கொடுக்காமல் இருப்பதையெல்லாம் சேர்த்தோ அந்தந்தத் தொடருக்கு அல்லது சில கூட்டத் தொடர்களைச் சேர்த்து பவுண்டு வால்யூமாக்கி ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்கும் முயற்சியை இந்தத் துறை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொருவர் வீட்டிலும் அது இருப்பது நல்லதுதான். ஏனென்றால், படித்துக்கொண்டு வரலாம். படித்துக் கொண்டு வந்தால் நல்லது. பலபேர் இதைப் பொதுக் கூட்டமாகவே பயன்படுத்திக் கொண்டுவிடுகிறார்களோ என்று சந்தேகமாயிருக்கிறது. இங்கே எதை வேண்டுமானாலும் பேசலாம். எப்படி வேண்டுமானாலும் பேசலாம் நாம் பேசுவதைப் பேசிவைப்போம். நடப்பது நடக்கட்டும் என்று பேசுகிறார்கள். பத்திரிகை நிருபர்கள் கூட அப்படிப்பட்டவர்களுக்குத் தான் மதிப்பு தருகிறார்கள். (சிரிப்பு) நான் இராத்திரி ஒரு மணி வரைக்கும் உட்கார்ந்து புள்ளி விவரங்களைச் சேகரித்து சொல்லுவதைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறார்கள். ஏதாவது ஒன்று நடக்காதா.? நடக்கக் கூடாதது நடக்காதா ? என்று எதிர்பார்த்துக் கொண்டு இருப்பது நல்லதல்ல. நான் குறை சொல்லவில்லை. வேடிக்கையாக, விளையாட்டாக இருக்கும் நிகழ்ச்சிகளையும் போட வேண்டும். அதை அவர்கள் போடாமல் மற்றவைகளை மட்டும் போட்டால் அதுவும் ஜனநாயகத்திற்கு நல்லதல்ல. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுவதைப் பார்க்கும் போது எல்லோரும் படித்துக் கொண்டு வருவதற்கு வாய்ப்பாக இந்த வால்யூம் இருக்கும். தனித்தனியாக இருந்தால் தொலைந்து விடும். கையில் அகப்படாத சூழ்நிலை ஏற்படும். ஆகவே பவுண்டு வால்யூமாகத் தருவதற்கு ஏற்பாடுகளை இந்தத் துறை மேற்கொள்ளும் என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 19]

(பிற்பகல் 2.10).

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, ஒரே ஒரு விளக்கம். நீங்கள் நிறைய சொன்னீர்கள். அங்கத்தினர்களுக்கு காப்பி, ஸ்வீட் சாப்பிடுவதற்குக் கொஞ்சம் வசதி செய்து கொடுக்க வேண்டும். பாராளுமன்றத்தில் ஏற்பாடு செய்திருப்பதைப் போல இங்கேயும் ''சேமினா'' ஏதாவது அமைத்து ஸ்வீட், காரம், காப்பி சாப்பிடுவதற்குக் ஏற்பாடு செய்யவேண்டும். அதுவும் இந்த 27-ந்தேதிக்குள் செய்யப்பட்டால் நாங்கள் எல்லாம் பாராட்டுவோம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, அதற்கான இட வசதி, மற்ற வசதிகள் எல்லாம் இருக்குமானால் அதைச் செய்து தரலாம். இந்த இலாகா செயலாளர் மூலமாக அந்த நடவடிக்கையை மேற்கொள்ள முயற்சி செய்யலாம். இடவசதி மற்ற வசதிகள் எல்லாம் இருந்தால், நீங்கள் சொல்வது மாதிரி இந்த இடத்திலே செய்ய முடிந்தால் செயலாளர் ஆராய்ந்து பார்த்து தக்க முயற்சி செய்வார் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுபபு

கோரிக்கை எண். 7—மாநிலச் சட்ட மன்றம்.

திருவாளர்கள் பாபு ஜனார்த்தனன், கே. எம். தங்கமணி, என். வரதராஜன், என். ஏ. பூங்காவனம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்டமன்றம் என்றதலைப்பின் கீழ் ரூ. 1,32,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று. கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 8—தேர்தல்கள்.

திருவாளர்கள் த. வேணுகோபால், கே. கல்லன், என். ஏ. பூங்காவனம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 36,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.

திருவாளர்கள் பாபு ஜனார்த்தனன், கே. எம். தங்கமணி, ரா. கிருஷ்ணன், என். ஏ. பூங்காவனம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 35,85,85,000-க்கு மேற் படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 43—பல்வகை.

திருவாளர்கள் த. வேணுகோபால், கே. எம். தங்கமணி, ரா. கிருஷ்ணன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி —

''மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 80,85,77,000-க்கு மேற்படாததொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



கோரிக்கை எண். 57—பல்வகை மூலதனச் செலவு.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், ரா. கிருஷ்ணன், என். ஏ. பூங்காவனம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ.13,11,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், கே. எம். தங்கமணி, என். ஏ. பூங்காவனம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி —

''மானியக் கோரிக்கை எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,96,54,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 20–4–1983 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.14 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

**10. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.**

**(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.**

எதுமில்லை

**(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்**

197. கோரிக்கை எண். 8—தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1983–84 (தமிழ், ஆங்கிலம்).

198. கோரிக்கை எண். 42—ஓய்வூதியம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1983–84 (தமிழ், ஆங்கிலம்).

199. கோரிக்கை எண். 43—பல்வகை—கடல் கடந்த நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கும் குடிபெயர்ந்தோர்களுக்கும் துயர் தணிப்பும் மறுவாழ்வும் (தமிழ், ஆங்கிலம்).

200. மறுவாழ்வுத் துறையின் 1983–84 ஆம் ஆண்டிற்கான சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

201. கோரிக்கை எண். 57—பொதுச் சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்குதலுக்கான முதலீடு பற்றிய துணைக் குறிப்பு, 1983–84 (தமிழ், ஆங்கிலம்).

202. கோரிக்கை எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

203. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு—மதுரை, 1981—தணிக்கை செய்யப் பெற்ற மாநாட்டுக் கணக்கு விபரம் (தமிழ்).



## இணைப்பு I

(256 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 801-க்கான விடையைக் காண்க)

(அ) இம்மாநிலத்தில் 39 வட்டங்களில் பயிர் பாதுகாப்பு திட்டம் 1982–83 ஆம் ஆண்டில் நெல் முதல் பயிருக்கு நடைமுறைப்படுத்த ஆணையிடப்பட்டாலும், கூட்டுறவுச் சங்கங்களில் சில வட்டங்களில் விவசாயிகள் கடன் பெற முன் வராததாலும், தண்ணீர் விவசாயத்திற்கு கால தாமதமாக திறந்து விடப்பட்டாலும், தண்ணீர் பற்றாக்குறை ஆகிய காரணங்களால் 14 வட்டங்களில் நடைமுறைப்படுத்த முடியவில்லை. கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீதமுள்ள 25 வட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

| மாவட்டம். | | வட்டம். |
|---|---|---|
| 1. திருநெல்வேலி | .. | 1. அம்பாசமுத்திரம் |
| 2. கன்னியாகுமரி | .. | 2. அகஸ்தீஸ்வரம் |
| 3. கோயம்புத்தூர் | .. | 3. பொள்ளாச்சி |
| 4. செங்கற்பட்டு | .. | 4. திருவள்ளூர் |
| | | 5. மதுராந்தகம் |
| 5. திருச்சிராப்பள்ளி | .. | 6. லால்குடி |
| | | 7. முசிறி |
| | | 8. குளித்தலை |
| | | 9. திருச்சிராப்பள்ளி |
| 6. தஞ்சாவூர் | .. | 10. நன்னிலம் |
| 7. தென்னார்க்காடு | .. | 11. விழுப்புரம் |
| | | 12. திண்டிவனம் |
| 8. சேலம் | .. | 13. நாமக்கல் |
| | | 14. ஆத்தூர் |
| | | 15. சேலம் |
| 9. பெரியார் | .. | 16. ஈரோடு |
| | | 17. பவானி |
| 10. புதுக்கோட்டை | .. | 18. ஆலங்குடி |
| 11. வடஆர்க்காடு | .. | 19. ஆரணி |
| | | 20. செய்யார் |
| | | 21. திருவண்ணாமலை |
| | | 22. வந்தவாசி |
| | | 23. போளூர் |
| 12. இராமநாதபுரம் | .. | 24. திருப்பத்தூர் |
| | | 25. பரமக்குடி |

இத்திட்டம் 1982–83 ஆம் ஆண்டு நெல் இரண்டாம் பயிருக்குக் கீழ்க்கண்ட வட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. செங்கற்பட்டு | .. .. | 1. மதுராந்தகம்<br>2. திருவள்ளூர்<br>3. காஞ்சிபுரம்<br>4. திருப்பெரும்புதூர் |
| 2. தென்னாற்காடு | .. | 5. விழுப்புரம்<br>6. கள்ளக்குறிச்சி<br>7. சிதம்பரம்<br>8. செஞ்சி |
| 3. திருநெல்வேலி | .. .. | 9. அம்பாசமுத்திரம்<br>10. திருநெல்வேலி |
| 4. திருச்சிராப்பள்ளி | .. | 11. முசிறி<br>12. லால்குடி<br>13. திருச்சிராப்பள்ளி |
| 5. சேலம் | .. .. | 14. சேலம்<br>15. ஆத்தூர்<br>16. நாமக்கல்<br>17. இராசிபுரம் |
| 6. தருமபுரி | .. .. | 18. கிருஷ்ணகிரி |
| 7. மதுரை | .. ... | 19. நிலக்கோட்டை |
| 8. வடாற்காடு | .. .. | 20. போளூர்<br>21. ஆரணி<br>22. செய்யார் |

(ஆ) 1982–83 ஆம் ஆண்டு நெல் முதல் பயிருக்கு, 25 தாலுக்காக்களில் பயிர் ஈட்டுறுதி திட்டத்தை நடைமுறைப் படுத்தியதில் 3,294 விவசாயிகள் 6,499 ஏக்கர் நிலங்களிலுள்ள பயிர்களை 53.32 இலட்ச ரூபாய்க்கு இன்சூர் செய்துள்ளனர். இவர்கள் செலுத்திய பிரிமியத்தொகை 1.56 இலட்ச ரூபாயாகும். இப்பயிருக்கு அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. பயிர் வெட்டு பரிசோதனைகள் முடிந்து அதன் விளைவுகள் குறிப்பிட்ட விளைச்சலை விடக் குறைந்தால் ஈட்டுறுதி வழங்கப்படும். 1982–83 ஆம் ஆண்டு நெல் இரண்டாம் பயிருக்கு 22 தாலுக்காக்களில் பயிர் ஈட்டுறுதி திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.



## இணைப்பு II

(269ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 806-க்கான விடையைக் காண்க)

(அ) மற்றும் (ஆ)

அரசு தன் ஆணை எண் (நிலை) 207 சுகாதாரம் நாள் 14–2–1983-ல் தமிழ்நாடு மருந்துச் செடிகள் பண்ணை மற்றும் மூலிகை மருந்துகள் கழகம் (Tamil Nadu Medical Plant Farms and Herbal Medicinal Corporation) என்ற பெயர் கொண்ட கழகம் ஒன்றினை கீழ்க்கண்ட சாத்தியக் கூறுகளைப் பின்பற்றும் வகையில் 1956—நிறுவனங்களுக்கான சட்டத்தின் கீழ் பதிவு பெறுவதற்கு ஆணையிட்டுள்ளது.

(1) மூலிகைப் பண்ணைகளில் மூலிகை செடிகளைப் பயிரிட்டு அதனைப்பொருளாதார முன்னேற்றமடையும் வகையில் பாதுகாத்தல்.

(2) மூலிகைச் செடிகள் பயிரிடுவதற்கான விரிவாக்கச் செயல்களை உதவித் தொகை பெறும் திட்டங்கள் மூலம் உழவர்கள் மற்றும் மலைச்சாதியினர் முதலியோருக்கு உபயோகப்படுத்தும் வகையில் ஏற்படுத்துதல்.

(3) பண்ணைகளிலிருந்தும், காடுகளிலிருந்தும், மூலிகை சம்பந்தப்பட்ட உற்பத்திப் பொருட்களை சேகரிப்பதற்கான கொள்முதல் மையங்களை ஏற்படுத்துதல்.

(4) தக்க சமயத்தில் மருந்து தயாரிப்பு பிரிவுகளை ஏற்படுத்துதல்.

(5) உள்நாட்டு தேவைகளைப் பூர்த்தி செய்த பிறகு மூலிகைகளையும் மருந்து சரக்குகளையும் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்தல்.

(6) மூலிகைக் கழிவு பொருட்களிலிருந்து பண்ணைக்கு வேண்டிய உரங்களைத் தயாரித்தல்.

இந்த கழகத்தின் தலைமையிடம் மதுரையிலா அல்லது கோயம்புத்தூரிலா என்பது பற்றி பின்பு முடிவெடுக்கப்படும். இந்த கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 50 இலட்ச மாகும். (பங்கு ஒன்று ரூ. 100 வீதம் 50,000 பங்குகளைக் கொண்டது.)

இந்த நிறுவனத்தின் இயக்குநர் குழு கீழ்க்கண்டவாறு அமையும்.—

| | |
|---|---|
| அரசு ஆணையர் மற்றும் செயலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை. | பதவி வழித்தலைவர் |
| அரசு ஆணையர்கள் மற்றும் செயலர்கள் நிதித்துறை, வனத்துறை, விவசாயத்துறை, கூட்டுறவுத்துறை, தொழிற்துறை. | இயக்குநர்கள். |
| செயலர், இம்பாப்ஸ் .. | இயக்குநர். |
| இந்திய மருத்துவ இயக்குநரிடமும் மற்றும் சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழுவிடமும் கலந்து நியமிக்கப்பட வேண்டிய மூலிகை சரக்குகள் விஷயத்தில் மிகவும் தேர்ந்த அலுவல் சார்பு (அல்லது) அலுவல் சார்பற்ற இரு நபர்கள். | இயக்குநர்கள். |
| தனி அலுவலர், மூலிகைப் பண்ணை | நிர்வாக இயக்குநர் |

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, மற்றும் நிதித் துறை, இத்துறைகளின் ஆணையர் மற்றும் செயலர்கள் இந்த நிறுவனத்தின் புரோமோட்டர்களாவர். இந்தக் கழகத்தின் நிர்வாக அதிகாரியாக, துணை மாவட்ட ஆட்சியாளர் பதவிக்கு சம அந்தஸ்திலிருக்கும் ஒரு அதிகாரி நியமிக்கப்படுவார்.

மூலிகைப் பண்ணை தனி அதிகாரியின் பொருளாதார நுட்ப அறிக்கையை ஒட்டியும், அரசு இந்தக் கழகம் சம்பந்தமாக இடப்பட்ட ஆணையை ஒட்டியும் இந்தக் கழகத்திற்கான வரைவு விதிகளைத் தயாரித்து அரசுக்கு அனுப்புமாறும், அவ்வரைவு விதிகளின் மேல் அரசின் ஒப்புதல் பெற்ற பின்பு, இக்கழகத்தை நிறுவனங்களுக்கான சட்டம் 1956 ன் கீழ் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி, அரசு கேட்டுக்கொண்டுள்ளது. மூலிகைகள் பண்ணை தனி அதிகாரியிடமிருந்து இதற்கான செயற் குறிப்புகள் வந்த பின் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.



## இணைப்பு III.

(322ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

''மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள்'' என்பதன்
கீழ் 1983—84 ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ. 36,15,000 ஐ
அரசுக்கு வழங்க வேண்டுமென நான் முன்மொழிகிறேன்.
இக்கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி பெரும்பாலும்,
முறையான தேர்தல் அமைப்பில் உள்ளோரின் சம்பளம்
போன்ற செலவுகளுக்கும், தேர்தல் இயந்திரத்தின் சீரான
நடைமுறைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

2. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர்
பட்டியல்களைத் திருத்துவதே இந்நிதியாண்டின் முக்கிய
பணியாகும். இவ்வாண்டில், கிராமப்புற சட்டமன்றப் பேர
வைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை, சனவரித்
திங்கள் 1-ம் நாளைத் தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு,
வீடு வீடாகச் சென்று கணக்கிட்டு திருத்தி அமைக்கும்படி இந்தி
யத் தேர்தல் ஆணைக்குழு ஆணையிட்டுள்ளது. இப்பணி
இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளன்று தொடங்கப்பட்டு
செப்டம்பர் திங்கள் முதல் நாள் அன்று முடிவடையும். நகர்ப்
புறச் சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை
1984 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளைத் தகுதி ஏற்
படுத்தும் நாளாகக் கொண்டு திருத்தி அமைக்கும்படி இந்தியத்
தேர்தல் ஆணைக்குழு ஆணையிட்டிருக்கிறது. 1983-ஆம்
ஆண்டு முழுமையாகத் திருத்தியமைக்கப்பட்ட வாக்காளர்
பட்டியல்கள் சுருக்கு முறையில் 1984 ஆம் ஆண்டு மறுபடியும்
திருத்தி அமைக்கப்படும்.

3. நாடாளுமன்றத் தேர்தல்களும், சட்டமன்றத் தேர்தல்
களும் 1980 ஆம் ஆண்டு நடைபெற்றதால், இவ்வாண்டில்
மேற்கூறிய தேர்தல்கள் நடைபெறாது என்றே எதிர்பார்க்கப்
படுகிறது. தற்சமயம் இம்மாநிலத்திலிருந்து நிரப்ப வேண்டிய
மக்களைத் தொகுதியோ அல்லது சட்ட மன்றப் பேரவைத்
தொகுதியோ காலியாக இல்லை.

4. சட்டமன்ற மேலவையில், சட்டமன்றப் பேரவை
உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு உறுப்பினர்கள்,
[illegible] 1983 அன்று பதவியிலிருந்து ஒய்வு பெறுவார்கள்.
இந்தக் காலியிடங்களை நிரப்பத் தேர்தல்கள் நடத்தப்படும்.
மேலும், சட்டமன்ற மேலவையிலிருந்து எட்டு உறுப்பினர்கள்
20—4—1984 அன்று பதவியிலிருந்து ஒய்வு பெறுவார்கள்
அவர்கள் பட்டதாரிகள்—ஆசிரியர்களின் தொகுதிகளிலிருந்து
தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவர். மேற்கூறிய காலியிடங்
களை நிரப்புவதற்கு முன்பாக, இத்தொகுதிகளின் வாக்காளர்
பட்டியல்களைத் திருத்தியமைக்கும் பணி இந்நிதியாண்டில்
மேற்கொள்ளப்படும்.

[1983 ஏப்ரல் 19

5. இம்மானிய கோரிக்கையின் கொள்கை குறித்து முக்கியமான விவரங்கள் மேலே தரப்பட்டுள்ளன. இதனை ஏற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வரவு-செலவுத் திட்டம்.

கோரிக்கை எண் 8 —தேர்தல்கள்.

1983-84.

கொள்கை விளக்கக் குறிப்பு.

1983–84-ம் நிதியாண்டில் கீழே கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்குச் செலவிட மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்பதன்கீழ் ரூ. 36,15,000 தேவைப்படுகிறது.

| | ரூபாய்கள் |
|---|---|
| 215 ஏ. தேர்தல்கள்—1 திட்டத்தில் சாராதது : | |
| ஏஏ. தேர்தல் அதிகாரிகள்— | |
| ஏஏ. சட்டமன்றப் பேரவை, நாடாளுமன்றத் தொகுதிகள் .. .. .. | 33,55,000 |
| ஏபி. மேலவைத் தொகுதிகள் .. .. | 26,000 |
| ஏபி. வாக்காளர் பட்டியலைத் தயாரித்து அச்சிடுதல்— | |
| ஏஏ. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள் | 48,000 |
| ஏசி. மேலவைத் தொகுதிகள் .. .. | 2 000 |
| ஏசி. நாடாளுமன்ற மக்கள் அவைக்கும் மாநிலச் சட்ட மன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடை பெறுகையில் அவற்றை நடத்துவதற்கான செலவுகள்— | |
| ஏஏ. நாடாளுமன்ற மக்கள் அவைக்கும் சட்ட மன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள் .. .. .. | 50,000 |
| ஏடி. நாடாளுமன்றத்திற்குத் தேர்தல்கள் நடத்துவதற்காகும் செலவுகள்— | |
| ஏஏ. இடைத் தேர்தல்கள் .. .. .. | 12,000 |
| ஏபி. நாடாளுமன்ற மக்கள் அவைக்குத் தேர்தல்கள் .. .. .. | 16,000 |
| ஏஇ. மாநிலச் சட்டமன்றத்திற்குத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள்— | |
| ஏஏ. மாநிலச் சட்டமன்றப் பேரவை | 94,000 |
| ஏபி. சட்டமன்ற மேலவை .. .. | 12,000 |
| மொத்தம் .. .. | 36,15,000 |



1983 ஏப்ரல் 19]

மேலே சொன்ன மதிப்பீடு, மாநிலச் சட்டமன்றப் பேரவை மேலவைக்கும் நாடாளுமன்றத்திற்கும் தேர்தல்கள் நடத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் பலதரப்பட்ட செலவினங்களுக்காக செய்யப்பட்டதாகும்.

2. இம்மாநிலத்தில் உள்ள தேர்தல் நிர்வாகம் மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரியின் கீழ் செயல்படுகிறது. அவருக்கு, துணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி, பிரிவு அலுவலர் போன்றோர் தலைமைச் செயலகத்தில் உதவியாளர்களாக உள்ளனர். மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியாளர்கள், வருவாய்க் கோட்ட அதிகாரிகள், வட்ட ஆட்சியர். தனித் தியங்கும் துணை வட்ட ஆட்சியாளர்களின் அலுவலகங்களிலும், மதுரை, கோயம்புத்தூர் போன்ற மாநகராட்சிகள், சேலம் திருச்சிராப்பள்ளி நகராட்சிகளின் அலுவலகங்களிலும் நிலையான அடிப்படையில் ஓர் உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை மாநகரில் அடங்கியுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளுக்குச் சென்னை மாநகராட்சி ஆணையர் பொறுப்பாவார்.

3. முறையான தேர்தல் அமைப்பில் உள்ளோரின் சம்பளம், பயணச் செலவுகள் போன்ற செலவினங்கள், தேர்தல் இயந்திரத்தின் சீரான நடைமுறைக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இவையன்றி வாக்காளர் பட்டியல்களைத் திருத்தியமைக்கும் போதும், தேர்தல்கள் நடக்கும்போதும் தற்காலிக ஊழியர்கள் நியமிக்கப்படுகின்றனர். சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களே நாடாளுமன்ற மக்களவைக்கும், மாநில சட்டமன்றப் பேரவைக்கும் தேர்தல்கள் நடைபெறும்போது பயன்படுத்தப்படுகின்றன. மாவட்டப் பகுதிகளில், வருவாய்க் கோட்ட அதிகாரிகள் தேர்தல் பதிவு அதிகாரிகளாகவும், வட்ட ஆட்சியாளர்களும், நகராட்சி ஆணையர்களும், துணைத் தேர்தல் பதிவு அதிகாரிகளாகவும் உள்ளனர். சேலம், திருச்சிராப்பள்ளி நகராட்சிப் பகுதிகளிலும் மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளிலும், முற்றிலுமாக அமைந்துள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளுக்கு அந்தந்த நகராட்சிகளின்/மாநகராட்சிகளின் ஆணையர்கள் தேர்தல் பதிவு அதிகாரிகள் ஆவர். சென்னை மாநகரில் சென்னை மாநகராட்சியின் வருவாய் அதிகாரி, தலைமைத் தேர்தல் பதிவு அதிகாரியாகவும், தேர்தல் பிரிவில் உள்ள தாசில்தார் துணைத் தலைமைத் தேர்தல் அதிகாரியாகவும் உள்ளனர்.

4. 1981, 1982-ஆம் ஆண்டுகளில் வாக்காளர் பட்டியல்கள் [illegible] சுருக்க முறையில் திருத்தப்பட்டன. [illegible] வீடாகச் சென்று கணக்கெடுத்து வாக்காளர் பட்டியல்களை இரு கட்டங்களில் அதாவது ? கிராமப்புறத் தொகுதிகளில்

1—1—1983-ஐத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டும் நகர்ப்புறத் தொகுதிகளில் 1—1—1984-ஐத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டும் விரிவான முறையில் திருத்தவேண்டு மென்று இந்தியத் தேர்தல் குழு ஆணையிட்டுள்ளது. எவை எவை கிராமப்புற நகர்ப்புறத் தொகுதிகள் என்று தீர்மானிக் கும் பொறுப்பு மாநில அரசிடமே விடப்பட்டுள்ளது. அதன்படி கிராமப்புறத் தொகுதிகள் என்று வரையறுக்கப்பட்ட 113 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல் களைத் திருத்தும் பணி 1—4—1983 முதல் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி, ஏற்கனவே துவங்கிவிட்டது. இது 1-9-1983-ல் முடிவடையும்.

| | துவக்கம். | முடிவு. |
|---|---|---|
| 1 வீடு வீடாகச் சென்று கணக்கெடுத்தல். | 1—4—1983 | 30—4—1983 |
| 2 வரைவுப் பட்டியல்களின் கையெழுத்துப் பிரதிகள் தயாரித்தல். | 1—5—1983 | 15—5—1983 |
| 3 வரைவுப் பட்டியலை அச்சிடுதல். | 16—5—1983 | 30—6—1983 |
| 4. வரைவுப் பட்டியலை வெளி யிடுதல். | | 1—7—1983. |
| 5 பெயர்களைச் சேர்க்கவும் நீக்கவும் மனுக்கள் பெறும் காலம். | 1—7—1983 | 31—7—1983 |
| 6 மேற்படி மனுக்களைத் தீர்த்துத் துணைப் பட்டியல்களை அச்சிடுதல். | 1—8—1983 | 31—8—1983 |
| 7 இறுதி வெளியீடு .. | | 1—9—1983. |

இவ்வாறு திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் 1984-ம் ஆண்டில் மீண்டும் சுருக்க முறையில், அதாவது புதியவர்களைச் சேர்த்தும் அல்லாதவர்களை நீக்கியும் திருத்தப்படும்.

5. நகர்புறத் தொகுதிகள் என வரையறுக்கப்பட்ட 121 சட்டமன்ற பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் 1—1—1984-ஐத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு 1984-ம் ஆண்டில் திருத்தப்படும்.





6. 1971-ம் ஆண்டுவரை நாடாளுமன்ற மக்கள் அவைக்கும் சட்டமன்றப் பேரவைக்கும் பொதுத் தேர்தல்கள் ஒரே சமயத்தி லேயே நடைபெற்று வந்தன. ஆனால் 1977, 1980-ஆம் ஆண்டு களில் நடைபெற்ற நாடாளுமன்ற மக்களவை மற்றும் சட்டமன்ற பேரவைப் பொதுத் தேர்தல்கள் தனித் தனியாகவே நடை பெற்றன. கடைசியாக 1980-ம் ஆண்டில்தான் நாடாளுமன்ற மக்களவைக்கும் சட்டப் பேரவைக்கும் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றமையால் வாலாயமான முறையில் அடுத்த பொதுத் தேர்தல்கள் 1985-ல் நடைபெறலாம்.

7. இந்நாள் வரையில் மக்களவையிலோ அல்லது மாநிலச்சட்ட மன்றப் பேரவையிலோ உறுப்பினர் பதவியேதும் காலியாக இல்லை. நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்கள் 24—7—1983 அன்று அவர்களின் பதவிக் காலம் முடிந்து ஓய்வு பெறுகின்றனர். இப்பதவிகளை நிரப்ப இந்நிதியாண்டில் தேர்தல்கள் நடத்தப்பெறும். இதன் பொருட்டு ஏற்படும் செலவினங்கள் 'கோரிக்கை எண் 8—தேர்தல் கள்' என்பதன் கீழ் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து செலவிடப்படுவ தில்லை. மாறாக '858—சஸ்பென்ஸ் அக்கௌண்ட்' எனும் தலைப்பில் பதியப்பெற்று மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

8. தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையில் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிந்து 2-8-1983இல் ஓய்வு பெறுகின்றனர். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து இப்பதவிகளை நிரப்பத் தேர்தல்கள் நடத்த வேண்டும். மேலும், 13 உள்ளாட்சித் துறைத் தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட வேண்டிய, தற்சமயம் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 21 காலியிடங்கள் உள்ளன. உள்ளாட்சித் தேர்தல்கள் நடை பெற்று முடிந்தவுடன் இக்காலியிடங்களை நிரப்பத் தேர்தல்கள் நடைபெறும்.

9. 20—4—1984 அன்று தமிழ்நாடு சட்டமன்ற மேலவை யில் எட்டு உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடையும். இவ் வுறுப்பினர்கள் (1) சென்னை மாவட்ட பட்டதாரிகள் (2) தமிழ்

நாடு வடக்கு பட்டதாரிகள் (1) தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் (1), வட ஆற்காடு—தென் ஆற்காடு ஆசிரியர்கள் (1), சேலம்—தருமபுரி—கோயம்புத்தூர்—நீலகிரி ஆசிரியர்கள் (1); தஞ்சாவூர்—திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை ஆசிரியர்கள் (1), திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் (1)—தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவர். இக்காலியிடங்களை நிரப்பு முன், இத்தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள், இந்த ஆண்டின் நவம்பர் திங்கள் முதல் நாளைத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு திருத்தியமைக்கப்படும். இவ்வேலை இந்தியத் தேர்தல் குழுவிடமிருந்து அறிவுரைகள் வந்தவுடன் மேற்கொள்ளப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக (பொது) உதவியாளர்கள், மேலவைத் தொகுதிகளின் தேர்தல் பதிவு அதிகாரிகள் ஆவர். அவர்களுக்கு உதவியாக வாக்காளர் கணக்கெடுக்கும் நேரங்களில் தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.



## இணைப்பு IV

(322 ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க).

### கோரிக்கை 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக்குறிப்பு.

இக்கோரிக்கையில் கீழ்க்காணும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன

| | | ரூ. |
|---|---|---|
| 266. | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். | 33,90,60,000 |
| 288. | சமூகப் பாதுகாப்பு நலனும் சமூகப் பாதுகாப்பு நலன் குறித்து ஏனைய திட்டங்கள். | 1,95,25,000 |
| | | 35,85,85,000 |

அரசுப் பணியாளர்கள் மான்யம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள் முதலியோர் தொடர்பாக ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக்குதல் உட்பட ஓய்வூதியங்கள் பணிக்கொடைகள். வருங்கால வைப்பு நிதிக்கான பங்குத் தொகை அல்லது அவர்களுடைய குடும்பங்கள் தொடர்பாக குடும்ப ஓய்வூதியம் முதலியவை குறித்த செலவுகளை செய்வதற்காக இக்கோரிக்கையின் கீழ் மான்யங்கள் கோரப்படுகின்றன.

ஓய்வூதியம், இறப்பு-ஓய்வூதியப் பணிக்கொடை.

தமிழ்நாடு 1960ஆம் ஆண்டு தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள் 1—7—1960 முதல் செயலுக்கு வந்தன. இந்த விதிகளின்படி 1—10—1979 வரை அரசுப் பணியாளர் ஒருவர் 25 ஆண்டுகள் தகுதிப் பணிபுரிந்திருந்தால் அவர் ஓய்வுபெறும் போது சராசரி 30/80 என்ற வீதத்தில் ஓய்வூதியம் பெற்றார். 25 ஆண்டுகளுக்கு மேல் அவர் தகுதிப்பணி புரிந்திருந்தால் சில நிபந்தனைகளுக்குட்பட்டு சராசரி ஊதியத்தில் 33/80 வரை அதிக ஓய்வூதியம் வழங்கப்பட்டது. இந்திய அரசிடமிருந்து

[1983 ஏப்ரல் 19

பெறப்பட்ட நடைமுறைக்கேற்ப ஓய்வூதியம் கணக்கிடும் நடை
முறையை 1—10—1979 முதல் அரசு பின்வருமாறு மாற்றி
அமைத்துள்ளது :—

| | மாதாந்திர ஓய்வூதியம். |
| --- | --- |
| (1) ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப் படும் சராசரி ஊதியத்தில் முதல் 1,000 ரூபாய் வரை. | சராசரி ஊதியத்தில் 50 சதவீதம். |
| (2) ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப் படும் சராசரி ஊதியத்தில் அடுத்த 500 ரூபாய் வரை. | சராசரி ஊதியத்தில் 45 சதவீதம். |
| (3) ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப் படும் சராசரி ஊதியத்தில் எஞ்சிய தொகைக்கு. | சராசரி ஊதியத்தில் 40 சதவீதம். |

ஓய்வு பெறும் வயது 55 ஆண்டுகள் என்பதிலிருந்து 58
ஆண்டுகள் உயர்த்தப்பட்டதைக் கருத்தில் கொண்டு மேற்
சொன்னபடி நிலைகளின் அடிப்படையில் கணக்கிடப்படும் ஓய்வூதி
யம், உயர்ந்த அளவு பணிக்கால அளவான 33 ஆண்டுக்குத்
தொடர்புடையதாயிருக்கும்.

20 ஆண்டுகளே பணிபுரிந்திருந்தாலும் ஓய்வுகாலக் கூடுதல்
நன்மைகளுடன் அரசுப் பணியாளர்கள் தாங்களாகவே ஓய்வு
பெற அரசு அனுமதி வழங்கியுள்ளது. உயரளவு 5 ஆண்டுகள்
வரையில் ஓய்வூதியக் கணக்கில் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்
படுகிறது. இவ்வாறாக அரசுப் பணியாளர்கள் 20 ஆண்டுகள்
பணிபுரிந்து தாமாகவே ஓய்வுபெற்றால் அவர்களும் நிதித்துறை
யின் (ஓய்வூதியம்) 2—2—1980 நாளிட்ட 57 ஆம் எண் அரசா
ணையில் குறிப்பிடப்பட்ட வீதங்களில் ஓய்வூதியம் பெறுவர்.
இத்துடன் முடிவு பெற்ற ஒவ்வோர் ஆறுமாதப் பணிக்கும்
ஊதியத்தில் 1/4 பங்கு என்ற வீதத்தில் இறப்பு-ஓய்வூதியப்
பணிக்கொடையும் அனுமதிக்கப்படுகிறது. இது ஊதியத்தில்
16½ மடங்கு என்ற உயரளவிற்கு உட்பட்டதாகும். மேலும்
உயரளவு பணிக்கொடை ரூ. 30,000 ஆக வரையறுக்கப்பட்டு
உள்ளது. 31—5—1982 முதல் இவ்வுயரளவு பணிக்கொடை
ரூ. 36,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

1—4—1978-க்கு முன்னர் ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்
ஒருவரின் குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 50
ரூபாயாக இருந்தது. தமிழ் நாடு மூன்றாவது சம்பளக்குழு
செய்த பரிவுரைகளின் அடிப்படையில், 1—4—1978 முதல்



1983 ஏப்ரல் 19]

குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயாக
உயர்த்தப்பட்டுள்ளது. பின்னர், 1—4—1982 முதல் குறைந்த
அளவு ஓய்வூதியம் மாதம் 125 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

அரசுப் பணியாளர்களுக்குக் கூடுதலாக அகவிலைப்படி
வழங்கப்படும்போதெல்லாம், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும்
அவ்வப்போது கூடுதல் அகவிலைப்படி வழங்கப்படுகிறது
1—10—1982-லிருந்து வழங்கப்படும் ஒட்டுமொத்த அகவிலைப்
படி வீதம் 51 ரூபாயிலிருந்து 191 ரூபாய் வரை உள்ளது.

ஓய்வூதியத்தொகை மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய்க்கு
மேற்படாதிருந்தால், அத்தொகை பண அஞ்சல் மூலமாக அரசுச்
செலவில் அனுப்பப்படுகிறது. மேற்படி தொகை 300 ரூபாய்க்கு
மேற்பட்டால் அவரவர் விரும்புகிற வங்கி மூலமாக அனுப்பப்
படுகிறது.

ஓய்வூதியம் பெறுபவர்கள் சில மருத்துவச் சலுகைகள் பெற
வும் தகுதியுடையவர் ஆவர். இது ஆண்டு ஒன்றுக்கு 200
ரூபாய் என்ற உயரளவிற்குட்பட்டு ஆண்டு ஓய்வூதியத்தில் 10
சதவீதமாகும்.

மாதம் ஒன்றுக்கு 750 ரூபாய் வரை ஓய்வூதியம் பெறுபவர்
கள் பண்டிகை முன்பணம் ஒரு மாத ஓய்வூதியம் அல்லது
ரூபாய் 100 இதில் எது குறைவோ அதைப் பெறத் தகுதியுடையவர்
ஆவர்.

28—2—1978 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு
பெறும் அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரை, தங்க
ளுடைய ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கி கொடுக்க
வேண்டும் என அவர்கள் ஓய்வுபெற்ற நாளிலிருந்து ஓராண்டிற்
குள் விண்ணப்பித்துக்கொண்டால், மருத்துவச் சோதனை
இன்றியே அவர்களுடைய ஓய்வூதியத்தில் ஒரு பகுதி அவர்களுக்கு
மொத்தமாக்கிக் கொடுப்பது அனுமதிக்கப்பட்டு வருகிறது.
தாமாகவே முன்வந்து ஓய்வுபெற்று, தங்களுடைய ஓய்வூதியத்
தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுக்க வேண்டுமென
தாம் ஓய்வு பெற்ற நாளிலிருந்து ஓராண்டுக்கால அளவிற்குள்
விண்ணப்பித்துக்கொண்டால், அவர்களுக்கும் இச்சலுகை நீட்டிக்
கப்பட்டுள்ளது. 1—4—1981 முதல் ஓய்வூதியம் பெறும் அரசு
அலுவலர்களுக்கு அவர்கள் ஓய்வுபெற்ற நாளிலிருந்து 15 ஆண்டு
கள் நிறைவு பெற்றவுடன் அவர்கள் ஓய்வூதியத் தொகையில்
முன்பு ஒரு பகுதியை மொத்தமாகப் பெற்றுக் கொண்டதை
முழுமையாக்கி முழு ஓய்வூதியம் பெற ஆணை பிறப்பித்
துள்ளது.

[1983 ஏப்ரல் 19

## குடும்ப ஓய்வூதியம்

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ ஓய்வு
பெற்ற பின்னரோ இறந்துவிட்டால் அவரது குடும்பம், குடும்ப
ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஆனால், அவர்
இறக்கும்போது ஓராண்டு காலமாவது பணியாற்றியிருக்க
வேண்டும். அலுவலர் இறக்கும்போது அல்லது பணியிலிருந்து
ஓய்வுபெறும்போது அவர் பெற்று வந்த சம்பளத்தின் அடிப்
படையில் இந்தக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இறந்த
அலுவலரின் மனைவிக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம்
வழங்கப்படும். அவர் இறந்த பிறகுகூட உரிய வயதடையாத
அவரது குழந்தைகளுக்கு அந்த ஓய்வூதியம் வழங்கப்படும்.
1—4—1979-க்கு முன்னர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்
வராத குடும்பங்கள் அனைத்திற்கும் 1—4—1979-லிருந்து அத்
திட்டம் நீட்டிக்கப்பட்டது. குடும்ப ஓய்வூதியம் கணக்கிடும்
அளவை, அலுவலர் ஓய்வுபெறும் நாளில் கடைசியாக பெற்று
வந்த சம்பளத்தில் 30 சதவிகிதமாக மேலே குறிப்பிட்ட நாளி
லிருந்து மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குறைந்த
அளவு குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100லிருந்து
ரூபாய் 125 ஆக 1—4—1982 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. தற்
போதுள்ள விதிகளின்படி, தொடர்ந்து ஏழாண்டுகளுக்குக்
குறையாமல் பணியாற்றியுள்ள அரசுப் பணியாளர் ஒருவர் பணி
யில் இருக்கும்போது இறக்க நேரிடின் அவருடைய குடும்பத்
திற்கு அவர் இறந்த பிறகு ஏழாண்டுக் காலம் அவர் உயிருடன்
இருந்திருந்தால் ஆண்டு முதிர்வு காரணமாக அவர் ஓய்வு பெற்
றிருக்கலாகும் நாள் இவற்றில் எது குறைவோ அக்காலம் வரையில்
அதிக வீதத்தில் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும். அரசுப்
பணியாளர் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளத்தில்
50 சதவீதம் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி, அனுமதிக்கத்தக்க
குடும்ப ஓய்வூதியத்தைப்போல் இரு மடங்கு இவற்றில் எது
குறைவோ அத்தொகை குடும்ப ஓய்வூதியத் தொகையாக இருக்கும்
தற்போது உயர்த்தப்பட்ட உயரளவு குடும்ப ஓய்வூதியம் ரூபாய்
300 ஆகும். தமிழ்நாடு மூன்றாவது சம்பளக்குழு பரிந்துரைத்த
அடிப்படையில் 1—4—1979லிருந்து அனுமதிக்கத்தக்க உயர்த்
தப்பட்ட குடும்ப ஓய்வூதியம், திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 500
என்னும் வரம்புக்குட்பட்டு பணியாளர் கடைசியாக வாங்கிய
சம்பளத்தில் 50 சதவீதமாக இருக்கிறது. உயர்த்தப்பட்ட
குடும்ப ஓய்வூதியம், பணியிலிருக்கும்போது இறந்த நாளுக்குப்
பிறகு ஏழாண்டுக்கால அளவு, ஆண்டு முதிர்வு காரணமாக ஓய்வு
பெற்றிருக்கலாகும் நாள் இவற்றுள் எது குறைவோ அதுவரை
யில் அனுமதிக்கப்படும்.

குடும்ப ஓய்வூதியம் தொடர்ந்து அளிக்கும் சலுகை, அரசுப்
பணியாளரின் மகன்கள், திருமணமாகாத மகள்கள் முறையே
18, 21 வயது அடைகின்ற வரையில் என்பதற்குப் பதிலாக,
21, 24 வயது அடைகின்ற வரையில் அவர்களுக்கு அளிக்கப்
படலாமென்றும் அரசு ஆணையிட்டுள்ளது.



1983 ஏப்ரல் 19]

### குடும்ப நல நிதி.

குடும்பநலத் திட்டத்தின் கீழ், பணியாளர் ஒவ்வொருவரிட
மிருந்தும் மாதமொன்றுக்கு ஒரு ரூபாய் பெறப்படுகிறது.
பணியாளர் ஒருவர் பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால் அவரது
குடும்பத்திற்கு ஒட்டு மொத்தமாக 10,000 ரூபாய் வழங்கப்
படுகிறது.

### தொகுப்பு ஈட்டுறுதித் திட்டம்.

உள்ளாட்சி மன்றப் பணியாளர்களும் மானியம் பெறும்
கல்வி நிறுவனப் பணியாளர்களும் தொகுப்பு ஈட்டுறுதித்
திட்டத்தின் கீழ் வருகின்றனர். இத்திட்டத்தின்படி பணியாளர்
சம்பளத்தில் ஒரு ரூபாய் பிடித்தம் செய்யப்படுகிறது. பணி
யாளர் பணிக்காலத்தில் இறந்துவிட்டால் அவர் நியமனம் செய்
திருந்தவருக்கு ஒட்டு மொத்தமாக 10,000 ரூபாய் வழங்கப்
படுகிறது. உள்ளாட்சி மன்றங்கள், மானியம் பெறும் பள்ளிகள்,
கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்ப ஸ்தாபனங்கள் ஆகிய
வற்றின் சார்பில், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்கு மாநில
அரசு முதலில் சந்தாத் தொகையைக் கட்டுகிறது.

### ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்.

தனியார் (மானியம் பெறும் உள்ளாட்சி மன்றப்) பள்ளி
களிலிருந்து 1—6—1970-ல் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு
பெற்ற ஆசிரியர்களுக்கும் மானியம் பெறும் பள்ளிகளிலிருந்து
1—4—1972-ல் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வுபெற்ற ஆசிரியர்
அல்லாத பணியாளர்களுக்கும், மாநில அரசுப் பணியாளர்
களுக்குப் பொருந்துகிற தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள்
பொருந்தும். குறிப்பிட்ட பல்வேறு தேதிகளுக்கு முன்னர்
ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வூதியத் திட்டம் நீட்டிக்கப்பட்
டுள்ளது. மாநில அரசுப் பணியாளர்களுக்கு நிகராக ஓய்வூதியம்,
பணிக்கொடை, குடும்ப ஓய்வூதியம் ஆகியவற்றை அவர்கள்
பெறுகின்றனர்; ஓய்வூதியத்திற்கு இறுதி அனுமதி கிடைப்பதில்
தாமதம் ஏற்பட்டால், தற்காலிக ஓய்வூதியம் பணிக்கொடையும்
பெற அவர்களுக்குத் தகுதியுண்டு.

தனியார் (உள்ளாட்சி மன்றத் தனிப்பட்ட) கல்வி நிறுவனப்
பணியாளர்களுக்குக் குறிப்பிட்ட பல்வேறு தேதியிலிருந்து குடும்ப
ஓய்வூதிய நன்மைகள் அனுமதிக்கப்பட்டன; அதாவது
தனியார் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு 1—4—1962
லிருந்தும், தனியார் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியரல்லாத பணி
யாளர்களுக்கு 1—4—1972 லிருந்தும் இந்த நன்மைகள் வழங்கப்
பட்டன. குடும்ப ஓய்வூதியம் குறித்த நிர்ணயிக்கப்பட்ட தேதி
களுக்கு முற்பட்ட நேர்வுகளிலும் குடும்ப ஓய்வூதிய நன்மைகள்
வழங்குவதற்கு 13—3—1980-ல் அரசு ஆணை பிறப்பித்தது.

[1983 ஏப்ரல்

நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்.

14—1—1970-க்கு முன்னர் ஓய்வு பெற்ற நகராட்சிப் பணி யாளர்கள் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 தனி ஓய்வூதியம் பெற்று வந்தனர். இந்த ஓய்வூதியத்தை அரசு 16—4—1980-லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100 ஆக உயர்த்தியுள்ளது. இது மேலும் 1—4—1982 முதல் 125 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப் பட்டுவரும் அகவிலைப்படியினையும் வழங்க ஆணை பிறப்பித் துள்ளது.





## இணைப்பு V.

(322......ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

1982–83 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் கோரிக்கை எண் 43 பல்வகை—கடல் கடந்த நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கும் குடிபெயர்ந்தோர்களுக்கும் துயர் தணிப் பும் மறுவாழ்வும்.

பர்மா, ஸ்ரீலங்கா, வியட்நாம் ஆகிய மூன்று நாடுகளிலிருந்து இந்திய வம்சா வழியினர் இந்தியாவிற்குத் திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர். இந்தியாவும் இலங்கையும் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிலிருந்து வருகின்றனர். பர்மா மற்றும் வியட்நாமிலிருந்து தொடர்ச்சியாக குடும்பங்கள் வருவதில்லை. குறைந்த அளவில் அவ்வப்போது வருகின்றனர். அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது தேசிய பொறுப்பாக இருப்பதால் கடன்கள் மானியங்கள் என்ற முறையில் அதற் காகும் அனைத்துச் செலவுகளையும், மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. மத்திய அரசின் சார்பாக மாநில அரசு, அத னைச் செயல்படுத்தும் ஒரு அமைப்பாகவே உள்ளது. மறு வாழ்வுத்துறை இயக்குநர், இந்தியாவிற்குத் திரும்புபவர்களை வர வேற்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதோடு, இந்தியா விற்குத் திரும்புபவர்களுக்காகத் தயாரிக்கப்படும் திட்டங் களையும் செயல்படுத்தியும் வருகிறார். இப்பணிகளைக் கவ னிக்க, மறுவாழ்வுத்துறையில் கீழ்க்கண்ட பணியாளர்கள் உள்ள னர்.

| | 'ஏ' பிரிவு | 'பி' பிரிவு | 'சி' பிரிவு | டி'' பிரிவு |
|---|---|---|---|---|
| 1. தலைமையக அலுவலர்கள் | 3 | 4 | 55 | 19 |
| 2. மாவட்ட அலுவலர்கள் | 2 | 30 | 176 | 54 |
| மொத்தம் | 5 | 34 | 231 | 73 |

[1983 ஏப்ரல் 19

வர அனுமதிக்கப்படுகின்றனர். அவர்கள் இராமேஸ்வரத்திற்கு வந்து சேர்ந்தவுடன் முதலில், தேநீரும், பின்பு ஒரு வேளை சாப்பாடும், இலவசமாக வழங்கப்படுகின்றன. இராமேஸ்வரம் துறைமுகத்தில் மறுவாழ்வுத்துறைப் பணியாளர்கள் இவர்களைக் குறித்த புள்ளி விவரக் கணக்குகளை எடுக்கின்றனர். சுங்கப் பரிசோதனை முடிந்த பின்னர், ரூ. 10,000-க்குக் குறைவாகக் கொண்டு வந்திருந்த குடும்பங்கள் இடைத்தங்கள் முகாம்களுக்குச் செல்லலாம். அங்கிருந்து அவர்கள் பல்வேறு திட்டங்களில் சேருவதற்கு அனுப்பிவைக்கப்படுவர். அல்லது கண்டி உதவித் தூதரகத்தின் முதன்மைச் செயலாளர், அவர்களுடைய குடும்ப அட்டைகளில் பரிவுரை செய்துள்ளவாறு வணிகக் கடன்கள் அங்கு அவர்களுக்கு வழங்கப்படும். ரூ. 5.000-க்குக் குறைவாகக் கொண்டு வருகின்ற குடும்பங்களுக்கு அவர்கள் இடைத்தங்கல் முகாமில் சேர்க்கப்பட்டதும் அதிக பட்சம் மூன்று மாத காலத்திற்குக் குடும்பத்தின் அளவிற்கேற்ப மாதம் ஒன்றுக்கு ரூ. 35 முதல் ரூ. 115 வரை ரொக்கத் தொகை வழங்கப்படுகிறது. மேலும் குறைந்த விலையில், அதாவது ஒரு கிலோ அரிசி 57 காசு வீதம் வரையறுக்கப்பட்ட அளவுக்கு அரிசி அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அங்கே அவர்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. மத்திய அரசு இந்தியாவிற்குத் திரும்பியோருக்கு உதவியளிக்க வகுத்துள்ள திட்டம், விதிகளின் கீழ் தாயகம் திரும்புவோர்களில் ரூ. 10,000-க்குக் குறைவாகச் சொத்துக்களைக் கொண்டு வருகின்றவர்களுக்கு நிலையான மறுவாழ்வு உதவி அளிக்கப்பட வேண்டும்.

பொதுவாக தாயகம் திரும்பி வருவோர்களில் 90 சதவிகித குடும்பத்தினர் அரசின் உதவியைப் பெறும் தகுதியுடையவராக உள்ளனர். 31–1–1983 ஆம் நாள் வரை மொத்தம் 1,01,375 குடும்பங்கள் ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ளன. இவற்றுள் 83,153 குடும்பங்கள் தமிழ்நாடு மாநிலத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளன. 4,170 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஏனைய மாநிலங்களில், அதாவது கேரளம், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், அந்தமான், நிகோபார் தீவுகள் ஆகியவற்றில் குடியமர்த்தப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர்.



1983 ஏப்ரல் 19]

விவசாய நிலக் காலனித் திட்டம் :
பர்மா மற்றும் ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்
களில் விவசாயத்தில் அனுபவம் உள்ளவர்களும், அக்குடும்பத்தில்
இத்தொழிலில் ஈடுபடத் தகுதியுள்ள இரு நபர்கள் உள்ள
குடும்பங்களுக்கும், அதேசமயம் சொந்த நிலமற்றவர்களாக
உள்ள குடும்பங்கள் மற்றும் நிலக்காலனித் திட்டத்தில் அமர்த்தப்
படுகின்றனர். உயர்ந்தபட்சம் மூன்று ஏக்கர் வரை ஒரு
குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. இந்த நிலம் மாநில அரசால்
இலவசமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும்
நிலங்களைத் தாயகம் திரும்பியோர் தக்க முறையில் விவசாயம்
செய்ய அதற்காக மத்திய அரசால் ஒவ்வொரு குடும்பத்திற்கும்
விவசாயக் கடனாக ரூ. 6,850-ம் வழங்கப்படுகிறது. இக்கடன்
தொகை, நிலத்தை சீர்படுத்தவும், பாசனக் கிணறு எடுக்கவும்,
உழவு மாடுகள் வாங்கவும், விவசாயக் கருவிகள் வாங்கவும் வழங்
கப்படுகிறது.

இவர்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தில் விவசாயம் செய்து
அறுவடை செய்து மகசூல் கிடைக்கும் காலம் வரைக்கும், ஒவ்
வொரு குடும்பத்திற்கும் பராமரிப்புப்படி மாதம் ஒன்றுக்கு ரூ. 40
முதல் ரூ. 150 வரையில் குடும்பத்தில் உள்ள நபர்களின் எண்
ணிக்கைகளைக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது. இத்தொகை
21 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. முதல் 9 மாதங்களுக்கு
வழங்கப்படும் தொகை முழு மானியமாகவும் மீதி ஒரு வருட
காலத்திற்கு வழங்கப்படும் தொகையில் பாதி மானியமாகவும்
மீதி பாதி கடனாகவும் வழங்கப்படுகிறது.

இதைத்தவிர இத்திட்டத்தில் அமர்த்தப்படும் அகதிகள்
எல்லோருக்கும், வீடு கட்டக் கடனும், இவர்கள் உபதொழில்
செய்ய, வண்டி மாடும், கோழிப் பண்ணை வைக்கவும், காய்கறித்
தோட்டப்பயிர் செய்யவும், கடன் வழங்கப்படுகிறது. இக்கடன்
தொகை எட்டு ஆண்டுத் தவணைகளில் திருப்பி செலுத்தக்கூடிய
தாகும்.

[1983 ஏப்ரல் 19

## பர்மாவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்புவோர்.

பர்மா தன் வணிகத்தை நாட்டுடைமை ஆக்கியது. நாட்டினர்கள் மீது ஏனைய சில கட்டுப்பாடுகளை கொண்டு வந்தது. பர்மா அரசின் இத்தகைய கொள்கையினைத் தொடர்ந்து இந்திய மக்களின் வழி வந்தோர் அதிக அளவில் இந்தியாவிற்கு 1–6–1963 முதல் திரும்பி வந்தனர். 31–1–1983 வரை தமிழ், பீகாரி, தெலுங்கு மொழியினத்தவர்கள் சுமார் 2,07,693 பேர் கப்பல், விமானம் மூலமாக பர்மாவிலிருந்து இந்தியாவிற்கு வந்துள்ளனர். இவர்களுள் தமிழினத்தவர் களான 1,44,269 பேர்கள் தமிழ் நாட்டிற்கு வந்துள்ளனர். 43,410 குடும்பங்களுக்குத் தொடக்கப் புதுவாழ்வு உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன. 1974-க்குப் பிறகு கப்பல் வழியாக இந்தி யாவிற்கு அகதிகள் எவரும் வரவில்லை. 1974 ஆம் ஆண்டிற்குப் பிறகு 252 குடும்பங்களைச் சேர்ந்த 800 பேர் விமானம் மூலம் கல்கத்தா வழியாக 31–1–1983 முடிய வந்துள்ளனர்.

## ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியவர்கள்.

ஸ்ரீலங்காவில் வாழ்ந்து வந்த இந்திய மக்களின் வழிவந்தவர் களில் நாடற்றவர்கள் என்று கூறப்படுகின்ற 9.75 இலட்சம் பேரின் எதிர்கால வாழ்விடம் பற்றிய பிரச்சனை குறித்து இந் தியப் பிரதமருக்கும் ஸ்ரீலங்காவின் பிரதமருக்கும் இடையே 1964 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் தேதி ஓர் ஒப்பந்தம் கையெழுத் தாயிற்று. அதன்படி, இந்திய அரசு, மேற்கூறிய மக்களில் 5.25 இலட்சம் பேரையும் அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளை யும் ஏற்றுக்கொண்டு, குடியுரிமை அளிக்க ஒத்துக்கொண்டது. ஸ்ரீலங்கா அரசு மேற்கூறிய மக்களில் 3 இலட்சம் பேரையும் அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளையும் ஏற்றுக் கொண்டு குடியுரிமை வழங்க ஒத்துக் கொண்டது. 1964 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இவ்வொப்பந்தம் சாஸ்திரி சிரிமாவோ ஒப்பந்தம் என்றழைக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி, அன்று நாடற் றவர்களாய் எஞ்சியிருந்த 1.5 இலட்சம் பேர்களில் எதிர்கால வாழ்விடம் பின்னர் ஒரு நாளில் முடிவு செய்யப்பட வேண்டும் எனவும் வகை செய்யப்பட்டிருந்தது. 1974 ஆம் ஆண்டு ஜன வரி 27 ஆம் தேதி பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும், ஸ்ரீலங்காப் பிரதமர் திருமதி சிரிமாவோ பண்டார நாயகாவும்



1933 ஏப்ரல்19]

எஞ்சியுள்ள நாடற்றவர்களுக்குக் குடியுரிமை வழங்குவது பற்றிய இரண்டாவது ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அதன் படி, குடியுரிமை வழங்குவது பற்றி பின்னால் முடிவு செய்வதாக இருந்த 1 5 இலட்சம் பேர்களில் ஒரு பாதிப் பேருக்கு இந்தியா வும் மறுபாதிப் பேருக்கு ஸ்ரீலங்காவும் குடியுரிமை வழங்குவதென ஒப்புக்கொண்டு வகை செய்யப்பட்டது. அதாவது இந்தியா 75,000 பேருக்கும், ஸ்ரீலங்கா 75,000 பேருக்கும் குடியுரிமை வழங்கும் என ஒப்புக் கொள்ளப்பட்டது. மேலும், 1964 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் ஆண்டுதோறும் 35,000 பேரை ஸ்ரீலங்கா விலிருந்து தாயகத்திற்கு (இந்தியாவிற்கு) திருப்பி அனுப்புவதென ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. திருப்பியனுப்பப்படுபவர்களை விரைவாகத் திருப்பியனுப்பி வைக்கும் பொருட்டு அந்த எண்ணிக்கையை ஆண்டுதோறும் 10 சதவீதம் படிப்படியாக உயர்த்துவதென்றும் இந்த ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப் பட்டது. இரண்டாவது ஒப்பந்தத்தின்படி அவர்களைத் தாயகத்திற்குத் திருப்பியனுப்பும் பணி 1981-ல் முடிவுற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 30–10–1981-ல் ஒப்பந்தக் காலம் முடிவுற்றது.

இவ்வாறாகக் கணக்கிடப்பட்டவர்கள் மொத்தம் ஆறு இலட்சம் பேர் (அதாவது இரண்டு ஒப்பந்தங்களிலும் கணக்கிடப் பட்டவர்கள்) ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவுக்குத் திருப்பியனுப் பப்படவுள்ளனர்: ஆனால், இந்த ஆறு இலட்சம் பேரும் அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளும், சேர்ந்த தொகை யில்; தாயகம் திரும்ப வகை செய்துள்ளதைக் கணக்கில் கொண்டு பார்த்தால், இறுதியாகத் தாயகம் திரும்பிவர இருப்பவர்கள் எண்ணிக்கை ஏறத்தாழ 8.00 இலட்சம் ஆக இருக்கலாம். 1983 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி வரையில் 4,05,235 பேர்கள் அடங்கிய 1,01,379 குடும்பங்கள் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்புகின்றவர்கள் தங்களுக்குச் சொந்தமான உடைமைகள், சொந்த நகைகள் ஆகியவற்றை ரூ. 16,000 வரைக்கும், வர்த்தக இருப்பினை ரூ. 16,000 வரைக்கும் சுங்கவரி கட்டாமல் தங்களுடன் கொண்டு

**சுய வேலை வாய்ப்பு திட்டங்கள்.**

(1) சுமார் 1,000 தாயகம் திரும்பியோருக்கு வணிகக் கடனாக
ரூ. 5,000.மும், வியாபாரத்திற்குக் கட்டிடம் கட்ட ரூ. 1,000-
மும் புணர்வாழ்வு திட்டத்தின் மூலம் வழங்கி தேசிய நூற்பாலை
நிறுவனத்தின் விற்பனையாளர்களாக அமர்த்தப்படும் ஒரு
புதிய வேலைவாய்ப்புத் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு செயல்
படுத்தப்படுகிறது. இதுவரை 109 நபர்கள் தேசிய நூற்பாலை
நிறுவனத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்தை
வெற்றிகரமாக்க, தாயகம் திரும்புவோர் நடத்தும் தேசிய நூற்
பாலை கடைகளில் விலை கட்டுப்பாட்டின் கீழ் வழங்கப்படும்
துணிகளையும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படும். மற்றும்,

(2) சுயவேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ், மறுவாழ்வு
திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வணிகக் கடன் ரூ. 5,000
தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றின் மூலமாக பெற்று பயனடை
யும் திட்டமொன்றும் 1979–1980 ஆம் ஆண்டு முதல் செயல்
படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில்
சிக்கம்பட்டி கிராமத்தில் பால் பண்ணை திட்டம் ஒன்று மேற்
கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி 1982–83-ல் 48 குடும்பங்கள்
குடி அமர்த்தப்படும், இது போன்ற திட்டத்தில், சேலம் மாவட்
டத்தில் பி. நாட்டமங்கலம் கிராமத்தில் 1983–84-ல் 100 குடும்
பங்கள் குடி அமர்த்தப்படும்.

தமிழ்நாட்டில் மறுவாழ்வு அளிக்கும் பல்வேறு திட்டங்களின்
கீழ் குடியமர்த்தப்பட்டுள்ள 83,153 குடும்பங்கள் பற்றிய விவரம்
கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| திட்டங்கள். (1) | குடும்பங்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| நீலகிரி தேயிலை மலைத் தோட்டம் | 2,326 |
| கன்னியாகுமரி இரப்பர் மலைத் தோட்டம் | 250 |
| ஆனைமலை சின்கோனா மலைத் தோட்டம் | 125 |
| அரசு பண்ணைக் கழகம் | 791 |
| நிலக்குடியேற்றத் திட்டம் | 2,161 |
| கூட்டுறவு நூற்பாலை | 2,263 |
| வியாபாரக் கடன் | 65,422 |
| ஏனைய உதவிகள் (வேலைவாய்ப்பு முதலியன) | 5,761 |
| தாயகம் திரும்பியோர் வங்கித் திட்டம் | 3,645 |
| விவசாய நிலம் வாங்கும் கடன் | 149 |
| சுயவேலை வாய்ப்பு (தேசிய நூற்பாலை நிறுவனம் மற்றும் பால்பண்ணை) | 200 |
| கூக்கல் (நிலக்காலனி) | 60 |
| மொத்தம் | 83,153 |



**வியட்நாமிலிருந்து இந்தியாவிற்கு திரும்பியவர்**

பர்மாவிலிருந்தும் ஸ்ரீலங்காவிலிருந்தும் இந்தியாவிற்குத்
திரும்புவோர் தவிர, வியட்நாமிலிருந்து இந்திய மக்களின் வழி
வந்தவர்களும் அவர்களுடைய உறவினர்களுமான 2,055 பேர்கள்
அடங்கிய 501 குடும்பங்கள் 1975 ஆம் ஆண்டிலிருந்து
வந்துள்ளனர். இவற்றுள் 316 குடும்பங்கள் தமிழ்நாட்டில்
குடியமர்த்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள குடும்பங்கள் ஏனைய
மாநிலங்களில், பெரும்பாலும் மத்திய அரசு நேரடி ஆட்சிக்குட்
பட்ட பாண்டிச்சேரியில் குடியமர்த்தப்பட்டுள்ளது. 1975 ஆம்
ஆண்டு ஜூலை முதற்கொண்டு வியட்நாமிலிருந்து இந்தியாவிற்குத்
திரும்புகிறவர்கள் மட்டுமே பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலி
ருந்து இந்தியாவிற்குத் திரும்புகிறவர்களுக்கு அளிக்கப்படுவது
போன்ற வியாபார, வீட்டுவசதி ஆகியவற்றிற்கான நிவாரண
உதவி கடன்கள் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

**1983-1984 ஆம் ஆண்டுக்குப் புதிய திட்டங்கள்.**

வருகிற ஆண்டில் ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பு
வோரைக் குடியமர்த்த 23-க்கும் மேற்பட்ட பல்வகைப்பட்ட
புதிய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. கீழ் கொடுக்கப்பட்
டுள்ள இந்தப் புதிய திட்டங்களில் மட்டுமே 2,000 மேற்பட்ட
குடும்பங்கள் குடியமர்த்தப்படும் என் எதிர்ப்பார்க்கப்படு
கிறது.

**தொழில் திட்டங்கள்.**

1 மருத்துவ பஞ்சு தயாரிக்கும் கூட்டுறவு தொழிற் சங்கம், குன்றக்குடி.

2 பிளாஸ்டர் ஆப் பாரீஸ் தயாரிக்கும் கூட்டுறவு தொழிற் சங்கம், குன்றக்குடி.

3 முந்திரிப் பருப்பு, பக்குவப்படுத்தும் கூட்டுறவு தொழிற் சங்கம், பிரான்மலை.

4 முந்திரிப் பருப்பு பக்குவப்படுத்தும் கூட்டுறவு தொழிற் சங்கம், திருக்கோலக்குடி.

5 நேருஜி பாலித்தீன் கூட்டுறவு தொழிற் சங்கம் (விரிவு), குன்றக்குடி.

6 பாரதி குளோரைட் கூட்டுறவு தொழிற் சங்கம் (விரிவு), குன்றக்குடி.

7 நாராயண அம்மாள்புரம் பெரிய தொழில் திட்டம் திருநெல்வேலி.

8 ஸ்பிளிண்ட்ஸ் மற்றும் வெனீர் கூட்டுறவு தொழிற் சங்கம், சாத்தூர்.

[1983 ஏப்ரல் 19

இம்மாதிரியான திட்டம் ஒன்றை 1982–83 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டம், கொடைக்கானல் வட்டம், கூக்கல் கிராமத்தில், 360 ஏக்கர் நிலப்பரப்பில், ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் 180 குடும்பங்களை இத்திட்டத்தில் குடியமர்த்த உத்தேசித்து, திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 26.23 இலட்சம் ஆகும். இதுவரையில் இத்திட்டத்தில் 60 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். மீதி குடும்பங்கள் 120-ம் 1983–84 ஆம் ஆண்டில் குடியமர்த்தப்படுவர்.

சொந்தமான விவசாய நிலம் வாங்கும் திட்டம்.

(1) ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்கள் அவர்களின் சொத்துக்கள் ரூ. 5,000-க்கும் மேறபடாத வகையில் இருந்தால் அவர்கள் விரும்பியபடி அவர்களுக்கும், பட்டா நிலங்களை கிரயம் பெறவும், இதன் அளவு மூன்று எக்கர் மேற்படாமலும், ஏக்கர் 1-க்கு ரூ. 2,000 வரை மதிப்புள்ள நிலங்களை கிரையம் பெறவும் கடன் வழங்கப்பட்டு, குடியமர்த்தப்படுகின்றனர். இவர்களுக்கும் விவசாயம் செய்வதற்குரிய பலவகைக் கடன்களும் வழங்கப்படுவதுடன், பராமரிப்புப்படியும் உப தொழில் செய்யவும் நிலக்காலனித் திட்டத்தில் அமர்த்தப்படும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் அடிப்படையில் உதவிகள் வழங்கப்படுகிறது. இச்சலுகைகள் எல்லாமே, இவர்கள் கொண்டு வரும் சொத்தின் மதிப்பு ரூ. 5,000-க்கும் மேற்படாத வகையில் இருந்தால் மட்டுமே வழங்கப்படுகிறது. இவர்களுக்கும் வீடு கட்ட கடன் பெறத் தகுதியுண்டு.

(2) ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் சொத்து ரூ. 5,000-க்கு மேற்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு மூன்று ஏக்கருக்குக் குறைவாக சொந்தமாக நிலம் வைத்திருந்தாலும் இவர்களுக்கு மொத்தத்தில் 3.00 ஏக்கர் நிலம் உடமை பெற, தனிப்பட்டவர்களிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு நில மதிப்பீடு ரூ. 2,000 வீதம் கிரையம் பெற்றுக்கொள்ளவும், விவசாயக் கடன் வழங்கப்படுகிறது. இதுபோல் அமர்த்தப்படும் குடும்பங்களுக்கும், மேலே தெரிவித்தபடி விவசாயம் செய்யவும் கடன் பெற வசதி உண்டு.



1983 ஏப்ரல் 19]

தேயிலைத் தோட்டங்களில் குடியமர்த்தும் திட்டம்.

நீலகிரி மாவட்டத்தில் தாயகம் திரும்பிய இலங்கை அகதிகளைத் தேயிலைத் தோட்டப் பயிர் செய்வதற்காக, கீழ்க் காணும் மூன்று திட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

| திட்ட எண் | பரப்பளவு | குடியேற்றப்பட வேண்டிய குடும்பங்கள் |
|---|---|---|
| திட்டம் ஒன்று | 3,750 ஏக்கர் | 1875 |
| திட்டம் இரண்டு | 1,500 ஏக்கர் | 750 |
| திட்டம் மூன்று | 2,500 ஏக்கர் | 1250 |

திட்டம் ஒன்று :

இந்தத் திட்டம் 1982–83 ஆம் ஆண்டுடன் செயல்படுத்தி முடிக்கப்பெற்றுள்ளது.

திட்டம் இரண்டு .

மொத்தம் 750 குடும்பங்களில் 450 குடும்பங்கள் இதுவரை குடியமர்த்தப்பட்டன. மீதமுள்ள 300 குடும்பங்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் குடியேற்றப்படுவார்கள்.

திட்டம் மூன்று:

1982-1983-ல் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. திட்டத்தில் குடியேற்றப்பட வேண்டிய குடும்பங்கள் பற்றி அரசு ஆலோசனையில் இருக்கிறது.

கன்னியாகுமரி ரப்பர் தோட்டம் :

கன்னியாகுமரி மாவட்டத்தில் 800 எக்டர் பரப்பளவில் ரப்பர் தோட்டம் பயிர் செய்யும் திட்டம் செயல்முறையில் இருக்கிறது. இந்தத் திட்டத்தில் மொத்தம் 285 தாயகம் திரும்பியோர் குடியேற்றப்பட வேண்டியதில் இதுவரை 250 குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 35 குடும்பங்கள் 31–8–1983-க்குள் குடியேற்றப்படுவார்கள்.

வீட்டுக்கடன் வழங்கும் திட்டம்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்காக வீட்டுக்கடன் ரூபாய் 3,000-லிருந்து ரூபாய் 4,000 வரை கிராமப்புறத்திலும் ரூபாய் 6,000-லிருந்து ரூபாய் 8,000 வரை நகர்ப்புறத்திலும் 7–7–1982 முதல் உயர்த்தி வழங்க மத்திய அரசு உத்திரவிட்டுள்ளது.

தொழில் திட்டங்கள்—தொடர்ச்சி.

9 கோவில்பட்டி தீப்பெட்டி தொழிற்சாலையில் ஸ்ரீ லங்காவிலிருந்து தாயகம் திரும்புவோரை வேலையில் அமர்த்தும் திட்டம்.

10 சாத்தூர் தீப்பெட்டி தொழிற்சாலையில் பயிற்சி.

11 கோவில்பட்டி தீப்பெட்டி தொழிற்சாலையில் பயிற்சி மற்றும் பால்பண்ணைத் திட்டம்.

நிலக்குடியேற்றம் :

12 பூம்பாறை நிலக்குடியேற்றத் திட்டம், மதுரை மாவட்டம்.

13 சோலையார் அணைக்கட்டு நிலக்குடியேற்றத் திட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

14 குன்றக்குடி நிலக்குடியேற்றம்.

பால்பண்ணைத் திட்டங்கள்.

15 குன்றக்குடி பால்பண்ணைத் திட்டம்.

16 குலவாணிகபுரம் பால்பண்ணைத் திட்டம்.

17 கீழநாராயணபுரம் பால்பண்ணைத் திட்டம்.

18 சிறுமலை பால்பண்ணைத் திட்டம்.

நூற்பாலைகள்

19 சிறிய கூட்டுறவு நூற்பாலை, குன்றக்குடி.

20 சத்திரப்பட்டி மின்தறி மற்றும் பால்பண்ணையில் வேலையில் அமர்த்தும் திட்டம்.

பெட்டிக்கடைகள்.

21 தமிழ்நாட்டில் நகராட்சிகளில் பெட்டிக் கடைகள் வைத்துக் கொடுக்கும் திட்டம்.

22 சென்னை மாநகராட்சியில் பெட்டிக் கடைகள் வைத்துக் கொடுக்கும் திட்டம்.

23 பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டம், குன்றக்குடி.

செங்கற்பட்டு மாவட்டம், செங்கற்பட்டு தாலுக்கா, தாழம்பூர் கிராமத்தில் நிறைவேற்றப்பட இருக்கும் ''ரிச்சஸ்'' திட்டம்.

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களை குடியமர்த்தும் பொருட்டு, செங்கற்பட்டு மாவட்டம், தாழம்பூர் கிராமத்தில் காலியாக இருக்கும் சுமார் 300 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்



களை சென்னை தொழில் நுட்பக் கல்லூரியினரால் நாராயணபுரத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் கிராம வளர்ச்சித் திட்ட அடிப்படையில் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

சென்னை கிண்டியிலுள்ள தொழில் நுட்ப கல்லூரி இயக்குநர் பல தொழில் அதிபர்களுடன் கலந்து ஆலோசித்து இதற்கு ஒரு திட்டம் தயாரித்து அனுப்பியுள்ளார். அத்துடன் திட்டத்தின் முதல் ஆண்டான 1983–84-க்கு 175 தாயகம் திரும்பிய குடும்பங்களைக் குடியமர்த்த ரூ. 6 இலட்சம் செலவு பிடிக்கும் ஒரு திட்ட அறிக்கையும் அனுப்பியுள்ளார்.

மற்ற நடைமுறை வழிகள் முடிவு செய்யப்படுவதை எதிர்பார்த்து, இந்த நிலங்களில் பிரவேசித்து திட்ட அமல் ஏற்பாடுகளைச் செய்ய தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநருக்கு அனுமதி அளித்து மாநில அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தில் பலவகைப்பட்ட தொழில் துறை மற்றும் விவசாயம் சம்பந்தப்பட்ட மையங்கள் நிறுவப்பட்டு அவைகளில் இலங்கை அகதிகளுக்குப் பயிற்சியும் வேலை வாய்ப்பும் அளித்து நிரந்தரமாகக் குடியமர்த்தப்படுவர். நல்ல '' லே அவுட் '' அடிப்படையில் எல்லா அடிப்படை வசதிகளும் கொண்ட ஒரு நவீன வீட்டு குடியமைப்புத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

மேற்கண்ட புதிய திட்டங்கள் போக ஏற்கனவே திட்டமிட்டபடி கதர் மற்றும் கிராமத் தொழில் திட்டத்தின்கீழ் செக்கு எண்ணெய், வாசனை சோப்பு, தீப்பெட்டித் தொழில், சாயம் போடுதல், மற்றும் அச்சு வேலை, பாலியஸ்டர் கதர் ஆலை ஆகிய தொழில்களில் சுமார் 2,000 குடும்பங்களைக் குடியமர்த்தும் திட்டம் மத்திய அரசின் உத்திரவு பெற்றவுடன் செயல்படுத்தப்படும்.

மற்றும் கீழ்க்கண்ட கூட்டுறவு நூற்பாலைகளில் 675 குடும்பங்கள் 1983–1984 ஆம் ஆண்டில் வேலையில் அமர்த்தப்படும்.

1. தேனி கூட்டுறவு நூற்பாலை.
2. புதுக்கோட்டை கூட்டுறவு நூற்பாலை.
3. தர்மபுரி கூட்டுறவு நூற்பாலை.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-13.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

## IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

---

AMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT
PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL
NADU : LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED
UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE
[illegible]

### பாலியஸ்டர் கதர் ஆலைத் தொழில்கள்.

தாயகம் திரும்பியோரில் ஒரு குடும்பத்திற்கு 2 நபர்கள் வீதம் 240 குடுங்பங்களிலுள்ள 480 நபர்களைக் குடியமர்த்தி வேலை வாய்ப்பளிக்கும் எண்ணத்துடன் நான்கு பாலியஸ்டர் கதர் நூற்பாலைகள் தொடங்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 78 குடுங்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு நூற்பாலைக்கும் ரூ. 5,71 இலட்சம் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாலிவஸ்த்ரா ஆலையும் 120 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திறன் கொண்டது. ஒரு குடும்பத்திற்கு 2 நபர்கள் வீதம் 60 குடும்பங்களுக்கு ஒவ்வொரு ஆலையிலும் வேலை வாய்ப்பளிக்கலாம். தாயகம் திரும்பியோர் இத்திட்டத்தின்கீழ் வேலை பெறுவதற்கு முன்பு அவர்களுக்கு 6 மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும்.

### கனரக வண்டி மெகானிக் ஒட்டுநர் பயிற்சி நிலையம், கும்மிடிப்பூண்டி.

உத்திரப்பிரதேசத்தில் மானாவில் செயல்பட்டு வந்த கனரக வண்டிகள் மெகானிக் ஓட்டுநர் பயிற்சி நிலையம், கும்மிடிப்பூண்டி இடைத்தங்கல் முகாம் பகுதிக்கு 1978-ல் மாற்றப் பட்டது. இந்தியாவிற்குத் திரும்பியவர்களில் முதல் தொகுதிக்கு 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டிலிருந்து பயிற்சி வழங்கப்பட்டது. இந்நிலையம் இதற்கு முன்பு மத்திய அரசு மறுவாழ்வுத்துறையின் கீழ் இயங்கி வந்தது. தாயகம் திரும்பியோரில் 15 மாத காலத்தில் 250 நபர்களுக்காவது ஓட்டுநர் (கனரக வண்டியில்) பயிற்சி கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மாநில அரசுக்குத் தற்போது மாற்றப்பட்டுள்ளது. 10–4–1980 முதல் இந்நிலையம் தமிழக சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் மேற்பார்வைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இலங்கையில் கண்டியிலுள்ள இந்திய உதவி ஹை கமிஷனிடம் விருப்பம் தெரிவித்துள்ளதைப் பொறுத்து இக்கழகத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. விருப்பமுள்ள தகுதி வாய்ந்த குடும்பத் தலைவர் ஒவ்வொருவருக்கும் 32 வாரங்களுக்குக் கனரக வண்டி மெகானிக், ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன் மாநில போக்குவரத்து கழகங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவர். சென்னையிலுள்ள தாயகம் திநம்புவோர் கூட்டுறவு நிதி மற்றும் அபிவிருத்தி வங்கி மேற்படி பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் போக்குவரத்து கழகங்களுக்கு நிதிவசதி தந்து உதவும். ஒவ்வோரு தாயகம் திரும்பிய குடும்பத்துக்கும் ரூ. 25,000 வீதம் நிதி கடனாகக் கொடுத்து உதவும், இந்தப் பயிற்சிக்குரிய 250 இடங்களைப் புதியதாக வரும் குடும்பத் தலைவர்களைக் கொண்டு பூர்த்தி செய்ய முடியாத பட்சத்தில், ஏதேனும் இடங்கள் காலியானால் ஏற்கனவே தாயகம் திரும்பியோரின் குடும்பங்களில் உள்ள அங்கத்தினர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சியளிக்கப்படும்.





### பயிற்சித் திட்டம்

இது தவிர, சுய வேலைவாய்ப்புத் திட்டத்தை விரிவுப்படுத்தும் எண்ணத்துடன் ஏற்கனவே மறுவாழ்வு திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு பல்வேறு தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. இதற்காக மாநில தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 320 இடங்கள் இவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெறும் நபர் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 82.50 வீதம் உதவித் தொகை அளிப்பதுடன், கட்டணம் செலுத்தாமல் விடுதியில் தங்க வசதியும் அளிக்கப்படுகிறது.

தாயகம் திரும்பிய இளைஞர்களுக்கு மீன்பிடித்தல் மற்றும் கொதிகலன் உதவியாளர்கள் சம்பந்தமான பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

சென்னை-600 008.
136041